உ

# சிவ வழிபாடு

# SIVA VAZHIPAADU



உ

சிவமயம்

# சிவ வழிபாடு

# SIVA VAZHIPAADU

Selected songs
with Tamil paraphrase
and rendering in English

*By*

**K. M. VENKATARAMIAH,** M. A.,

Transliteration : K. M. GOPINATH, B.Sc.,

Compiled by

**N. C. NAIDOO**

Publication : January 1996.

Compiled by:

**N. C. NAIDOO**
309 Mountbatten Drive,
Reservoir Hills,
Durban 4091.
Republic of South Africa.

Phone : (031) 825112

**Printer:**

**Japonica Printing Media**
7, Sripuram second Street,
Royapattah, Madras - 600 014.

Phone : 8261790, 8261343, 8265331
Fax : 8257158.

# FOREWORD

This book **"SIVA VAZHIPAADU"** in addition to **the "Nalvar Thirattu"** and **"Sivan Arul Thiratu"**, is a collection of hymns from Thevaram, Thiruvasagam, Thiruppugazh, Thiru Arutpa and the songs of Pattinaththar and Thayumanavar. These compositions are precious gems to our wealth which we have inherited from our ancient men of God. This compilation is made possible by the unstinted support given to me by those selfless people from Tamil Nadu who have continuously strived for the welfare of our brotheran.

I owe a special word of thanks to Dr.N.Mahalingam, the President of the Ramalingar Pani Mandram, Madras, for his personal interest in my undertakings for the propagation of our educational and cultural activities. My sincere gratitude to Doctor again for permitting his office staff to help me and for affording care and comfort during my stay in Madras.

I am also very grateful to the Natal Tamil Vedic Society Trust, the South African Tamil Federation, its units and their affiliates for the encouragement given in pursuing my life desires to promote language and culture.

At the invitation of the 'Natal Tamil Vedic Society Trust', Thiru Lalgudi Swaminathan, Oduvar of Tamil Nadu, accompanied by Thiru P. Pakirisamy on the Violin and Thiru S. Yugarajan on the Mirdhangam gave concerts in Natal, Transvaal and the Eastern Cape. His rendition of the songs by our great saints created a great impact in the minds of our people. I had the good fortune of getting this great singer to render them all the sixty-nine songs from SIVA VAZHIPAADU on cassettes and the introductory

narration by Sri. S. K. Devanarayanan, who is welknown to us by his Bharathiar Kathakalachabam on discs sponsored by Saiva Sidhhantha Sangam of South Africa.

It is our duty to nurture this culture and pass it on to our younger generation.

As this is our sixtieth year Wedding Anniversary, it is the desire of my dear wife and the members of my beloved family, to gift the following books to promote and preserve our culture and at the same time assist the organisations for their fund-raising projects:

1. Kavadi Songs and cassette
2. Periya Arichuvadi
3. Deivappamalai
4. Our savants
5. Thirukkural
6. Siva Vazhi Paadu.

Quote from "NURTURING TAMIL CULTURE"

By

Dr. **S. Muthu Kumaran,**

Ex-Vice-Chancellor, Bharathidasan University, Tiruchirapalli

(Fifth International Conference on Tamil Culture - Sydney, Australia, 1992)

"May God give us the strength and the wisdom to do our duty, nurture our culture for our younger generation to enjoy the fruits of high thingking,'lofty ideals' and 'good living".

GOD BLESS !

**N. C. NAIDOO**

# ACKNOWLEDGMENT

I wish to record my sincere and heartfelt thanks to **the** following:

1. Dr. **N. Mahalingam,** President of the Ramalingar Pani Mandram.
2. Thirumurai Kalanithi **P. V. S. Rajasakaran:** Selecting verses of the saints to compile this book.
3. Prof. **K. M. Venkataramiah** M. A., : Tamil Paraphrase, notes and rendering into English.
4. Mr. **K. M. Gopinath** B.Sc.,: Transliteration.
5. Vidwan **K. M. Krishnamurthy**: Encouraging me in all my projects.
6. Kalaimamani **Lalgudi Swaminathan**: For rendering all the songs in the book for cassette recording.
7. Thiru **S. K. Devanarayanan**: Introduction and narration for the songs.
8. Thiru **P. Pakkirisamy**: Violin; Thiru **S. Yugarajan**: Mirudangam.
9. The Christian auto and communication Services for Studio Recording.
10. The Supplement: Mr. **C. Kuppusamy,** Translating Tamil Paraphrase to English. Mr. **T. Vadivelu** for editing the scripts for printing.
11. Life Sketches of the Eight Great Saints: **Dr. Avvai Nadarajan** Vice-Chancellor, Tamil University for his preparation and edition of the Life Sketches of Saints.
12. To the Natal Tamil Vedic Society Trust and the South African Tamil Federation for entrusting me to gather material for the furtherance of language and culture.
13. Printer: **J.P.M. - Amudha Nilayam Limited**, Madras-14 for printing execution.

# சிவ வழிபாடு

# SIVA VAZHIPAADU


| பொருளடக்கம் | CONTENT | பக்கம் |
|---|---|---|
| விநாயகர் துதி | Vinaayagar Thudhi | |
| 1. முன்னவனே | Munnavane | 1 |
| பெரியபுராணம் | Periya Puraanam | |
| 2. உலகெலாம் | Ulagelaam | 2 |
| 3. விண்ணப்பம் | Vinnnnappam | 3 |
| திருஞான சம்பந்தர் தேவாரம் | Thirugnaana Sambandar Deavaaram | |
| 4. தோடுடைய | Thodudaiya | 4 |
| 5. மந்திரம் ஆவது நீறு | Mandhiram Aavadhu Neeru | 6 |
| 6. தந்தையார் போயினார் | Thanthaiyaar Pōyinaar | 8 |
| 7. காதல் ஆகி | Kaadhal Aagi | 10 |
| திருநாவுக்கரசர் தேவாரம் | Thirunaavukkarasar Deavaaram | |
| 8. கூற்றாயினவாறு | Kūtraainavaarru | 11 |
| 9. கருவுற்ற நாள் | Karuvutra Naal | 15 |
| 10. மாசில் வீணை | Maasil Veennai | 16 |
| 11. புழுவாய்ப் பிறக்கினும் | Puzhuvaayp Pirrakkinum | 18 |
| 12. சொற்றுணை வேதியன் | Sotrunnai Vedian | 20 |
| 13. ஓசை ஒலி | Ōsai Oli | 22 |
| 14. தந்தையார் தாயார் | Thandhaiyaar Thaayaar | 24 |
| 15. தலையே நீ வணங்காய் | Thalaiyē Nee Vannanggaay | 26 |
| 16. ஐயினால் மிடறு | Aiyinaal Midaru | 32 |
| 17. நிலைபெறுமாறு | Nilai Perrumaarru | |
| 18. நற்பதத்தார் | Narpathaththaar | 35 |
| 19. ஊனில் ஆவி | Ūnil Aavi | 37 |
| 20. எண்ணுகேன் | Ennnnugēn | 38 |

சுந்தரர் தேவாரம் — Sundarar Deavaaram

| | | | |
|---|---|---|---|
| 21. | பித்தா பிறை | Piththaa Pirai | 41 |
| 22. | தில்லைவாழ் | Thillai Vaazh | 43 |
| 23. | பொன்னார் மேனியனே | Ponnar Meniyanē | 47 |
| 24. | மற்றுப்பற்று | Matrup Patru | 48 |
| 25. | வாழ்வாவது மாயம் | VaazhvaavadhuMaayam | 50 |
| 26. | தான் எனை | Thaan Enai | 52 |

மாணிக்கவாசகர் திருவாசகம் — Mannikka Vasagar Thiruvāsagam

| | | | |
|---|---|---|---|
| 27. | நமச்சிவாய | Namasivaaya | 54 |
| 28. | நாடகத்தால் | Naadagaththaal | 60 |
| 29. | தரிக்கிலேன் | Tharikkilēn | 62 |
| 30. | பாரொடுவிண்ணாய் | Paaroduvinnnnaay | 64 |
| 31. | சோதியே சுடரே | Sōthiyē Sudare | 67 |
| 32. | உற்றாரையான் | Utraaraiyaan | 69 |
| 33. | அம்மையே அப்பா | Ammaiyē appa | 70 |
| 34. | நானேயோ | Naanēyō | 73 |
| 35. | பிணக்கிலாத | Pinnakkilaatha | 74 |
| 36. | செழுங்கமலத்திரளன | Sezhungkamalaththirallana | 75 |
| 37. | புற்றில்வாளரவும் | Putrilvaallaravum | 76 |
| 38. | இணையார் திருவடி | Ennaiyaar Thiruvadi | 77 |

அருணகிரிநாதர் திருப்புகழ் — Arunnagiri Naathar Thiruppugazh

| | | | |
|---|---|---|---|
| 39. | கருவின் உருவாகி | Karuvin Uruvaaki | 79 |
| 40. | சரணகமலாலயத்தை | Sarannakamalaalayaththal | 82 |
| 41. | என்னால் | Ennaal | 85 |
| 42. | அவசியம் | Avasiyam | 88 |
| 43. | வசனம்மிக | Vachanammiga | 89 |

அருணகிரிநாதர் கந்தர் அலங்காரம் — Arunnagiri Naathar Kandhar Alankaram

| | | | |
|---|---|---|---|
| 44. | விழிக்குத் துணை | Vizhikkuththunnai | 91 |
| 45. | தெய்வத்திருமலை | Deyvaththirumalai | 92 |
| 46. | சேந்தனைக் கந்தனை | Sēndanaik Kandhanai | 93 |
| 47. | தோலால்சுவர் | Thōlaal suvar | 94 |
| 48. | காவிக்கமலக் கழலுடன் | Kaavikkamalak Kazhaludan | 95 |

| | | |
|---|---|---|
| **தாயுமான சுவாமிகள் பாடல்** | **Thaayumaana Swamigal Paadal** | |
| 49. ஆசைக்கோர் | Aasaikkōr | 97 |
| 50. ஐவகையெனும் | Aivagaiyenum | 100 |
| 51. எண்ணரிய | Ennnariya | 102 |
| 52. அரும்பொனே | Arumponē | 104 |
| 53. தந்தைதாய் | Thanthaithaai | 107 |
| 54. பண்ணேன் | Pannnēn | 110 |
| **பட்டினத்தார் பாடல்** | **Pattinaththaar Paadal** | |
| 55. கட்டி அணைத்திடும் | Katti annaiththidum | 113 |
| 56. அன்னை எத்தனை | Annai eththanai | 114 |
| 57. முடிசார்ந்த | Mudisaarndtha | 116 |
| 58. அத்தமும் வாழ்வும் | Aththamum vaazhvum | 117 |
| 59. ஐயிரண்டு | Aiyiranndu | 118 |
| 60. முன்னையிட்ட தீ | Munnaiyitta thee | 119 |
| 61. வீற்றிருந்தாள் | Veetrirunthaal | 120 |
| **இராமலிங்கர் திருஅருட்பா** | **Ramalingar Thiruarutpaa** | |
| 62. அருட்ஜோதித்தெய்வம் | Arutjodhiththeyvam | 122 |
| 63. பெற்றதாய்தனை | Petrathaaythanai | 124 |
| 64. கல்லார்க்கும் | Kallaarkkum | 126 |
| 65. பார்த்தாலும் | Paarththaalum | 128 |
| 66. அருள்விளக்கே | Arulvillakkē | 129 |
| 67. அருளார்அமுதே | Arullaar amudē | 131 |
| **மாணிக்கவாசகர் திருவாசகம்** | **Maannikkavaasagar Thiruvasagam** | |
| 68. முத்திநெறிஅறியாத | Muththinnerri arriyaatha | 133 |
| **பட்டினத்தார் பாடல்** | **Pattinaththaar Paadal** | |
| 69. கல்லாப் பிழையும் | Kallaap pizhaiyum | 136 |
| Life Sketches of Eight Great Saints | | 138 |
| Supplement with rendering in English | | 162 |

உ

சிவமயம்

# விநாயகர் துதி

## (1)

இறைவன் எங்கும் இருக்கிறான்; அவன் எப்பொழுதும் இருக்கிறான்; அவன் இல்லாத இடம் இல்லை. நன்மை செய்பவனும் அவனே; தீமை செய்பவனும் அவனே. இன்பம் அளிப்பவனும் அவனே; பிறப்பு இறப்பு இல்லாமல் மோட்சத்தை அருளுபவனும் அவனே. தூங்குபவர் விழிக்கிறார்கள்; அதுபோல் இறந்தவரும் பின்னர் பிறவி எடுப்பர்; ஆகையால் பிறவி எடுத்த பயன் மக்களுக்குத் தொண்டு செய்வது; இறைவனை இடையறாது தியானிப்பது; ஆகவே நல்லவை செய்ய வேண்டும்; இறைவனைத் துதிக்க வேண்டும். இது எல்லாருடைய கடமை ஆகும்.

| | | | |
|---|---|---|---|
| முன்னவனே<br>munnavane | யானை<br>Yaanai | முகத்தவனே<br>mugaththavane | முத்திநலம்<br>muththinalam |
| சொன்னவனே<br>sonnavane | தூய்மெய்<br>thuymey | சுகத்தவனே<br>sukaththavane | மன்னவனே<br>mannavane |
| சித்பரனே<br>sithparane | ஐங்கரனே<br>Ainggarane | செஞ்சடையெம்<br>Segnchadaiyem | சேகரனே<br>seagarane |
| தற்பரனே<br>tharparane | நின்தாள்<br>ninthall | சரண்<br>saran | |

எல்லாருக்கும் முன் இருப்பவனே!

யானையின் முகத்தை உடையவனே!

முத்தி பெறுவதால் ஆகிய நன்மையைக் கூறியவனே!

பரிசுத்தம் ஆனவனே! உண்மையே உருவாக உடையவனே!

நிலைத்து இருப்பவனே! அறிவுக்கு எட்டாத பரம் பொருளே!

ஐந்து கைகளை உடையவனே!

சிவந்த சடையை உடைய சிறந்த கடவுளே!

மேன்மையான பொருளே! உன் திருவடியே அடைக்கலம்.

Oh Primal One! Possessor of elephant head!

Oh Expounder of the benefaction of salvation! Immaculate one!

Oh the embodiment of truth! Oh everlasting One!

Oh transcending human understanding!

Oh Lord having five arms! Oh eminent one having red matted locks!

Oh supreme One! I take refuge in Thy feet.

## (2)

இறைவன் ஒருவனே; ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்; எவ்வளவு கற்றாலும் கேட்டாலும் அவனது உண்மை நிலையை அறிந்து கூறமுடியாது; அவன் மன்பதைகளுக்கு வரும் துன்பத்தைக் காத்து அருள்வான்; அவன் ஒளி வடிவம் ஆனவன்; அவன் அம்பலத்தில் ஆடுகிறான்; அதனால்தான் எல்லா உயிர்களும் இயங்குகின்றன. அவன் அன்றி ஓரணுவும் அசையாது; அவனை அல்லும் பகலும் அனவரதமும் துதித்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| உலகெலாம்<br>ulakelaam | உணர்ந்து<br>unnarnthu | ஓதற்கு<br>otharku | அரியவன்<br>ariyavan |
| நிலவுலாவிய<br>nilavulaaviya | நீர்மலி<br>neermali | வேணியன்<br>vēnniyan | |
| அலகில்<br>alagil | சோதியன்<br>sōthiyan | அம்பலத்து<br>ambalaththu | ஆடுவான்<br>aaduvaan |
| மலர்சிலம்படி<br>malarsilambadi | வாழ்த்தி<br>vaazhththi | வணங்குவாம்<br>vannanguvaam | |

உலகத்து உயிர்கள் எல்லாமும். பொறிகளாலும் புலன்களாலும் உணர்ந்து, இத்தகையவன் என்று சொல்லுவதற்கு முடியாதவன்;

சந்திரன் பொருந்தியதும், கங்கை தங்கியிருப்பதும் ஆன சடையை உடையவன்;

சிற்றம்பலத்தில் நடனம் செய்பவன்;

அவனுடைய மலர் போன்றதும் சிலம்பு அணிந்ததும் ஆன திருவடிகளை வாழ்த்துவோம்; வணங்குவோம்.

He is unperceivable through the five senses and his rareness cannot be expounded even by greatmen.

He has matted locks where the crescent moon moves about and the Ganges abounds;

He is abundant effulgent light;

He dances at the Hall of Wisdom!

His flower like Feet adorned with anklets, we shall praise and worship.

*அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி*
*தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி*

## திருவருட்பிரகாச வள்ளலார் அருளிச்செய்த விண்ணப்பம்

எல்லாமுடைய அருட்பெருஞ்ஜோதி அற்புதக் கடவுளே! இது தொடங்கி எக்காலத்தும் சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய தடைகளாகிய சமயங்கள், மக்கள், மார்க்கங்கள் என்பவற்றின் ஆசார சங்கற்ப விகற்பங்களும், வருணம் ஆசிரமம் முதலிய உலகாசார சங்கற்ப விகற்பங்களும், எங்கள் மனதில் பற்றாவண்ணம் அருள் செய்தல் வேண்டும். சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லட்சியமாகிய ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை எங்களுக்குள் எக்காலத்தும் நிறைந்து விளங்கச் செய்வித்தருளல் வேண்டும். எல்லாமாகிய தனிப் பெருந்தலைமை அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே! தேவரீர் திருவருட் பெருங்கருணைக்கு வந்தனம்! வந்தனம்!!

திருச்சிற்றம்பலம்

# திருஞான சம்பந்தர் தேவாரம்

## THIRUGNAANA SAMBANDAR THEVAARAM

## (4)

இறைவன் எங்கும் இருப்பான். அவனுக்கு மக்கள் உருவம் கொடுத்து வணங்குவர். யார் எந்த வடிவில் நினைக்கிறார்களோ அந்த உருவில் வருவான். அவனுக்கு என்று ஒரு தனி உருவமும் இல்லை. அவனை ஆணாக நினைத்தால் ஆணாக வருவான். பெண்ணாக நினைத்தால் பெண்ணாக வருவான். அவன் எங்கும் உளன். எவ்வுருவிலும் உளன். எல்லாருடைய மனத்திலும் தங்கியிருப்பான். அவனை அன்போடு நினைக்கவேண்டும். அப்போது அவன் கட்டாயம் வருவான்.

### திருச்சிற்றம்பலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தோடுடைய | செவியன் | விடையேறி | ஓர் | தூவெண் | மதிசூடிக் |
| Thōdudaiya | seviyan | vidaiēri | ōr | thūvenn | madhi sūdi |
| காடுடைய | சுடலைப் | பொடிபூசி | என் உள்ளம் | | கவர்கள்வன் |
| Kaadudaiya | sudalaip | podipūsi | en ullllam | | kavar kallvan |
| ஏடுடைய | மலரான் | முனைநாள் | பணிந்துஏத்த | | அருள்செய்த |
| Edudaiya | malaran | munainaall | pannindhuētha | | arull seydha |
| பீடுடைய | பிரமாபுரம் மேவிய | | பெம்மான் | | இவன்அன்றே |
| Peedudaiya | bramaapuram mēviya | | pemmaan | | ivanandrrē |

காதணி உள்ள செவி உடையவன்; எருதை வாகனம் ஆக உடையவன்; சுத்தம் ஆனதும் வெள்ளையாக இருப்பதும் ஆன சந்திரனைச் சூடியவன்; சுடுகாட்டில் உள்ள சாம்பலை உடம்பில் பூசுபவன் – இவன் என் மனத்தைத் திருடிய திருடன். தாமரை மலரில் இருப்பவன் பிரமன்; அவன் முன் ஒரு காலத்தில் சிவனை வணங்கினான்; துதித்தான். சிவன் பிரமனுக்கு அருள் செய்தான். பிரமன் பூசித்தால் பிரமாபுரம் என்று பெயர் பெற்ற சீர்காழியில் இருக்கும் இறைவனே எனக்கு அருள் செய்தான்; இதோ பார்!

He wears ear-rings in His ears. He wears pure white moon (over his head). He smears sacred ash of the cremation ground. He is the thief who stole my heart. Brahma, seated on the lotus, once bowed and prayed. Hence the Lord blessed him, and Sirkaazhi came to be known thereafter by the name Brahmapuri. He is the Lord who is in the temple at Sirkaazhi. He blessed me.

*அருநெறிய மறைவல்லமுனி அகபொய்கை அலர்மேய*
Arunerriya marraivallamuni agan poigai alar mēya

*பெருநெறிய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன்தன்னை*
Perunerriya biramaapuram mēviya pemmaan ivan thannai

*ஒருநெறிய மனம் வைத்துணர் ஞானசம்பந்தன் உரைசெய்த*
Orunerriya manam vaithūnnar gna anasambandan uraiseydha

*திருநெறிய தமிழ்வல்லவர் தொல்வினைதீர்தல் எளிதாமே*
Thirunerriya thamizh vallavar tholvinai theerdhal ellidhaamē

## திருநீற்றின் பெருமை

அருமையான நல்ல வழிகளைக் காட்டுவது வேதம்; அப்படிப்பட்ட வேதத்தில் சிறந்தவன் பிரமன்; பிரமன் தோண்டிய அகலமான குளக்கரையில் உள்ளதும், பிரமன் பூசனை செய்ததும், பிரமாபுரம் என்ற தலம். இத்தலத்தில் உள்ள சிவனை, ஒரே வழியில் மனத்தை வைத்த சம்பந்தர் பாடினார். அவர் பாடிய தமிழ் மோட்சம் தருவது. அதனை நன்றாக அறிந்தால், அவருடைய பழைய வினை சுலபமாக நீங்கும்.

The Vedas propagate the rare good paths; and Brahma is well-versed in such Vedas. Brahmapuri is situated on the banks of the tank (at Sirkaazhi); and it is worshipped by Brahma. Siva dwells in this place. He has been sung by Gnaanasambandhar with the concentration of mind. These stanzas in Tamil lead one to the Sacred Path of Siva. Be well-versed in them and get rid of karmas yore.

## (5)

# திருநீற்றின் பெருமை

சிவபெருமானை வணங்குபவர் சைவ சமயத்தை சேர்ந்தவர் ஆவர். அச்சமயத்துக்குச் சின்னங்கள் – அடையாளங்கள் உண்டு; முக்கியமான அடையாளம் நெற்றியில் விபூதி இட்டுக் கொள்வது ஆகும். விபூதி என்றாலும் திருநீறு என்றாலும் ஒன்றே. விபூதி என்றால் ஐசுவரியம், செல்வம் என்பது பொருள். திருநீறு என்றால் எல்லோரும் முடிவில் பிடி சாம்பல் ஆவர் என்பதை நினைவு படுத்துவதாக இருக்கிறது. மக்களைச் செருக்கு இல்லாமல் நற்பண்புகளை உடையவராக ஆக்கும், இந்த எண்ணம். உடம்பு நிலையில்லாதது என்ற எண்ணம்தானே வீரர்களை உண்டாக்குகிறது. ஆகவே நீறு இடுவது எல்லாவித நற்பண்புகளையும் உண்டாக்குவதாகும்.

## திருச்சிற்றம்பலம்

மந்திரம் ஆவது நீறு வானவர் மேலது நீறு
Mandhiram aavadhu neeru Vaanavar meladhu neerru

சுந்தரம் ஆவது நீறு துதிக்கப் படுவதுநீறு
Sundharam aavadhu neerru thudhikkap paduvadhu neerru

தந்திரம் ஆவது நீறு சமயத்தில் உள்ளதுநீறு
Thandhiram aavadhu neerru samayaththil ulilladhuneerru

செந்துவர் வாய் உமைபங்கன் திரு ஆலவாயான் திருநீறே
Sendhuvar vaay umaipangan thiru aalavaayaan thiruneerrē

திரு ஆலவாய் என்ற மதுரையில் உள்ள சிவபெருமான் சிவந்த வாயை உடைய உமையை ஒரு பங்கில் கொண்டவர்; அவருக்கு உரியது திருநீறு. இத்திருநீறு மந்திரம் ஆகி இருப்பது – தேவர்கள் தம் உடம்பின் மேல் பூசிக்கொள்வது – அழகாக இருப்பது – எல்லோரும் துதிப்பது – ஆகமப் பொருளாக விளங்குவது – சைவ சமயச் சின்னமாக இருப்பது.

The Lord of Thiru-Aalavai has the red-lipped Uma on one side of His Form. His Sacred Ash- is praised by one and all - is the sum and substance of the Aagamas-and is the emblem of the Godly path.

முத்தி தருவது நீறு முனிவர் அணிவது நீறு
Muththi tharuvathu neerru munivar annivadhu neerru

சத்தியம் ஆவதுநீறு தக்கோர் புகழ்வது நீறு
Saththiyam aavadhuneerru thakkōr pugazhavadhu neerru

பத்தி தருவது நீறு பரவ இனியதுநீறு
paththi tharuvadhu neerru parava iniyadhuneeru

சித்தி தருவது நீறு திரு ஆலவாயான்திருநீறே
Siththi tharuvadhu neerru thiru aalavaayaan thiruneerē

திரு நீறு மோட்சத்தைத் தருவது; முனிவர்கள் பூசிக் கொள்வது; எப்பொழுதும் உள்ளது; சிவனடியார்கள் புகழ்வது; பக்தியைக் கொடுப்பது; வாழ்வதற்கு இனிமையானது; (அஷ்டமா) சித்திகளைத் தருவது–திரு ஆலவாயில் எழுந்தருளி இருக்கும் சிவபெருமானின் திருநீறு ஆகும்.

The Sacred Ash gives beautitude; the sages smear it; It is ever existing; the Siva devotees adore it; it gives bhakti or devotion to god; it is fine to adore; it awards the eight Siddhis (super natural powers), it is the sacred ash of the Lord at Thiru Aalavaay.

ஆற்றல் அடல்விடை ஏறும் ஆலவாயான் திருநீற்றைப்
Aatrral adal vidai errum aalavaayaan thirunetrraip

போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞான சம்பந்தன்
Potrrip pugali nilaavum pūsuran gnaana sambandhan

தேற்றித் தென்னன் உடல்உற்ற தீப்பிணி ஆயினதீரச்
Thetrrith thennan udal utrra theppinni aayinatheerach

சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர்தாமே.
Chaatrriya paadalgail paththum vallavar nallavar thaamē

## திருச்சிற்றம்பலம்

திரு ஆலவாய் என்னும் மதுரைக்கோயிலில் இருக்கும் சிவபெருமான் வலிமை பொருந்திய எருதை வாகனமாக உடையவர்; அப்பெருமானுடைய திருநீற்றைப் புகலியில் உள்ள ஞானசம்பந்தர் போற்றினார்; பாண்டியனது உடம்பில் இருந்த சுரநோய் போகுமாறு பாடினார்; இந்தப் பாடல்கள் பத்தையும் நன்றாக அறிந்தவர் எல்லா நன்மைகளையும் பெறுவார்கள்.

The brahmin Gnaanasambandhar dwells in Pugali (Sirkaazhi). He has sung in praise of the Sacred Ash of the Lord of Thiru Aalavaai who rides on a robust bull. By this he has cured the dangerous disease which afflicted the body of the Pandya king. Those well-versed in these ten verses will be considered goodly.

## (6)

உடம்பு நிலையில்லாதது என்றதும் பயப்படக்கூடாது; உடம்பு அழிவதுதான்; இது நமக்கு நன்றாகத் தெரியும். நான் இருக்கிறேன், என் தந்தை தாய் இருக்கிறார்கள்; அவர்களைப் பெற்றெடுத்து வளர்த்தவர்களும் இருக்கலாம்; இன்னும் அவர்களுக்கு முன்னே வாழ்ந்தவர் எங்கே? நம் நாட்டில் வாழ்ந்து தம் பெயரை நிலை நிறுத்தியவர்கள் எங்கே? அவர்கள் எல்லோரும் வாழ்நாள் முடிந்ததும் சென்று விட்டார்கள். இதை நினைவு கொள்ளவேண்டும். கொண்டால் சினம் பகைமை முதலியன நீங்கும். எல்லோரும் ஓர் இனம் என்ற ஒற்றுமைப் பண்பு வளரும்; சகோதரத்துவம் ஓங்கும்; சுகமாக இருக்கலாம். ஆகவே நற்பண்புகள் வளர இறைவனை ஏத்துவோம்.

## திருச்சிற்றம்பலம்

| | | | |
|---|---|---|---|
| தந்தையார்<br>Thanthaiyaar | போயினார்<br>pōyinaar | தாயரும்<br>thaayarum | |
| | போனார்<br>Pōnaar | தாமும்<br>thaamum | போவார்<br>pōvaar |
| கொந்தவேல்<br>Kondhavēl | கொண்டு<br>konndu | ஒரு<br>oru | கூற்றத்தார்<br>kuutrrraththaar |
| | பார்க்கின்றார்<br>paarkkinrraar | கொண்டு<br>konndu | போவார்<br>pōvaar |
| எந்த<br>endha | நாள்<br>naall | வாழ்வதற்கே<br>vaazhvadharke | மனம்<br>manam |
| | வைத்தியால்<br>vaiththiyaal | ஏழை<br>ezhai | நெஞ்சே<br>negnchē |
| அந்தண்<br>anthann | ஆரூர்<br>aaruur | தொழுது<br>thozhudu | உய்யலாம்மையல்<br>uyyalaam maiyal |
| | கொண்டு<br>kondhu | அஞ்சல்<br>agnchal | நெஞ்சே<br>negnchē |

## திருச்சிற்றம்பலம்

தந்தை இறந்து போனார்; தாயும் செத்துப்போனாள். அவர் தாமும் போவர்.

மூவிலை வேலைக் கையில் ஏந்தி நம்மைக்கொண்டு போவதற்காக யமன் காலம் பார்த்துக் கொண்டு இருக்கிறான்.

(காலம் வந்ததும்) யமன் நம் உயிரைக் கொண்டு போவான். அது எந்த நாள் (என்று நமக்குத் தெரியாது).

நாம் சுகமாக வாழலாம் என்று மனம் கொண்டு இருக்கிறாய்; அறிவு இல்லாத நெஞ்சமே!

அழகிய குளிர்ச்சி பொருந்திய திருவாரூரில் உள்ள இறைவனை வணங்கிச் சுகம் பெறலாம்;

மயக்கம் கொண்டு பயப்படாதே; ஓ நெஞ்சமே!

Father has gone; and the mother too;

They (their progeny) may also leave (this world);

With the trident, the god of death is looking for the time;

He would take (us) away;

When! (we do not know);

You made up your mind to lead a (luxurious) life;

O poor mind!

Worship the Lord at the pleasant beauteous Tiru Arur and be redeemed;

Bewildered, fear thee not, O mind!

# ஐந்தெழுத்தின் பெருமை

சைவ சமயிகள் திருநீறு பூக்வது அவசியம். அதுபோலவே சிவபெருமானுடைய பெயரை ஜெபித்தலும் அவசியம். சிவ பெருமானுடைய பெயர் ஒரு மந்திரமாக அமைந்து இருக்கிறது. அதைப் பஞ்சாட்சரம் என்பர்; திருவைந்தெழுத்து என்பதும் அதுவே. சிவாய நம என்பதே பஞ்சாட்சர மந்திரம் ஆகும்; சிவபெருமானே உனக்கு வணக்கம் என்பது பொருள். அம்மந்திரத்தை மிகுந்த அன்போடு ஜெபித்தால் எல்லா நன்மைகளும் ஏற்படும்.

## திருச்சிற்றம்பலம்

| | | | |
|---|---|---|---|
| காதல்<br>Kaadhal | ஆகிக்<br>aagik | கசிந்து கண்ணீர்<br>kasindhu kannneer | மல்கி<br>malgi |
| ஓதுவார்<br>Odhuvaar | தமை<br>thamai | நன்னெறிக்கு<br>nannerikku | உய்ப்பது<br>uyppadhu |
| வேதம்<br>Vedham | நான்கினும்<br>naanginum | மெய்ப்பொருள்<br>meypooruil | ஆவது<br>aavadhu |
| நாதன்<br>Naadhan | நாமம்<br>naamam | நமச்சிவாயவே<br>namachivaayave. | |

சிவபெருமானுடைய திருப்பெயர் "நமசிவாய' என்பது இது நான்கு வேதங்களிலும் உண்மையான பொருள் ஆக விளங்குவது; இதனை அதிக அன்போடு, மனம் உருகிக் கண்களில் நீர்வடியச் சொன்னால், சொல்கிறவர்களை நல்ல வழியில் செலுத்தும்.

The sacred name of the Lord is "Na Ma Si Va Ya" - the mystic Five Letters. It is the sum and substance of the Vedas four. Chant the Five Letters, with great liking, melting, and with tear gushing and it will lead you to the right path.

| | | | |
|---|---|---|---|
| நந்தி<br>Nandhi | நாமம்<br>naamam | நமச்சிவாய<br>namachivaaya | வெனும்<br>venum |
| சந்தையால்<br>Sandhaiyaal | தமிழ்<br>thamizh | ஞானசம்பந்தன்<br>gnaanasambandhan | சொல்<br>sol |

| | | | | |
|---|---|---|---|---|
| சிந்தையான் | மகிழ்ந்து | ஏத்த | வல்லார் | எலாம் |
| Sindhaiyaan | magizhndhu | Eththa | vallaar | elaam |
| பந்த | பாசம் | அறுக்க | வல்லார்களே | |
| Bandha | paasam | arrukka | vallaagalle. | |

## திருச்சிற்றம்பலம்

நந்தி என்ற சிவபெருமானின் பெயர் "நமசிவய"; இதையே தமிழ் வல்ல ஞானசம்பந்தர் இசையுடன் பாடியுள்ளார்; இப்பாடல்களை மனத்தில் சந்தோஷத்துடன் பாடுபவர்கள், பந்தமும் பாசமும் அறுப்பார்கள்.

The sacred name of Nandhi-Lord Siva-is "Na Ma Si Va Ya". This as subject, Gnaanasambandhar, proficient in Tamil, sang these verses to rhythm. All those that sing them with joy do sever their bondage and attachment.

# திருநாவுக்கரசர் தேவாரம்

## THIRUNAVUKKARASAR THEVARAM

## (8)

திருவைந்தெழுத்தை ஜெபிப்பது மிகவும் நல்லது. இடையறாது ஜெபித்துக்கொண்டு இருந்தால் நம் சிந்தையும் செயலும் வேறொன்றில் நிலைத்து இருந்தாலும் நாக்கு அத்திரு வைந்தெழுத்தைச் சொல்லிக் கொண்டே இருக்கும். ஆகவே நன்மையிலும் தீமையிலும் திருவைந் தெழுத்தைச் சொல்லிக்கொண்டே இருந்தால் நாக்கானது வேறு தவறான சொற்களைச் சொல்லாது. ஆகவே நாக்கினால் ஏற்படும் குற்றம் நிகழாது.

## திருச்சிற்றம்பலம்

| | | | |
|---|---|---|---|
| கூற்றாயின | வாறு | விலக்ககிலீர் | |
| Kutrraayina | vaarru | vilakkagileer | |
| கொடுமை | பல | செய்தனநான் | அறியேன் |
| Kodumai | pala | seydhananaan | arriyen |
| ஏற்றாய் | அடிக்கே | இரவும் பகலும் | |
| Etrraay | adikke | iravum pagalum | |
| பிரியாது | வணங்குவன் | எப்பொழுதும் | |
| piriyaadhu | vananguvan | eppozhudhum | |

| | | |
|---|---|---|
| தோற்றாதென் Thotrraadhen | வயிற்றின் vayitrrin | அகம்படியே agambadiye |
| குடரோடு kudarodu | துடக்கி thudakki | முடிக்கியிட mudikkiyida |
| ஆற்றேன் Aatrren | அடியேன் adiyen | அதிகைக் கெடில adhigaik kedila |
| வீரட்டானத்து உறை Veerattaanaththu urrai | | அம்மானே ammaane. |

இந்த நோய் எமன் ஆகி இருக்கிறது; இத்துன்பத்தை நீக்கவில்லையே! நான் என்ன கொடுமைகள் செய்தேன்? எனக்குத் தெரியவில்லை; எருதை வாகனமாக உடையவனே! உன் திருவடிகளை இரவும் பகலும் விடாமல் வணங்குவேன்; எப்பொழுதும் வணங்குவேன்; இந்த நோய் கண்ணுக்குத் தெரியாது; என் வயிற்றில் பொறுக்க முடியாத வலி; குடலைப்பிடித்துக் கசக்குகிறது. இந்த வலியைத் தாங்க முடியவில்லை; கெடிலம் என்ற ஆற்றின் கரையில் உள்ளது திருவதிகை – அத்திருவதிகை என்ற தலத்தில் வீரட்டானம் என்ற கோயிலில் இருக்கும் தலைவனே!

The disease has become the god of death. You have not relieved me of the pain. What evil deeds did I do? I do not know. O Lord, riding on a bull! Your Feet, night and day, without pause, I worship. The disease is invisible; it spins and twists the intestine. I am unable to bear the pain. Oh Lord residing in the shrine called Veerattaanam in Thiruvathigai (திருவதிகை)on the banks of the river Gadilam!

| | | | |
|---|---|---|---|
| சலம் Chalam | பூவொடு puvodu | தூபம் மறந்து dubam marrandhu | அறியேன் arriyen |
| தமிழோடு Thamizhodu | இசைபாடல் isaipaadal | மறந்து marrandhu | அறியேன் arriyen |
| நலம் Nalam | தீங்கிலும் theenggilum | உன்னை மறந்து unnai marrandhu | அறியேன் arriyen |
| உன்னாமம் unnaamam | என்நாவில் ennaavil | மறந்து marrandhu | அறியேன் arriyen |
| உலந்தார் Ulandhaar | தலையில் thalaiyil | பலிகொண்டு balikonddu | உழல்வாய் uzhalvaai |

| | | | |
|---|---|---|---|
| உடலுள் Udalull | உறுசூலை urrusulai | தவிர்த்து taavirththu | அருள்வாய் arullvaai |
| அலந்தேன் Alanthen | அடியேன் adiyen | அதிகைக் adhikaik | கெடில kedila |
| வீரட்டானத்து உறை veerattaanaththtu urrai | | அம்மானே ammaane. | |

தண்ணீர், பூ, தூபம் இவற்றால் (வழிபாடு செய்வதை) மறந்ததில்லை. இசை பொருந்திய தமிழ்ப் பாடல்களைப் பாடுவதையும் மறக்கவில்லை. நன்மை வந்தபொழுதும், தீமை வந்தபொழுதும் உன்னை மறக்கவில்லை. உன்னுடைய திருப்பெயர் (திருவைந்தெழுத்து); அதை என் நாக்கு மறக்கவில்லை. இறந்தவருடைய மண்டை ஓட்டில் பிச்சை எடுத்துத் திரிபவனே! என் உடம்புக்குள் வந்து இருக்கிற சூலை நோயை நீக்குவாயாக. வருந்துகிறேன், அடியவனாகிய நான். திரு அதிகையில் கெடில நதிக்கரையில் உள்ள 'வீரட்டானம்' என்ற கோயிலில் உள்ள கடவுளே!

I never forgot or failed (to worship) with waters, flowers and incense. I never failed to sing Tamil songs set in music. I did not forget you while well placed in life or while suffering. My tongue never failed to chant Your Sacred Name. Oh Lord, who took alms in the skull of the dead and roam about! Please relieve me of the pain that has afflicted my body and bestow grace. I a devotee, am suffering. Oh Lord that resides in the temple 'Veerattaanam,' on the banks of the river Gadilam at Thiru Athigai!

| | | | | |
|---|---|---|---|---|
| போர்த்தாய் Porththaay | அங்கோர் angor | ஆனையின் aanaiyin | | ஈருரிதோல் eerurithol |
| | புறங்கா(டு) purrangaadu | அரங்கா arangaa | நடமாட nadamaada | வல்லாய் vallaay |
| ஆர்த்தான் Aarthaan | அரக்கன் arakkan | தனைமால் thanaimaal | | வரைக்கீழ் varaikkeezh |
| | அடர்த்திட்(டு) Adarththittu | அருள்செய்த arullseydha | | அதுகருதாய் adhukarudhaay |

| | | | |
|---|---|---|---|
| வேர்த்தும் Verththum | புரண்டும் purandum | விழுந்தும் vizhundhum | எழுந்தால் ezhundhaal |
| | என் en | வேதனை யான vedhanai yaana | விலக்கி இடாய் vilakki idday |
| ஆர்த்தார் Aarthihaar | புனல்சூழ் punalsuzh | அதிகைக் கெடில adhigaik kedila | |
| | வீரட்டானத்து Veerattaanaththu | உறை urrai | அம்மானே ammaane. |

## திருச்சிற்றம்பலம்

ஒரு யானையின் தோலை உரித்துப் போர்த்துக் கொண்டாய்; சுடு காட்டையே நாடக அரங்காகக் கொண்டாய்; அங்கே நடனம் ஆடுகிறாய்; இராவணன் ஆகிய ராக்ஷசன் ஆரவாரம் செய்து மலையைத் தூக்கினான்; அவனை நெருக்கி அவனுக்கு அருள் செய்தாய்; அதனை நினைவில் கொள்! நான் வேர்க்கிறேன்; புரள்கிறேன்; விழுகிறேன் ; எழுகிறேன். என் கஷ்டங்களை நீக்குவாய்! ஆரவாரம் செய்து கொண்டு கெடிலநதியின் வெள்ளம் சூழ்ந்து இருக்கிற திருவதிகையில், வீரட்டானம் என்ற கோயிலில் இருக்கும் தலைவனே!

You covered yourself with the skin of the elephant. The burning ground is your stage and you are capable of dancing thereon. Ravana, the gaint, made a great uproar. But you crushed him under a huge mountain and bestowed grace on him. Please consider that. I perspire, I roll, I fall, I rise. Kindly remove my suffering. O Lord, residing in the shrine called Veerattaanam in Thiruvathigai surrounded by the waters of the Gadilam!

## (9)

பிறந்தது முதற்கொண்டு பசியும் தாகமும் உடன் வருகின்றன; உணவு மிகினும் நோய். அதைப் போக்க மருந்து. இங்ஙனம் அல்லலில் வளர்ந்து அல்லலில் வாழ்கிறோம்; பின் கல்வி. அதுவும் துன்பம் கற்ற பிறகு பொருள் ஈட்டும் முயற்சி; பொருள் ஈட்டச் செய்யும் செயல்களுக்கு அளவில்லை. நல்ல வழியில் ஈட்டுவது நல்லது. கெட்ட வழியில் ஈட்டினால்

பிறருக்குத் துன்பம் உண்டாக்கி நம்மிடம் வருவதால் அதுவும் நமக்கு நன்மை தராது. தீய வழியில் பொருள் ஈட்டினால் அரச தண்டனைக்கும் உள் ஆக்கும். ஆகவே தீய வழியில் பொருள் ஈட்டுதல் கூடாது. சகோதரர்களாக எல்லோரையும் பாவித்தால் தீய வழியில் பொருள் ஈட்டுகிற எண்ணமே வராது. எல்லாரும் இன்பம் அடையலாம்.

## திருச்சிற்றம்பலம்

கருவுற்ற நாள் முதலாக உன்பாதமே காண்பதற்கு
Karuvutra naall mudhalaaga unpaadhame kaannbadharrku

உருகிற்று என் உள்ளமும் நானும் கிடந்து
Urugitrru en ulllamum naanum kidanthu

அலந்து எய்த்து ஒழிந்தேன்
Alandhu eyththu ozhinthen

திருஒற்றியூரா திரு ஆலவாயா திரு ஆரூரா
Thiruotrriyuuraa thiru aalavaayaa thiru aaruuraa

ஒரு பற்று இலாமையும் கண்டு இரங்காய்
oru patrru ilaamaiyum kanndu eranggaay

கச்சி யேகம்பனே
Kachchi yekambane

## திருச்சிற்றம்பலம்

தாயின் கருவிலே விழுந்த நாள்முதற்கொண்டு உன்னுடைய திருவடிகளைக் காணவேண்டும் என்று என் உள்ளம் உருகிற்று. நானும் கிடந்து மிகவும் வருந்தினேன்.

திருவொற்றியூரில் உள்ள இறையவனே!

மதுரையில் திருவாலவாய் என்னும் கோயிலில் உள்ளவனே!

திருவாரூரில் இருப்பவனே!

காஞ்சிபுரத்தில் திரு ஏகம்பம் என்ற கோயிலில் இருக்கும் பெருமானே!

From the day I was conceived in the womb, my mind melted to see your feet.

I underwent a lot of suffering.

Oh Lord residing at Thiru Otrriyuur!

Oh Lord of the temple Thiru aalavaay of Madurai!

Oh Lord of Thiru aaruur!

By seeing that I have no support, please feel pity on me

Oh Lord abiding in Eakambam at Kaanchipuram!

## *(10)*

*நாக்கு இறைவன் பெயரைச் சொல்லிப் பழகினால், மனமும் அதில்தானே லயிக்கும். மனமும் வாக்கும் அந்த மந்திரத்தில் பழகினால் இறைவன் குடிகொள்ளும் இடமாக மனம் மாறும். அப்பொழுது அந்த மனம் தூய்மை உடையதாக இருக்கும். நன்மை உள்ள இடத்தில் நல்லனவே சேரும். நன்மையே உரு எடுத்தாற்போன்ற நிலை ஏற்படும்; அத்தகையவர் கூட்டுறவு எல்லாருக்கும் நன்மை விளைவிக்கும். நல்லவர்களோடு இணங்கி யிருப்பது நல்லது. அவர்களோடு சேர்ந்து இருந்தால் அவர்கள் நடுவில் இறைவன் வீற்றிருப்பான்.*

## திருச்சிற்றம்பலம்

| | | | |
|---|---|---|---|
| *மாசில்*<br>Massil | *வீணையும்*<br>veennaiyum | *மாலை*<br>maalai | *மதியமும்*<br>madhiyamum |
| *வீசு*<br>Veesu | *தென்றலும்*<br>thendraalum | *வீங்கிள*<br>veengilla | *வேனிலும்*<br>vēnilum |
| *மூசு*<br>Mūsu | *வண்டறை*<br>vanndarrai | *பொய்கையும்*<br>poygaiyum | *போன்றதே*<br>pondradhē |
| *ஈசன்*<br>Eesan | *எந்தை*<br>endhai | *இணையடி*<br>innaiyadi | *நீழலே*<br>neezhalē |

*குற்றம் அற்ற வீணையின் இசைபோலவும், மாலைக் காலத்தில் காணப்படும் நிலாவைப் போலவும், இளவேனில் காலத்துக் குளிர்ச்சி போலவும், வண்டுகள் ஒலிக்கும் (மலர்கள் உள்ள) குளம் போலவும் (இன்பம் உண்டாக்கும்; எது எனில்) எந்தை ஆகிய சிவபெருமானின் திருவடி நிழல்.*

The shade of the Feet of my Heavenly Father is like-the music of the flawless Veena-the moon light in the evening -the pleasant breeze blowing from the south-the pleasantness of the spring season and-the tank wherein the bees hum (on the flowers therein).

நமச்சி வாயவே ஞானமும் கல்வியும்
Namachchi vaayavē gnaanamum kalviyum
நமச்சி வாயவே நான் அறி விச்சையும்
Namachchi vaayavē naan arri vichchaiyum
நமச்சி வாயவே நாநவின்று ஏத்துமே
Namachchi vaayavē naanavindru ēththumē
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே
Namachchi vaayavē nannerri kaattumē

நமச்சிவாய என்பது பேரறிவைத் தருவது
நமச்சிவாய என்பது கல்வியையும் தருவது.
நமச்சிவாய என்பது நான் அறிந்த வித்தையும் ஆகும்.

என்பதை என்னுடைய நாக்கு விரும்பிப் புகழும்.
நமச்சிவாய என்பது நல்ல வழியைக் காட்டும்.

Na Ma Si Va Ya awards wisdom and worldly education
Na.Ma Si Va Ya is the stratagem I have learnt
Na Ma Si Va Ya my tongue always adores with great liking
Na Ma Si Va Ya leads to the virtuous path.

## திருச்சிற்றம்பலம்

விறகில் தீயினன் பாலில் படு நெய்போல்
Virragil theeyinan paalil padu neypōl
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
Marraiya nindrullan maamanni chōdhiyaan
உறவு கோல் நட்டு உணர்வு கயிற்றினால்
Urravu kōl nattu unnarvu kayitrrinaal
முறுக வாங்கிக் கடைய முன்நிற்குமே
Murruga vaangik kadaiya ṃunnirrkumē.

## திருச்சிற்றம்பலம்

விறகில் தீயைப் போலவும், பாலில் உள்ள நெய்போலவும், சிறந்த மணியில் காணப்பெறும் ஒளி போலவும் இறைவன் மறைந்து நின்று இருக்கிறான். உறவு என்னும் கோலை நட்டு, உணர்வு என்ற கயிற்றைக் கட்டி, முன்னும் பின்னும் இழுத்துக் கடைந்தால், இறைவன் எதிரில் வந்து நிற்பான்.

He stands unseen-like fire in wood, like ghee in milk and like the brightness in a bright gem. Fix a post called knowledge, take a rope called wisdom, and then churn it. The Lord would stand in front of you.

## *(11)*

*அரிது அரிது மானுடர் ஆதல் அரிது. இப்பிறவி தப்பின் எப்பிறவி வாய்க்குமோ நாம் அறியோம். மானுடப் பிறவி நமக்குக் கொடுத்தது இறைவனே! ஆகையால் இத்தகைய சிறந்த பிறவியை அளித்த இறைவனை மனத்தால் சிந்திக்க வேண்டும், வாக்கால் வாழ்த்த வேண்டும், காயத்தால் தொழ வேண்டும். பல பிறவிகளை எடுத்து வருந்தி உழலும் உயிர் மானிடப் பிறவி கொடுத்த இறைவனை மறக்கக்கூடாது.*

*புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியாஉன் அடிஎன்மனத்தே*
Puzhuvaayp pirrakkinum punnnniyaaun adienmanathē

*வழுவாதிருக்க வரந்தரல்வேண்டும் இவ்வையகத்தே*
Vazhuvaathirukka varantharalvēnndum ivvaiyagaththē

*தொழுவார்க்குஇரங்கி இருந்துஅருள்செய் பாதிரிப்புலியூர்*
Thozuvaarkkuirangi irundu arullsey Paadhirip puliur

*செழுநீர்ப் புனல் கங்கை செஞ்சடை மேல்வைத்த*
Sezhuneerp punal Ganggai segnchadai mēl vaiththa

*தீ வண்ணனே*
thee vannnanē

*புழுவாகப் பிறந்தாலும், புண்ணியனே! உன் திருவடி என் மனத்தில் தவறாது இருக்க வேண்டும்--இவ்வரம் எனக்குத் தரவேண்டும்.*

இந்த உலகத்தில் உன்னைத் தொழும் அடியவர்களுக்கு மனம் இரங்கி அருள் செய்பவனே!

திருப்பாதிரிப் புலியூரில் இருக்கும் கடவுளே!

பெரும் வெள்ளத்தை உடைய கங்கையைச் சிவந்த சடையில் கொண்ட பெருமானே!

நெருப்பு நிறம் உடையவனே!

O Holy one!

Even if I should be born as a worm, Your feet should be fixed in my mind.

This boon or blessing please confer.

(O Lord) who condescends to show grace to those that worship Thee!

(O Lord) residing at Tiruppaathirippuliyuur!

(O Lord) who has placed the flooded Ganges in the matted locks!

O fire coloured Lord!

## (12)

இறைவனை மனத்தில் நினைத்து இருந்தால் மட்டும்போதாது. அவனைப் பூசை செய்வதும் நம் கடமை. சைவர்களுக்கு விக்கிரக ஆராதனை அவசியம். இறைவனை உருவம் உடையவன் என்றும் உருவம் இல்லாதவன் என்றும் கூறுவர். இறைவன் உருவத்தில் வந்தும் அருள் செய்வான். உருவம் காட்டாமலும் அருள் செய்வான்; அருவுருவத்தில் இருந்தும் அருள் செய்வான். அருவுருவம் ஆவது இலிங்கத் திருமேனி; இலிங்கத் திருமேனிதான் கோயில்களில் வைத்துப் பூசிக்கப்படுவது. ஆகவே கோயில்களுக்குச் சென்று சிவலிங்கப் பெருமானை வணங்குவது மிகவும் சிறப்பாகும்.

## திருச்சிற்றம்பலம்

| | | | |
|---|---|---|---|
| சொற்றுணை | வேதியன் | சோதி | வானவன் |
| Sotrrunnai | vēdhiyan | sōthi | vaanavan |
| பொற்றுணை | திருந்தடி | பொருந்தக் | கைதொழக் |
| Potrrunnai | thirunthadi | porundhak | kaithozhak |
| கற்றுணைப் | பூட்டியோர் | கடலில் | பாய்ச்சினும் |
| Katrrunnaip | puttiyōr | kadalil | paaychchinum |
| நற்றுணை | ஆவது | நமச்சி | வாயவே |
| Natrrunnai | aavadhu | namachchi | vaayavē |

புகழ் பொருந்திய வேதத்தை ஓதுபவன்; ஒளி பொருந்திய விண் உலகில் இருப்பவன் – இச்சிவபெருமானுடைய திருவடிகள் பொன் போன்றவை; அழகானவை; அவற்றைக் கையால் தொழுதால், கல் தூணில் கட்டிக் கடலில் தள்ளினாலும், "நமசிவாய" என்னும் மந்திரம் நல்ல துணையாய் இருக்கும்.

He chants the famous Vedas. He resides in the glowing Heaven. His Feet are golden and beautiful. If one worships His Feet with intense devotion and clasped hands, and although one is bound to a boulder and thrown into the sea, it is "Na Ma Si Va Ya" that becomes his helpmate.

| | | | |
|---|---|---|---|
| இல்லக | விளக்கது | இருள் | கெடுப்பது |
| Illaga | villakkadhu | irull | keduppadhn |
| சொல்லக | விளக்கது | சோதியுள்ளது | |
| Sollaga | villakkadhu | sōthiyullladhu | |
| பல்லக | விளக்கது | பலரும் | காண்பது |
| Pallaga | villakkadhu | palarum | kaannpadhu |
| நல்லக | விளக்கது | நமச்சி | வாயவே |
| Nallaga | villakkadhu | Namachchi | vaayavē. |

வீட்டில் வைக்கும் விளக்கு இருளை நீக்கும். புகழ் பொருந்திய மனத்தில் உள்ள விளக்கு ஒளி பொருந்தியது. பல வீடுகளிலும் வைக்கும் விளக்கு பலரும் காணக்கூடியது. நல்ல மனத்தில் இருப்பது ஆகிய விளக்கு "நமசிவாய" என்ற மந்திரம் ஆகும்.

The light lit in the house extinguishes darkness. The famous light lit in the mind is lustrous. The lights lit in the houses are visible to all. The good light in the mind is "Na Ma Si Va Ya" (the mystic five lettered mantra).

| | | | |
|---|---|---|---|
| மாப்பிணை<br>Maappinnai | தழுவிய<br>thazhuviya | மாதோர்<br>maadhōr | பாகத்தன்<br>baagaththan |
| பூப்பிணை<br>Puppinnai | திருந்தடி<br>thirundhadi | பொருந்தக்<br>porundhak | கைதொழ<br>kaithozha |
| நாப்பிணை<br>Naappinni | தழுவிய<br>thazhuviya | நமச்சிவாயப்<br>namachchivaayap | பத்து<br>paththu |
| ஏத்த<br>Eththa | வல்லார்<br>vallaar | தமக்கு<br>thamakku | இடுக்கண் இல்லையே<br>iduckkann illaiyē |

## திருச்சிற்றம்பலம்

பெண்மான் போன்றவர் உமை; அவரை ஒரு பாகத்தில் உடையவர் சிவபெருமான். சிவபெருமானுடைய திருவடிகள் மலர் போன்றவை; அழகு உடையவை; அவற்றைக் கையால் தொழு; சொல்மாலையாகிய நமச்சிவாயப் பதிகத்தைப்பாடு; பாடினால் துன்பங்கள் இல்லை.

Uma is like a hind and the Lord is having Her in His Form. Worship His flower-like Feet with clasped hands; and sing this decadence which praises the (mystic five Letters) "Na Ma Si Va Ya". There will be no misery for ever.

## *(13)*

இறைவன் பொருள் விளங்கும் ஓசையாகவும் இருக்கிறான் பொருள் விளங்காத ஒலிகள் ஆகவும் இருக்கிறான்; இறைவன் மலராக இருக்கிறான்; மலரில் உள்ள வாசனையாக இருக்கிறான்; வானத்தில் இருக்கிறான்; வானத்துக்கு அப்பாலும் இருக்கிறான்; நிலமாக இருக்கிறான்; நீராக இருக்கிறான்; காற்றாக இருக்கிறான்; தீயாக இருக்கிறான்; நமக்குப் பயன்படும் எல்லாப் பொருளாகவும் இருக்கிறான். இங்ஙனம் இருக்கும் இறைவனை மறக்கலாமா? அவனுடைய இனிமையான திருப்பெயரைச் சொல்லிக்கொண்டு அவனை வாழ்த்துவது நம் கடமை.

## திருச்சிற்றம்பலம்

| | | | |
|---|---|---|---|
| ஓசை | ஒலியெலாம் | ஆனாய் | நீயே |
| Osai | oliyelaam | aanaay | neeyē |
| உலகுக்கு | ஒருவனாய் | நின்றாய் | நீயே |
| Ulgukku | oruvanaay | nindraay | neeyē |
| வாச | மலரெலாம் | ஆனாய் | நீயே |
| Vaasa | malarelaam | aanaay | neeyē |
| மலையான் | மருகனாய் | நின்றாய் | நீயே |
| Malaiyaan | maruganaay | nindraay | neeyē |
| பேசப் | பெரிதும் | இனியாய் | நீயே |
| Pesap | peridhum | iniyaay | neeyē |
| பிரானாய் | அடியேன்மேல் | வைத்தாய் | நீயே |
| piraanaay | adiyēnmēl | vaiththaay | neeyē |
| தேச | விளக்கெலாம் | ஆனாய் | நீயே |
| Dhēsa | villakkẹlaam | aanaay | neeyē |

திருவையாறு அகலாத செம்பொற் சோதி
Thiruvaiyaarru agalaadha sembor sōdhi.

ஓசையாகவும், ஒளியாகவும் இருப்பவன் நீயே; உலகம் முழுவதுக்கும் ஒப்பில்லாதவனாக நிற்பவன் நீயே; வாசனை பொருந்திய மலர் முழுவதும் நிற்பவன் நீயே; இமவானுக்கு மருமகனாய் நிற்பவனும் நீயே; பேசுவதற்கு மிகவும் இனிமை உடையவன் நீயே; உலகம் முழுவதுக்கும் விளக்காக இருப்பவனும் நீயே; திருவையாற்றை நீங்காது இருக்கும் சிவந்த பொன் போன்ற ஒளி உடைய கடவுளே!

You are the meaningless and significant sounds. You stand as the Pearless one throught the world. You are the flowers fragrant all. You stand as the son-in-law of Malaiyaan (Himavaan). You are sweet (much indeed) to speak of. As Master You have placed Your Feet on my head. You have become the Light of the world. Oh Golden light that does not leave Thiruvaiyaarru!

ஆரும் அறியா இடத்தாய் நீயே
Aarum arriyaa idaththaay neeye

ஆகாயம் தேர் ஊர வல்லாய் நீயே
Aagaayam ther urra vallaayneeye

பேரும் பெரிய இலங்கை வேந்தன்
Perum periya ilangaai vendhan

பெரிய முடிபத்து இறுத்தாய் நீயே
periya mudipaththu irruththaay neeye

ஊரும் புரமூன்றும் அட்டாய் நீயே
Urum puramundrum attaay neeye

ஒண் தாமரையானும் மாலும் கூடித்
onn thamaraiyaanum maalumkudith

தேரும் அடி என்மேல் வைத்தாய் நீயே
Therum adi enmel vaiththaay neeye

திருவையாறு அகலாத செம்பொற் சோதி
Thiruvaiyaarru agalaatdha semborr sodhi.

ஒருவரும் அறிந்து கொள்ள முடியாத இடத்தில் இருப்பவன் நீயே; ஆகாயத்தில் தேரில் செல்லக் கூடியவன் நீயே; புகழ் பொருந்திய பெரிய இலங்கைக்கு அரசன் இராவணன், அவன் தலைகள் பத்தையும் நெரித்தவனும் நீயே; நகரும் படியான மூன்று ஊர்களையும் அழித்தவன் நீயே; ஒளி பொருந்திய தாமரையில் இருக்கும் பிரமனும் திருமாலும் கூடித் தேடிய திருவடியை என் தலைமேல் வைத்தவனும் நீயே; திருவையாற்றில் நீங்காமல் இருக்கும் செம்பொன் போன்ற ஒளிபொருந்திய கடவுளே!

You are in the place not perceived by even one. You are capable of driving the chariot in the Heavens. You crushed the ten big heads of (Raavanna) the famous King of Lanka. You destroyed the three moving fortresses. Brahma seated on the bright lotus and Vishnu cannot perceive Your Feet; and You were pleased to place them on my head. Oh Golden Light that does not leave Thiruvaiyaarru!

உலகில் காணும் எல்லாப் பொருள்களும் அழிந்து போகக்கூடியவை. சில நீண்ட நாள் இருக்கலாம். சில பல நூற்றாண்டுகள் இருக்கக்கூடும். ஆனால் மக்கட் பிறவியோ சிறந்த பிறவி எனினும், சில ஆண்டுகள்தான் நாம் வாழ்ந்து இருக்க முடியும். வாழும் சில ஆண்டுகளில் நல்லதைச் செய்வோம்; நல்லது அல்லாதவற்றைச் செய்யாது இருப்போம். நல்லவர்களோடு உறவு கொள்வோம். நல்லவர் அல்லாதவர்களை நல்லவர்களாக ஆக்க முயல்வோம். இதுவே நல்ல நெறி; நன்மையை அடைவிக்கும் நெறியும் ஆகும்.

## திருச்சிற்றம்பலம்

தந்தை யார் தாயார் உடன்பிறந்தார்
Thandhai yaar thaayaar udanpirranthaar

தாரம் ஆர் புத்திரர் ஆர் தாம் தாம் யாரே
Thaaram aar puththirar aar thaam thaam yaare

வந்தவாறு எங்ஙனே போமாறு ஏதோ
Vandhavaarru engngane pomaarru edho

மாயமாம் இதற்கு ஒன்றும் மகிழ வேண்டாம்
maayamaam idarrku onrrum magizha vendaam

சிந்தையீர் உமக்கு ஒன்று சொல்லக் கேண்மின்
Chithaiyeer umakku onrru sollak kennmin

திகழ் மதியும் வாள் அரவும் திளைக்கும்சென்னி
Tigazh madhiyum vaall aravum thillaikkum senni

எந்தையார் திருநாமம் நமச்சிவாய
Endhiyaar thirunaamam Namachchivaaya

என்று எழுவார்க்கு இருவிசும்பில் இருக்கலாமே
Enrru ezhuvaarkku iruvisumbil irrukkalaame.

## திருச்சிற்றம்பலம்

தந்தை தந்தை என்கிறோமே அத்தந்தை என்பவர் யார்? தாய் தாய் என்று சொல்கிறோமே அத்தாய்தான் யார்? உடன் பிறந்தவர்கள் என்கிறோமே அவர்கள் தாம் யார்? (இப்படிச் சொல்கிற) நாம்தாம் யார்! இதற்காக மகிழ்ச்சி அடைய வேண்டாம். ஏ மனமே! உனக்கு ஒரு செய்தியைச் சொல்ல விரும்புகிறேன். சந்திரன் திகழ்கிறதும், ஒளி பொருந்திய பாம்பு

இருப்பதும் ஆகிய திருமுடி உடையவர் சிவபெருமான். அவர் (நம் எல்லோருக்கும்) தந்தை ஆவர். அவருடைய திருப்பெயர் நமசிவாய என்ற மந்திரம் ஆகும். அம்மந்திரத்தைச் சொல்லிக் கொண்டு இருப்பவர்கள் வானுலகில் (மோட்ச உலகில்) இருக்கலாம்.

Who the (earthly) father is and who the mother too?
Who are those that call themselves as children of the
same parents?
Who the wife is and who the children are?
Who are we?
Whence did we come? and where to should we go?
This is after all an illusion.
Hence don't become exhilarated!
O Mind!
I intend to advise you, please listen!
There is the Lord having the crescent and the snake over
His head who is our (heavenly) Father.
His sacred name is "Na Ma Si Vā Yā"
Chant it and rise up;
You will be permanently seated in the wide Heavens.

## *(15)*

இறைவன் நமக்கு இந்த நல்ல உடம்பைக் கொடுத்தான். இது புன்புலால் யாக்கை; இதை நல்ல உடம்பாக ஆக்க வேண்டாமா? உடற்பயிற்சி செய்தால் இது வலிமை யுடையதாகிறது. பிராணாயாமம் செய்தால் வலிமை அடைகிறது. இத்தகைய வலிமை பொருந்திய உடம்பு உறுப்புக்கள் ஏன் இருக்கின்றன? அவற்றை உலகியல் நிலையிலிருந்து கடவுள் பக்கம் சிறிது திருப்ப வேண்டும். தலை இறைவனை வணங்க இருக்கிறது; வாய் இறைவனை வாழ்த்துவதற்காக இருக்கிறது; மனம் இறைவனை நினைப்பதற்காக இருக்கிறது. கால்கள் வீணாக ஊர் சுற்றுவதற்கு மட்டும் அல்ல; இறைவனை அல்லது அவன் இருக்கும் கோயிலை வலம் வருவதற்காகவும் பயன்படுத்த வேண்டும். இப்படி ஒவ்வொரு உடல் உறுப்பையும் இறைவன் பக்கம் செலுத்துவது அறிவுடைமை ஆகும்.

| | | | |
|---|---|---|---|
| தலையே<br>Thalaiye | நீ<br>nee | வணங்காய்–தலை<br>vannanggaay-thalai | |
| மாலை<br>Maalai | தலைக்கு<br>thalaikku | அணிந்து<br>annindhu | |
| தலையாலே<br>Thalaiyaale | பலி<br>bali | தேரும்<br>therrum | தலைவனைத்<br>thalaivanaith |
| தலையே<br>Thalaiye | நீ<br>nee | வணங்காய்<br>vananggaay | |

தலையே! நீ வணக்கம் செலுத்து; தலைமாலையைத் தலையில் அணிந்து கொண்டிருக்கிறான், சிவன்; அவன் (பிரமனது) தலை ஓட்டில் பிச்சை எடுக்கிறான்; அத்தலைவனைத் தலையே, நீ வணங்குவாயாக!

O head! bow down. He has adorned His head with the garland of skulls. He takes alms in the skull (of Brahma). He is the Master of all. To Him, Oh head! bow down.

| | | | | |
|---|---|---|---|---|
| கண்காள்<br>Kanngaall | காண்மின்களோ–கடல்<br>kaannmingallo - kadal | | | |
| நஞ்சுண்ட<br>Nanjunnda | கண்டன்<br>kanndan | தன்னை<br>thannai | | |
| எண்தோள்<br>Enntholl | வீசி<br>veesi | நின்றாடும்<br>nindrraadum | பிரான்<br>piraan | தன்னைக்<br>thannaik |
| கண்காள்<br>Kanngaall | காண்மின்களோ<br>kaannmingallo. | | | |

கண்களே! பாருங்கள்! சிவன் கடலில் இருந்து வந்தவிஷத்தை உண்டு கழுத்தில் நிறுத்தினான்; அவன் தன் தோள்கள் எட்டையும் வீசி ஆடுகிறான். அத்தகைய கடவுளைக் கண்களே! பாருங்கள்.

Oh eyes! please see. He devoured the poison that came from the sea, and stopped it in His throat. He dances spreading all His eight shoulders. Such a Lord, Oh eyes! please see!

| | | | | |
|---|---|---|---|---|
| செவிகாள் | கேண்மின்களோ – சிவன் | | | |
| Sevigaall | kennmingallō - Sivan | | | |
| எம் | இறை | செம்பவள | | |
| Em | irrai | sempavalla | | |
| எரிபோன் | மேனிப் | பிரான் | திறம் | எப்போதும் |
| Eripon | mēnip | piraan | thirram | eppōdhum |
| செவிகாள் | கேண்மின்களோ | | | |
| Sevigaal | kennmingallō. | | | |

காதுகளே! கேளுங்கள்! சிவன் எங்கள் தலைவன்; சிவந்த பவழ நிறம் உடையவன்; நெருப்புப் போன்ற உடம்பு உடையவன். அவனுடைய பெருமையை எப்பொழுதும் காதுகளே கேளுங்கள்.

Oh! ears! please hear. He is Siva. He is our Lord. The colour of His form is like that of red coral. His body is red like fire. Him, always, Oh ears! please hear.

| | | | |
|---|---|---|---|
| மூக்கே | நீ | முரலாய் – முது | |
| Mukko | nee | muralaay - mudhu | |
| காடுறை | முக்கணனை | | |
| Kaadurrai | mukkannanai | | |
| வாக்கே | நோக்கிய | மங்கை | மணாளனை |
| Vakko | nōkkiya | manggai | mannaallanai |
| மூக்கே | நீ | முரலாய் | |
| Mukko | nee | muralaay. | |

மூக்கே! நீ முகர்ந்து பார்! சிவன் முதுகாட்டை இடமாக உள்ளவன்; மூன்று கண்களை உடையவன்; உமையின் பேச்சையே எதிர்நோக்கி இருக்கும் தலைவன். அவனை, மூக்கே! நீ முகர்வாயாக.

Oh nose! please smell. He resides in the cremation ground. He is the three eyed one. He longs to hear the speech of Uma. Oh nose! please smell (of Him).

| | | | |
|---|---|---|---|
| வாயே<br>Vaayē | வாழ்த்து<br>vaazhththu | கண்டாய் – மத<br>kanndaay - madha | |
| யானை<br>Yaanai | யுரி<br>yuri | போர்த்துப்<br>pōrththup | |
| பேய்வாழ்<br>Pēyvaazh | காட்டகத்து<br>kaattakaththu | ஆடும்<br>aadum | பிரான்தன்னை<br>piran thannai |

வாயே வாழ்த்து கண்டாய்
Vaayē vaazhththu kanndaay.

வாயே! நீ வாழ்த்துவாயாக! இவன் மதம் பொருந்திய யானையின் தோலை உரித்தவன். பேய்கள் இருக்கும்படியான சுடுகாட்டில் ஆடுபவன். அத்தலைவனை, வாயே! நீ வாழ்த்துவாயாக!

Oh mouth! praise Him. He covered Himself with the skin of the elephant. He dances in the cremation ground where the demons live. Him, Oh mouth! please praise!

| | | | |
|---|---|---|---|
| நெஞ்சே<br>Nenjē | நீ<br>nee | நினையாய் – நிமிர்<br>ninaiyaay - nimir | |
| புன்சடை<br>Pūnsadai | நின்மலனை<br>ninmalanai | | |
| மஞ்சாடும்<br>Manjaadum | மலை<br>malai | மங்கை<br>mangai | மணாளனை<br>mannaallanai |
| நெஞ்சே<br>Nenjē | நீ<br>nee | நினையாய்<br>ninaiyaay. | |

நெஞ்சே!நீ நினைப்பாயாக! சிவன் நீண்ட சடை உடையவன்; தூய்மை உடையவன்; பனி மூடியுள்ள மலை அரசன் மகளுக்குக் கணவன். அச்சிவனை, நெஞ்சே! நீ நினை!

Oh mind! think of Him! He has large matted locks. He is the Pure One. He married the lady, daughter of the (King of) mountains covered with white clouds. Oh mind! think of Him.

| | | | |
|---|---|---|---|
| கைகாள் | கூப்பித் | தொழீர் – கடி | |
| Kaikaall | kūppith | thoheer - kadi | |
| மாமலர் | தூவி | நின்று | |
| Maamalar | thūvi | nindru | |
| பைவாய்ப் | பாம்பரை | ஆர்த்த | பரமனைக் |
| Paivaayp | paambarai | aarththa | paramanaik |
| கைகாள் | கூப்பித் | தொழீர் | |
| Kaikaall | kūppith | thozheer. | |

கைகளே! இரண்டு கைகளையும் சேர்த்துத் தொழுங்கள். வாசனை உள்ள சிறந்த மலர்களை இட்டு நின்று தொழுங்கள். இறைவன் படம் உடைய பாம்பை இடுப்பில் கட்டியவன். அவனைக் கைகளே! கூப்பித் தொழுங்கள்.

Oh hands! Salute him by folding both hands together. Place fragrant best flowers and worship in standard posture. He is the Lord who has belted his waist with serpent having hood. Oh hands! salute Him!

| | | | | |
|---|---|---|---|---|
| ஆக்கையால் | பயன் | என் – அரன் | | |
| Aakkaiyaal | payan | en - aran | | |
| கோயில் | வலம் | வந்து | | |
| Kōyil | valam | vandhu | | |
| பூக்கையால் | அட்டிப் | போற்றி | யென்னாத | இவ் |
| Pūkkaiyaal | attip | pōtrri | yennaadha | iv |
| ஆக்கையால் | பயன் | என் | | |
| Aakkaiyaal | payan | en. | | |

உடம்பால் பயன் என்ன? சிவபெருமான் கோயிலை வலம் வரவேண்டும்; பூவைக் கையில் எடுத்துக் கொண்டு 'போற்றி' என்று சொல்லிப் போடவேண்டும்; இப்படிச் செய்யாத இந்த உடம்பால் பயன் என்ன?

Of what avail is the body? Go round the temple of Hara. Take flowers in your hands, place them on Him and praise Him. If not, what is the use of this body?

| | | | |
|---|---|---|---|
| கால்களால் | பயன் | என் – கறைக் | |
| Kaalgallaal | payan | en - karraik | |
| கண்டன் | உறை | கோயில் | |
| Kanndan | urrai | kōyil | |
| கோலக் | கோபுரக் | கோகரணஞ் | சூழாக் |
| Kōlak | Kōburak | kōkarannagn | sūzhaak |
| கால்களால் | பயன் | என் | |
| Kaalgallaal | payan | en | |

கால்கள் இருப்பதால் பயன் என்ன? கழுத்தில் கறை உடையவன் சிவபெருமான். அப்பெருமான் இருக்கும் கோயில் திருக் கோகரணம். அங்கு அழகிய கோபுரம் இருக்கிறது. அக்கோயிலைச் சுற்றிவராத கால்களால் பயன் என்ன?

Of what use are the legs? Go round the temple of Gokaranam which has a beautiful pagoda. If not, of what avail are the legs?

| | | | |
|---|---|---|---|
| உற்றார் | ஆர் | உளரோ – உயிர் | |
| Utrraar | aar | ullarō - uyir | |
| கொண்டு | போம் | பொழுது | |
| Konndu | pōm | pozhudhu | |
| குற்றாலத்து | உறை | கூத்தன் அல்லால் | நமக்கு |
| Kutrraalaththu | urrai | kūththan allaal | namakku |
| உற்றார் | ஆர் | உளரோ | |
| Utrraar | aar | ullarō. | |

யமன் உயிரைக் கொண்டு போகிற சமயத்தில், உறவினராக நமக்கு யார் இருக்கிறார்கள்? குற்றாலம் எனும் தலத்தில் கூத்து ஆடும் கடவுளைத் தவிர்த்து நமக்கு உறவினர் ஆக யார் இருக்கின்றார்கள்?

Who are our relatives when the life is taken away? Except the Lord who resides and dances at Kutraalam, who are our relatives?

இறுமாந்து இருப்பன் கொலோ – ஈசன்
Irumaandhu iruppan kolō - eesan

பல்கணத்து எண்ணப்பட்டுச்
Palkannaththu ennnappattuch

சிறுமான் ஏந்திதன் சேவடிக்கீழ்ச் சென்று அங்கு
Chirrumaan ēndhithan sēvadikkeezhch chendru angu

இறுமாந்து இருப்பன் கொலோ
Irumaandhu iruppan kolō.

சிவபெருமானின் அடியார்களில் நான் ஒருவன் என்று நான் மிகவும் இறுமாந்து இருப்பேனோ? சிறிய மானைக் கையில் கொண்டு இருக்கிறான்,. இறைவன்; அவனுடைய திருவடி செம்மையானது; அதன் கீழே சென்று, நான் மிகவும் சிறப்பாக இருப்பேனோ?

May I remain dignified? I am considered as one among His devotees. He is holding a small deer in His hands. To his sacred Feet, I go, and may I be seated with dignity?

தேடிக் கண்டு கொண்டேன் – திரு
Thēdikk kanndu konndēn - thiru

மாலொடு நான்முகனும்
Maalodu naanmuganum

தேடித் தேட ஒணாத் தேவனை என் உள்ளே
Thēdith thēda onnaath thēvanai en ullē

தேடிக் கண்டு கொண்டேன்
Thēdik kanndu konndēn.

## திருச்சிற்றம்பலம்

தேடிக் கண்டு பிடித்துவிட்டேன். திருமாலும் பிரமனும் தேடினார்கள்; தேடினாலும் காண முடியாதவன் சிவன். அச்சிவனை என் மனத்தில் தேடிக் கண்டு பிடித்துவிட்டேன்.

I searched and found Him. He is the Lord whom Vishnu and Brahma searched. But they could not find Him. Him, within me, I searched and found.

## (16)

உடற்பயிற்சி முதலியவற்றைச் செய்கிறோம்; உடல் நல்ல வலிமையோடு இருக்க; இதற்குச் சந்தேகம் இல்லை. இருப்பினும் வலிமையான உடம்பு ஆயிற்றே என்று உயிர் இதில் இருக்கிறதா? இல்லை! இந்த உடம்பில் உயிர் இருக்கும்பொழுது ஆடுகிறோம்; ஓடுகிறோம்; பாடுகிறோம்; பேசுகிறோம்; ஆனால் நேற்று இருந்தான், நான் அவனோடு பேசினேன், இன்று சற்று மார்பு வலிக்கிறது என்றான்! சிறிது நேரத்துக்கு எல்லாம் மூச்சு அடங்கிற்று. பேச்சும் அடங்கியது; இந்த நிலைமையை உலகில் காண்கிறோம். இதனை ஒவ்வொருவரும் அறியவேண்டும்! அறிந்து செயல்பட வேண்டும்.

### திருச்சிற்றம்பலம்

ஐயினால் மிடறு அடைப்புண்டு ஆக்கைவிட்டு
Aiyinaal midarru adaippunndu aakkaivittu

ஆவியார் போவதுமே அகத்தார் கூடி
Aaviyaar pōvadhumē agaththaar kūdi

மையினால் கண் எழுதி மாலை சூட்டி
Maiyinaal kann ezhudhi maalai chūtti

மயானத்தில் இடுவதன்முன் மதியம் சூடும்
Mayaanaththil iduvadhanmun madhiyam chūdum

ஐயனார்க்கு ஆளாகி அன்பு மிக்கு
Aiyanaarkku aallaagi anbu mikku

அகம்குழைந்து மெய்அரும்பி அடிகள் பாதம்
Agamkuzhaindhu meyarumbi adigall paadham

கையினால் தொழும் அடியார் நெஞ்சின் உள்ளே
Kayinaal thozhum adiyaar negnchin ulllē

கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே
Kanrrappūr Nadutharriyaik kaaunalaamē

கபத்தால் தொண்டை அடைப்பட்டதும் இந்த உடம்பைவிட்டு உயிர் நீங்குகிறது; வீட்டில் உள்ளவர்கள் எல்லோரும் கண்ணில் மை தீட்டி மாலைபோட்டு மாயானத்துக்கு எடுத்துச் செல்வர்.

இதற்கு முன்னதாகவே பிறை சூடிய தலைவனாகிய சிவபெருமானுக்கு அடிமை ஆக வேண்டும்; அவனிடத்தில் அன்பு மிக வேண்டும். மனம் கரைய வேண்டும். உடம்பு (மயிர்) சிலிர்க்க வேண்டும். சிவபெருமானுடைய திருவடிகளைக் கையினால் தொழவேண்டும்.

இவ்வாறு செய்யும் அடியார்களுடைய நெஞ்சில் கன்றாப்பூர் என்ற தலத்தில் உள்ள நடுதறி என்ற பெருமான் வீற்றிருப்பார்; அவரை நாம் காணலாம்.

The throat becoming filled with phlegm, the breath stops and the soul abandons the body and leaves it. At once all in the house gather together, apply black pigment to the eye. Garland (the corpse) and take it to the burial or cremation ground

Before such an occurrence, do thou become his servant (enter his servitude); evince love towards Him; make thine heart melt, the body horripilating, and worship the feet of the Lord by thine hands.

In the hearts of such devotees one can perceive the Lord Nadu thari of Kanrrappuur.

## (17)

கோயிலுக்குப் போகிறவர்கள் சில நியமங்களைக் கொள்ளுவது நல்லது. முதலாவது உடல் தூய்மை; புறம் தூய்மை நீரால் அமையும் அல்லவா? அதனுடன் திருநீறு பூசிக்கொள்ள வேண்டும். அம்மட்டோ? அகமும் தூய்மை உடையதாக ஆக வேண்டும். அதற்கு வழி திருவைந்தெழுத்தை மனத்தில் சொல்லுவது. இதுவும் சில சமயம் தவறுபடும். ஆகவே வாயால் இறைவனை வாழ்த்தும் பாடல்களைப் பாடலாம்; தேவாரம் திருவாசகம் முதலியவை தெய்வத்தன்மையுடையவை; அவற்றைப் பாடினால் நமக்குப் புண்ணியம் வரும்; பாவம் போகும்; அப்பாடல்களைக் கேட்டால் இறைவன் அவற்றுள் மிகவும் லயித்து இருப்பான்; நமக்கு வேண்டியவற்றை வேண்டியவாறு அருள் செய்வான்.

## திருச்சிற்றம்பலம்

| | | | |
|---|---|---|---|
| படைக்கலமாக<br>Padaikkalamaaga | உன்னாமத்து<br>unnaamaththu | எழுத்து<br>ezhuththu | அஞ்சும்<br>agnchum |
| | என்<br>en | நாவில்<br>naavil | கொண்டேன்<br>konnden |
| இடைக்கலம்<br>Idaikkalam | அல்லேன்<br>allen | எழுபிறப்பும்<br>ezhupirrappum | |
| | உனக்கு<br>unakku | ஆட்செய்கின்றேன்<br>aatcheykinreen | |
| துடைக்கினும்<br>thudaikkinum | போகேன்<br>pogen | தொழுது வணங்கித்<br>thozhudhu vannanggith | |
| | தூநீறு<br>thuneerru | அணிந்து உன்<br>annindhu un | |
| அடைக்கலம்<br>Adaikkalam | கண்டாய்<br>kanndaay | அணி<br>anni | தில்லைச்<br>thillaich |
| | சிற்றம்பலத்து<br>chitrrambalaththu | | அரனே.<br>Arane |

## திருச்சிற்றம்பலம்

உன்னுடைய திருப்பெயர் திருவைந்தெழுத்து ஆகிய சிவாய நம என்பது. அத்திருப்பெயரைப் படைக்கலமாக என் நாக்கில் கொண்டிருக்கிறேன்.

நான் (சாதாரணமான) ஒரு மட்பாண்டம் அல்ல;

ஏழு பிறவிகளிலும் . உன்னைத் தொழுகிறேன்;

தள்ளினாலும் நான் போகமாட்டேன்;

உன்னைத் தொழுவேன்; வணங்குவேன்;

தூய்மையான திருநீறு அணிவேன்;

உன்னைச் சரண் அடைந்து இருப்பேன்;

அழகிய தில்லைச் சிற்றம்பலத்தில் உள்ள பெருமானே!

Your name is the sacred mystic five Letters;
I entertain them in my tongue as weapon;
I am not an ordinary earthen vessel;
In all seven births, I worship and adore Thee,
I smear (my body with) the holy ashes;
And lo! I take refuge in Thee!
Oh Lord residing at the sacred dancing hall
(at Chidambaram)!

## *(18)*

இறைவன் ஒருவன்; பல உருவங்களையும் உடையவன் என்போம். பெயர் இல்லாதவன்; பல பெயர்களை இட்டு அழைப்போம். அவன் எங்கும் வியாபித்து இருப்பவன்; ஆனால் அவனை ஒவ்வொரு ஊரிலும் இருப்பவன் என்று வருணிப்போம். அவன் ஆண் அல்லன் ; பெண்ணும் அல்லன்; ஆணாகவும், பெண்ணாகவும் விவரிப்போம். அவன் வீரத்தைப் புகழ்வோம். அவனுடைய கருணையை விளக்குவோம். இவையெல்லாம் மக்களுடைய விருப்பத்துக்கு ஏற்பப் படைத்துக் கொண்டவை. ஆகவே இறைவனை இப்படிப்பட்டவன் என்று யாராலும் கூறமுடியாது, அவன் எங்கும் உள்ளவன் என்றும் அறிவதே அறிவுடைமை; இடையீடு இன்றி நினைப்பதுவே கடமை.

## திருச்சிற்றம்பலம்

*நற்பதத்தார்* *நற்பதமே ஞானமூர்த்தி*
Narpathaththaar narrpathame gnanamuurththi
*நலம் சுடரே நால்வேதத்து அப்பால்நின்ற*
nalam sudare naalvedhaththu appaal ninrra
*சொற்பதத்தார் சொற்பதமும் கடந்து நின்ற*
Sorrpadhaththaar sorrpathamum kadanthu ninrra
*சொலற்கு அரிய சூழலாய்இது உன் தன்மை*
Solarrku ariya suzhalaay idu un thanmai

நிற்பது ஒத்து நிலையிலா நெஞ்சம் தன்னுள்
Nirrpadhu oththu nilaiyilaa negncham thannull

நிலாவாத புலால் உடம்பே புகுந்து நின்ற
Nilaavaatha pulaal udambē pugundhu ninrra

கற்பகமே யான் உன்னை விடுவேன் அல்லேன்
Karrpagamē yaan unnai viduvēn allēn

கனகமா மணி நிறத்து எம்கடவுளானே
Kanagamaa manni nirraththu emkadavullaanē

## திருச்சிற்றம்பலம்

சிறந்த வீடு பேற்றினை அடைவதற்கு உரியவர்களுக்கு வீடு பேறாக இருப்பவனே!

அறிவு மயம் ஆனவனே! நல்ல ஒளி வடிவம் ஆனவனே!

நான்கு வேதங்களுக்கும் அப்பால் உள்ளது நாதம் (சொற்பதம்); அந்த நாதத்தை அடைந்தவர் (சொற்பதத்தார்); அவரது சொற்பதம் என்றது சூக்குமைவாக்கு; அச்சொற்பதமும் கடந்து நின்றவன் இறைவன்; அவன் சொல்லுவதற்கு அரிய சூழலை உடையவன்; இது தான் (இறைவனாகிய) உன் தன்மை ஆகும்.

அலையாது நிற்பது போல் காணப்பட்டு, (நிலை இல்லாமல்) அலையும்படியான நெஞ்சத்தில் வந்தாய்;

நிலையாத அழியும்படியான புலால் நாறும் உடம்பில் புகுந்து நின்ற கற்பக மரம்போன்றவனே! யான் உன்னை விடமாட்டேன்.

பொன் நிறமும், மாணிக்க நிறமும் உடைய எம்முடைய கடவுளே!

You are the Beatitude for those who are in the state of attaining consummate Bliss.

You are Omniscient (infinitely wise).

You are Omnilucent (giving light everywhere);

Sound (natha) is beyond the four vedas and You are beyond those who have realised natha (sound). You are in such an environment that cannot be expressed. This is Your natural theology.

Though it seems to be firm, the mind is always wavering;

Such a mind You entered.

This ugly body is transient and such a body You entered

Oh Lord who is like the celestial tree called Kalpakam!

I will not leave Thee;

Oh gold hued gem-like God!

## *(19)*

இந்த உடம்பு நிலையாக இருக்காது; குழந்தையாக இருந்தோம்; தாய்தந்தையர் நம்மை வளர்த்தனர்; பிறகு தனித்து இயங்கத் தெரிந்து கொண்டோம்; கல்வி கற்றோம்; திருமணம் செய்து கொண்டோம்; எத்தனையோ நன்மைகள் வாழ்க்கையில் கண்டோம்; எத்தனையோ கஷ்டங்களையும் அனுபவித்தோம். எல்லாம் நாம் நம் அறிவால் ஆற்றலால் செய்தனவாகவே நினைக்கிறோம்; சிறிது சிந்தித்தால் சில நம் அறிவுக்கு எட்ட முடியாத நிலையில் இருப்பதாக அறிவோம். ஆகவே நம்மினும் மேலானது ஒன்று நம்மை இயக்கிவருகிறது என்ற முடிவுக்கு வர வேண்டியிருக்கும். அது எது; அதுதான் இறைவன்; கடவுள்.

### திருச்சிற்றம்பலம்

| | | | |
|---|---|---|---|
| ஊனில்<br>Unil | ஆவி<br>aavi | உயிர்க்கும்<br>uyirkkum | பொழுதெலாம்<br>pozhuthelaam |
| நான்<br>Naan | நிலாவி<br>nilaavi | இருப்பன்<br>iruppan | என் நாதனை<br>en naadhanai |
| தேன்<br>Then | நிலாவிய<br>nilaaviya | சிற்றம்பலவனார்<br>Sitrrambalavanaar | |
| வான்<br>Vaan | நிலாவி<br>nilaavi | இருக்கவும்<br>irukkavum | வைப்பரே<br>vaippare |

## திருச்சிற்றம்பலம்

உடம்பில் உயிரானது மூச்சு விடும்பொழுதெல்லாம் நான் என் தலைவனாகிய கடவுளைப் பொருந்தி இருப்பேன். தேன் போன்று இனிக்கும்படியான திருச்சிற்றம்பலத்தில் இருக்கும் பெருமான் என்னை வானத்தில் நிலையாக இருக்குமாறு செய்வர்.

While the soul or life breaths In the body, I cling to my Lord. The Lord of the Hall of Wisdom (Dancing Hall at Chidambaram) may make me be seated firmly in the Heavens.

## (௨0)

மனம் ஒரு ஊசல் போன்றது; ஒன்றை நினைக்கும்; பின் அதை ஒழித்து மற்றொன்றை நினைக்கும்; இங்கு இருக்கும்; பல்லாயிரம் கிலோ மீட்டர் தொலைவுக்குத் தாவிச்செல்லும். ஊசல் கயிறு அற்றால் தரையில் விழுகிறோம்; உயிர் நீங்கினால் நினைப்பு ஒழிகிறது; ஆகவே நினைவு (consciousness) இருக்கும்பொழுது நல்லதை நினைக்க வேண்டும்; நல்லதைப் பேசவேண்டும். இறைவனது நல்ல நாமத்தைச் சொல்லவேண்டும். இந்த உடம்பில் இருந்து உயிர் போகும்பொழுது அச்செயல் நன்மை பயக்கும்.

## திருச்சிற்றம்பலம்

| | | | |
|---|---|---|---|
| எண்ணுகேன்<br>Ennnnugen | | என்சொல்லி<br>ensolli | எண்ணுகேனோ<br>ennnnugeno |
| | எம்பெருமான்<br>emperumaan | திருவடியே<br>thiruvadiye | எண்ணின் அல்லால்<br>ennnnin allaal |
| கண்ணிலேன்<br>Kannnnilen | மற்றோர்<br>matrror | களைகண்<br>kallaigann | இல்லேன்<br>illen |
| | கழல் அடியே<br>Kazhal adiye | கைதொழுது<br>kaithozhudhu | காணின் அல்லால்<br>kaannin allaal |
| ஒண்ணுளே<br>Onnnnulle | ஒன்பது<br>onbadhu | வாசல் வைத்தாய்<br>vaasal vaiththaay | |
| | ஒக்க<br>Okka | அடைக்கும்போது<br>adaikkumpodhu | உணரமாட்டேன்<br>unnaramaatten |

புண்ணியா உன் அடிக்கே போது கின்றேன்
Punnnniyaa un adikke podhu gindren

பூம்புகலூர் மேவிய புண்ணியனே
Pumpugalur meviya punnnniyane.

நான் நினைக்கும் தன்மை உடையேன்; நான் என்ன சொல்லி நினைப்பேன்? சிவபெருமான் ஆகிய உன் திருவடி அல்லாமல் வேறு எதையும் நான் நினைப்பது இல்லை; நான் வேறு எதையும் காண்பது இல்லை; எனக்கு வேறு ஒருவரும் உதவி இல்லை; கழல் அணிந்த உன் திருவடியைத் தவிர்த்து வேறு எதையும் காண்பது இல்லை. இந்த ஒரு உடம்புக்குள் ஒன்பது வழிகளை வைத்து இருக்கிறாய். அவை ஒரே சமயத்தில் மூடிக்கொள்ளும். அப்பொழுது எதையும் அறிய முடியாது. புண்ணியமே உருவாக உள்ளவனே! உன் திருவடியை நோக்கிச் செல்கிறேன். அழகிய திருப்புகலூர் என்னும் தலத்தில் உள்ள இறைவனே!

I have the faculty of thinking. But what shall I say and think? I meditate nothing but the Feet of my Lord; I see nothing; I have no other aspiration. I worship with my hands Your Feet having anklets. I see nothing but you. Within one frame you assigned nine openings. These nine openings are being closed simultaneously. At that time I know not anything. Oh Virtuous One! I proceed to Your Fet! Oh the Virtuous One residing in the beautiful (temple at) Tiruppugalur!

ஒருவனையும் அல்லாது உணராது உள்ளம்
Oruvanaiyum allaadhu unnaraadhu ullllam

உணர்ச்சித் தடுமாற்றத்து உள்ளேநின்ற
Unnarchchith thadumaatraththu ullle nindra

இருவரையும் மூவரையம் என்மேல் ஏவி
Iruvaraiyum muvaraiyum enmel evi

இல்லாததரவு அறுத்தாய்க்கு இல்லேனலக்
illadha tharavu arruththaaykku illenelak

கருவரை சூழ் [illegible] [illegible] வேந்தன்
Karuvarai suzh [illegible] [illegible] vendhan

கடுந்திறல் [illegible] [illegible] காலாற்செற்ற
kadunthiral [illegible] [illegible] kaalaarrsetrra

பொருவரையா [illegible] [illegible] [illegible]
Poruvaraiya [illegible] [illegible] gindren

பூம்புகலூர் மேவிய புண்ணியனே
Pumpugalur meviya punniyane

உன்னைத் தவிர [illegible] [illegible] என் மனம் நினைக்காது. [illegible] [illegible] [illegible] இருக்கிற நேரம்; அப்பொழுது நீ [illegible] [illegible] [illegible] [illegible] மூவரையும் ஏவினாய்; [illegible] [illegible] [illegible] இல்லாதபடி அறுத்தாய். நறுமணம் [illegible] [illegible] மலைகளையும் சோலைகளையும் [illegible] [illegible] இலங்கை. அந்த இலங்கைக்கு அரசன் இராவணன், [illegible] [illegible] அவனுடைய தேர் ஓடவில்லை (அந்த மலையைத் தூக்கினான். அங்ஙனம் தூக்கிய) இராவணனைக் கால் விரலால் [illegible] அழுத்தித் துன்பப்படுத்தினாய், [illegible] [illegible] பொருந்திய மலையில் இருப்பவனே, [illegible] [illegible] செல்கிறேன்; அழகிய திருப்புகலூரில் [illegible] [illegible]!

Except yourself my mind does not think of any other one. Its power of perception became shakened. The two you directed on me: and the three gunas too. You severed me the arrogance which now I possess not. Lanka consists of mountains and fragrant groves-Raavana is the king of Laknka-Once he went fast in his chariot. It could not proceed, (Hence he wanted to remove the mountain). You, the Lord of mountains, trampled Raavana with your toe. I proceed to Your Feet. O Virtuous One residing in the beautiful (temple at) Tiruppugalur!

# சுந்தரர் தேவாரம்

# SUNDARAR DEVARAM

## (21)

இறைவன் தன் திருமுடியில் பிறை சூடி இருக்கிறான். தன் தலையில் கங்கையைத் தரித்து இருக்கிறான். இப்படி அவருக்கு ஒருருவம் கொடுத்தார்கள் நம் பெரியவர்கள். இதன் கருத்து என்ன? இது இறைவனுடைய பேராற்றலையும், அன்பு காட்டும் திறத்தையும் காட்டுகிறது. பிறையைச் சூடிப் பிறையைக் காத்தார். கங்கையைச் சூடி உலகத்தையே காத்தார். இத்தகைய கருணைக் கடவுளை நாம் நாடோறும் வழிபடுவோமாக.

### திருச்சிற்றம்பலம்

| | | | |
|---|---|---|---|
| பித்தா<br>Piththaa | பிறைசூடி<br>pirraisūdee | பெருமானே<br>perumaanē | அருளாளா<br>arullaallaa |
| எத்தான்<br>Eththaan | மறவாதே நினைக்கின்றேன்<br>marravadhē ninakkkindrēn | மனத்து<br>manaththu | உன்னை<br>unnai |
| வைத்தாய்<br>Vaiththaay | பெண்ணைத்<br>pennnnaith | தென்பால்<br>thenpaal | வெண்ணெய்<br>vennnney |
| நல்லூர்<br>nallūr | அருள்துறையுள்<br>arull thurraiyull | | |
| அத்தா<br>Aththaa | உனக்கு<br>unakku | ஆளாய் இனி<br>aallaay ini | அல்லேன் எனலாமே<br>allēn enalaamē |

பித்தனே! பிறையைத் தலைமாலையாகச் சூடி இருக்கிறவனே! பெருமை உடையவனே! அருள் செய்பவனே! சிறிதுகூட மறக்காமல் உன்னை நினைக்கிறேன்; என் மனத்தில் உன்னை வைத்து இருக்கிறாய்; பெண்ணை என்ற பெயருடைய ஆற்றின் தெற்குப் பக்கம் உள்ளது திருவெண்ணெய் நல்லூர்; அவ்வூரில் உள்ள கோயிலின் பெயர் திருவருட்டுறை; அத்திருவருள் துறையுள் இருக்கும் தலைவனே! உனக்கு நான் (முன்பே) அடியவன்; (இங்ஙனம் இருக்கும் பொழுது) 'நான் உனக்கு அடியவன் அல்ல' என்று இப்பொழுது சொல்லலாமா?

Oh , the Insane! Oh, the wearer of crescent moon! Oh bestower of Grace! I think of you without forgetting you even for a moment. You placed yourself in my heart. Thiru Vennai Nallur is situated on the southern bank of the river, Pennai; the name of the temple in that place is known as Tiru Artutturai; Oh Lord enshrined in that temple! I was Your slave (even before); then how can I say, "I am not Your slave".

| | | | | |
|---|---|---|---|---|
| காரூர் | புனல் | எய்திக் | கரை கல்லித் | திரைக் கையால் |
| Kaarur | punal | eydhik | karai kallith | thiraikkaiyaal |
| பாரூர் புகழ் | எய்தித் | திகழ் | பன்மாமணி | உந்திச் |
| Paarur pugazh | eydhity | thigazh | panmaamani | undhich |
| சீரூர் | பெண்ணைத் | | தென்பால் | வெண்ணெய் |
| Seerur | pennnaith | | thenpaal | vennney |
| | | | நல்லூர் | அருள் துறையுள் |
| | | | nallur | arullthuraiyull |
| ஆரூரன் | எம்பெருமாற்கு | | ஆளல்லேன் | எனலாமே |
| Aaruran | emperumaarku | | aallallen | enalaame. |

மேகத்தில் இருந்து விழும்நீர் (வெள்ளமாக) வருகிறது. அலைகள் ஆகிய கைகளால் கரைகளைக் குத்துகிறது — நிலம் முழுவதும் புகழ்பொருந்திப் பாய்கிறது — ஒளி பொருந்திய பல சிறந்த மணிகளைத் தள்ளிக்கொண்டு வருகிறது — அழகு பொருந்தி உள்ளது, பெண்ணையாறு. இதன் தெற்குப் பக்கம் இருப்பது திருவெண்ணெய் நல்லூர் ; அவ்வூரில் உள்ளது திருவருட்டுறை என்ற கோயில்; இக்கோயிலில் உள்ள இறைவனுக்கு 'ஆரூரன்' ஆகிய நான் அடிமை; (இங்ஙனம் இருக்க) 'நான் அடிமை அல்லன்' என்று கூறுவது பொருந்துமா?

The rain from the clouds go in floods - The river with the waves as hands, dash the banks - It becomes famous in the world-It carries several big gems-Thus the River Pennai is beauteous. Tiru Vennai Nallur is situated on the southern bank of that river. Arulturai is the name of the temple there; I, Aarūran, am the slave of the Lord of that temple. Then how can I say, "I am not Your slave?"

## (22)

## திருத்தொண்டத்தொகை

தொண்டர்களில் பலவிதம் உண்டு. இறைவனை இடையறாது சிந்தித்து வழிபடுபவர்களைத் தொண்டர்கள் அடியார்கள் என்போம். அவர்கள் எப்பொழுதுமே சிவசிந்தனையில் இருப்பார்கள். இறைவன், அடியார்களாகிய தொண்டர்களின் மனதில் எப்பொழுதும் குடி கொண்டிருப்பான். இறைவன் அவர்கள் மனதில் இருப்பதால் அவர்கள் கடவுள் இருக்கும் கோயில் ஆவர். அவர்களை வணங்கினால் கடவுளை வணங்கியது போல ஆகும். ஆகவே கடவுளை இடையறாது தியானிக்கும் அடியார்களையும் வழிபடுவது நல்லது.

### திருச்சிற்றம்பலம்

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
Thillaivaazh andhannartham adiyaarkkum adiyen

திருநீல கண்டத்துக் குயவனார்க்கு அடியேன்
Thiruneela kanndaththuk kuyavanaarkku adiyen

இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
Illaiye ennaadha Iyarrpagaikkum adiyen

இளையான்தன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
Illayaanthan kudimaarran adiyaarkkum adiyen

வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக்கு அடியேன்
Vellumaa migavalla Meypporullukku adiyen

விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டற்கு அடியேன்
Viripozhilsuzh kundraiyaar Virranminndarrku adiyen

அல்லிமென் முல்லையந்தார் அமர் நீதிக்கு அடியேன்
Allimen mullaiyanthaar Amar needhikku adiyen

ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே
Aaruran aaruril ammaanukku aalle.

தில்லை என்னும் சிதம்பரத்தில் வாழும் அந்தணர்களுடைய அடியார்களுக்கு அடியேன்; 'திருநீலகண்டன்' என்ற பெயருடைய குயவனுக்கு அடியேன்; கேட்ட பொருளை 'இல்லையே' என்று கூறாமல் கொடுத்த 'இயற்பகை' என்பவருக்கும் அடியேன்; 'இளையான்குடி மாறன்' என்பவருடைய அடியார்களுக்கும் அடியேன்; வெற்றி கொள்வதில் மிகவும் திறமை உடைய 'மெய்ப் பொருள்' என்பவருக்கு அடியேன்; விரிந்த தோட்டங்கள் சூழ்ந்த 'செங்குன்றூர்' என்ற ஊரில் வாழ்பவர் ஆகிய 'விறன் மிண்டன்' என்பவருக்கு அடியேன்; மென்மையான முல்லை மாலை சூடிய 'அமர் நீதி' என்பவருக்கு அடியேன்; ஆரூரன் ஆகிய நான் திருவாரூரில் இருக்கும் இறைவனுக்கு அடிமை.

I am a devotee of the "Brahmins of Tillai". I am a devotee of "Tiruneelakanta" a potter. I am a devotee of "Iyarpagai" who says not "I possess not". I am a devotee of devotees of "Illaiyaan Kudi Maaran". I am a devotee of "Meypporul" capable of winning. I am a devotee of "Viranmindar" resident of Senkundrūr surrounded by spacious groves. I am a devotee of "Amarneethi" who wears garland of jasmine flowers. I, Aarūrān, am the slave of the Lord residing at Tiru Arur.

| | | | | |
|---|---|---|---|---|
| பத்தராய்ப்<br>Paththaraayp | பணிவார்கள்<br>pannivaargall | எல்லார்க்கும்<br>ellaarkkum | அடியேன்<br>adiyen | |
| | பரமனையே<br>paramanaiye | பாடுவார் அடியார்க்கும்<br>paaduvaar adiyaarkkum | | அடியேன்<br>adiyen |
| சித்தத்தைச்<br>Siththaththaich | சிவன்பாலே<br>Sivanpaale | வைத்தார்க்கும்<br>vaiththaarkkum | அடியேன்<br>adiyen | |
| | திருஆரூர்ப் பிறந்தார்கள்<br>thiruaarurp pirandaargal | எல்லார்க்கும்<br>ellaarkkum | | அடியேன்<br>adiyen |
| முப்போதும்<br>Muppodhum | திருமேனி<br>thirumeni | தீண்டுவார்க்கு<br>theendduvaarkku | அடியேன்<br>adiyen | |
| | முழுநீறு<br>muzhuneeru | பூசிய<br>pusiya | முனிவர்க்கும்<br>munivarkkum | அடியேன்<br>adiyen |
| அப்பாலும்<br>Appaalum | அடிச்சார்ந்தார்<br>adichchaarndaar | | அடியார்க்கும்<br>adiyaarkkum | அடியேன்<br>adiyen |
| | ஆரூரன்<br>aaruran | ஆரூரில்<br>aarurl | அம்மானுக்கு<br>ammaanukku | ஆளே<br>aalie. |

சிவபெருமான் இடத்தில் பக்தி உடையவராய் வணங்குகிற எல்லோருக்கும் அடியேன்; சிவபெருமானையே பாடுகிற அடியார்க்கும் அடியேன்; மனத்தைச் சிவபெருமான் இடத்தில் வைத்தவர்களுக்கு அடியேன். திருவாரூரில் பிறந்தவர்கள் எல்லோருக்கும் அடியேன்; மூன்று காலங்களிலும் சிவலிங்கத்தைத் தொட்டுப் பூசை செய்பவருக்கு அடியேன்; உடம்பு முழுவதும் திருநீறு பூசி இருக்கும் முனிவர்க்கும் அடியேன்; தமிழ் நாட்டுக்கு அப்பால் கடல்கடந்து உள்ள நாடுகளில் இருந்து சிவபெருமானுடைய திருவடிகளை வணங்குபவர்க்கும் அடியேன்; ஆரூரன் ஆகிய சுந்தரன் திருவாரூரில் உள்ள பெருமானுக்கு அடிமை.

I am the devotee of all those who worship the Lord with devotion. I am the devote of devotees who sing songs in praise of Siva. I am the devotee of those who have placed their minds on Siva. I am the devotee of all those who were born at Thiru Aarur. I am the devotee of those who touch Siva Linga and perform worship in the three parts of the day. I am the devotee of those ascetics who have smeared throughout their bodies the Sacred Ash; I am the devotee of those who live in various countries far and wide outside Tamil Nadu and worship Him. Aaruran the devotee of the Lord at Tiru Aarur.

மன்னியசீர் மறைநாவன் நின்றவூர்ப் பூசல்
Manniyaseer marrainaavan nindravurp Pusal

வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கும்அடியேன்
varivallaiyaall Maanikkum Nesanukkumadiyēn

தென்னவனாய் உலகுஆண்ட செங்கணார்க்கு அடியேன்
Thennavanaay ulaguaannda Sengannārkku adiyēn

திருநீல கண்டத்துப் பாணனார்க்கு அடியேன்
Thiruneela kanndaththup paannanaarkku adiyēn

என்னவனாம் அரன்அடியே அடைந்திட்ட சடையன்
Ennavanaam Aranadiyē adaindhitta Sadaiyan

இசைஞானி காதலன் திருநாவலூர்க்கோன்
Isaignaani kaadhalan thirunaavalurkkōn

அன்னவனாம் ஆரூரன் அடிமைகேட்டு உவப்பார்
Annavanaam aarūran adimaikēttu uvappaar

ஆரூரில் அம்மானுக்கு அன்பர் ஆவாரே
aarūril Ammaanukku anbar aavārē.

## திருச்சிற்றம்பலம்

புகழ் பொருந்திய வேதத்தை ஓதுபவரும் 'திருநின்றவூர்' என்ற ஊரில் உள்ளவரும் ஆன 'பூசலார்' (என்பவர்க்கு அடியேன்); வரிகள் உள்ள வளையல் அணிந்த 'மானி' என்பவருக்கும், 'நேசன்' என்பவருக்கும் அடியேன்; சோழ அரசன் ஆகி உலகத்தை ஆட்சி செய்த 'செங்கணான்' என்பவர்க்கு அடியேன்; 'திருநீலகண்ட (யாழ்ப்) பாணர்' என்பவருக்கும் அடியேன்; என் தந்தை – சிவ பெருமானுடைய திருவடியை அடைந்தவர் சடையனார்'; (என்தாய்) 'இசைஞானியார்'; இவர்களுக்கு மகன், 'திருநாவலூார்' என்ற ஊர்த்தலைவன் – அப்படிப்பட்டவன் 'ஆரூரன்'; அவன் அடிமை' என்று கூறிய (இப்பதிகத்தைக் கேட்டு மகிழ்பவர்கள் திரு ஆரூரில் உள்ள இறைவனுக்கு அன்பர் ஆவார்கள்.

I am a devotee of Poosalar of Thiruninravūr who chants the Vēdās, Maani who wears bangles and Nēsa. I am a devotee of the Chōla King Senganan who reigned the Pāndya country also. I am a devotee of Thiru Neela kanta Yaazhppānar. I am a devotee of my father Sadayan who attained the fee of the Lord. I am the son of Isai Gnaniyār. I am the King of Thiru Navalūr. Those who rejoice on hearing the songs of this devotee, will become the devotees of the Lord at Thiru Ārūr.

## (23)

இறைவன் திருநாமத்தைச் சொல்வதும் கேட்பதும் நல்லது. அதற்கு ஒரு எளிய முறையை நம் முன்னோர் கையாண்டனர். அதாவது தம் குழந்தைகளுக்குத் தெய்வப் பெயர்களை இடுவது பழக்கம். தம் குழந்தையை அழைக்கும் பொழுதும் நினைக்கும் பொழுதும் தெய்வத்தின் பெயரைக் கூறும் வாய்ப்பு ஏற்படுகிறது. முருகன் என்று பெயர்வைத்தால், எப்பொழுதும் முருகா என்று அழைப்போம் அல்லவா? தெய்வப் பெயர் அல்லாது வேறு பெயர்கள் வைத்தால் இந்த இரட்டிப்புப் பயன் கிடைக்காது. இறுதிக் காலத்திலும் நாம் அறியாமலே தெய்வப்பெயர் அழைக்கும் வாய்ப்பு ஏற்படுகிறது. ஆகவே குழந்தைகட்குக் கடவுட் பெயரை வைப்பது நன்னெறியாகும்.

## திருச்சிற்றம்பலம்

| | | | |
|---|---|---|---|
| பொன்னார் Ponnaar | மேனியனே meniyanē | புலித்தோலை puliththolai | அரைக்குஅசைத்து araikkuasaiththu |
| மின்னார் Minnaar | செஞ்சடைமேல் senjadaimēl | மிளிர்கொன்றை millir kondrai | அணிந்தவனே annindhavanē |
| மன்னே Mannē | மாமணியே maamanniyē | மழபாடியுள் mazhapaadiyull | மாணிக்கமே maannikkamē |
| அன்னே Annē | உன்னையல்லால் unnaiyallal | இனியாரை ini yaarai | நினைக்கேனே ninaikkenē |

பொன்போன்ற திருமேனியை உடையவனே! புலித்தோலை இடுப்பில் உடுத்திக் கொண்டவனே! மின்னல் போன்ற சிவந்த சடையில் விளங்கும் படியான கொன்றை மாலையை அணிந்தவனே! தலைவனே! சிறந்த மணி போன்றவனே! திருமழப்பாடியில் இருக்கும் மாணிக்கம் போன்றவனே! உன்னை அல்லாமல் இப்பொழுது வேறு யாரை நினைப்பேன்?

Oh! The one who has golden Form! The wearer of the skin of the tiger at His waist! The wearer of shining Konrai flower on the lightining red matted locks! Oh my Lord! The priceles gem! The gem residing at Tirumazhapaadi! Whom else shall I now think of?

| | | | | |
|---|---|---|---|---|
| ஏரார் Eraar | முப்புரமும் muppuramum | எரியச் eriyach | சிலை chilai | தொட்டவனை thottavanai |
| வாரார் Vaaraar | கொங்கையுடன் kongaiyudan | | மழபாடியுள் mazhapaadiyull | மேயவனைச் mēyavanaich |
| சீரார் Seeraar | நாவலர்கோன் naavalarkon | ஆரூரன் Aaruran | உரைத்த uraiththa | தமிழ் thamizh |
| பாரோர் Paaror | ஏத்தவல்லார் eththavallaar | பரலோகத்(து) paralōgaththu | | இருப்பாரே iruppaarē |

அழகு பொருந்திய மூன்று கோட்டைகளும் எரிந்து போகுமாறு வில் வளைத்தவன்; கச்சு அணிந்த மார்பினை உடைய உமையோடு மழபாடியுள் இருப்பவன்; (அச்சிவபெருமானைப்) புகழ் பொருந்திய திருநாவலூரில் வாழ்பவன் ஆகிய ஆரூரன் தமிழ்ப் பாடல்களால் பாடினான். அப்பாடல்களை உலகத்தவர் பாடவல்லவர் ஆனால் சிவலோகத்தில் இருப்பார்கள்.

He bent the bow to burn the three beautiful fortresses. He resides at Mazhapaadi with Uma wearing bodice on the breast. Him sang in Tamil, the famous chief of Nāvalūr, Ārūrān. Those well-versed in them will dwell in Sivalōka.

## *(24)*

*மக்கள் வேறு; மாக்கள் வேறு; மாக்கள் ஐந்து அறிவே படைத்தவை. ஆனால் மக்களோ ஐந்து அறிவோடு இது நல்லது, இது தீயது, இது செய்யத்தக்கது, இது செய்யத்தகாதது எனப் பிரித்து அறியக் கூடிய பகுத்தறிவு படைத்தவர்கள். இத்தகைய அறிவு கல்வியால்தான் வரும். கல்வி தானும் இருவகைப்படும். ஒன்று உலகியல் கல்வி, மற்றொன்று தெய்வக் கல்வி. உலகியல் கல்வி, பொருள் ஈட்டுதலும், ஈட்டிய பொருளைக் காத்தலும், அதனால் இன்பம் நுகர்தலும் அறிவிக்கும். தெய்வக் கல்வி அறநெறியைப் புகட்டும்; தெய்வ அறிவை உண்டாக்கும்; முத்திநெறி அறிவிக்கும்; பிறவிப் பிணியைப் போக்கும். ஆகவே கற்றவர் என்னப்படுபவர், இவ்விருவகைக் கல்வியும் கற்றவராவர். கற்பதனாலாகிய பயன் இறைவனது நற்றாள் தொழுதல் ஆகும்.*

### திருச்சிற்றம்பலம்

| | | | | |
|---|---|---|---|---|
| *மற்றுப்*<br>Matrrup | *பற்று*<br>patrru | *எனக்கு*<br>enakku | *இன்றி*<br>intrri | *நின்திருப்*<br>ninthirup |
| | *பாதமே*<br>paadhamē | *மனம்*<br>manam | *பாவித்தேன்*<br>paaviththēn | |
| *பெற்றலும்*<br>Petrralum | *பிறந்தேன்*<br>pirrandhēn | *இனிப்*<br>inip | *பிறவாத*<br>pirravaadha | |
| | *தன்மை*<br>thanmai | *வந்து*<br>vandhu | *எய்தினேன்*<br>eydhinēn | |
| *கற்றவர்*<br>Katrravar | *தொழுது*<br>thozhudhu | *ஏத்தும்*<br>ēththum | *சீர்க்கறை*<br>sērkkarrai | |
| | *யூரில்*<br>yuril | *பாண்டிக்*<br>paanndik | *கொடுமுடி*<br>kodumudi | |
| *நற்றவா*<br>Natrravaa | *உனை*<br>unai | *நான்*<br>naan | *மறக்கினும்*<br>marrakkinum | |
| | *சொல்லும்*<br>sollum | *நா*<br>naa | *நமச்சிவாயவே*<br>namachchivaayavē. | |

வேறு எதுவும் எனக்குப் பற்றுக் கோடு இல்லை; உன் திருவடியையே என் மனத்தில் கொண்டேன்;அவ்வாறு கொண்டதும் நான் பிறந்தவனாகக் கருதிக் கொண்டேன்; இனி இன்னும் ஒரு பிறவி எடுக்காத தன்மையை அடைந்தேன்; கற்றவர்கள் தொழுது ஏத்தும் படியான கறையூர் என்ற ஊரில், பாண்டிக்கொடுமுடி என்னும் கோயிலில் இருக்கும் நல்ல தவ வடிவை உடையவனே! உன்னை நான் மறந்தாலும், உன்திருப்பெயராகிய "நமசிவாய" என்பதை என் நாக்கு சொல்லும்.

I have no other support. My mind regarded your Feet as support. As soon as I regarded so, I felt that I was born; I also attained the state of not being born. The learned worship and praise the Lord of Paandikkodumudi in Karaiyur. Oh Lord performing good penance! Even if I forget you , my tongue will chant "Na Ma Si Vā Ya."

| | | | | |
|---|---|---|---|---|
| கோணிய<br>Kōnniya | பிறை<br>pirrai | சூடியைக்<br>sūdiyalk | கறை<br>karrai | |
| | யூரில்<br>yūril | பாண்டிக்<br>paanndik | கொடுமுடி<br>kodumudi | |
| பேணிய<br>Pēnniya | பெருமானைப்<br>perumaanaip | பிஞ்ஞகப்<br>pinjagap | | |
| | பித்தனைப்<br>pithanaip | பிறப்பு<br>pirrappu | இல்லியைப்<br>illiyaip | |
| பாணுலா<br>Paannulaa | வரி<br>vari | வண்டறை<br>vanndarrai | | கொன்றைத்<br>kondrraith |
| | தாரனைப்<br>thaaranaip | படப்<br>padap | பாம்பரை<br>pambarai | |
| நாணனைத்<br>Naannanaith | தொண்டன்<br>thonndan | ஊரன்<br>ūran | சொல்<br>sol | இவை<br>ivai |
| | சொல்லுவார்க்கு<br>solluvaarkku | | இல்லை<br>illai | துன்பமே<br>thunbamē |

திருச்சிற்றம்பலம்

வளைந்த பிறையைச் சூடியவன்; கறையூரில் பாண்டிக்கொடுமுடி என்ற கோயிலை விரும்பி இருக்கிறவன்; தலைக்கோலம் உடையவன்;பித்தன்; பிறப்பு இல்லாதவன்; வரிகளை உடைய வண்டுகள் இசைபாடும் கொன்றை மாலையை அணிந்தவன்; படத்தை உடைய பாம்பை அரை நாணாக உடையவன்; இப்படிப்பட்ட பெருமானைத் தொண்டனாகிய ஊரன் இப்பாடல்களைப் பாடி இருக்கிறா); இவற்றைப் பாடுபவருக்குத் துன்பம் இல்லை.

He wears the curved crescent. He likes to reside in Paandikkodumudi at Karaiyur. He has the head dress. He is insane. He is unborn. He wears the garland of Konrai which the lined bees hum and sing. He has the hooded snake as the belt around his waist-Him the devotee, Vooran has sung (these verses). Those well-versed-in them have no missery.

**(25)**

நாம் ஒரு காரியத்தை எடுத்துச் செய்வோம்; ஆனால் நாம் நினைத்த வண்ணம் அந்தக் காரியம் முடியாமற் போகும்; நாம் எதிர்பார்க்காத விதத்தில் சில காரியங்கள் நிறைவேறும். இதற்கெல்லாம் காரணம் என்ன? நம் அறிவு என்றோ; நம் அறிவின்மை என்றோ, செயல்திறன் சரியில்லை என்றோ, செய்யும் கால் கவனக்குறைவு என்றோ கூறிவிட முடியாது. வேறு ஒரு சக்தி நம்மை இயக்கிக்கொண்டு இருக்கிறது என்பதை அறிவோமாயின் உண்மை விளங்கும்.

வாழ்வாவது மாயம் இது மண்ணாவதுதிண்ணம்
Vaazhvaavadhu maayam idu mannnnaavadhuthinnnnam

பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய் செய்த பறிதான்
Paazhpōvadhu pirravikkadal pasinoy seydha parridhaan

தாழா(து) அறம் செய்மின்தடம் கண்ணான் மலரோனும்
Thaazhaadhu arram seymin thadam kannnnaan malarōnum

கீழ்மேல் உறநின்றான் திருக்கேதாரம் எனீரே
Keezhmēl urranindrraan thirukkēdhaaram eneerē.

வாழ்க்கை என்று சொல்வது பொய்; இந்த உடம்பு மண் ஆவது உறுதி; அழிய வேண்டியது பிறவி ஆகிய கடலே ஆகும். (இந்த உடம்பு) பசி நோயை உண்டாக்குகிற பையை உடையது.

ஆகவே (பிறவி நீங்க வேண்டுமாயின்) காலம் தாழ்க்காது தருமம் செய்யுங்கள். பெரிய கண்களையுடைய திருமாலும், பிரமனும் நிலத்தின் கீழும், வானின் மேலும் சென்று தேடினார்கள். அங்ஙனம் தேடுமாறு நின்ற இறைவனுடைய திருக்கேதாரத்தைக் கூறுங்கள்.

Life is illusive; this body will become earth indeed. You should get rid of the ocean of birth. After all the body has a bag which gives forth appetite - a disease indeed. Do virtuous deeds at once.

The big eyed Thirumaal and Brahma born in the flower flew up in the sky and dug deep to find out the Feet of the Lord. The Lord's abode is Tirukkeedaaram; chant it.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நாவின்மிசை<br>Naavinmisai | | அரையன்<br>araiyan | னொடு<br>nodu | தமிழ்<br>thamizh | ஞானசம்பந்தன்<br>gnaanasambandhan |
| யாவர்<br>Yaavar | சிவன்<br>Sivan | அடியார்களுக்(கு)<br>adiyaargallukku | | அடியான்<br>adiyaan | அடித்தொண்டன்<br>adiththonndan |
| தேவன்<br>Dhēvan | திருக்கேதாரத்தை<br>Thirukkēdhaaraththai | | ஊரன்<br>uran | உரை<br>urai | செய்த<br>seydha |
| பாவின்<br>Paavin | தமிழ்<br>thamizh | வல்லார்<br>vallaar | பரலோகத்(து)<br>paralōgaththu | | இருப்பாரே<br>iruppaarē. |

## திருச்சிற்றம்பலம்

தமிழில் வல்ல திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் சிறந்த சிவனடியார்கள். அவர்களோடு யார்யார் சிவனடியார்களோ அவர்களுடைய அடியார்களுக்குத் தொண்டன் ஊரன். அதாவது ஆரூரன் என்ற பெயர் உடையவன் ஆகிய சுந்தரன் சிவபெருமானுடைய திருக்கேதாரம் என்ற தலத்தைப் பாடியிருக்கிறான்; அந்த இனிய தமிழ்ப்பாடல்களில் வல்லவர்கள் மேலுலகத்தில் இருப்பார்கள்.

Thirunaavukkarasar and Thirugnaana Sambandhar are the devotees of Siva; with them, whosoever be the devotees, he is the bondsman of all of them.

He is Uuran (Thiur Aaruran)-Suntharan. He has sung sweet Tamil verses on Thirukkeadaaram. Those who are well versed in them will be seated in heaven.

## (26)

இறைவன் நம்மைப் படைத்தான்; காக்கிறான்; தனுகரண புவன போகங்களைக் கொடுக்கிறான். நாம் உலகத்தில் சுகங்களை அனுபவிக்கிறோம். இந்த சுகங்களைக் கொடுத்த இறைவனுக்கு நன்றி செலுத்த வேண்டும். நன்றி செலுத்துவது எங்ஙனம்? அவனைப் புகழ்ந்து பாடுவது அவனுக்கு நன்றி செலுத்தும் முறைகளில் ஒன்று. அவனுடைய புகழ்களை அப்பர் சம்பந்தர் சுந்தரர் போன்ற சமய ஆசிரியர்கள் பாடியுள்ளார்கள். அவை தேனினும் இனிய பாடல்கள் ஆகும்; அவை தெய்வத்தன்மை பொருந்தியவை. அத்தகைய திருப்பாடல்களைப் பாடினால் அப்பாடல்களுக்கே மகிழ்ச்சி அடைவான் இறைவன். ஆகவே அப்பாடல்கள் சிலவற்றையேனும் நாமும் மனப்பாடமாகத் தெரிந்துகொள்வது நல்லது.

### திருச்சிற்றம்பலம்

தானெனை முன்படைத்தான் அதறிந்துதன் பொன்னடிக்கே
Thaanenai munpadaiththaan adharrindhuthan ponnadikkē

நானென பாடல் அந்தோ நாயினேனைப் பொருட்படுத்து
Naanena paadal andhō naayinēnaip porutpaduththu

வானெனை வந்துஎதிர் கொள்ள மத்த யானை அருள்புரிந்து
Vaanenai vandhuedhir kolla maththa yaanai arullpurindhu

ஊனுயிர் வேறுசெய்தான் நொடித்தான் மலைஉத்தமனே.
Ūniyir vēruseydhaan nodiththaan malaiuththamanē.

இறைவன் என்னை முன்பு பிறக்கச்செய்தான்; அதன்கருத்தை அறிந்தேன்; அவனுடைய பொன் போன்ற திருவடிகளை நான் என்ன பாடல் பாடினேன்! அந்தோ! நாய் போன்ற என்னைப் பெருமைப் படுத்தினான்; தேவர்கள் வந்து எதிர் கொள்ளுமாறு செய்தான்; பெரிய யானையை (ஊர்தியாக)க் கொடுத்தான்; இந்த உடம்பில் உள்ள உயிரைச் சிறப்பு அடையுமாறு செய்தான்; திரு நொடித்தான்மலை (என்று கூறப்படும் திருக்கயிலையில்) இருக்கும் சிறந்தவன்.

He caused me to be born long ago. I am aware of His intention. I composed verses, on His golden Feet. What sort of Verses are they? Alas! He regarded me a dog-like one! He made the celestials to welcome me. He graced me with a huge elephant. He heightened my soul with the body. He, the Distinguished one, seated in the Nodithaan Hill (Mt. Kailaas).

ஊழிதொறு ஊழிமுற்றும் உயர்பொன் நொடித்தான் மலையைச்
Ūzhidhorru ūzhimutrrum uyarpon noditthaan malaiyaich

சூழிசை இன்கரும்பின் சுவை நாவல ஊரன் சொன்ன
Sūzhisai inkarumbin suvai naavala ūran sonna

ஏழிசை இன்தமிழால் இசைந்து ஏத்திய பத்தினையும்
Ēzhisai inthamizhaal isaindhu ēththiya paththinaiyum

ஆழி கடல் அரையா அஞ்சை அப்பர்க்கு அறிவிப்பதே
Aazhi kadal araiyā anjai apparkku arrivippadhē

ஊழி வெள்ளங்களில் மூழ்கிவிடாமல் உயர்வது–பொன் நிறம் உடையது–திரு நொடித்தான்மலை; அம்மலையைத் திருநாவலூர் என்ற ஊரவர் ஆகிய சுந்தரர், புகழ்பொருந்தியதும் – இனியகரும்பின் சுவை போன்ற இனிமை உடையதும்–ஏழ் இசை பொருந்தியதும் ஆன இனிய தமிழால் பாடினார். இங்ஙனம் விரும்பிப் புகழ்ந்த பாடல்கள் பத்து. ஆழமான கடலுக்கு அரசனே! அவற்றைத் திரு அஞ்சைக்களத்தில் இருக்கும் சிவபெருமானுக்கு அறிவிப்பாய்.

During every deluge, the golden Nodiththaanmalai rise high (without being submerged). The Lord is seated there. Him Sundarar of Tiru Navalur has sung Tamil verses which are praise worthy, which taste like sugarcane and which consist of seven fold music. Oh the king of deep ocean! Please communicate these to the Lord at Tiru Anjaikkalam.

# திருவாசகம் மாணிக்கவாசகர்
## THIRUVASAKAM MANICKKAVASAKAR
## (27)

இறைவன் எல்லாப் பொருள்களாக இருக்கிறான் என்பர் சிலர்; அப்பொருள்கள் அல்ல அவன் என்றும் சொல்லுவார்கள். எல்லாப் பொருள்களாக இருக்கிறான் என்பது அவனது சொரூப லக்ஷணம், அதாவது அவனது உருவநிலை. எப்பொருளாகவும் இல்லை என்பது அவனது உண்மைநிலை; அதை அருவநிலை என்னலாம். இத்தகைய இறைவனை நாம் ஏன் புகழவேண்டும்? இதுவும் ஒரு கேள்விதான். உலகத்தில் உள்ள தலைவர்களைப் புகழ்ந்து பாடுகிறோம் அல்லவா? எதற்காக? நாம் அவர்களுடைய அன்பைப் பெற்று வாழ்வதற்காக. அதுபோலவே இறைவனது அன்பைப் பெற இறைவனை வாழ்த்துவது மக்களுக்கு ஒரு நல்ல பழக்கம்.

### திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!
Namachchivaaya vaazhga! naadhan thaall vaazhga!

இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!
Imaippozhudhum ennegnjil neenggaadhaan thaall vaazhga!

கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க!
Kōgazhi aannda gurumannithan thaall vaazhga!

ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க!
Aagamam aagi nindrru annnnippaan thaall vaazhga!

ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க!
Ēgan anēgan irraivan adi vaazhga!

"நமசிவாய" என்னும் திரு ஐந்தெழுத்து வாழ்க! தலைவன் ஆகிய சிவபெருமானுடைய திருவடிகள் வாழ்க! கண் இமைக்கும் அளவு நேரமும் என் மனத்தில் இருந்து நீங்காதவன் இறைவன்; அவருடைய திருவடிகள் வாழ்க! 'கோகழி' என்பது திருப்பெருந்துறை; அங்கு ஆட்சி செய்பவர் என் குருமணி; அவருடைய திருவடிகள் வாழ்க! ஆகமங்களின் பொருளாக இருப்பவர்–இனிமை தருகிறவர்– அவருடைய திருவடிகள் வாழ்க! ஒருவன் ஆகவும் பல ஆகவும் இருப்பவர் இறைவன்; அவருடைய திருவடிகள் வாழ்க!

Long live "Na Ma Si VaYa" the mystic five letters! Long live the Feet of the Lord! Long live the Feet of Him who does not leave my mind even for a little time! Long live the Feet of the gem-like Preceptor of Gokazhi! Long live the Feet of Him who tastes sweet, standing as the One expounded by the Agamas! Long live the Feet of Him who is the One, the Many and the Lord!

ஈசன் அடிபோற்றி! எந்தை அடிபோற்றி!
Eesan adipōtri! endhai adi pōtri

தேசன் அடிபோற்றி! சிவன் சேவடி போற்றி!
Dhēsan adipōtri! Sivan sēvadi pōtri!

நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி!
Nēyaththe nindra nimalan adipōtri!

மாயப்பிறப்பு அறுக்கும் மன்னன் அடிபோற்றி!
Maayappirrappu arrukkum mannan adipōtri

சீரார் பெருந்துறை நம் தேவன் அடிபோற்றி!
Seeraar perundhurrai nam dhēvan adi pōtri!

ஆராத இன்பம் அருளுமலை போற்றி!
Aaraadha inbam arullumalai pōtri!

ஈசன் அடியைப் போற்றுகிறேன்! என் தந்தையின் அடியைப் போற்றுகிறேன்! புகழ் பொருந்திய இறைவன் அடியைப் போற்றுகிறேன்! சிவபெருமானுடைய அடியைப் போற்றுகிறேன்! அன்புடன் இருக்கும் தூய்மையான இறைவனது அடியைப் போற்றுகிறேன்! மாயம் ஆகிய பிறப்பு இனி வராதபடி செய்பவர்–அவர் பெருமை உடையவர் – அவருடைய அடியைப் போற்றுகிறேன்! சிறப்புப் பொருந்திய தலம் திருப்பெருந்துறை – அங்கு இருக்கும் கடவுளுடைய அடியைப் போற்றுகிறேன்! குறையாத இன்பத்தை அருள் செய்பவர்; மலை போன்றவர்; அவரது அடியைப் போற்றுகிறேன்!

Hail Foot of Lord! Hail Foot of my Heavenly Father! Hail Foot of the Famous one! Hail foot of the Lustrous One! Hail roseate Feet of Siva! hail Foot of Flawless One who stood in love! hail Foot of the king who severs illusive birth! Hail Foot of our Lord of glorious Perunthurai! Hail Foot of the Mountain (Lord) that affords bliss that wane not!

| | | | | |
|---|---|---|---|---|
| சிவனவன் | என் | சிந்தையுள் | நின்ற | அதனால் |
| Sivanavan | en | sindhaiyull | nindra | adhanaal |
| அவனருளாலே | அவன் | தாள் | வணங்கிச் | |
| Avanarullaale | avan | thaall | vannanggich | |
| சிந்தை | மகிழச் | சிவபுராணம் | தன்னை | |
| Sindhai | magizhach | sivapuraannam | thannai | |
| முந்தை | வினைமுழுதும் | ஓய | உரைப்பன் | யான் |
| Mundhai | vinaimuzhudhum | oya | uraippan | yaan; |
| கண்ணுதலான் | தன்கருணைக் | கண்காட்ட | வந்து | எய்தி |
| Kannnudhalaan | thankarunnaik | kannkaatta | vandhu | eydhi |
| எண்ணுதற்கு | எட்டா | எழிலார் | கழல் | இறைஞ்சி, |
| Ennnudharrku | ettaa | ezhilaar | kazhal | irraignji; |

அவர் சிவபெருமான்; அவர் என் மனத்தில் இருக்கிறார்; அதனால் அச்சிவபெருமானின் திருவருளால் அச்சிவபெருமானின் திருவடிகளை வணங்குகிறேன். என் மனம் மகிழ்ச்சி அடையும்படி "சிவபுராணம்" பாடுகிறேன். முன்பிறவிகளில் செய்த வினைகள் எல்லாம் நீங்கும்.

நெற்றியில் கண் உடைய சிவபெருமான் எனக்கு அருள் புரிந்தார். மனத்தால் நினைப்பதற்கும் எட்டாதது அவர் திருவடி–அழகு பொருந்திய கழல்களையுடையது அவர் திருவடி–அவற்றை வணங்கினேன்.

He is Siva; He is stationed in my mind. Hence by His grace I worship His Feet. To make my mind rejoice, I relate Sivapurana; and by this I get rid of the deeds done in previous births.

The Lord with an eye in His Forehead bestowed grace; I came and adored His beauteous Anklet (feet) which cannot be perceived.

| | | | | |
|---|---|---|---|---|
| விண்ணிறைந்து | மண்ணிறைந்து | மிக்காய் | விளங்கு | ஒளியாய் |
| Vinnnirraindhu | mannnirraindhu | mikkaay | villangu | olliyaay |
| எண்ணிறந்து | எல்லை | இலாதானே! | நின் | பெரும்சீர் |
| Ennnirrandhu | ellai | ilaadhaane! | nin | perumseer |

| | | | | |
|---|---|---|---|---|
| பொல்லா<br>Pollaa | வினையேன்<br>vinaiyēn | புகழுமாறு<br>pugazhumaarru | ஒன்று<br>ondru | அறியேன்;<br>arriyēn; |
| புல்லாகிப்<br>Pullaagip | பூடாய்ப்<br>pūdaayp | புழுவாய்<br>puzhuvaay | | மரமாகிப்<br>maramaagip |
| பல்விருகம்<br>Palvirugam | ஆகிப்<br>aagip | பறவையாய்ப்<br>parravaiyaayp | | பாம்பாகிக்<br>paambaagik |
| கல்லாய்<br>Kallaay | மனிதராய்ப்<br>manidharaayp | பேயாய்க்<br>pēyaayk | | கணங்களாய்<br>gannanggallaay |
| வல்அசுரர்<br>Val asurar | ஆகி<br>aagi | முனிவராய்த்<br>munivaraayth | | தேவராய்ச்<br>thēvaraaych |
| செல்லாஅ<br>Sellaaa | நின்றஇத்<br>nindraith | தாவர<br>thaavara | | சங்கமத்துள்<br>sanggamaththull |
| எல்லாப் பிறப்பும் பிறந்து<br>Ellaap pirrappum pirrandhu | | இளைத்தேன்;<br>illaiththēn; | | எம்பெருமான்!<br>emperumaan! |
| மெய்யே;<br>Meyyē; | உன்பொன்<br>unpon | அடிகள்<br>adigall | கண்டு இன்று<br>kanndu indru | வீடுற்றேன்;<br>vēdu utrēn; |

இறைவனே! நீ விண்முழுவதும் நிறைந்து இருக்கிறாய். நீ எல்லோரைக் காட்டிலும் மேல் ஆக இருக்கிறாய்; நன்கு விளங்கும் உன் பெருமைக்கு எல்லை இல்லை. ஒளியாக இருக்கிறாய். நான் பொல்லாத வினைகளை உடையவன். உன் பெருமையையும் சிறப்பையும் எப்படிப் புகழ்வது என்று அறியாது இருக்கிறேன். புல், பூண்டு, புழு மரம், பலவகை மிருகம், பறவை, பாம்பு, கல், மனிதர், பேய், கணங்கள், வலிமை பொருந்திய அரக்கர், முனிவர் தேவர் என்று பலவிதமான பிறவிகள் உண்டு. இப்பிறவிகள் எல்லாம் எடுத்தேன்; இளைத்தேன். இது உண்மை. உன் பொன் போன்ற திருவடிகளைக் கண்டு விடுதலை அடைந்தேன்.

O Lord! You pervade the Heaven and the earth. You are above all. You are the brightest light. Your glory, I man of evil deeds, do not know how to praise. The grass, the shrub, the worm and the trees, varied beasts, the birds and snakes, the stones, the men, the devil and the ganas, strong giants, ascetis and the celestials-so described are the movables and immovables. All these births I took and became exhausted. Oh my Lord! This is true of me! I saw Your golden Feet and attained salvation.

நாயில் கடையாய்க் கிடந்த அடியேற்குத் தாயில்சிறந்த
Naayil kadayaaiyk kidandh aadiyērkuth thaayilsirrandha

தயா ஆன தத்துவனே! மாசு அற்ற சோதி
Dhayaa aana thaththuvanē maasu attra Jōthi

மலர்ந்த மலர்ச் சுடரே
malarnddha Malarch sudarē

தேசனே தேர் ஆர் அமுதே சிவபுரனே
Dēsanē ther aar amudhē Sivapuranē

பாசம் ஆம் பற்று அறுத்துப் பாரிக்கும் ஆரியனே!
Paasam aam pattru arruththup paarikkum aariyanē

நான் நாயைப்போல் தாழ்ந்து இருந்தவன். அத்தகைய அடியவன் ஆகிய எனக்குத் தாயைக் காட்டிலும் சிறந்த அன்பைக் காட்டினாய். தத்துவமாக விளங்குபவனே! குற்றமில்லாத சோதியே, மலர்ந்த பூவிலுள்ள ஒளி ஆனவனே! ஒளி மயம் ஆனவனே! இனிய அமிர்தமே! சிவபுரத்தில் இருப்பவனே! பாசம் ஆகிய பற்றுக்களை அறுத்து அருள் செய்யும் தலைவனே!

I was as low as a dog. To such a bondsman as myself, you showed affection more than the mother. Oh Lord in the form of Thathva or Matter! Oh flawless light! Oh the hue of the flower! Oh the lustrous one! Oh sweet Ambrosia!. Oh Lord of Sivapuram! Oh Lord who severs the bonds named "Paasa" and bestow grace!

தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
Thillaiyull kuththanē thenpaanndi naattaanē

அல்லல் பிறவி அறுப்பானே ஓ என்று
Allal pirravi arruppaanē ō enrru

தில்லையில் திருக்கூத்து ஆடுபவனே! தென்பாண்டி நாட்டுக்குத் தலைவனே! துன்பம் ஆகிய பிறப்பை அறுப்பவனே 'ஓ' என்று

Oh Dancer at Thillai! Oh Lord of the South Pandya Country! Oh Lord who severs the bond of sorrowful birth! Oh Lord so saying.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சொல்லற்கு<br>Sollarrku | அரியானைச்<br>ariyaanaich | | சொல்லித்<br>chollith | | திருவடிக்கீழ்ச்<br>thiruvadikkēzch |
| சொல்லிய<br>Solliya | பாட்டின்<br>paattin | பொருள்<br>porull | உணர்ந்து<br>unnarndhu | | சொல்லுவார்<br>solluvaar |
| செல்வர்<br>Selvar | சிவபுரத்தின்<br>sivapuraththin | | உள்ளார்<br>ullllaar | சிவன்<br>Sivan | அடிக்கீழ்ப்<br>adikkeezhp |
| பல்லோரும்<br>Pallōrum | ஏத்தப்<br>ēththap | | பணிந்து.<br>pannindhu. | | |

## திருச்சிற்றம்பலம்

சிவனுடைய பெருமை சொல்வதற்கு முடியாது. அப்பெருமைகளைச் சொன்னேன். அவன் திருவடியின் மேல் இப்பாடலைப் பாடினேன். பாடிய இப்பாட்டின் பொருளை அறிந்து ப்பாடவேண்டும். அங்ஙனம் பொருள் அறிந்து சொல்பவர் அருட்செல்வம் உடையவர் ஆவர். சிவபுரத்தில் சிவபெருமானின் திருவடிக்கீழ் இருப்பர்! அவர்களை எல்லோரும் ஏத்திப் பணிவார்கள்!

He is One who cannot be described but some how I sang on Him. This is the poem sung on His Feet. Those who recite this knowing its meaning, are verily the blessed. They reside at Sivapuram under the Feet of Siva! All bow to them and adore them.

## (28)

உலகத்தில் ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன. உயர்பதவி—இழிபதவி என்ற வேறுபாடு; செல்வம் உடையவன்—ஏழை என்ற பாகுபாடு; உயர்குலத்தவன்—தாழ்ந்தவன் என்று வேறுபாடு; மொழி பேசுவதால் வேறுபாடு; நாட்டினால் வேறுபாடு. சில வேறுபாடுகள் செயற்கையே ஒழிய இயற்கை அல்ல. இவற்றைப் பொருட்படுத்துவதால்தான் இவ்வேறுபாடுகள்

நிலைத்து இருக்கின்றன. விரிந்த மனப்பான்மை இருந்தால் வேறுபாடுகள் காணப்படமாட்டா. எல்லாரும் இறைவன் முன் சமமே. பணக்காரன் இவன் என்று யமன் வராமல் இருப்பதில்லை. இவன் ஏழை ஆகையால் இவன் உயிரை எளிதில் கவரலாம் என்று யமன் வருவதில்லை. எந்த மொழி பேசினாலும், எந்த நாட்டில் இருந்தாலும், எந்தக் குலத்தில் பிறந்தாலும் உணர்ச்சிகள் ஒரே மாதிரியாக இருக்கின்றன. ஆகவே உயர்வு தாழ்வு வேறுபாடுகள் நீங்கிய சமுதாயம் அமைந்தால் அந்த நிலையே மகிழ்ச்சி தரும். இந்த உலகமே மோக்ஷ உலகமாகத் திகழும்.

## திருச்சிற்றம்பலம்

| | | | | |
|---|---|---|---|---|
| நாடகத்தால் | உன் அடியார்போல் | நடித்து | நான் | நடுவே |
| Naadagaththaal | un adiyaarpōl | nadiththu | naan | naduvē |
| வீடகத்தே | புகுந்திடுவான் | மிகப்பெரிதும் | விரைகின்றேன் | |
| Veedagaththē | pugundhiduvaan | migapperidhum | viraikindrēn | |
| ஆடகச்சீர் | மணிக்குன்றே | இடையறா அன்பு | உனக்கு என் | |
| Aadagachcheer | mannikkundrē | idaiyarraa anbu | unakk uen | |
| ஊடகத்தே நின்று | உருகத் | தந்தருள் | எம் உடையானே | |
| Udagaththē nindru | urugath | thandharull | em udaiyaanē. | |

நாடகத்தில் நடிப்பது போல உன் அடியார் போல் நான் நடித்தேன்; அவர்கள் வீடு அடையும் பொழுது அவர்களுக்கு நடுவில் இருந்து கொண்டு புகுவதற்கு நான் மிகவும் வேகமாக இருக்கிறேன். பொன் பொதிந்த–சிறப்பு உடைய–மணிகள் பதித்த–குன்று போன்றவனே! உன்னிடத்தில் நீங்காத அன்பு என் மனத்தில் இருக்க வேண்டும்; நிலைத்து உருகுமாறு செய்ய வேண்டும்; இங்ஙனம் நீ அருள் செய்; என்னை அடிமையாக உடையவனே!

I acted as if in a drama like a true devotee. When they enter Bliss, in their midst, I desire to enter in haste. Oh golden glorious Hill of gems! I yearn for ceaseless love to You. The love should be inmy heart and melt (the soul). Grant me this! Oh Possessor of myself!

| | | | |
|---|---|---|---|
| வாழ்கின்றாய் Vaazhgindraay | வாழாத vaazhaadha | நெஞ்சமே negnjamē | வல்வினைப்பட்டு valvinaippattu |
| ஆழ்கின்றாய் Aazhgindraay | ஆழாமல் aazhaamal | காப்பானை kaappaanai | ஏத்தாதே eththaathē |
| சூழ்கின்றாய் கேடு Suzhgindraay kēdu | உனக்குச் unakkuch | சொல்கின்றேன் cholkindrēn | பல்காலும் palkaalum |
| வீழ்கின்றாய் Veezhkindraay | நீ nee | அவலக் கடலாய avalak kadalaaya | வெள்ளத்தே. velllathth̄e. |

## திருச்சிற்றம்பலம்

வாழத் தெரியாத நெஞ்சமே! நீயும் வாழ்கிறாய். கொடிய வினையில் அகப்பட்டு அதில் மூழ்கி இருக்கிறாய். அதில் மூழ்கிவிடாமல் காக்கும் கடவுளை நீ ஏத்தாமல் கேடுவரும் செயல்களைச் செய்யச் (சூழ்ச்சி) செய்கிறாய். உனக்குப் பலதடவை சொல்கிறேன். நீ துன்பம் ஆகிய கடல் வெள்ளத்தில் வீழ்கிறாய்!

You survive O! Mind who is incapable of living! You are caught within the strong deeds and immersed in them. The Lord saves you from being immersed in them. Him you do not adore. But you scheme to do evil deeds. I advise you many a time. You fall into the waters of the ocean of grief.

## (29)

இந்த உடம்பு ஐம்பூதங்களால் ஆகியது; ஐந்து பொறிகளை உடையது; ஒவ்வொரு பொறிக்கு ஒவ்வொரு உணர்ச்சி உண்டு. மெய் என்பது உடம்பு. இதற்கு ஊற்றுணர்ச்சி உண்டு. வாய்–இதற்குச் சுவை உணர்ச்சி உண்டு; கண்–இதற்கு ஒளி உணர்ச்சி; மூக்கு இதற்கு முகர்தல் உணர்ச்சி; செவி–இதற்குக் கேட்கும் உணர்ச்சி; இவ்வுணர்ச்சிகள் ஒத்து இருக்கவேண்டும். பிறந்து வளர்கிறபோது இவை மிகினும் குறையினும் வாழ்க்கை சுகமாக இருக்காது. அவ்வுணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திச் சமமாகக் கொண்டு இருக்கவேண்டும். எது மிகுந்தாலும் உடம்புக்கு ஊறுபாடு நேரிடும். ஆகவே வாழ்க்கை நன்றாக அமைக்க விரும்புவோர் இந்த உணர்ச்சிகளைச் சமமாகக் கொண்டிருக்கப் பழகவேண்டும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தரிக்கிலேன் | காய | வாழ்க்கைசங்கரா | போற்றி! | | வான |
| Tharikkilēn | kaaya | vaazhkkai Sankaraa | pōtrri! | | vaana |
| விருத்தனே | போற்றி! | எங்கள் | விடலையே | போற்றி! | ஒப்பில் |
| Viruththanē | pōtrri! | enggall | vidalaiyē | pōtrri! | oppil |
| ஒருத்தனே | போற்றி! | உம்பர் | தம்பிரான் | போற்றி! | தில்லை |
| Oruththanē | pōtrri! | umbar | thampiraan | pōtrri! | Thillai |
| நிருத்தனே | போற்றி! | எங்கள் | நின்மலா | போற்றி! | போற்றி! |
| Niruththanē | pōtrri! | enggall | ninmalaa | pōtrri! | pōtrri! |

இந்த உடம்பில் வாழும் வாழ்க்கையை நான் பொறுக்க மாட்டேன். சங்கரனே! போற்றுகிறேன்! சிவலோகத்தில் முதியவனாக இருப்பவனே போற்றி! இளைஞனாக இருப்பனே போற்றி! ஒப்பு இல்லாதவனே! ஒருவனே போற்றி! தேவர்களுக்குத் தலைவனே போற்றி! தில்லையில் நடனம் ஆடுபவனே போற்றி! குற்றம் அற்றவனே போற்றி! போற்றி!

I am unable to put up with the life in this body. Hail Sankara! Hail the oldest in Siva lōka! Hail the youngest One! Hail Matchless one! Hail the Lord of the celestials! Hail the Dancer at Chidambaram! Hail Flawless one!

| | | | |
|---|---|---|---|
| போற்றிஓம் | நமச்சிவாய! | புயங்கனே | மயங்குகின்றேன்! |
| Pōtrriōm | Namachchivaaya! | puyangganē | mayanggugindrēn |
| போற்றிஓம் | நமச்சிவாயக் | புகலிடம் | பிறிதொன்றில்லை |
| Pōtrriōm | Namachchivaaya! | pugalidam | pirridhondrillai; |
| போற்றிஓம் | நமச்சிவாய! | புறமெனைப் | போக்கல்கண்டாய்; |
| Pottriōm | Namachchivaaya; | purramenaip | pōkkal kanndaay |
| போற்றிஓம் | நமச்சிவாய! சயசய | போற்றி! | போற்றி! |
| Potrriōm | Namachchivaaya;sayasaya | pōtrri! | pōtrri! |

போற்றி ஓம் நமச்சிவாய! புயங்கம் என்னும் நடனத்தை ஆடுபவனே! நான் மயங்குகிறேன். போற்றி ஓம் நமச்சிவாய! சேர்வதற்குரிய இடம் வேறு எதுவும் இல்லை. என்னைக் கைவிடாதே. போற்றி ஓம் நமச்சிவாய! வெல்வாயாக! வணக்கம்!

Hail Om Na Ma Si Vā Ya! Dancer of Buyanga! I am in delusion; hail Om Namasivaya! No other place of refuge I have; Hail Ōm Namasivāya! don't forsake me oh victorious Hail! Hail!

போற்றிஇப் புவனம் நீர்தீக் காலொடு வானம் ஆனாய்!
Pōtrri ip puvanam neertheek kaalodu vaanam aanaay!

போற்றிஎவ்வுயிர்க்கும் தோற்றம்ஆகி நீதோற்றம் இல்லாய்!
Pōtrri evvuyirkkum thōtrram aagi nee thōtrram illaay!

போற்றிஎல்லாவுயிர்க்கும் ஈறாய்! ஈறின்மை ஆனாய்!
Pōtrri ellauyirkkum eerraay eerinmai aanaay!

போற்றி ஐம் புலன்கள் நின்னைப் புணர்கிலாப் புணர்க்கையானே.
Pōtrri aim pulangall ninnaip punnargilla punnarkkaiyaanē.

## திருச்சிற்றம்பலம்

மண், நீர், நெருப்பு, காற்று, வானம் எனும் இவையாக இருப்பவனே போற்றி! எல்லா உயிர்களும் தோன்றுவதற்குக் காரணம் ஆக இருப்பவனே! எப்பொருளிலும் தோன்றா தவனே! போற்றி! எல்லா உயிர்களும் முடியும் இடம் ஆக இருப்பவனே! முடிவு என்பது இல்லாதவனே! போற்றி! ஐந்து புலன்களின் சூழ்ச்சி ஒன்றும் பொருந்தாதவனே போற்றி!

You pervade earth, water, fire, wind and ether, Hail! You, are the beginning of every living being; but You do not have a beginning, Hail! You are the end of every being; but You are without end, Hail! The five senses do not abide you, Hail!

இறைவன் நிலமாக இருக்கிறான்; நீராக இருக்கிறான்; தீயாக இருக்கிறான்; காற்றாக இருக்கிறான்; சந்திரன் ஆக இருக்கிறான். சூரியனாக இருக்கிறான்; ஆகாயமாகவும் இருக்கிறான்; நிலத்தில் திண்மை; நீரில் குளிர்ச்சி, தீயில் வெம்மை; காற்றில் இனிமை; சந்திரனில் தண்ணொளி; சூரியனில் வெம்மை ஒளி உள்ளன. இவற்றுள் எவை இல்லை என்றாலும் உயிர்வாழ முடியுமா? இவற்றை இயற்கையின் கூறுகள் என்று எல்லோரும் கூறுவோம். இவ்வியற்கைக் கூறுகள் நம் நலனுக்காகவே இருக்கின்றன. அவற்றை நம்மால் செயற்கையாக உண்டு பண்ண முடியாது. ஆகவே அவற்றை நன்முறையில் வைத்துப் பயன்படுத்திக் கொள்வதுவே முறை; நல்ல பண்பும் ஆகும்.

## திருச்சிற்றம்பலம்

| | | | | |
|---|---|---|---|---|
| பாரொடு<br>Paarodu | விண்ணாய்ப்<br>vinnnaayp | | பரந்த<br>parandha | எம்பரனே<br>emparanē |
| | பற்று<br>patrru | நான்<br>naan | மற்று<br>matrru | இலேன்<br>ilēn | 
| | | | | கண்டாய்<br>kanndaay |
| சீரொடு<br>Seerodu | பொலிவாய்<br>polivaay | | சிவபுரத்து<br>Sivapuraththu | அரசே<br>arasē |
| | திருப்பெருந்துறை<br>Thirupperumthurrai | | உறை<br>urrai | சிவனே<br>Sivanē |
| யாரொடு<br>Yaarodu | நோகேன்<br>nogēn | ஆர்க்கு<br>aarkku | எடுத்து<br>eduththu | உரைக்கேன்<br>uraikkēn |
| | ஆண்டநீ<br>aanndanee | அருளிலை<br>arullilai | ஆனால்<br>aanaal | |
| வார்கடல்<br>Vaarkadal | உலகில்<br>ulagil | வாழ்கிலேன்<br>vazhgilēn | கண்டாய்<br>kanndaay | |
| | வருக<br>varuga | என்று<br>endru | அருள்<br>arull | புரியாயே.<br>puriyaayē. |

மண் உலகமும் விண் உலகமும் பரவி இருக்கிற எம் தலைவனே! எனக்கு வேறுதுணை இல்லை. சிறப்போடு விளங்கு பவனே! சிவலோகத்திலிருக்கும் தலைவனே! திருப்பெருந்துறையில் வசிக்கின்ற சிவபெருமானே! யாரோடு சொல்லி வருந்துவேன்? யாருக்கு எடுத்துச் சொல்வேன்? நீ என்னை ஆட்கொண்டாய்; ஆனால் நீ அருள் செய்யவில்லை; பரந்த கடல் சூழ்ந்த உலகில் நான் வாழ முடியாது; 'வருவாயாக' என்று என்னை அழைத்து அருள் செய்.

Oh my Lord pervading this world and Heaven! I have no other to support me. Oh ever glorious! the king of Sivalōka! O Sivā residing at Thirupperunthurai! To whom shall I appeal? To whom shall I report? It was you who took me to your fold! But now you do not show me grace. Hence I cannot live in this sea-girt world. Please bid me to go to you and bestow grace.

NOTE: The word '*கண்டாய்*' used twice in this stanza and twice in the next does not convey any meaning probably be an equivalent of "Look you".

| | | | | |
|---|---|---|---|---|
| *பழுதில்* | *தொல்புகழான்* | *பங்க* | *நீ* | *அல்லால்* |
| Pazhudhil | tholpugazhaan | pangga | nee | allaal |
| | *பற்றுநான்* | *மற்று* | *இலேன்* | *கண்டாய்* |
| | patrrunaan | matrru | ilēn | kanndaay |
| *செழுமதி* | *அணிந்தாய்* | *சிவபுரத்து* | | *அரசே* |
| Sezhumadhi | annindhaay | Sivapuraththu | | arase |
| | *திருப்பெருந்துறை* | | *உறை* | *சிவனே* |
| | thirupperundhurrai | | urrai | Sivanē |
| *தொழுவனோ* | | *பிறரைத்* | *துதிப்பனோ* | *எனக்கோர்* |
| Thozhuvano | | pirraraith | thudhippanō | enakkōr |
| | *துணை* | *என* | *நினைவனோ* | *சொல்லாய்* |
| | thunnai | ena | ninaivanō | sollaay |
| *மழ* | *விடையானே* | | *வாழ்கிலேன்* | *கண்டாய்* |
| Mazha | vidaiyaane | | vaazhgilen | kanndaay |
| | *வருக* | *என்று* | *அருள்* | *புரியாயே.* |
| | varuga | endru | arull | puriyaayē. |

## திருச்சிற்றம்பலம்

குற்றம் இல்லாத பழமையான புகழ் உடையவள் உமை; அந்த உமையை ஒரு பாகத்தில் கொண்டவனே! நீ தவிர எனக்கு வேறு துணை இல்லை; செழிப்பான பிறையை அணிந்தவனே! சிவலோகத்தில் இருக்கும் தலைவனே! திருப்பெருந்துறையில் வசிக்கின்ற சிவபெருமானே! நான் பிறரை வணங்குவேனோ? துதிப்பேனோ? எனக்கு அவர்கள் துணை என்று நினைப்பேனோ? நீயே சொல். இளமையான எருதை வாகனமாக உடையவனே! என்னால் வாழ முடியாது; 'வருவாயாக; என்று என்னை அழைத்து அருள் செய்.

Oh Lord having Uma- the spotless and renowned-in Your form! I have no other except you to support me. Oh ye wearer of crescent moon! the king of Sivalōka. Oh Sivā residing at Thirupperunthurai! Shall I bow down? Shall I praise others? Shall I consider them as my aid? Please tell me. O Lord riding an young bull! I cannot live! look you! Please bid me to go to you and bestow grace.

## *(31)*

இந்த உலகம் எதனால் ஆகியது? மண், கல், உள்ளே நீர் இன்னும் எத்தனையோ பொருள்கள். ஓரிடத்தில் மேடு, ஓரிடத்தில் பள்ளம், ஒரு பகுதியில் மலை, காடு; ஒரு பகுதியில் வெறும் மணல்; ஓரிடத்தில் செழிப்பான மண்; ஒருபகுதியில் சுண்ணாம்புக்கல் பொருந்திய விளைவுக்குப் பயன்படாத பகுதி; ஒரு பகுதியில் பலமாதங்களில் பனிப் படலமே இருக்கும்; மரம் செடிவளர்ச்சி இல்லை. ஒரு பகுதியில் வெறும் நீர்ப்பகுதியே; அவற்றின் நடுவில் சிறுசிறு தீவுப் பகுதி. எத்தகைய இடத்திலும் உயிர் இனங்கள் உண்டு; மக்களும் வாழ்கிறார்கள். ஒருபகுதியில் இரவு பகல் ஒரே அளவு; தட்ப வெட்பம் சமமாக இருப்பது; மழை பெய்தல், நல்ல விளைவு, எல்லா வசதிகளும் இருக்கும். இங்கும் மக்கட்கூட்டம் உண்டு. இத்தகைய வசதிகள் படைத்த இடத்தில் பிறக்கும் ஊழ் எப்படிக் கிடைத்தது? அதைப்பற்றிச் சிந்திக்க வேண்டும்; அது நமக்கு இறைவன் கொடுத்த அருட்கொடை என்று அறிவதே அறிவுடைமை ஆகும்.

# திருச்சிற்றம்பலம்

| | | | |
|---|---|---|---|
| சோதியே<br>Sōdhiyē | சுடரே<br>sudarē | சூழொளி விளக்கே<br>suzholli villakkē | |
| | சுரிகுழல்<br>surikuzhal | பணைமுலை<br>pannaimulai | மடந்தை<br>madandhai |
| பாதியே<br>Paadhiyē | பரனே<br>paranē | பால்கொள்<br>paalkoll | வெண்ணீற்றாய்<br>vennnneetrraay |
| | பங்கயத்து<br>panggayaththu | அயனும் மால்<br>ayanum maal | அறியா<br>arriyaa |
| நீதியே<br>Needhiyē | செல்வத்<br>selvath | திருப்பெரும்<br>Thirupperum | துறையில்<br>thurraiyil |
| | நிறைமலர்க்<br>nirraimalark | குருந்த மேவிய<br>Kurundha mēviya | சீர்<br>seer |
| ஆதியே<br>Aadhiyē | அடியேன்<br>adiyen | ஆதரித்து<br>aadhariththu | அழைத்தால்<br>azhaiththaal |
| | அதெந்துவே<br>adhendhuvē | என்று அருளாயே<br>endru arullaayē. | |

அளவுக்கு அடங்காத பெரிய ஒளியே! சந்திரன் சூரியன் முதலிய ஒளிகளாக இருப்பவனே! மற்ற ஒளிகள் சூழ்ந்து இருக்கும் விளக்காக இருப்பவனே! சுரிந்த கூந்தலை உடைய உமையை ஒரு பாதியில் உடையவனே! பால் போன்ற நிறம் உடைய வெண்மையான விபூதியை அணிந்தவனே! தாமரையில் உள்ள பிரமனும், திருமாலும் அறிய முடியாதவனே! நீதியேவடிவு எடுத்தவனே! செல்வம் பொருந்திய திருப்பெருந்துறையில் மலர்கள் நிறைந்த குருந்த மரத்தின் அடியில் வீற்று இருந்தவனே! முழுமுதற் கடவுளே! அடியேன் அன்போடு அழைக்கிறேன் 'அதற்கு என்ன காரணம்' என்று கேட்டு அருள் செய்வாய்!

Oh Light Resplendent! Oh light splendour! Oh the Effulgent Light surrounded by luminaries! Oh Lord who has given half of your form to the Lady-Uma who has curling locks. Oh the supreme! Oh Lord who smeared His form with white sacred Ash! Oh the Virtue Incarnate unperceivable by Brahma on the lotus and Vishnu! At Tirupperundurai under the shade of Kuruntha tree ful' of

flowers, Oh the glorious First you are seated! I the bond-slave entreat You with love and call you; can't you ask "why do you call me" and bestow grace?

| | | | | |
|---|---|---|---|---|
| திருந்துவார் | பொழில்சூழ் | திருப்பெருந் | | துறையில் |
| Thirundhuvaarpozhilsūzh | | Thirupperun | | dhurraiyil |
| | செழுமலர்க் | குருந்த | மேவிய | சீர் |
| | sezhumalark | Kurundha | mēviya | seer |
| இருந்தவாறு | எண்ணி | ஏசறா | நினைந்திட்டு | |
| Irundhavaarru | ennnni | ēsarraa | ninaindhittu | |
| | என்னுடை | எம்பிரான் | | என்றென்று |
| | ennudai | embiraan | | endrendru |
| அருந்தவா | நினைந்தே | ஆதரித்து | | அழைத்தால் |
| Arundhavaa | ninaindhē | aadhariththu | | azhaiththaal |
| | அலைகடல் | அதனுளே | | நின்று |
| | alaikadal | adhanullē | | nindru |
| பொருந்த | வா | கயிலை | புகுநெறி | இதுகாண் |
| Porundha | vaa | Kayilai | pugunerri | idhukaann |
| | போதராய் | என்று | அருளாயே. | |
| | pōdharaay | endru | arullaayē. | |

## திருச்சிற்றம்பலம்

அழகிய பரந்த பொழில்கள் சூழ்ந்தது திருப்பெருந்துறை. அங்கே செழிப்பான மலர்கள் பொருந்திய குருந்த மரம்–அதன் கீழ் நீ இருந்த நிலைமையை எண்ணினேன் (உன்னுடன் தொடராத) குற்றத்தை முழுதும் நினைத்தேன். 'என்னுடைய தலைவனே' என்று பலமுறை (அழைத்தேன்); 'அரிய தவக் கோலம் உடையவனே' என்று நினைத்தேன் உன்னை அன்போடு அழைக்கிறேன் "அலைகளை உடைய கடல் சூழ்ந்த பூமியிலிருந்து கயிலையை அடைவதற்கு வா, கயிலையின் உள்ளே செல்வதற்கு வழி இது–பார் வருக" என்று அருள் செய்வாயாக.

Thirupperunthurai is surrounded by beautiful extensive groves. There under the shade of Kurundha tree with full blown blossoms, You were seated. This state I pondered over. My fault of not following You, I brooded over. "Oh my

Lord! Oh my Lord", I called several times. Oh Lord with sacred saintly form! I entreated You with love and called You. "From the earth surrounded by sea with waves, please do come. This is the way to enter Kailas! Look"- so tell me and bestow grace.

## *(32)*

உலகத்து மக்களுக்கு மூன்று ஆசைகள் உண்டு; பெண் ஆசை மண் ஆசை, பொன் ஆசை, இவற்றுள் பெண் ஆசை பொல்லாதது; பெருந் தீமைகளை விளைவிப்பது; பெண் ஆசையால் இராவணன் மடிந்த கதை உலகு அறியும். நற்காமம் என்பது வேறு; தீய காமம் என்பது வேறு. தீய காமம்தான் கண்டகண்ட பெண்களிடத்து உறவு கொள்ளத்தூண்டும். அத்தீய உறவினால் ஏற்படும் கொடுமைகள்தான் எத்தனை! பொருட்கேடு, மானக்கேடு, அச்சம், பகை. இன்னும் எத்தனேயோ பல நேரிடுமே. இம்மட்டோ! உடம்பும் கெடும்; நோயும் உண்டாகும்; தீராப்பழியும் வருமே. ஆகவே அத்தகைய பொருட் பெண்டிர் முயக்கம் நீங்கி, இறைவனிடத்தும், மற்ற உயிர்கள் இடத்தும் ஆசையும் அன்பும் காட்டினால் எவ்வளவோ நன்மைகள் கிடைக்கும். உலகீர் இதனை அறிவீராகுக.

### திருச்சிற்றம்பலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உற்றாரை | யான் | வேண்டேன் | ஊர் | வேண்டேன் | பேர்வேண்டேன் |
| Utraarai | yaan | vēnndēn | ūr | vēnndēn | pērvēnndēn |
| கற்றாரை | யான் | வேண்டேன் | கற்பனவும் | | இனி அமையும் |
| Katrārai | yaan | vēnndēn | karrpanavum | | ini amaiyum |
| குற்றாலத்து | | அமர்ந்து | உறையும் | | கூத்தா உன் |
| Kutrāla-ththu | | amarnthu | urraiyum | | kuththaa un |
| | | | | | குரைகழற்கே |
| | | | | | kuraikazharrkē |
| கற்றாவின் | மனம் | போலக் | கசிந்துருக | | வேண்டுவனே. |
| Katraavin | manam | pōlak | kasinduruga | | vēnnduvanē. |

### திருச்சிற்றம்பலம்

என்னை வந்து அடைந்தவர்களை விரும்பமாட்டேன்; ஊரில் உள்ள மற்றவர்களையும் விரும்பமாட்டேன்; புகழையும் விரும்பமாட்டேன்; படித்தவர்களையும் யான் விரும்ப மாட்டேன்; இது காறும் படித்த படிப்பும் போதும்.

திருக்குற்றாலம் எனும் தலத்தில் விரும்பி வசிக்கும்படியான கூத்தாடும் பெருமானே! ஒலிசெய்யும் குழல்களை உடைய உன் திருவடிகள் இடத்துக் கன்றைக் கண்டு உருகும் பசுவைப்போல், நான் கசிந்து உருக விரும்புகிறேன்.

I like not kith and kin; nor the inhabitants of my town
I aspire not for fame; I like not men of letters;
What I have learnt is enough indeed!
Oh Dancer having abode at Tirukkutraalam!
I long to melt with love towards Thee just like the milch cow towards its calf.

## *(33)*

மக்கள் உடம்பு எலும்பு தோல் இறைச்சி நரம்பு இரத்தம் முதலிய தாதுக்களால் ஆனது; வாதம் பித்தம் சிலேத்துமம் ஆகியவற்றால் கட்டுப்படுத்தப்படுவது; தாகம் பசி ஆகியவற்றை உடையது. இவற்றுள் எது மிகினும் குறையினும் நோய்வரும். நோய் வராதவாறு உடம்பினைப் பேணுதல் ஒவ்வொருவருடைய கடமை ஆகும். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். நோயுற்றார் தமக்கும் சுகம் இல்லை. பிறருக்கும் தொல்லை தருவர். அவர்கள் வீட்டுக்குத் தொல்லை தருபவராகவே கருதப்படுவர். அவர்கள் தம் குடும்பத்திற்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யமுடியாதவர் ஆகின்றனர்; இதனால் நாட்டுக்கும் பயன் அற்றவர் ஆகிறார்கள். ஆகவே நோய் அணுகாத உடம்பினராக இருக்க நற்பண்புகளைப் பேணிப் பழகவேண்டும்.

## திருச்சிற்றம்பலம்

| | | | |
|---|---|---|---|
| அம்மையே<br>Ammaiye | அப்பா<br>appaa | ஒப்பிலா<br>oppilaa | மணியே<br>manniye |
| | அன்பினில்<br>anbinil | விளைந்த<br>villaindha | ஆரமுதே<br>aaramudhe |

பொய்ம்மையே பெருக்கிப்பொழுதினைச் சுருக்கும்
Poymmaiye perukkip pozhudhinaich churukkum

புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
puzhuththalaip pulaiyanen thanakkuch

செம்மையே ஆய சிவபதம் அளித்த
Semmaiye aaya Sivapadham alliththa

செல்வமே சிவபெருமானே
selvame Sivaperumaane

இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
Immaiye unnaich chikkenap pidiththen

எங்கு எழுந்து அருளுவது இனியே.
enggu zhundhu arulluvadhu iniye.

எல்லா உயிர்களுக்கும் தாயாக உள்ளவனே! தகப்பனாக உள்ளவனே! ஒப்பு இல்லாத மணியே! அன்பு (என்னும் கடலில்) விளைந்த அருமையான அமுதமே! பொய்யானது உலக வாழ்க்கை; இதைப் பெருக்குகிறேன். மெய்யான வாழ்க்கைக்கு உரிய பொழுதினைச் சுருக்குகிறேன். பரிசுத்தம் இல்லாதவனாகிய எனக்குச் செம்மையாகிய சிவபதத்தைக் கொடுத்து அருளிய செல்வமே! சிவபெருமானே! இப்பிறவியிலேயே உன்னை உறுதியாகப் பிடித்தேன்; நீ என்னை விட்டு இனி எங்கே போவாய்?

Oh Heavenly Mother! O Heavenly Father! Oh matchless gem! Oh Ambrosia that arose out of love for You! I devote more time for the illusive worldly life. But I waste away the time allotted for elevating the soul. Lo! I am an impure low person! To me, you bestowed esteemed Siva Bliss. Oh Wealthy (of grace)! Oh Lord Siva! In this birth I seized you. Where would you go?

பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்
Paal ninaindhu uttum thaayinum saalap

பரிந்து நீ பாவியேன் உடைய
parindhu nee paaviyen udaiya

ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
Uninai urukki uilllolli perukki

உலப்பிலா ஆனந்தம் ஆய
ulappilaa aanandham aaya

தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
Theninaich chorindhu purrampurram thirindha

| | | | |
|---|---|---|---|
| | செல்வமே<br>Selvamē | சிவபெருமானே<br>Sivaperumaanē | |
| யான்உனைத்<br>Yaanunaith | தொடர்ந்து<br>thodarndhu | சிக்கெனப்<br>sikkenap | பிடித்தேன்<br>piḍiththen |
| | எங்கெழுந்து<br>enggezhundhu | அருளுவது<br>arulluvadhu | இனியே.<br>iniyē. |

## திருச்சிற்றம்பலம்

சிறு குழந்தைக்குத் தாய் அதன் பசியை அறிந்து பால் கொடுப்பாள். அத்தாயைக் காட்டிலும் அன்பு கொண்டு, நீ பாவி ஆகிய என்னுடைய ஊனை உருக்கினாய்; என் உள்ளே ஒளிபெருக்கினாய்; அழிவு இல்லாத ஆனந்தம் ஆகிய தேனைச் சொரிந்தாய் வெளியிலேயும் இங்ஙனமே (நன்மைகள் செய்தாய்). அருள் ஆகிய செல்வத்தைத் தருபவனே! சிவபெருமானே! நான் உன்னைத் தொடர்ந்து உறுதியாகப் பிடித்தேன். என்னை விட்டு நீ இனி எங்கே போவாய்?

The Mother would feed the child with milk (perceiving its hunger). More than the mother you pitied me. You purified the flesh; You increased the inward light; You caused to flow the honey of imperishable bliss. In this way you transformed my outward body. Oh wealth (of grace)! Oh Lord Siva! I followed. and seized you. Where would you go?

## *(34)*

மனைவி மக்கள் உறவினர் ஆகியவர் இடத்தில் காட்டும் ஆசையை அன்பு என்பார்கள். தொடர்பு இல்லாத பிறர் இடத்தும் பிறவுயிர்கள் இடத்தும் காட்டும் பரிவை அருள் என்பார்கள். நம்மிடம் நெருங்கியவர் இடத்துக் காட்டும் அன்பைக் காட்டிலும் எல்லா உயிர்களிடத்திலும் அன்பு காட்டுவதுதான் மக்கட் பண்பு என்பார்கள். இத்தகைய மக்கட்பண்பு உடையவர்களே உலகத்திலே எல்லாராலும் போற்றப்படுவர். அவர்கள்தான் இவ்வுலகத்தில் தெய்வமாகக் கருதப்படுவர். அவர் மனத்தில், தாமாகவே வந்து அன்பாகிய சிவம் குடிகொண்டிருப்பார்!

## திருச்சிற்றம்பலம்

நானேயோ தவம் செய்தேன் சிவாயநம வெனப்பெற்றேன்
Naanēyō thavam seydhēn Sivāya nama venap petrrēn

தேனாய் இன்னமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்
Thēynaay innamudhamumaayth thiththikkum Sivaperumaan

தானே வந்து எனது உள்ளம் புகுந்து அடியேற்கு
Thaanē vandu enadhu ullllam pugundhu adiȳerrku

அருள் செய்தான்
arull seydhann.

ஊன் ஆரும் உயிர் வாழ்க்கை ஒறுத்து அன்றே வெறுத்திடவே.
Ūnaarum uyir vaazhkkai orruththu anrrē verruththidavē

## திருச்சிற்றம்பலம்

நான் தவம் செய்தேனோ? சிவாயநம சிவாயநம என்று இடையறாது கூறும் பாக்கியத்தை அடைந்து இருக்கிறேன். சிவபெருமான் தேன்போன்று தித்திக்கிறான். தேவாமிர்தம் போன்று இனிக்கிறான்; அவன் என்னிடம் தானாகவே வந்தான்; என் மனத்தில் புகுந்தான்; அடியவனாகிய எனக்கு அருள் புரிந்தான்; ஆகையால் ஊன்பொருந்திய உடம்பில் உயிர்வாழும் வாழ்க்கையை வெறுத்து, உடம்பைத் துன்புறுத்துவது (இனி வேண்டியது இல்லை).

Did I perform penance?
I am indeed fortunate to chant (the mystic five letters) Si Vā Ya Na Ma.
Siva Perumaan is sweet like honey and ambrosia.
He came of his own accord, entered my mind and bestowed grace on me - the bondslave;
Then unnecessary it is to hate living in this fleshy body and do penance.

## *(35)*

நம்மவர் முன்பிறவி என்றும் மறுபிறவி என்றும் பிறவிகளைப் பற்றிப் பேசுபவர். இது இந்து சமயத்தவருடைய கொள்கைகளுள் ஒன்று. ஒரு பிறவியில் கற்ற கல்வி ஏழு பிறவிகளிலேயும் சென்று பயன் அளிக்கும் என்று வள்ளுவர் கூறியிருக்கிறார். ஒரு பிறவியில் ஒவ்வொருவரும் முற்பிறவி

களில் செய்த வினைகளின் பயனை நுகர வேண்டும். இப் பிறவியில் செய்தனவற்றின் பயனையும் நுகர வேண்டும். ஒருவன் தீவினைகளைச் செய்துவிட்டு அதற்குக் கழுவாயாக நல்வினையைச் செய்தால் தீவினையின் பயன்–பாவம் நீங்கும் என்று நினைக்கக்கூடாது. நல்வினைப் பயனையும் நுகர்ந்து தீவினைப் பயனையும் நுகரவேண்டும். இவ்வாறு நல்வினை தீவினை ஆகிய இவ்விரு வினைகளின் பயனை முற்றும் நுகர்ந்து முடிந்தால்தான் பிறவி நீங்கும். எந்த வினையின் பயனையும் நுகராமல் எஞ்சியிருந்தால் பிறவி நிச்சயம். ஆகவே மானுடப்பிறவி எடுத்தவர் தீவினைகள் செய்து அல்லற்படாது இருக்கவேண்டும். இதுவே நன்னெறியும் ஆகும்.

## திருச்சிற்றம்பலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பிணக்கு<br>Pinnakku | இலாத<br>ilaadha | பெருந்துறைப்<br>Perundhurraip | | பெரு<br>peru | |
| | மான்<br>maan | உன்<br>un | னாமங்கள்<br>naamanggall | | பேசுவார்க்கு<br>pēsuvaarkku |
| இணக்கு<br>Innakku | இலாததோர்<br>ilaadhadhōr | இன்பமே<br>inbamē | வரும்<br>varum | | |
| | துன்பமே<br>thunbamē | துடைத்து<br>thudaiththu | | எம்பிரான்<br>embiraan | |
| உணக்கு<br>Unnakku | இலாததோர்<br>ilaadhadhōr | வித்து<br>viththu | மேல்வினை<br>mēlvillai | | |
| | யாமல்<br>yaamal | என்வினை<br>envinai | | யொத்தபின்<br>yoththapin | |
| கணக்கி<br>Kannakki | லாத்திருக்<br>laaththiruk | கோல<br>kōla | நீவந்து<br>neevandhu | | |
| | காட்டி<br>kaatti | னாய்கழுக்<br>naaykazhuk | | குன்றிலே.<br>kundrilē | |

## திருச்சிற்றம்பலம்

தடுமாற்றம் இலாதவர் (உன் அடியார்கள்); திருப்பெருந் துறையில் உள்ள பெருமானே! உன் திருப்பெயரைக் கூறுபவ ருக்குக் குறையாத இன்பம் வந்து சேரும்; துன்பம் நீங்கும். எம்பெருமானே! உலர்தல் இல்லாதது–விதை போன்றது–முன் பிறவிகளில் செய்த வினை; அவ்வினைகள் இன்னும் வளராதவாறு இருவினை ஒப்பு ஏற்பட்டது; இந்த நிலை

வந்ததும் உனது அழகிய வடிவத்தை நீ திருக்கழுக்குன்றத்தில் காட்டினாய்!

(The devotees) are unperturbed; Oh Lord of Perunthurai! To those who chant Your name, ecstatic joy befalls; all sorrows be removed. My deeds-not dried up-like a seed-will no longer be effective; for they have become balanced. Then You appeared and exhibited Your countless forms at Thirukkalukkunram.

## *(36)*

பிறவி ஒரு பெருங்கடல்; அதில் இந்த உடம்பு ஒரு தோணி போன்றது; இந்தத் தோணியில் களவு பொய் காமம் கோபம் முதலாய பல சரக்குகள் ஏற்றியிருக்கிறது; வாழ்க்கை என்ற துடுப்பினால் இத் தோணி மெல்லச் செல்கிறது; வழியில் காமம் என்ற சுறாவின் வாயில் சிக்கித் திணருகிறது. அப்பொழுது அடியார்கள் (நல்லவர்கள்) கூட்டுறவு இருந்தால், திருவைந்தெழுத்து என்ற புணையைப் பிடித்துக் கொண்டு இறைவனது திருவடியாகிய கரையேறலாம். ஆகவே நல்ல அன்பர்களுடைய நேசம் மிகவும் தேவை என்று உணர்வது அறிவுடைமை ஆகும்.

செழுக்கமலத் திரளன நின் சேவடி சேர்ந்து அமைந்த
Sezhukkamalath thirallana nin sēvadi sērndhu amaindha

பழுத்த மனத்து அடியருடன் போயினர் யான் பாவியேன்
Pazhuththa manaththu adiyarudan pooyinar yaan paaviyēn

புழுக்கண் உடைப் புன்குரம்பை பொல்லாக் கல்வி
Puzhukkann udaip punkurambai pollaak kalvi

ஞானம் இலா
gnanam ilaa

அழுக்கு மனத்து அடியேன் உடையாய் உன் அடைக்கலமே.
Azhukku manaththu adiyēn udaiyaay un adikkalamē.

## திருச்சிற்றம்பலம்

வளமான தாமரை மலர்களின் கூட்டம் போன்றது உன் செம்மையான திருவடி; அத்தகைய திருவடியைச் சேர்ந்து இருக்கிற செம்மையான மனம் உடைய அடியார் (ஒருவர் மற்றொருவருக்குத் துணையாக) உடன் சென்றுவிட்டனர். ஆனால் யானோ பாவியேன்; புழுக்கள் நெளியும்படியான

இழிவான உடம்பையுடையேன்; பொல்லாதவன்; கல்வியறிவு இல்லாதவன்; தூய்மையில்லாத மனம் உடையேன்; என்னை ஆளாக உடையவனே! நான் உன் அடைக்கலம்.

Your roseate feet are like the cluster of fertile lotus flowers. The devotees of mature mind that have joined such feet have left and gone. But, I am a sinner; I possess a foul body full of germs; I do not possess education and wisdom; I possess impure mind; Oh lord who have taken me into Your fold! I have taken refuge in You.

## (37)

அச்சமே ஒவ்வொருவரிடத்திலும் குடிகொண்டிருக்கிறது; பகைவரிடத்து அச்சம்; கள்வரிடத்து அச்சம்; விஷஜந்துக் களிடம் அச்சம்; கொடுங்கோலரிடம் அச்சம்; பிணிவரின் அச்சம்; நெருப்புக்கு அச்சம்; பெருவெள்ளம் என்றால் அச்சம்; இடரினும் தளரினும் அச்சம்; பிறப்பு இறப்பு எல்லா வற்றிற்கும் அச்சம்; உச்சி மீது வானிடிந்து வீழினும் 'அச்சம் இல்லை அச்சமில்லை' என்றான் பாரதி! திருநாவுக்கரசர் வானந்துளங்கிலென் மண்கம்பம் ஆகிலென்! என்பார். இந்தத் தைரியம் யாருக்குக் கிடைக்கும்? எப்பொழுது கிடைக்கும்? இறைவனது திருவடியை மனத்தில் கொண்டவருக்கே இந்த அஞ்சாமை கிடைக்கும். ஆகவே கடவுளின் திருநாமத்தை மனத்தில் பதித்தல் சாலச்சிறந்தது.

### திருச்சிற்றம்பலம்

| | | |
|---|---|---|
| புற்றில்<br>Putrril | வாளரவும்<br>vaallaravum | அஞ்சேன்<br>agnjen |
| | பொய்யர்தம்<br>poyyartham | மெய்யும் அஞ்சேன்<br>meyyum agnjen |
| கற்றைவார்<br>Katrraivaar | சடையெம்<br>sadaiyem | அண்ணல்<br>annnnal |
| | கண்ணுதல்<br>kannnnudhal | பாதம் நண்ணி<br>paadham nannnni |
| மற்றுமோர்<br>Matrrumor | தெய்வம்<br>dheyvam | தன்னை<br>thannai |
| | உண்டென<br>unndena | நினைந்து எம்பெம்மாற்<br>ninaindhu empemmaarr |

| | | | |
|---|---|---|---|
| கற்றிலா<br>Katrrilaa | தவரைக்<br>thavaraik | கண்டால்<br>kanndaal | |
| | அம்ம<br>amma | நாம்<br>naam | அஞ்சுமாறே<br>agnjumaare. |

## திருச்சிற்றம்பலம்

புற்றில் வாழும் பாம்புக்குப் பயப்படமாட்டேன்; பொய்யே பேசுபவர் மெய்யே பேசினாலும் அதற்கும் பயப்படமாட்டேன். நீண்ட சடைத் தொகுதியை உடைய தலைவன்–நெற்றியில் கண் உடையவன்–அவனுடைய திருவடிகளை அடைந்தும் –வேறு ஒரு தெய்வம் உண்டு என்று நினைத்து, எம்பெருமானைப் பற்றி அறியாதவரைக் கண்டால், நாம் அவரைப் பார்த்துப் பயப்படுகிறோம்; அந்தோ!

I fear not the snake that dwells in the ant hill; I fear not the truth of the untrue. He is my Lord with matted locks with an eye in his forehead. His Feet I approach. If one should sustain the existance of another God, Oh! I fear them who have not learnt of my Lord.

## (38)

இறைவனுக்கு ஒரு உருவம் கொடுக்கிறோம். அவருக்கும் இரண்டு கால்கள் கொடுத்து இருக்கிறோம். இறைவனுடைய திருவடியாவது ஞானம். ஞானம் பெற்றால்தான் அவனை அடைய முடியும். அவன் திருவடியே பிறவியாகிய பெரிய கடலைக் கடப்பதற்குத் தோணியாக உதவுகிறது. அதனைப் பற்றி ஞானம் அடைந்து இறைவன் திருவருள் பெறுவோமாக.

## திருச்சிற்றம்பலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இணை<br>Innai | ஆர்<br>aar | திருவடி<br>Thiruvadi | என்<br>en | தலைமேல்<br>thalaimē | வைத்தலுமே<br>vaiththalumē |
| துணை<br>Thunnai | ஆன<br>aana | சுற்றங்கள்<br>sutranggall | அத்தனையும்<br>aththanaiyum | துறந்து<br>thurrandhu | ஒழிந்தேன்<br>ozhindhēn |
| அணை<br>Annai | ஆர்<br>aar | புனல்<br>punal | தில்லை<br>Thillai | அம்பலத்தே<br>ambalaththē | ஆடுகின்ற<br>aadugindra |
| புணை<br>Punnai | ஆளன்<br>aallan | சீர்<br>seer | பாடிப்<br>paadip | பூ அல்லி<br>pū alli | கொய்யாமோ!<br>koyyaamō! |

உன் இரண்டு திருவடிகளையும் என் தலைமேல் வைத்தாய். அப்பொழுது எனக்கு உதவியாக இருக்கிற எல்லா வற்றையும் விட்டு விட்டேன். அணை பொருந்திய வெள்ளம் சூழ்ந்த தில்லையில் சிற்றம்பலத்தில் ஆடுகின்றவன் – எனக்குப் புணை ஆக இருக்கின்றவன் – அந்த இறைவனுடைய பெருமைகளைப் பாடுவோம்! அல்லிப்பூக்களைப் பறிப்போமாக!

You placed your two feet over my head. At once I abandoned everthing that seemed to be of help to me. You dance in the Hall at Thillai (Chidambaram) surrounded by waters. He is the boat (to cross the ocean of birth). His fame I sing and pluck the Alli flowers.

அத்தி உரித்து அது போர்த்து அருளும் பெருந்துறையான்
Aththi uriththu adhu pōrththu arullum Perundhurraiyaan

பித்த வடிவு கொண்டு இவ்வுலகில் பிள்ளையும் ஆம்
Piththa vadivu konndu ivvulagil pillllaiyum aam

முத்தி முழுமுதல் உத்தரகோசமங்கை வள்ளல்
Muththi muzhumudhal Uththarkkōsamangai vallllal

புத்தி புகுந்தவா பூ அல்லி கொய்யாமோ!
Puththi pugundhavaa • pū alli koyyaamō!

## திருச்சிற்றம்பலம்

யானைத் தோலை உரித்து அதனைப் போர்த்திக் கொண்டான்; அவன் திருப்பெருந்துறையில் இருக்கும் சிவன் ஆவான். அவன் பித்தன் போன்ற வடிவைக் கொண்டவன். இந்த உலகத்தில் குழந்தையாகவும் இருப்பான். அவனே முத்தி தருவதற்குத் தலைவன். உத்தரகோச மங்கை என்ற தலத்தில் வள்ளல் ஆக விளங்குபவன். அவன் என் சித்தத்தில் புகுந்தான். அவன் புகுந்த விதத்தைப் பாடிக் கொண்டே அல்லிப்பூக்களைப் பறிப்போமாக!

He peeled the skin of an elephant and covered Himself. He is the Lord at Tirupperunthurai. He takes the form of a mad man. He will also become a child in this world. He is the Lord who bless us with supreme bliss. He is the benefactor residing at Uttarakosamangai. He entered my mind. We shall sing the mode of entry and pluck the Alli flower.

# அருணகிரிநாதர் திருப்புகழ்
# ARUNAGIRINAATHAR THIRUPPUGAZH
## (39)

பழனி ஆண்டவனே!

கருவில் உருவாகினேன்; பிறந்தேன்; வளர்ந்தேன்; பல கலைகளைக் கற்றேன்; உலக வாழ்விலேயே மூழ்கினேன்; ஆனால் உன்னை நினைக்காமல் இருக்கிறேனே! சமய அறிவு பெறாமல் இருக்கிறேனே! ஹர ஹர சிவாய என்று கூறாமல் இருக்கிறேனே! என்னைக் காப்பாற்றுவாயாக!

### பெருவாழ்வு பெறச் செய்க

கருவின் உருவாக வந்து வயதளவிலே வளர்ந்து
Karuvin uruvaagi vandhu vayadhallavilē vallarndhu

கலைகள் பலவே தெரிந்தும் அதனாலே
Kalaigall palavē therindhum adhanaalē

கரிய குழல் மாதர் தங்கள் அடிசுவடு மார்புதைந்து
kariya kuzhal maadhar thangall adisuvadu maarbudhaindu

கவலை பெரிது ஆகி நொந்து மிக வாடி
kavalai peridhu aagi nondhu migavaadi

அரகர சிவாயவென்று தினமும் நினையாமல் நின்று
Arakara Sivaayavendrru thinamum ninaiyaamal nindruu

அறுசமய நீதி ஒன்றும் அறியாமல்
arrusamaya needhi ondrum arriyaamal

அசனம் இடுவார்கள் தங்கள் மனைகள் தலைவாசல்நின்று
asanam iduvaargall thangall manaigall thalaivaasalnindrru

அனுதினமு(ம்) நாணம் இன்றி அழிவேனோ?
anudhinamum naannam indrri azhivēnō?

உரக படமேல் வளர்ந்த பெரிய பெருமாள் அரங்கர்
uraga padamēl vallarndha periya perumaall Arangar

உலகளவு மால் மகிழ்ந்த மருகோனே!
ulagallavu Maal magizhndha marugonē!

உபயகுல தீப துங்க விருது கவிராச சிங்க
ubhayakula dheepa thunga virudhu kaviraasa singa

உறை புகலியூரில் அன்று வருவோனே!
urrai Pugaliyuril andrru varuvonē!

பரவை மனைமீதில் அன்று ஒரு பொழுது தூது சென்ற
Paravai manaimeedhill andrru oru pozhudhu thūthu sendra

பரமன் அருளால் வளர்ந்த குமரேசா!
Paraman arulaal vallarndha Kumarēsaa!

பகை அசுரர் சேனை கொன்று அமரர் சிறை மீள வென்று
pagai asurar sēnai kondrru amarar sirrai meela vendru

பழனிமலை மீதில் நின்ற பெருமாளே!
Pazhanimalai mēdhil nindrra perumaallē!

கருவில் விழுந்து, உருவெடுத்துப் பிறந்து, ஒவ்வொரு வயதாக வளர்ந்தேன்;

கலைகள் பலவற்றையும் கற்று அறிந்தேன்;

கரிய கூந்தலையுடைய பெண்களின் (காதல் மயக்கத்தால் அவர்களுடைய) கால் சுவடுகளை என் மார்பில் புதைத்துக் கொண்டேன்;

கவலைகள் அதிகம் ஆயின; அதனால் வருந்தினேன்; மிகவும் வாடினேன்.

அரகர, சிவாய என்று நாள்தோறும் நினைக்கவில்லை;

ஆறு வகையான சமயங்கள் கூறும் கோட்பாடுகளை ஒன்றும் அறிந்து கொள்ளவில்லை.

உணவு இடுபவர்கள் வீட்டின் வாசலில் நாள்தோறும் நிற்பேன்–

இங்ஙனம் நான் வெட்கம் இல்லாமல் அழியலாமோ?

படம் உடைய பாம்பின் மேல் படுத்து இருப்பவர்–

பெரிய பெருமாள் ஆகிய திருவரங்கர்–

உலகத்தை அளந்தவர் ஆகிய திருமாலின் மருமகனே!

தாய்தந்தை ஆகிய இருவர் மரபுகளிலும் விளக்கைப் போன்றவனே!

உயர்ந்தவனே!

கொடிகட்டிய கவியரசர்களில் சிங்கம் போன்றவனே!

சீர்காழியில் அன்று (சம்பந்தராக) வந்தவனே!

சுந்தரருக்காகப் பரவையாரின் வீட்டுக்கு ஒருநாள் தூதாகச் சென்றார் சிவபெருமான்—

அச்சிவபெருமானின் அருளால் வளர்ந்த குமரேசனே!

பகைவர்கள் ஆகிய அரக்கர் சேனையைக் கொன்று தேவர்களைச் சிறையினின்று மீட்டவனே!

பழநி மலையின் மேல் இருக்கும் இறைவனே!

## Bless me with flourishing life

Conceived in the womb, taking form and being born, growing year by year, I learnt all arts and sciences. (Enamoured of) the black tresses of damsels, I got impressed on my chest their foot prints.

My responsibilities increased; I suffered and pined away;

I never chanted "Hara Hara" and " Sivaaya";

I never learnt the fundamental tenets of the six religious systems;

I stood always at the door way of those who offer food as alms.

Shall I still remain so shameless and be destroyed?

Periaperumal resting on the hooded snake at Sri Rangam-

It was He who scaled the world-

He is Tirumaal and You are his nephew.

Oh light of the houses of both father and mother!

Oh Lord of high status!

Oh lion among the king of poets who raised the banner of learning!

Oh Lord who was born at Sirkazhi (as Gnaanasambandar!)

For the sake of Sundarar, to appease the wrath of Paraivaiyaar,

Lord Siva went as an envoy to her house once;

Oh Kumresa who grew up by the grace of such Lord!

Oh Lord who set free from prison the celestials after destroying the army of the inimical giants!

Oh Lord residing on the Pazhani Hills!

**(40)**

*சுவாமி மலையில் இருக்கும் முருகனே!*
*உன்திருவடியை அரை நிமிஷம்கூட வணங்காமல் இருக்கிறேன்!*
*நான் தனியன் ஆக இருக்கிறேன்;*
*பாவங்கள் செய்ததால் பிறவி எடுத்து இருக்கிறேன்;*
*எனக்குக் கருணை செய்க!*
*நான் பெருவாழ்வு வாழ அருள் செய்க.*
*சிவஞானத்தை அருள் புரிக.*
*சகல சௌக்கியங்களும் தருவாயாக!*

## தமிழின் தெய்வீக ஆற்றல்

*சரண கமலாலயத்தை அரை நிமிஷ நேர(ம்) மட்டில்*
Saranna kamalaalayaththai arai nimisha nēram mattil

*தவ முறைத் தியானம் வைக்க அறியாத*
thava murraith thiyaanam vaikka arriyaadha

*சட(ன்) கசட(ன்) மூட(ன்) மட்டி பவ வினையிலேசனித்த*
sadan kasadan mūdan matti bava vinaiyilē saniththa

*தமியன் மிடியால் மயக்கம் உறுவேனோ?*
thamiyan midiyaal mayakkam urruvēnō?

*கருணை புரியாதிருப்பது என்னகுறை?இவ்வேளை செப்பு!*
karunnai puriyaadhiruppadhu ennakurrai? ivvēllai seppu!

*கயிலைமலை நாதர் பெற்ற குமரோனே!*
Kayilaimalai naadhar pettra Kumarōnē!

*கடக புயமீது ரத்னமணி அணி பொன்மாலை செச்சை*
kadaga puyameedhu rathnamanni anni ponmaalai sechcha

*கமழும் மணமார் கடப்பம் அணிவோனே!*
kamazhum mannamaar kadappam annivōnē!

*தருணம் இது ஐயா! மிகுத்த கனமது நீள் சவுக்ய*
tharunnam idhu Aiyya! miguththa kanamadhu neel savukya

| | | | | |
|---|---|---|---|---|
| சகல<br>sakala | செல்வ<br>selva | யோகம்<br>yogam | மிக்க<br>mikka | பெருவாழ்வு<br>peruvaazhvu |

| | | | | |
|---|---|---|---|---|
| தகைமை<br>thagaimai | சிவஞானம்<br>Sivagnaanam | முத்திப்<br>muththip | பரகதியும்<br>paragadhiyum | நீ<br>nee |
| | | | | கொடுத்து<br>koduththu |

| | | |
|---|---|---|
| உதவிபுரிய<br>udavipuriya | வேணும்<br>vennum | நெய்த்த வடிவேலா!<br>neiththa vadivelaa? |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அருணதள<br>arunnadhala | பாத<br>paadha | பத்மம்<br>pathmam | அது<br>adhu | நிதமுமே<br>nidhamume | துதிக்க<br>thudhikka |

| | | | | |
|---|---|---|---|---|
| அரிய<br>ariya | தமிழ்<br>Thamiz | தான்<br>thaan | அளித்த<br>allitha | மயில்வீரா!<br>mayilveeraa! |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அதிசயம்<br>adhisayam | அநேகம்<br>anegam | உற்ற<br>uttra | பழநி<br>Pazhani | மலை<br>malai | மீது<br>meedhu | உதித்த<br>udhiththa |

| | | |
|---|---|---|
| அழக!<br>Azhaga! | திருவேரகத்தின்<br>Thiruveragaththin | முருகோனே!<br>Murugone! |

உன் திருவடிகள் ஆகிய கோயிலை அரை நிமிஷ நேரமும் தவம் செய்யும் முறையில் தியானம் செய்யத் தெரியாமல் இருக்கிறேன்.

நான் உயிர் இல்லாத பொருள்; அறிவு இல்லாதவன்; மூடன்; மந்த புத்தி உடையவன்;

தீவினை செய்து பிறந்தவன்; தனியே இருப்பவன்; ஏழை—இவற்றால் நான் கலக்கம் அடைவேனா?

எனக்கு நீ கருணை புரியாமல் இருக்கிறாய்! என்ன குறை என்னிடம் இருக்கிறது? இப்பொழுது சொல்.

கயிலை மலையில் உள்ள தலைவர் ஆகிய சிவபெருமான் பெற்ற குமாரனே!

கடகம் அணிந்த புயங்கள்; ரத்தினம் பதித்த பொன்மாலை;

வெட்சிமாலை—நறுமணம் வீசும் கடம்பமலர் மாலை—இவற்றை அணிந்திருப்பவனே !

ஐயா! எனக்கு (அருள் செய்ய) இது நல்ல சமயம்!

அதிகமான பெருமை, நிலையான சுகம், எல்லாச் செல்வங்கள், யோகம், மிகச்சிறந்த வாழ்வு, சிறப்பு, சிவஞானம், முத்தியாகிய பரகதி— ஆகிய இவற்றைக் கொடுத்து உதவி செய்ய வேண்டும்.

நெய் பூசிய வடித்த வேலை உடையவனே!

ஒளி பொருந்திய தாமரை மலர் போன்ற உன் திருவடிகளை நாள்தோறும் துதிக்க அருமையான தமிழை நீ எனக்கு அளித்தாய்.

மயில் மேல் உள்ள வீரனே!

அதிசயம் பல உடையது பழநிமலை–

அப்பழநி மலையின் மேல் உள்ள அழகனே!

திருவேரகம் எனும் சுவாமி–மலையில் இருக்கும் முருகப் பெருமானே!

## Divine power of Tamil

Your lotus like Feet is a temple!

I don't spend even half a minute in penance and I am incapable to concentrate on it.

I am inanimate; ignoramous; an idiot and a dullard;

I was born singly on account of evil deeds;

Because of poverty, may I remain confused?

Why have you not bestowed grace?

What drawback do I have? please tell it now.

Oh Kumara, born of the Lord of Mt. Kailas!

Oh Lord, decked with shoulder knots, gems of gold chains and wearer of garland of Vetchi and fragrant Kadamba flowers!

This is the opportune moment, Oh Lord!

Abundant wealth-everlasting comfort-all kinds of riches-

luck-prosperous life-high status-Siva gnaana-salvation and beatitude-these please do grant and help me.

Oh Lord with greasy spear!

To worship your pinkish petalled lotus Feet daily,

you granted me remarkably good TAMIL.

Oh Hero mounted on a peacock!

You were born, Oh! beauteous One in Palani Hill which contains many miracles.

Oh Muruga, residing at Tiru Earagam (Swamimalai).

## *(41)*

எம் பெருமானே!
நான் பிறந்தேன்; இறப்பேன்;
நான் உன்னை அழைப்பேன்; உன்னைத் துதிப்பேன்;
நான் மனைவி மக்களோடு சுகிக்கிறேன்!
–இவை எல்லாம் என் செயல் அல்ல!
எல்லாம் உன்னுடைய திருவருளே!
ஆண்டவனே! அருள் செய்க!

### என்னால் ஆவது எதுவும் இல்லை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| என்னால் Ennaal | பிறக்கவும் pirrakkavum | என்னால் ennaal | | இறக்கவும் irrakkavum | |
| என்னால் ennaal | துதிக்கவும் thuthikkavum | கண்களாலே kanngalalē | | | |
| என்னால் ennaal | அழைக்கவும் azhaikkavum | என்னால் ennaal | | நடக்கவும் nadakkavum | |
| என்னால் ennaal | இருக்கவும் irukkavum | பெண்டிர் penndir | | வீடு veedu | |
| என்னால் ennaal | சுகிக்கவும் sugikkavum | என்னால் ennaal | | முகிக்கவும் mugikkavum | |
| என்னால் ennaal | சலிக்கவும் salikkavum | தொந்தநோயை thondhanōyai | | | |
| என்னால் ennaal | எரிக்கவும் errikkavum | என்னால் ennaal | | நினைக்கவும் ninaikkvum | |
| என்னால் ennaal | தரிக்கவும் tharikkavum | இங்கு ingu | நானார்? naanaar? | | |
| கன்னார் kannaar | உரித்த uriththa | என் en | மன்னா? mannaa! | எனக்கு enakku | நல் nal |

| | | | | |
|---|---|---|---|---|
| கர்ணாமிர்தப் karnnaamirdhap | | பதம் padham | தந்த thandha | கோவே! kōvē! |
| கல்லார் kallaar | மனத்துடன் manaththudan | இல்லா illaa | மனத்துவ! manaththava! | |
| கண்ணாடி kannnaadi | யிற்றடங்கண்ட yitrradangkannda | | வேலா! Vēlaa! | |
| மன்னான mannaana | தக்கனை Thakkanai | முன்னாள் munnaall | | முடித்தலை muditthalai |
| வன்வாளியிற் vanvaalliyirr | | கொளும் kollum | தங்கரூபன் thangaruupan | |
| மன்னா! mannaa! | குறத்தியின் kurraththiyin | மன்னா mannaa! | | வயற்பத்தி vayarrpathithi |
| மன்னா! mannaa! | மூவர்க்கொரு mūvarkkoru | தம்பிரானே! thambiraanē! | | |

(நான் விரும்பியவாறு) பிறக்கவும், சாகவும் (முடியாது); துதிக்கவும், கண்களால் (உன்னைக் காணவும் முடியாது); (உன்னை) அழைக்கவும், (கால்களால்) நடக்கவும் (முடியாது); (விரும்பிய இடத்தில்) இருக்கவும் (முடியாது); பெண்களோடு மனைவாழ்க்கையை இன்பமாக நடத்தவும், அதில் சலிப்புக் கொள்ளவும் (முடியாது);

இடையீடு இல்லாமல் வருகிற வினை ஆகிய நோயை எரித்து அழிக்கவும், அவ்வாறு செய்ய நினைக்கவும், அவ்வினைகளைத் தாங்கவும் (முடியாது);

—இவற்றை எல்லாம் செய்ய நான் யார்?

கல்லில் இருந்து நாரை உரித்த அரசனே!

காதில் (கேட்பதற்கு) அமுதம் போன்று இருக்கும் (உன் திருப் பெயர் ஆகிய) மந்திரத்தை அருளிய அரசனே!

உன் பெருமையை அறியாதவர் மனத்தில் இருக்காதவனே!

கண்ணாடி போன்ற பக்கங்களை உடைய வேலை ஏந்தியவனே!

முன்னொரு காலத்தில் தக்கன் என்னும் அரசனது கிரீடம் பொருந்திய தலையை வலிமை பொருந்திய அம்பால் அறுத்த தங்கவடிவம் ஆனவனே!

அரசனே! குறமகள் ஆகிய வள்ளியின் கணவனே!

வயலூர் அரசனே! மூவர்க்கும் தலைவனே!

## Nothing can I do of my own accord

(To my liking I cannot) take birth or die; worship you or (see you) by my eyes; (nor can I ) call you or walk or sit (as I like); (I cannot ) enjoy life with damsels or live in a house (as I like), (nor can I) detest anything; (I cannot) burn the perpetual paasas, (nor even think of doing so); (Lo! I cannot) withstand them- (To confront these) who am I?

Oh Lord who peeled the stone!

Oh King who gave me the mantra which is ambrosia to the ear!

Oh Lord who does not dwell in the hearts of the unlearned!

Oh holder of a spear having mirror like sides!

You have once beheaded Thaksha by your strong arrow;

Oh Lord of golden Form!
Oh King of Valli born of kurava clan!
Oh King of Vayalur!
Oh Lord of the Trio, Brahma Vishnu & Rudra!"

### (42)

யாராலும் காண முடியாத கடவுளே!

தவம் செய்வதற்கு அருள் செய்வாய்!

உன்னை நினைத்து ஜெபம் செய்யவும் அருள்வாயாக!

என் மனம் கனியுமாறு அருள்க!

உன் திருவடியை வணங்குகிறேன்!

## தவம் ஜபம் வேண்டும்

| | | | |
|---|---|---|---|
| அவசியம் Avasiyam | முன் mun | வேண்டிப் vēnndip | பலகாலும் palakaalum |
| அறிவின் arrivin | உணர்ந்து unnarndu | ஆண்டுக்(கு) aanndukku | ஒரு நாளில் oru naallil |
| தவ thava | ஜெபமும் jepamum | தீண்டிக் கனிவாகிச் theenndik kanivaagich | |
| சரணமதும் charannamadhum | | பூண்டற்கு poonndarrku | அருள்வாயே! arullvaayē! |
| சவதமொடும் savathamodum | | தாண்டித் தகர் thaanndith thagar | ஊர்வாய்! oorvaay! |
| சடு sadu | சமயம் samayam | காண்டற்கு kaanndarrkku | அரியானே! ariyaanē! |
| சிவ Siva | குமரன் Kumaran | பீண்டிற் peenndir | பெயரானே! peyaraanē! |
| திரு Thiru | முருகன் Murugan | பூண்டிப் poonndip | பெருமாளே! perumaallē! |

அவசியம் என்று முன்னே கேட்டுக் கொண்டேன்; பல தடவையும் கேட்டுக் கொண்டேன்; அறிவால் உணர்ந்தேன்; (எதை எனில்) ஆண்டுக்கு ஒரு நாளேனும் தவம் பூண்டு ஜபம் செய்ய வேண்டும்; மனம் கனிந்து உன் திருவடிகளை என் தலையில் சூடிக்கொள்ள வேண்டும்–இவற்றை அருள் செய்வாயாக.

'இதை அடக்குவேன்' என்று சபதம் செய்து, குதித்துச் செல்லும் ஆட்டுக்கிடாயை (அடக்கி) ஊர்பவனே! ஆறு சமயங்களும் காண்பதற்கு அரியவனே! சிவனுக்கு மகனே! திருமுருகன் பூண்டியில் இருக்கும் சிவபெருமானே!

### Penance and Meditation a necessity

It is necessary; I requested even before, many a time; I perceived. Atleast once a year bless me with penance and meditation'-(this I asked) I should melt; please bless me to hold Your Feet!

You vowed and jumping, you (controlled ) a goat and rode on it. oh lord who cannot be seen even by the six religions! Oh son of Siva! Oh lord residing at Tirumurugan punndi!

## (43)

பழநி ஆண்டவனே!

உன்னை விடாமல் புகழ்ந்து பாட வேணும்

உன்னை மறக்காமல் இருக்க வேணும்

உன் மந்திரம் ஆகிய சரவணபவ என்பதை

எப்பொழுதும் ஜபம் செய்யவேணும்

தலைவனே! இம்மை மறுமைகளில் சௌபாக்யம்

நீ எங்களுக்கு அருள் செய்வாயாக.

### ஆறெழுத்து மந்திரப் பெருமை

| | | | | |
|---|---|---|---|---|
| வசனம் Vachanam | மிக miga | ஏற்றி etri | மறவாதே marravaadhē | |
| மனது manadhu | துயர் thuyar | ஆற்றில் aatrril | உழலாதே uzhalaadhē | |
| இசை isai | பயில் payil | சடாக்ஷரம் Sadaaksharam | | அதாலே adhaalē |
| இக iga | பர para | சௌபாக்கியம் sowbhaagyam | | அருள்வாயே! arullvaayē! |
| பசு pasu | பதி pathi | சி(வ) Siva | வாக்யம் vaakyam | உணர்வோனே! unarvonē! |
| பழநி Pazhani | மலை malai | வீற்று veetrru | அருளும் arullum | வேலா! Vēlaa |
| அசுரர் asurar | கிளை killai | வாட்டி vaatti | மிக miga | வாழ vaazha |
| அமரர் amarar | சிறைமீட்ட sirraimeetta | பெருமாளே! Perumaalē! | | |

புகழ் மொழிகளால் உன்னை உயர்த்திப் புகழ்ந்து மறவாதிருக்க வேண்டும்;

என் மனம் துயரம் ஆகிய ஆற்றில் விழாது இருக்க வேண்டும்;

இசையோடு பொருந்திய 'ஆறெழுத்து' மந்திரத்தாலே எனக்கு இம்மை மறுமைகளில் எல்லா நலன்களும் அருள்வாயாக!

பசுபதி எனப்படும் சிவமந்திரத்தை அறிந்தவனே!

பழநி மலையில் இருந்து அருள் செய்யும் வேலவனே!

அசுரர் சுற்றத்தை அழித்து, தேவர்கள் வாழ்வு பெறச் சிறையிலிருந்து மீட்ட இறைவனே!

## The greatness of the Six Lettered Mantra

By appropriate words of praise, I worship You; and I should not forget You;

My mind should not be immersed in the river of sorrow;

I should chant in music the mystic six Lettered Mantra: **Sa Ra Va Na Bha Va.**

And by that please do bless me with (all sorts of) comforts.

Oh Lord, the perceiver of the meaning of the word of Siva, viz Pasupathi!

O Velan who bestows grace seated on the Pazhani Hill!

You have destroyed the giants with their kith and kin;

O lord who released the celestials from prison!

### *(44)*

இறைவன் எல்லாமாய் இருக்கிறான் என்றால் எல்லா உயிர்களிடத்தும் இருக்கிறான் என்பது பொருள். திருவையாற்றில் திருநாவுக்கரசர் களிறும் பிடியும் வருவதைக் கண்டார்; சிவனும் உமையும் வருவதாகவே கொண்டார்; எல்லா உயிர் இனங்களையும் சிவமாகவும் சக்தியாகவும் கண்டார், அதனால்தான் உயிர் வகைகளையும் இறைவனோடு தொடர்பு படுத்தினார்கள் நம் முன்னோர், எருது சிவபெருமானுடைய வாகனம்; ஆடு முருகப் பெருமானுக்கு உரியது; கருடன் திருமாலுக்கு; தாமரையில் இலக்குமி வீற்றிருக்கிறாள்; இப்படித் தெய்வத்தோடு தொடர்பு படுத்தாத உயிரினம் இல்லை. ஆகவேதான் எல்லா உயிர் இனங்களும் இறைவன் படைப்பு என்று அவற்றை நேசிக்கவேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| விழிக்குத்துணை<br>Vizhikkuththunnai | திருமென்<br>thirumen | மலர்ப்பாதங்கள்<br>malarppaadanggall | மெய்ம்மைகுன்றா<br>meymmikunrraa |
| மொழிக்குத்துணை<br>Mozhikkuththunnai | முருகா<br>Murugaa | எனும்<br>enum | நாமங்கள்<br>naamangall | முன்புசெய்த<br>munbuseydha |
| பழிக்குத்துணை<br>Pazhikkuththunnai | அவன்<br>avan | பன்னிருதோளும்<br>panniruthollum | பயந்ததனி<br>bayandhathani |
| வழிக்குத்துணை<br>Vazhikkuththunnai | வடிவேலும்<br>Vadivelum | செங்கோடன்<br>Sengkodan | மயூரமுமே<br>mayuuramume |

கண்களுக்குத்துணையாக இருப்பவை, அவனுடைய அழகிய மென்மையான திருவடிகள்.

உண்மைத் தன்மை குறையாத பேச்சுக்குத் துணை ஆக இருப்பது, முருகா என்று சொல்லும் திருப்பெயரே ஆகும்.

முன் பிறவிகளில் நாம் செய்த வினைகள் தாக்காமல் இருப்பதற்குத் துணையாக இருப்பவை, அவனுடைய பன்னிரண்டு புயங்களும் ஆகும்.

பயந்து செல்லும் தனி வழியிலே துணையாக இருப்பவை, திருச்செங்கோட்டில் உள்ள முருகனது வடித்த வேலும் மயிலும் ஆகும்.

The helpmate to our eyes are His soft flower like Feet.

For speech full of truth, the helpmate is His name "Muruga".

To be free from the sins done in previous births, the helpmates are His twelve shoulders.

When going in the way fearing, the javelin and the peacock of the Lord at Thiruchchengodu are the helpmates.

## (45)

அன்பு என்னும் பண்பு எல்லாரிடத்திலும் அமைய வேண்டும். இயற்கையாகத் தாயினிடத்தில் அன்புகாட்டு வோம்; தம்பி தங்கைகளிடத்து அன்பு காட்டுவோம்; பிறகு மனைவியினிடத்தில் அன்பு; பின்னர் அவள் பெற்றெடுக்கும்

குழந்தைகளிடத்தில்; இப்படி அன்பு காட்டுவது ஒருவர் இடத்தி லிருந்து பிறர் ஒருவரிடத்தில் மாறிச் செல்லும் பொழுது அந்த அன்பின் நிலையும் தரமும் மாறிக்கொண்டே போகிறது. ஆனால் மாறாதவாறு, ஒருபடித்தாக இன்னும் சொல்லப் போனால் அதிகரித்துக்கொண்டே இருக்கும் அன்பு உண்டு. அது எல்லையில்லாத கருணை நல்கும் இறைவன் இடத்துக் காட்டும் அன்பே ஆகும். அவ்வன்பு வற்றாத ஊற்றுப் போன்றது. அன்பு காட்டக் காட்ட முருகிவளர்வது; எல்லை யில்லாதது; அழியாத இன்பத்துக்கு வித்து ஆவது. ஆகவே இறைவனிடத்தே அன்பு செலுத்துவது அவசியம் ஆகும்.

தெய்வத் திருமலைச் செங்கோட்டில் வாழும் செழும்சுடரே
Deayvath thirumalaich Chenggōttil vaazhum sezhumsudare

வைவைத்த வேற்படை வானவனே மறவேன் உனைநாள
Vaivaiththa vērrapadai vaanavanē marravēn unainaan

ஐவர்க்கு இடம்பெறக் கால் இரண்டு ஒட்டி அதில் இரண்டு
Aivarkku idamperrak kaal iranndu otti adhil iranndu

கைவைத்த வீடு குலையுமுன்னே வந்து காத்தருளே
Kaivaiththa veedu kulaiyumunnē vandhu kaaththarullē.

திருச்செங்கோடு என்பது தெய்வத்தன்மை பொருந்திய மலை ஆகும். அம்மலையில் கோயில்கொண்டு இருக்கும் சுடர் போன்றவனே! கூர்மையான வேற்படையுடையவனே! வானவர் உலகத்து இருப்பவனே! நான் உன்னை மறக்க மாட்டேன்.

மெய் வாய் கண் மூக்குச் செவி என்ற ஐம்பொறிகளுக் கும் இடம் தந்தது-இரண்டு கால்களை உடையது - இரண்டு கைகளை உடையது - இந்த உடம்பு; இந்த உடம்பாகிய வீடு அழிவதற்கு முன்பு நீ வந்து காத்தருள்வாயாக.

Oh effulgent light residing at the celestial hill Thirucchengodu!

Oh Lord residing in the heavens having sharp weapon, the javelin! Never will I forget Thee.

The abode of the five elements is the body. It has two legs and two hands.

Before this house viz the body becomes dwindled, Oh Lord! please do come and protect me.

## (46)

ஒருவர்க்கு மனம் ஒன்று நினைக்கும்; வாய் ஒன்று சொல்லும்; கை ஒன்று செய்யும், கண் வேறொன்றை நோக்கும். ஒன்று செய்வதை மற்றொன்று பின்பற்றாமல் மாறுபட்டு இருக்கும். இதைத்தான் மனம்போன போக்கு என்பர். இப்படி மனம் அலையக்கூடாது. மனம் ஒருவழிப் பட்டிருக்க வேண்டும். அப்போது தான் பிற அங்கங்களும் செவ்வனே இயங்கும். ஆகவே மனத்தை அலையவிடாமல் ஒருவழிப்படுத்துவதற்குச் சிறந்த முறை தியானம் ஆகும். அங்ஙனம் சித்தத்தை ஒருவழிப்படுத்திச் சிவன்பாலே வைத்தால் அளவற்ற பயன் கிடைக்கும்.

*சேந்தனைக்கந்தனைச்செங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர்வேல்*
Sēndanaik KandhanaiSenggōttu verrpanaich segnchudarvēl

*வேந்தனைச் செந்தமிழ்நூல் விரித்தோனை விளங்குவள்ளி*
Vēndanaich senthamizhnuul viriththōnai villanggu Valli

*காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில்வாகனனைச்*
Kaanthanaik Kandhak kadambanaik kaarmayil vaagananaich

*சாந்துணைப்போதும் மறவாதவர்க்கு ஒரு தாழ்வில்லையே*
Saandhunnaippōdhum marravaadhavarkku oru thaazhvillaiyē

அவன் சேந்தன்; அவன்தான் கந்தன்; அவன் திருச்செங்கோடு என்ற மலையில் வாழ்பவன்; சிவந்த ஒளி பொருந்திய வேலை ஏந்திய வேந்தன்; செந்தமிழ் நூல்களை விரிவு படுத்தியவன்; சிறந்த வள்ளியம்மையார்க்குக் கணவன்; கந்தக் கடம்பன்; மயிலை வாகனமாக உடையவன்; (இத்தகைய முருகனை) சாகின்ற காலத்திலேயாவது மறக்காமல் இருந்தால் அவர்களுக்கு எந்தத் தீங்கும் இல்லை.

He is Sendhan; He is Skanthan;

He resides at the Hill Thirucchengodu;

He is the royal One having an effulgent javelin;

He expounded (the ecclesiastical) works in (classical and Literary) Tamil;

He is the husband of Valli; the great;

He is Skantha (wearing the garland of) Kadamba flower;

He is the rider of the Peacock:

Him if one should (never forgetting) think of, at least at the time of death, to them nothing untoward will happen.

## (47)

ஆசை என்பது ஒரு குரங்கு. அதன் குறும்புக்கு அளவு கிடையாது; ஒரு வேளை உணவு இருப்பின் இரண்டு வேளை களுக்கு வேண்டும் என்று தோன்றும்; இருவேளைக்குக் கிடைப்பின் காலை மாலை சிற்றுண்டிகளைக் கேட்கும்; வாய் உணவு திருப்தி அடைந்ததாக வைத்துக்கொள்வோம்; கண்க ளுக்குக் காட்சி உணர்வு வளரும். அதுவும் நிறைவுறுவதாக வைத்துக் கொள்வோம்; காதுக்கு இனிய இசையில் விருப்பம் செல்லும்; இப்படித் தேவைகள் தாம் அதிகம் ஆகுமே ஒழிய ஆசைக்கு அளவுகிடையாது. அதனால் தான் செல்வம் என்பது சிந்தையின் நிறைவே என்றார் குமரகுருபர முனிவர். இருப்பதைக் கொண்டு மனநிறைவு உடையவராக இருக்கப் பழகினால் போட்டியும் இல்லை; பொறாமையும் இல்லை; எல்லாருடன் இன்பமாகப் பழகவும் முடியும்; சகோதரத்தும் ஓங்கும்; இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை.

தோலால் சுவர்வைத்து நாலாறு காலில் சுமத்தி இரு
tholaal suvarvaiththu naalaarru kaalil sumaththi iru

காலால் எழுப்பி வளைமுது கோட்டிக் கைந்நாற்றி நரம்
Kaalaal ezhuppi vallaimudhu kōttik kainnaatri naram

பாலார்க்கை யிட்டுத் தசை கொண்டு மேய்ந்த அகம்பிரிந்தால்
Paalaarkkai yittuth thasai konndu mēynda agampirindhaal

வேலால் கிரி துளைத்தோன் இருதாள் அன்றி வேறில்லையே.
Velaal Giri thullaihthōn iruthaall anrri vērrillaiyē

இந்த உடம்பு ஆகிய வீடு தோலால் ஆகிய சுவர் வைக்கப் பட்டது; இதை இருபத்து நான்கு எலும்புகள் சுமக்கின்றன; இரண்டு கால்கள் எழுப்பியிருக்கிறது; வளைந்த முதுகு உடையது; இரண்டு கைகள் தொங்கிக் கொண்டிருக்கின்றன;

நரம்புகளால் பின்னி இருக்கிறது; தசையால் மூடப்பட்டிருக் கிறது; இத்தகைய வீடு இது. இந்த வீட்டை விட்டு (உயிர்) பிரிந்தால் வேலால் (கிரௌஞ்ச) மலையைத் துளைத்த முருகப் பெருமானுடைய இரண்டு திருவடிகளைத் தவிர்த்து வேறு அடைக்கலம் இல்லை.

The body is built of skin-walls;
It rests on twenty four bones!
Two legs are erected;

It has a curved back;
Two hands are swinging;
It has been spinned by the nerves;

If the soul should leave such a fleshy body, we have no other refuge than the Feet of the Lord who pierced ' Kraunch Hill by His javelin.

## *(48)*

தனிமரம் தோப்பு ஆகாது. ஒரேமாதிரியான பல மரங்கள் இருந்தால் அது ஒருவகைத் தோப்பு; பலவிதமான மரங்கள் ஒருங்கு இருந்தால் அது இன்னொருவகைத் தோப்பு; இது பலவகையான் அமைந்த தோப்பு. ஒரு நிறம் பொருந்திய ஆடை உண்டு பல நிறங்கள் கலந்த ஆடையுமுண்டு; இவ்விருவகை ஆடைகளும் அழகு உடையனவே. இங்ஙனமே இருக்கிறது உலகமும்; ஒருமொழிபேசும் மக்கள்; பலமொழி பேசும் மக்கள்; இவர்களில் யாவரும் பலமரங்கள் உடைய தோப்புக்கு ஒப்பு. உலகம் இத்தகையதே. உலகம் பல நிறங்களையுடைய ஆடைபோன்றதாகவும் உள்ளது. ஆகவே பல வேறுபாடுகளில் ஒருமைப்பாடு காண்பதே அறிவுடைமை ஆகும். ஆகவே நிறம் மொழி இனம் முதலியவற்றால் வேறுபாடு கற்பிக்காமல், ஒருங்கு வாழ முயற்சிப்பதே மேலானது.

| | | | |
|---|---|---|---|
| காவிக்கமலக் | கழலுடன் | சேர்த்துஎனைக் | காத்தருள்வாய் |
| Kaavikkamalak | kazhaludan | sērththuenaik | kaaththarullvaay |
| தூவிக்குலமயில் | வாகனனே | துணையேதும் | இன்றித் |
| Thuvikkulamayil | vaaganané | thunnaiyēdhum | inrrith |

தாவிப்படரக் கொழுகொம்பிலாத் தனிக் கொடிபோல்
Thaavippadarak kozhukombilaath thanik kodipōl

பாவித் தனிமனம் தள்ளாடி வாடிப் பதைக்கின்றதே.
Paavith thanimanam thallllaadi vaadip padhaikkinradhē

சிவந்த தாமரை மலர் போன்றது, வீரக்கழல் அணிந்துள்ளது, உன் திருவடி. அதில் என்னைச் சேர்த்துக் கொண்டு காப்பாற்றுவாயாக! அழகிய இறகுகளுடைய மயிலை வாகனமாக உடையவனே! துணை இல்லாதது – தாவிப் படருவதற்குக் கொழு கொம்பு இல்லாத தனிக் கொடிபோன்றது பாவம்பொருந்தியது – தனிப்பட்டது – இத்தகைய என் மனம் தள்ளாடுகிறது; வாடுகிறது; பதைக்கின்றது.

You anklet Feet is like red lotus;
Please absorb me in Your Feet and protect me.
Oh rider of peacock with beautiful feathers!

Having none as companion-like a forlorn creeper which has nothing to hold to and creep-having sinned - a forsaken one - such a mind of mine is wavering, withering and trembling.

# தாயுமான சுவாமிகள் பாடல்

## . THAAYUMAANA SWAMIGAL PAADAL

## (49)

பொருளைச் சம்பாதிப்பது நல்லது; நம்மைச் சார்ந்து இருப்பவரை வாழவைக்கவே பொருளை ஈட்டுகிறோம்; திரைகடல் ஓடியும் திரவியம் தேடுகிறோம். ஈட்டிய பொருளில் ஒரு சிறிது சேமிக்கச் சிலரால் தான் முடிகிறது. சிலர் ஈட்டியதை எல்லாம் செலவு செய்துவிட்டுக்கிடப்பர்; சிலர் வரவுக்குமேல் செலவு செய்து கடன்படுவர்; கடன்பட்டபிறகு திருப்பிக் கொடுக்க முடியாமல் அல்லல் உறுவர். கடன் கொடுத்தவனைக் கண்டபோது மறைவர்; அகப்பட்டுக்கொண் டால் பொய் பேசுவர்; இன்னொருவரிடம் கடன்வாங்கிக் கொடுப்பர்; பிறர் பொருளை வாங்கி அடகு வைப்பர்; வட்டி கொடுக்க முடியாமல் திணருவர்; ஆகவே வரவுக்கு ஏற்பச் செலவு செய்து செட்டாகக் குடித்தனம் செய்யப் பழகுக. அதுவே மனமகிழ்ச்சி தரும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆசைக்கோர்<br>Assaikkōr | அளவில்லை<br>allavillai | அகிலமெல்லாம்<br>agilamellaam | | கட்டி<br>katti | |
| | ஆளினும்<br>aallinum | கடல்<br>kadal | மீதிலே<br>meedhilē | | |
| ஆணைசெலவே<br>Aannaiselavē | | நினைவர்<br>ninaivar | அளகேசன்<br>allagēsan | | நிகராக<br>nigaraaga |
| | அம்பொன்<br>ampon | மிக<br>miga | வைத்த<br>vaitha | பேரும்<br>perum | |
| நேசித்து<br>Nēsiththu | ரசவாத<br>rasavaadha | வித்தைக்கு<br>viththaikku | | அலைந்திடுவர்<br>alainthiduvar | |
| | நெடுநாள்<br>nedunaall | இருந்த<br>iruntha | பேரும்<br>pērum | | |
| நிலையாகவே<br>Nilalyaagavē | | இன்னும்<br>innum | காயகற்பந்தேடி<br>kaayakarrpanthēdi | | |
| | நெஞ்சு<br>negnchu | புண்ணாவர்<br>punnnaavar | | எல்லாம்<br>ellaam | |
| யோசிக்கும்<br>Yōsikkum | வேளையில்<br>vēllaiyil | பசிதீர<br>pasitheera | உண்பதும்<br>unnbadhum | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | உறங்குவது<br>urranguvadhu | மாக<br>maaga | முடியும்<br>mudiyum | | |
| உள்ளதே<br>Ullllade | போதும்<br>podhum | நான்<br>naan | நான்<br>naan | எனக்குளறியே<br>enakkullarriye | |
| | ஒன்றை<br>onrrai | விட்டு<br>vittu | ஒன்று<br>onrru | பற்றிப்<br>patrip | |
| பாசக்கடற்குளே<br>Pasakkadarrkulle | | வீழாமல்<br>veezhaamal | | மனதற்ற<br>manadhatra | |
| | பரிசுத்த<br>parisuththa | நிலையை<br>nilaiyai | அருள்வாய்<br>arullvaay | | |
| பார்க்கும்<br>Paarkkum | இடம்<br>idam | எங்கும்<br>enggum | ஒரு<br>oru | நீக்கமற<br>neekkamarra | நிறைகின்ற<br>nirraiginra |
| | பரிபூர<br>paripura | ணானந்தமே.<br>nnaananthame | | | |

ஆசைக்கு ஓர் அளவே கிடையாது; உலகமுழுவதும் ஒரு சேர ஆட்சி செய்தாலும் கடல்மீதும் தன்னுடைய ஆணையைச் செலுத்த வேண்டும் என்று நினைப்பார்கள்.

அளகாபுரிக்குத் தலைவன் ஆகிய குபேரனுக்குச் சமமான பொன் நிறைய வைத்து இருப்பவர்கள் உண்டு; அவர்களும் இன்னும் பணம்வேண்டும் என்று விரும்பி ரசவாதவித்தை* செய்ய அலைந்து திரிவார்கள்.

பல வருஷங்கள் உயிர் வாழ்ந்தவர்களும் நிலையாக வாழ வேண்டும் என்று நினைத்து அதற்காகக் காயகற்பம்** தேடி அலைந்து மனம் புண் ஆவர்.

இவற்றை எல்லாம் யோசித்துப்பார்த்தால் பசி அடங்குமாறு உண்பதும், பின் உறங்குவதும் ஆகவே முடிகிறது.

நமக்கு உள்ளதே போதுமானது.

எல்லாவற்றுக்கும் ஆசைப்பட்டுக்கொண்டு வாய்குழறி, மனம் ஆனது ஒன்றைவிட்டு ஒன்றுபற்றிப் பாசம் (பற்று) என்னும் கடலிலே வீழாதவாறு எனக்குப் பரிசுத்தமான நிலையைக் கொடுப்பாயாக.

---

* உலோகங்களை மாற்றும்படி செய்யும் வித்தை,

** காயகல்பம், உடம்பு நீடித்து இருப்பதங்கு உண்கிற மருந்து

பார்க்கும் இடங்களில் எல்லாம் சிறிது கூட நீங்காமல் எங்கும் நிறைந்து இருக்கிற முழுத்தன்மையுடைய மகிழ்ச்சி வடிவம் பொருந்தியவனே!

There is no limit for desires.

Although one should reign over the whole world, he would like to extend his sway over the seas.

Even though one is in possession of tons of gold like Kubera of Alagaapui. He would like to amass wealth by alchemy* and wander about.

Though one has out lived, hoping to live eternally, he would wander about to obtain Kaayakalpa** and undergo suffering.

If one should ponder over these, there is nothing, more than eating to suppress hunger and sleeping after that.

One should feel satisfaction with what he has.

Longing for any thing and everything, leaving one and catching another, I should not fall into the sea of desire. But I should attain the state of purity. Please grant this.

Wherever I see, You are present in fullness! Oh complete jubilant One!

## (50)

நமக்கு அறிவு இயற்கையாக அமைந்திருக்கிறது; அதைக் கல்வி கேள்விகளால் வளர்த்துக்கொள்கிறோம். அந்த அறிவை மக்கள் வளர்ச்சிக்குப் பயன்படுத்தியவன் பெரிய விஞ்ஞானி எனப்படுவான். ஆனால் அதை அழிவு வேலை களுக்குப் பயன்படுத்தினால் அவன் பெற்ற அறிவை என்ன வென்று கூறுவது? ஆகவே விஞ்ஞான அறிவை மக்களின் ஆக்கவேலைகளுக்காகப் பயன்படுத்த வேண்டும். இந்த உலகம் ஐவகைப் பூதங்களால் ஆனது. ஐம்பூதங்களையும் மனிதன் தன் அறிவால் ஆக்கவேலைககக்குப் பயன் படுத்தலாம். அவ்வாறு ஆக்கவேலைகளுக்குப் பயன் படுத்துதலே உண்மையான அறிவுடைமை ஆகும்.

---

* The art of transmuting the baser metals into gold.

** Medicine for strengthening the body and prolonging life.

ஐவகையெனும் பூதமாதியை வகுத்து அதனுள்
Aivagaiyenum buthamaadhiyai vaguththu adhanull

அசரசர பேதமான
asarasara bedhamaana

யாவையும் வகுத்து நல்அறிவையும் வகுத்துமறை
Yaavaiyum vaguththu nalarrivaiyum vaguththumarrai

யாதி நூலையும் வகுத்துச்
yaadhi nulaiyum vaguththuch

சைவமுதலா அளவில் சமயமும் வகுத்துமேற்
Saivamudalaa allavil samayamum vaguththumer

சமயங் கடந்த மோன
samayang kadantha mona

சமரசம் வகுத்தநீ உன்னைநான் அணுகவும்
Samarasam vaguththanee unnainaan annugavum

தண்ணருள் வகுக்க இலையோ
thannnnarull vagukka ilaiyo

பொய்வளரு நெஞ்சினர்கள் காணாத காட்சியே
Poyvallaru negnchinargall kaannaadha kaatchiye

பொய்யிலா மெய்யர் அறிவில்
poyyilaa meyyar arrivil

போத பரிபூரண அகண்டிதா காரமாய்ப்
Bodha paripuranna agannditthaa kaarmaayp

போக்கு வரவு அற்றபொருளே
pokku varavu atraporulle

தெய்வ மறை முடிவான பிரணவ ஸ்வரூபியே
Theyva marrai mudivaana pirannava svaruupiye

சித்தாந்த முத்தி முதலே
sidhthaantha muththi mudhale

சிரகிரி விளங்க வரு தக்ஷிணா மூர்த்தியே
Siragiri villangga varu thatchinna muurthiye

சின்மயானந்த குருவே.
sinmayaanandha guruve.

இறைவனே நீ நிலம் நீர் தீ காற்று ஆகிய ஐம்பூதங்களையும் படைத்தாய்; அவற்றுள் அசையும் பொருள் அசையாப் பொருள்களை அமைத்தாய்; நல்ல அறிவையும் அளித்தாய்; வேதங்கள் முதலிய நூல்களையும் அருளினாய்;

சைவம் முதலாய கணக்கில்லாச் சமய நெறிகளையும் அமைத்தாய்; சமயத்தையும் கடந்த மௌன சமரசம் வகுத்தாய்.

இவ்வாறு செய்த நீ, நான் உன்னை அணுகுவதற்கு உரிய கருணையை ஏற்படுத்தவில்லையோ?

பொய்யே வளரும் நெஞ்சை உடையவர்கள் காண முடியாதவனே!

பொய்யே இல்லாத மெய்யே உடையவர்களின் அறிவில் நிறைந்த அறிவாகவும், நீக்கம் அற நிற்கும் உருவத்துடனும் இருப்பவனே!

பிறத்தலும் இறத்தலும் இல்லாதவனே!

தெய்வத்தன்மை பொருந்திய வேதங்களின் முடிவாகிய, ஓம் எனும் மந்திரத்தின் உருவமாக விளங்குபவனே!

சித்தாந்த முத்திக்கு முதலாக இருப்பவனே!

சிராப்பள்ளியில் விளங்கும் படியான தக்ஷிணாமூர்த்திக் கடவுளே!

அறிவு மயமான ஆனந்த மயமான குருவே!

You created the elements the earth, air, water, fire and sky;

In them You created the movables and the immovable objects.

You gave wisdom;

You awarded the Vedas and the other scriptures;

You were pleased to create many or countless religious ways.

You have created above all Mauna-Samarasa (silence and equanimity).

Though all these are Your deeds, You had not created a way to make me approach Thee.

Oh Lord who cannot be perceived by those whose hearts are filled with untruth;

Oh Lord who stand as wisdom in the hearts of those filled with truth!

You also stand in them in a permanent Form;

You are devoid of birth & death!

Oh Lord having the form OM, the Pranava mantra which is godly and is the end of the Vedas!

Oh Lord the root of Bliss attained through Siddhantaa!

Oh south faced Lord residing in Siragiri!

Oh perceptor with wisdom and blissfulness!

## *(51)*

*கணக்கற்ற உயிர்கள் உண்டு; அவற்றுள் மானுடப் பிறவியெடுத்த உயிர்கள் சிறந்தவை; இத்தகைய சிறந்த பிறவி எடுத்து இருப்பினும் கூன் குருடு செவிடு முதலியகுறைகள் இன்றிப் பிறப்பது அரிது. அப்படிப் பிறந்தாலும் கல்வி அறிவு பெறுவது அரிது. நல்ல கல்வியறிவு பெற்றாலும், உலகியல் கல்வியாகவே முடியாமல் ஞானம்தரும் கல்வி நல்லது. அத்தகைய ஞானம் பெற்றாலும் அதை அழிப்பதற்குப் பல இயற்கைப் பகைகள் உண்டு. அவற்றுள் ஒன்று சினம்–கோபம். சினம் யாரிடம் இருக்கிறதோ அவர்களை அது அழிப்பது உறுதி. இம்மட்டோ? அவரை மட்டும் இன்றி அவரைச் சேர்ந்த எல்லோரையும் அழிக்கும். ஆகவே சினம் தம்மிடம் வராமல் காப்பது அறிவு உடையோர் செயல் ஆகும்.*

*எண்ணரிய , பிறவிதனில் மானிடப் பிறவிதான்*
Ennariya pirravidhanil mannidap pirravithaan

*யாதினும் அரிது அரிது காண்*
yaathinum aridhu aridhu kaann

*இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ*
Ippirravi thappinaal eppirravi vayykkumō

*ஏது வருமோ அறிகிலேன்*
ēdhu varumō arrigilēn

*கண்ணகல் நிலத்து நான் உள்ள பொழுதே அருட்*
Kannnagal nilaththu naan ulllla pozhuthē arut

*ககன வட்டத்தில் நின்று*
gagana vattaththil nintrru

காலூன்றி நின்று பொழி ஆனந்த முகிலொடு
Kaalunrri nintrru pōzhi aanantha mugilodu

கலந்து மதி அவசமுறவே
kalandu mathi avasamurravē

பண்ணுவது நன்மை; இந்நிலை பதியு மட்டுமே
Pannnuvadhu nanmai; innilai pathiyu mattumē

பதியா யிருந்த தேகப்
pathiyaa iruntha thēgap

பரிவு குலையாமலே கௌரி குண்டலி யாயி
Parivu kulaiyaamalē gauri kunndali yaayi

பண்ணவிதன் அருளினாலே
panannavidhan arullinalē

விண்ணிலவு மதியமுதம் ஒழியாது பொழியவே
Vinnnilavu mathiyamudham ozhiyaadhu pozhiyavē

வேண்டுவேன் உமதடிமை நான்
vēnnduvēn umadhadimai naan

வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலைபெற்ற
Vēdhaantha siddhaantha samarasa nannilaipetrra

வித்தகச் சித்தர் கணமே!
viththagach chiththar gannamē

கணக்கு இல்லாத பிறவிகளில் மனிதப் பிறவி தான் எல்லாவற்றினும் கிடைப்பதற்கு அரிது ஆகும். இந்தப் பிறவி நீங்கினால் எந்தப் பிறவி வந்து சேருமோ? ஏது வருமோ நான் அறிய முடியாது.

இடம் அகன்ற இந்த உலகத்தில் நான் உயிரோடு இருக்கும் பொழுதே, அருள் பொருந்திய ஆகாயத்தில் காலை ஊன்றி நின்று ஆனந்தம் என்னும் மழை பொழியும்படியான மேகத்தோடு கலந்து என் அறிவு அலையாமல் இருக்குமாறு செய்வது நல்லது.

இத்தகைய நிலை பொருந்துகிற வரையில், தலைமை பொருந்தியிருந்த இந்த உடலின்மேல் இருக்கின்ற ஆசை நீங்காமல், கௌரி, குண்டலி – ஆயி – பண்ணவி – ஆகிய இறைவியின் அருளினால், ஆகாயத்தில் பொருந்தியுள்ள சந்திரன் அமுதம் இடைவிடாது பொழியவேண்டும் என்று வேண்டுவேன்.

நான் உம்முடைய அடிமை.

வேதாந்தமும் சித்தாந்தமும் சமரசப்படுத்தி நன்னிலை அடைந்திருக்கிற அளவு பொருந்திய சித்தர்கணமே.

We have taken countless births and human birth is rare and rare indeed. If this birth should slip or fail, what kind of births may occur or what will come - I cannot perceive. While I am in this broad world, I should set my foot in the sky of Grace, mingle with clouds that shower Bliss of eternal joy, and possess unshaken wisdom - this is good indeed.

Till this state is impressed or attained, the body was the master. The Love for the body not decreasing, by the grace goddess Gawri-Kundali - Aayi - Pannavi - the Moon unceasingly should stream ambrosia -This I request.

I am your bond- slave.

Oh! wise assemblage of Siddhas who have firmly equalised the Vedanta and the siddhanta philosophies.

## (52)

ஒருவன் எத்தகையவன் என்று அறியவேண்டும் என்றால் அவன் நண்பன் யார்? அவன் யாரோடு பழகுகிறான்? என்று அறிந்தால் தெரிந்துகொள்ளலாம். ஆகவே நல்லவர்களோடே இணங்குவது – பழகுவது நல்லது; அவர்கள் சொன்னபடி நடப்பது நல்லது. நல்லவர்கள் எல்லாருக்கும் நன்மை பயப்பனவற்றையே சொல்வர்; நன்மை பயப்பனவற்றையே செய்வர்; அவர்களுடைய சொல்லும் செயலும் நல்லன ஆகையாலே அவர்களை எல்லாரும் போற்றுவர். அவர்களோடு சேர்ந்த நமக்கும் சிறப்பு வரும். நாமும் புகழப்படுவோம். ஆகவே நல்லவர் இணக்கம் சாலச்சிறந்தது ஆகும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அரும்பொனே | மணியே | என் | அன்பே | யென் | அன்பான |
| Arumponē | manniyē | en | anbē | en | anbaana |

| | | | |
|---|---|---|---|
| அறிவே | என் | அறிவில் | ஊறும் |
| arrivē | en | arivil | ūrum |

| | | | | |
|---|---|---|---|---|
| ஆனந்த<br>Aanandha | வெள்ளமே<br>velllamē | என்றென்று<br>endrendru | | பாடினேன்<br>paadinēn |
| | ஆடினேன்<br>aadinēn | ஆடி<br>aadi | நாடி<br>naadi | |
| விரும்பியே<br>Virumbiyē | கூவினேன்<br>kuvinēn | உலறினேன்<br>ularrinēn | | அலறினேன்<br>alarrinēn |
| | மெய்<br>mey | சிலிர்த்து<br>silirththu | இருகை<br>irukai | கூப்பி<br>kuppi |
| விண்மாரி<br>Vinnmaari | யென<br>yena | என்இருகண்<br>enirukann | | மாரிபெய்யவே<br>maaripeyyavē |
| | வேசற்று<br>vēsatru | அயர்ந்தேன்<br>ayarnthēn | | யான்<br>yaan |
| இரும்புநேர்<br>Irumbunēr | நெஞ்சகக்<br>negnchagak | கள்வன்<br>kallvan | ஆனாலும்<br>aanaalum | |
| | உனை<br>unai | இடைவிட்டு<br>idaivittu | நின்றது<br>nindradhu | உண்டோ<br>unddō |
| என்றுநீ<br>Endrune | அன்று<br>andru | நான்<br>naan | உன்அடிமை<br>unadimai | யல்லவோ<br>yallavo |
| | யாதேனும்<br>yaadenum | அறியாவெறும்<br>ariyaaverrum | | |
| துரும்பனேன்<br>Thurumbanēn | எனினும்<br>eninum | கைவிடுதல்<br>kaividudhal | | நீதியோ<br>neethiyō |
| | தொண்டரொடு<br>thonndarodu | | கூட்டு<br>kūttu | கண்டாய்<br>kanndaay |
| சுத்தநிர்க்<br>Suththanirk | குணமான<br>gunnamaana | பரதெய்வமே<br>paratheyvamē | | பரஞ்<br>paragn |
| | ஜோதியே<br>jodhiyē | சுகவாரியே<br>sugavaariyē | | |

கிடைப்பதற்கு அரிய பொன் போன்றவனே! மணி போன்றவனே!

என்னுடைய அன்பே! எனக்கு அன்பாக இருக்கும் அறிவு மயம் ஆனவனே!

என் அறிவிலிருந்து ஊற்று எடுக்கும் ஆனந்த வெள்ளமே!

என்று இவ்வகை (இறைவா!) உன்னைப் பாடினேன்; (பாடி) ஆடினேன்; ஆடி (நீ எங்கு இருக்கிறாய் என்று) தேடினேன். பிறகு விருப்பத்தோடு கூவினேன்; நா வற்றினேன்; கதறினேன்; மெய் சிலிர்த்து;இரண்டு கைகளையும் கூப்பினேன்; வானத்தில் இருந்து மழை பெய்வதுபோல என் இரண்டு கண்களிலிருந்தும் கண்ணீர் பொழிந்தது; விரும்பிச் சோர்வு அடைந்தேன்.

நான் இரும்பு போன்ற மனம் உடைய திருடன்; ஆயினும் உனை விட்டு இருந்தது உண்டோ? (இல்லையே!)

நீ எப்பொழுது முதல் இருக்கிறாய்; அந்நாள் முதல் நான் இருக்கிறேன்; நான் உன் அடிமை அல்லவா? நான் ஒரு சிறிதும் அறியாத துரும்பு போன்றவன் ஆயினும், என்னைக் கைவிடுதல் உனக்குத் தருமம் ஆகுமோ?

நீ என்னைத் தொண்டர்களோடு சேர்ப்பாய்!

தூய்மையும், குணம் இன்மையும் ஆன மேலான தெய்வமே! சிறந்த ஒளியே, இன்பமயமான கடலே!

Gold rare! Gem like One!
Oh my Love! Oh my love of wisdom!
O flood of ecstatic joy that springs in my knowledge!

Thus I sang; danced; dancing I searched; with affection I called You; I became withered; I roared; I became horripilated; I folded my hands; my eyes shed tears just like the rain from the clouds. With desire, I became weary.

I am an iron hearted robber; did I ever stand aloof?
When doth thou, so am I! Am I not your slave?
I am after all a small refuse who knows not anything;
Is it justified on your part to forsake me?
Please club me with Your devotees.

O Pure one, devoid of qualities, the Supreme God, Light Divine, and the Ocean of Bliss!

# (53)

உலகத்தில் நாம் எத்தனை பொருள்களைக்காண்கிறோம். நிலம் நீர் தீ காற்று ஆகாயம் இவற்றையும் காண்கிறோம். இவையெல்லாம் நமக்கே பயன்படுகின்றன. இவையில்லாமற் போனால் நாம் வாழ முடியாது. நிலத்தில் எவ்வளவு அசுத்தம் செய்கிறோம். அந்த நிலமே நாம் செய்யும் அசுத்தங்களைப் பொறுத்துக்கொண்டு, அவற்றை யெல்லாம் மீண்டும் மண்ணாகவே மாற்றி நமக்குப் பயன்தருகிறது. இங்ஙனமே காற்றும். காற்று இல்லாமற்போனால் ஒரு நொடியிருக்க முடியுமா? அந்தக் காற்றும் சுத்தமாக இல்லாவிடில் ஆபத்து எவ்வளவு? தண்ணீர்தான் என்ன? தண்ணீர் இல்லாமல் நொடிப் பொழுது வாழமுடியுமா? ஆகவே அவற்றையெல்லாம் சுத்தமாக வைத்துக்கொண்டால் நம் வாழ்க்கை செம்மையாகும். இயற்கைப் பொருள்களை அழித்தலோ கெடுப்பதோ கூடாது.

தந்தை தாய் தமர்தாரம் மகவுஎன்னும் இவையெல்லாம்
Thanthai thaay thamarthaaram magavuennum ivaiyellaam

சந்தையில் கூட்டம் இதிலோ
sandaiyil kuttam ithilō

சந்தேகம் இல்லை மணிமாட மாளிகை மேடை
Santhēgam illai mannimaada maalligai mēdai

சதுரங்க சேனையுடனே
sadhuranga senaiyudanē

வந்ததோர் வாழ்வும் ஓர் இந்தரசாலக் கோலம்
Vandhadhōr vaazhvum ōr Inthrajaalak kolam

வஞ்சனை பொறாமை லோபம்
vangnchanai porramai lōbam

வைத்த மனமாம் கிருமி சேர்ந்தமல பாண்டமோ
Vaiththa manamaam kirumi sērnthamala paanndamō

வாஞ்சனையிலாத கனவே
vaangchanaiyillaatha kanavē

எந்த நாளும் சரியெனத் தேர்ந்து தேர்ந்ததுமே
Endha naallum sariyenath thērndhu therndhadhumē

இரவு பகல் இல்லா இடத்து
Iravu pagal illaa idaththu

| | | | |
|---|---|---|---|
| ஏகமாய் Eagamaay | நின்றநின் nindranin | அருள்வெள்ள arullvelllla | மீதிலே meedhilē |
| | யான்என்பது yaanenbadhu | அற ara | மூழ்கியும் muzhgiyum |
| சிந்தைதான் Sindaithaan | தெளியாது thelliyaadhu | சுழலும்வகை suzhalumvagai | யென்கொலோ yenkolō |
| | தேடரிய thēdariya | சத்தாகியென் saththagiyen | |
| சித்தமிசை siththamisai | குடிகொண்ட kudikonnda | அறிவான arrivaana | தெய்வமே theyvamē |
| | தேசோ thēso | மயானந்தமே. mayaananthamē. | |

தந்தை, தாய், உறவினர், மனைவி, குழந்தை என்று கூறுகிறோம். இவையெல்லாம் சந்தையில் ஒன்று சேர்ந்து சொல்லாமலே பிரியும் கூட்டம் போன்று இருப்பவை ஆகும். இதில் சந்தேகம் இல்லை.

மணிகள் பதித்த மாடம், மாளிகை, மேடை, நால்வகைப் படை ஆகியவற்றுடன் பொருந்திய வாழ்வும் ஒரு மாயவித்தையே.

வஞ்சகம், பொறாமை, சிக்கனம் ஆகியவற்றைக் கொண்டது மனம். இம்மனத்துடன் புழு சேர்ந்திருக்கின்ற மல பாண்டம் ஆகிய இந்த உடம்பு விருப்பம் இல்லாதது; கனவு போன்றது.

எந்த நாள் ஆயினும் சரி என்று உறுதி கொண்டு, இரவு பகல் இல்லாத இடத்தில், நீ ஒருவனே ஆகி, இருக்கிற அருள் வெள்ளத்தில், யான் என்பது நீங்க மூழ்கி இருந்தபோதிலும் சிந்தை தெளியாமல் இருக்கிறது சுழல்கிறது; இதற்குக் காரணம் என்ன?

தேடுவதற்கு அரிய உண்மைப்பொருள் ஆகி, என் மனத்தில் குடிகொண்டிருக்கிற அறிவுமயமான தெய்வமே; ஒளிமயமான ஆனந்தப் பொருளே!

பண்ணேன் உனக்கு ஆன பூசை ஒருவடிவிலே
Pannnnen unakku aana pusai oruvadivile

பாவித்திறைஞ்ச அங்கே
paaviththirraigncha aangge

பார்க்கின்ற மலருடு நீயே யிருத்தி;அப்
Paarkkindraa malarudu neeye yiruththi;ap

பனிமலர் எடுக்க மனமும்
panimalar edukka manamum

நண்ணேன்; அலாமல் இருகைதான் குவிக்க எனில்
Nannnnen; alaamal irukaithaan kuvikka enil

நாணும் என் உளநிற்றிநீ,
nannum en ullanitrinee;

நான் கும்பிடும்போது அரைக்கும்பிடு ஆதலால்
Naan kumbidumpodhu araikkumbidu aadhalaal

நான் பூசை செய்யல் முறையோ
naan pusai seyyal murraiyo

விண்ணே! விண் ஆதியாம் பூதமே! நாதமே!
Vinnnne! vinnaadhiyaam budhame! naadhame!

வேதமே! வேதாந்தமே!
vedhame! vedhaanthame!

மேதக்க கேள்வியே! கேள்வியாம் பூமிக்குள்
Methakka kellviye! kellviyaam pumikkull

வித்தே! அவ்வித்தின் முளையே!
viththe! avviththin mullaiye!

கண்ணே! கருத்தே! என்எண்ணே! எழுத்தே!
Kannnne! karuththe! enennnne! ezhuththe!

கதிக்கான மோன வடிவே!
kathikkaana mona vadive!

கருதரிய சிற்சபையில் ஆனந்தநர்த்தமிடு
Karuthariya sirrsabaiyil aanandhanarththamidu

கருணாகரக் கடவுளே!
karunnakarak kadavulle!

ஒரு வடிவத்தை அமைத்து உனக்குச் செய்ய வேண்டிய பூசையைச் செய்யமாட்டேன். உன்னை மனத்திலே தியானித்து வணங்குகிறேன். நான் பார்க்கும் மலரில் நீ இருக்கிறாய் (என்பதை அறிகிறேன்; அதனால்) அந்தக் குளிர்ச்சி பொருந்திய மலரையும் எடுப்பதற்கு மனம் செல்லாது.

இதுமட்டும் அன்றி இரண்டு கைகள் குவித்து வணங்கலாம் என்றால் என் மனம் வெட்கம் அடைகின்றது; ஏன் எனில் என் உள்ளத்தில் நீ நிற்கிறாய். ஆகவே நான் கை கூப்பும் பொழுது அது பாதிக் கும்பிடாக முடிவதால், நான் பூசை செய்வது முறைமை ஆகுமோ!

ஆகாசமாக இருப்பவனே!
ஆகாசம் முதலாக ஐம்பூதங்களாக விளங்குபவனே!
ஒளிமயமாக இருப்பவனே!
வேத வடிவத்தை யுடையவனே!
வேதமுடிவாக இருப்பவனே!
மேன்மை பொருந்திய சொல்வடிவு ஆனவனே;
அச்சொற் பிரபஞ்சத்தில் விதையாக உள்ளவனே!
கண்போன்று விளங்குபவனே!
கருத்தாக உள்ளவனே!
எண்ணமாகவும் எழுத்தாகவும் இருப்பவனே!
மோக்ஷகதி அடைவிக்க மோன வடிவில் உள்ளவனே!

மனத்தாலும் கருதுவதற்கு முடியாத சிற்சபையில் ஆனந்த நடனம் ஆடும் கருணைக்கடல் ஆகிய சிவபெருமானே

I do not perform worship by having a particular form of Yours.

I adore You by meditatiion in my mind. (while doing so) I see You seated in the flower that I look at.

Hence my mind is not inclined to pluck those cool flowers.

Apart from this, my hands, even to worship joined and raised, feel bashful; for You abide in my heart.

So when I worship with hands joined and raised, it is but half worship.

Hence is it proper on my part to perform worship?

Oh Heaven!

Oh The five natural elements beginning with the Sky!

Oh sound!

Oh Vedas!

Oh the end of the Vedas!

Oh word of high order!

Oh the seed in the word of words!

Oh (my) eye!

Oh (my) desire!

Oh my imagination!

Oh (my) learning!

Oh the silent form to bestow final beautitude!

Oh Lord, the Ocean of Grace, that dances with ecstatic joy in the Hall of wisdom of rare imagination!

# பட்டினத்தார்

## PATTINATHTHAR

### (55)

மனைவி மக்கள் சுற்றம் என்ற பந்தம் இருக்கிறது அல்லவா? இவை எல்லாம் எது வரையில்? பணம், நிலம், முதலிய செல்வ வளம் இவையெல்லாம் நாம் இறந்த பிறகு உடன் வருகின்றனவா? இல்லையே, ஆகவே உள்ளவரையில் நல்லவன், நற்பண்புடையவன், நல்ல அறிவாளி என்று பிறர் கூறுமாறு வாழவேண்டும்; இவ்வுலக வாழ்வை நீத்த பிறகும் புகழ் ஓங்கி வளர்ந்திருக்க் வேண்டும். அத்தகைய முறையில் வாழ்க்கையை அமைத்துக்கொண்டு வாழ்வதே சிறந்த வாழ்க்கை ஆகும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கட்டி<br>Katti | அணைத்திடும்<br>Annaiththidum | பெண்டிரும்<br>penndirum | | மக்களும்<br>makkallum | |
| | | | | காலத்தச்சன்<br>Kaalaththachchan | |
| வெட்டி<br>Vetti | முறிக்கும்<br>murrikkum | மரம்போல்<br>marampōl | | சரீரத்தை<br>sareraththai | |
| | | | | வீழ்த்திவிட்டால்<br>Veezhthivittaal | |
| கொட்டி<br>Kotti | முழக்கி<br>muzhakki | அழுவார்<br>azhuvaar | மயானம்<br>mayaanam | குறுகி<br>kurugi | அப்பால்<br>appaal |
| எட்டி<br>Etti | அடிவைப்பாரோ<br>adivaippaarō | இறைவா<br>irraivaa | கச்சி<br>kachchi | | ஏகம்பனே.<br>eagambanē |

(உயிர் வாழும்போது) மனைவியும் மக்களும் நம்மைச் சார்ந்து அணைத்துக் கொண்டு இருப்பர்; தச்சன் மரத்தை வெட்டி வீழ்த்துவது போல, இயமன் உடம்பை வீழ்த்துவான்; அப்பொழுது (பெண்டிரும் மக்களும்) பறை அடிக்கச் செய்து, இரைச்சலிட்டு அழுவார்கள்; மயானம் வரையில் வருவார்கள். அதற்குப் பிறகு வருவார்களோ? (வரமாட்டார்கள்) காஞ்சிபுரத்தில் திரு. ஏகம்பத்தில் எழுந்தருளியுள்ள இறைவனே!

(While alive) wife and children do come and embrace us. The carpenter will cut and knock down the tree; Likewise, the God of Death will fell the body. Then their wife and children will engage drummers, to beat drums and make hell of noise by crying; then approach the burial ground on the burning ghat and then they will not place even a foot farther.

Oh Lord residing in the temple called Ekambam at Kanchipuram!

## *(56)*

ஒவ்வொருவரும் காலை முதல் மறுநாள் காலைவரை நாள்தோறும் செய்யும் செய்கைகளை எண்ணிப் பாருங்கள்; விடாமல் இப்படித்தானே செய்கிறோம்; உண்கிறோம்; குடிக்கிறோம்; தூங்குகிறோம்; விழித்து எழுகிறோம்; இதற்குச் சிறிதும் பின்வாங்குவதில்லை. உறங்குவது போன்றது சாவு; உறங்கி விழிப்பது போன்றது பிறவி. பிறந்தவர் இறப்பர்; இறந்தவர் பிறப்பர்; எத்தனை பிறவிகள் எடுப்பது? எத்தனை தடவை சாவது? இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றால் பிறவிக்குக் காரணம் யாது என்பதை அறிய வேண்டும்; அக்காரணத்தை நீக்கினால் பிறவி நீங்கும்.

| | | | |
|---|---|---|---|
| அன்னை<br>Annai | எத்தனை<br>eththanai | எத்தனை<br>eththanai | அன்னையோ?<br>annaiyo̅ |
| அப்பன்<br>Appan | எத்தனை<br>eththanai | எத்தனை<br>eththanai | அப்பனோ<br>appano̅ |
| பின்னை<br>Pinnai | எத்தனை<br>eththanai | எத்தனை<br>eththanai | பெண்டிரோ<br>penndiro̅ |
| பிள்ளை<br>Pilllai | எத்தனை<br>eththanai | எத்தனை<br>eththanai | பிள்ளையோ<br>pilllaiyo̅ |
| முன்னை<br>munnai | எத்தனை<br>eththanai | எத்தனை<br>eththanai | சன்மமோ<br>senmamo̅ |
| மூடினாய்<br>Mu̅dinaay | அடியேனும்<br>adiye̅num | அறிந்திலேன்<br>arrinthile̅n | |
| இன்னும்<br>Innum | எத்தனை<br>eththanai | எத்தனை<br>eththanai | சன்மமோ<br>senmamo̅ |
| என்<br>En | செய்வேன்<br>seyve̅n | கச்சி<br>kachchi | ஏகம்பநாதனே.<br>egambanaadhane̅. |

என்னை ஒவ்வொரு பிறவியிலும் பெற்ற தாய்கள் எத்தனை? (கணக்கு இல்லை). என்னை ஈந்த தந்தையர்கள் எத்தனைப் பேர் (அதற்கும் கணக்கு இல்லை). (ஒவ்வொரு பிறவியிலும்) மனைவியாக வாய்த்தவர் எத்தனை பேரோ? (தெரியாது). பிறந்த குழந்தைகள் எத்தனையோ? இந்தப் பிறவிக்கு முன் எத்தனை பிறவி எடுத்து இருக்கிறோம்? மறைத்து வைத்திருக்கிறாய்! அடியேனும் அதை அறிய முடியவில்லை. இனிமேல் எத்தனை எத்தனை பிறவிகள் உண்டோ? நான் என்ன செய்வேன்! காஞ்சிபுரத்தில் கோயில் கொண்டிருக்கிற ஏகம்பப் பெருமானே!

Mothers how many; how many are mothers?
Fathers how many; how many are fathers?
Then how many and how many are wives?
Children how many; how many are children?
Previously how many; how many are the births?

You shut me not; I bondsman is ignorant of; still how many; how many the births be? What shall I do? Oh Lord residing in Ekambam at Kanchipuram.

## (57)

பிறப்பதும் இறப்பதும் உடலில் உள்ள உயிரின் குணம் ஆகும். பிறவி நீங்க ஒரு வழி உண்டு; நல்வினைகள் செய்தால் அதற்குரிய பலன் ஆகிய நன்மைகளை நுகர வேண்டும்; தீவினை செய்தால் அதற்குரிய தீமைகளை அனுபவிக்க வேண்டும்; இரு வினைகளின் பயனும் நீங்கினால்தான், இறைவனின் சக்தி பதியும்; இறைவனின் சக்தி பதிவதற்கு இறைவனைத் தியானிப்பதுதான் சிறந்த வழி. தியானம் இருக்கிறதே அது பிறவியைப் போக்கும் மருந்து; தியானம் இறைவனுடைய திருவடியில் சேர்ப்பிக்கும்; இறை நிலையை அடைவிக்கும்; இறைவனோடு கலந்து பேரின்பம் பெறச்செய்யும். தியானமே பிறவி போக்குவதற்குரிய சாதனம் ஆகும்.

முடிசார்ந்த மன்னரும் மற்றும் உள்ளோரும்
Mudisaarntha Mannarum matrum ullllorum

முடிவில் ஒரு
mudivil oru

பிடிசாம்பராய் வெந்து மண்ணாவதும் கண்டு
Pidisaambaraay vendhu mannnnaavadhum kanndu

பின்னும் இந்தப்
pinnum indhap

படிசார்ந்த வாழ்வை நினைப்பதல்லால் பொன்னின்
Padisaarntha vaazhvai ninaippathallaal ponnin

அம்பலவன்
ambalavan

அடிசார்ந்து தாம் உய்யவேண்டும் என்றே அறிவாரில்லையே
Adisaarnthu thaam uyyavēnndum endrē arrivaarillaiyē

கிரீடம் தரித்து இருக்கிற அரசர்களும் மற்றும் இருக்கிற எல்லா மக்களும், இறுதியில் சுடப்பட்டு, ஒருபிடி சாம்பல் ஆகி, மண் ஆகிறார்கள்.

இதை ஒவ்வொருவரும் காண்கிறார்கள்; கண்டாலும் இந்த உலகத்தைச் சார்ந்து இருக்கிற வாழ்க்கையை விரும்புகிறார்கள்; அதை விட்டுப் பொன் அம்பலத்தில் (நடம் ஆடும் இறைவனின்) திருவடியைச் சார்ந்து நற்கதி அடையவேண்டும் என்று அறிபவர் ஒருவரும் இல்லையே (என் செய்வது?)

The crowned kings and the rest, in the end burnt and reduced to handful of ash become earth indeed.

We see this!

Even then we always think of living in this earth!

But alas! there are none to get themselves redeemed by approaching the feet of the Lord at the Golden Hall.

## (58)

உடம்பு வேறு—உயிர் வேறு; உடம்பில் உயிர் இருக்கிறது என்பதை மூச்சுவிடும் தன்மையால் அறிகிறோம். அதனால் மூச்சுத் தான் உயிர் என்று நினைக்கக்கூடாது. இந்த உடம்பில் உயிர் இருக்கிறவரையிலும் உடம்பு சிறந்ததாகவே கருதப்படும். உடம்பினின்று உயிர் நீங்கினால் உடம்பைப் பிணம் என்பர். உடம்புக்கும் உயிருக்கும் எப்பொழுதும் நட்பு இல்லை. ஒரு முட்டையிலிருந்து குஞ்சு பறந்து போகும். அதுபோலவே உரிய காலம் வந்ததும் உயிரும் உடம்பைவிட்டுப் போய்விடும். ஆகவே உடம்பைச் சிறந்த ஒரு பொருளாகக் கருதுதல் வேண்டா. ஆனால் உடம்பில் உயிர் செய்யும் தவம் காரணமாக இறைவன் இந்த உடம்பையே கோயிலாகக் கொள்வான்; ஆகையால்தான் இந்த உடம்பை நன்கு பாதுகாக்க வேண்டும்.

அத்தமும் வாழ்வும் அகத்துமட்டே விழி அம்பொழுக
Aththamum vaazhvum agaththumattē vizhi ampozhuga

மெத்திய மாதரும் வீதிமட்டே விம்மி விம்மி யிரு
Meththiya maadharum veedhimattē vimmi vimmi iru

கைத்தலை மேல் வைத்து அழும் மைந்தரும் சுடுகாடுமட்டே
Kaiththalai mēl vaiththu azhum maintharum sudugaadumattē

பற்றித் தொடரும் இருவினைப் புண்ணிய பாவமுமே.
Patrrith thodarum iruvinaip punnnniya pavavamumē.

செல்வமும், சிறந்த வாழ்க்கையும் வீடு வரையில்தான்; கண்களில் கண்ணீர் பெருக வருந்தும் மனைவியும் தெரு வரையில்தான்; பெருமூச்சு விட்டுக் கையைத் தலைமேல் வைத்து அழுகிற பிள்ளைகளும் சுடுகாடு வரையில் வருவர்; ஆனால் உயிரைப் பற்றித் தொடர்பவை, இருவினைகளும் அவற்றின் பயன் ஆகிய புண்ணியமும் பாவமும் ஆம்.

Varied wealth and famous life do but stop at the residence.

The wife with her eyes filled with tears will proceed only up to the street.

Sobbing and placing both hands on the head, the sons weep but they go only up to the burning ghat.

But the two deeds-good and evil and their results (punyam and papam) alone follow.

## *(59)*

எல்லா நற்பண்புகளும் படைத்தவராக இருப்பது அரிதினும் அரிது. அதற்காகத்தான் சிறுசிறு நற்செயல்களையேனும் செய்யுமாறு ஆன்றோர் நம்மைத் தூண்டுகின்றனர். அறம் செய விரும்பு என்பர்; ஈவது விலக்கேல் என்பர்; இயல்வது கரவேல் என்பர்; ஐயம் இட்டு உண் என்பர்; கொடுத்துப் பழகுவதற்கு இத்தனை கூறியவரே ஏற்பது இகழ்ச்சி என்றார். ஆகையால் ஈவது நல்லது ஏற்பது இகழ்ச்சி என்றதன் கருத்தை அறிய வேண்டும். கொடுத்துக்கொண்டே இருந்தால், சோம்பித் திரிந்து ஏற்பவர் கூட்டம் பெருகும். ஆகவே 'கொடு' என்றவரே 'ஏற்காதே' என்றார். எனவே சோம்பித் திரியாது, முயற்சியால்–உடல் உழைப்பால் பொருளீட்டி வாழ்வதே நற்செய்கை என உணர்ந்து செயல்படுவதே சாலச் சிறந்தது.

| | | | |
|---|---|---|---|
| ஐயிரண்டு திங்களாய் | | அங்கமெல்லாம் | நொந்துபெற்று |
| Aiyiranndu thinggallaay | | anggamellaam | nondhupetru |
| பையலென்ற போதே | பரிந்தெடுத்துச் | செய்ய | இரு |
| Paiyalendra pōdhē | parindheduththuch | seyya | iru |
| கைப்புறத்தில் | ஏந்திக் | கனகமுலை | தந்தாளை |
| Kaippurraththil | enthik | kanagamulai | thanthaallai |
| எப்பிறப்பில் | காண்பேன் | இனி. | |
| Eppirrappil | kaannpēn | ini. | |

பத்துமாதம் சுமந்தாள்; உடம்பெலாம் நொந்தது; குழந்தை பிறந்தது; ஆண் குழந்தை என்றனர்; அப்படிச் சொன்னதும் அன்போடு எடுத்துக் கொண்டாள். இரண்டு கைகளையும் குழந்தை முதுகில் சேர்த்து ஏந்தினாள்; குழந்தைக்குப் பால் கொடுத்தாள் ; இத்தகைய தாயை (இழந்தேன்) (அவளை) இனி எந்தப் பிறவியில் காண்பேன்?

She carried me for ten months. With pain in all parts of the body she begot a child. Hearing that it was a male child, she kept her both hands together beneath the child, took it up with love and fed it with her breast milk (Alas! such a mother, I lost). In which birth can I meet her again?

## *(60)*

இந்த உடம்பு புலால் நாறுவது; புழுக்கூடு; உயிர் விட்டுப் போனதும் இதை ஒருவரும் விரும்பார்; உடனே அகற்றி விடவே நினைப்பர்; சிலர் சுடுவர்; புதைப்பர்; கழுகுகளுக்கு இடுவர்; பெரு வெள்ளத்தில் விட்டிடுவர்; நாட்டுக்கு நாடு இதில் வேறுபாடு. சுட்டால் என்ன? புதைத்தால் என்ன? எல்லாம் ஒன்றுதான். உடம்பு நிலையாதது என்று மட்டும் உண்மையாக – அழுத்தமாக – உணர வேண்டும். உணர்ந்தால் – சினம் – இல்லை – வேறுபாடு இல்லை – உயர்வு தாழ்வு இல்லை – வலியார் எளியார் இல்லை – குற்றங்கள் நீங்கும்; குணங்கள் பெருகும்; நன்மை பெருகும்; தீமைகள் நீங்கும்; அச்சம் போகும்; அன்பு பெருகும்; உண்மை ஓங்கும்; எல்லோரும் இன்புறுக என்ற எண்ணம் தோன்றும்; வளரும்; சகோதரத்துவம் நிலைபெறும்.

| | | | |
|---|---|---|---|
| முன்னையிட்ட<br>Munnaiyitta | | தீ<br>Thee | முப்புரத்திலே<br>Muppuraththile |
| பின்னையிட்ட<br>Pinnaiyita | | தீ<br>The | தென்இலங்கையில்<br>Then Ilanggaiyil |
| அன்னையிட்ட<br>Annaiyitta | | தீ<br>Thee | அடிவயிற்றிலே<br>adivayitrile |
| யானும்<br>Yaanum | இட்ட<br>Itta | தீ<br>Thee | மூள்கத மூள்கவே<br>mullga mullgave |

முன் ஒருகால் சிவபெருமான் கோபப்பட்டார்; கோபத்தில் தீப்பிறந்தது; அத்தீ திரிபுரங்களை அழித்தது; பின்னர் ஒரு சமயம் இராவணன் சீதையைக் கவர்ந்து சென்றான்; அனுமனைக் கொல்வதற்காக அவன் வாலில் தீப்பற்றச் செய்தனர்; அந்தீ இலங்கையை அழித்தது. என்தாய் இறந்தாள்; அதனால் என் அடிவயிற்றில் துன்பம் காரணமாகத் தீப்பற்றி எரிகிறது. அவள் இறந்ததால் அவளைத் தகனம் செய்யத் தீ இடுகிறேன்; அந்தத் தீயானது மூண்டு வளர்க!

Long long ago the fire ( the wrath of the Lord) burnt the Three cities.

Later on, the Southern Ceylon was in flames.

Now my mother is no more and she placed fire in my abdomen.

Let the fire placed by me (on her corpse) being kindled burn her.

## (61)

உலகம் நிலையாமை, யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை இவற்றைக் கண்கூடாகக் கண்டும், பெரியோர் சொலக் கேட்டும், நூல்களில் படித்தும், அறிந்த போதிலும் மனத்தில் நிலைத்து இருப்பதில்லை. 'சற்றே ஏங்கி இளையாதிரு மனமே!' என்று கூறி மனத்தில் இவற்றைக் கொண்டால் துன்பம் நீங்கும்; இன்பம் சேரும். நற்றவம் செய்ய எண்ணம் வரும். தவம் செய்வது தன் நலம் ஆகத் தோன்றும். ஒருவேளை அது உண்மைதான்! தவம் செய்பவர் தம்மை நோக்கியவர்; மற்றவர்களோ உணவு உடை செல்வம் ஆகியவற்றைத் தேடுவதற்காகப் பிறருக்குத் துன்பம் செய்கிறார்களே! தவம் செய்பவர் அப்படியல்ல; தம்மைத் துன்புறுத்திக் கொள்வர்; பிறர்க்கு நன்மையே செய்வர்; பிறரால் தொழப்படும் தன்மை அடைவர். ஆகவே தவம் செய்ய முயற்சி எடுத்துக் கொள்வது நல்லது.

வீற்றிருந்தாள் அன்னை வீதிதன்னில் இருந்தாள்
Veetrirunthaal Annai veethi thannil irunthaall

நேற்றிருந்தாள் இன்று வெந்து நீறானாள் –பால்தெளிக்க
Netrriunthaall indru vendhu neerranaall -paalthellikka

எல்லீரும் வாருங்கள் ஏதென்று இரங்காமல்
Elleerum vaarungall ēthendru irangaamal

எல்லாம் சிவமயமே யாம்
Ellaam Sivamayamē yaam

தாய் (நேற்று) வீட்டில் இருந்தாள்; இன்று (இறந்து போனதால்) தெருவில் கொண்டுவந்து போடப் பிணமாக இருந்தாள். நேற்று உயிருடன் இருந்தவள் இன்று அவள் பிணம் சுடப்பட்டுச் சாம்பல் ஆனாள். பால் தெளிப்பதற்கு நீங்கள் யாவரும் வாருங்கள். நடந்து போனதற்கு வருந்தாதீர்கள். எல்லாம் சிவன் அருளே என்று அறிவீராகுக.

Yesterday she was sitting in the house.

Then (she died and) her corpse has been placed in the street.

She, that was alive yesterday, was burnt to ashes today.

The ceremony; of sprinkling milk is to be performed, all of you, please do come.

Don't be grief about; everything happens as ordained by the grace of Lord Siva.

# திருவருட்பா

## TIRUARUTPA

## (62)

எங்கும் இருள் என்றால் அதை வெறுக்கிறோம். அதைப் போக்க ஒளி வேண்டும். ஒளியைத் தருபவன் யார்? சூரியன் என்று உடனே பதில் சொல்வோம். சூரியன் இல்லாத காலத்தில் மின்னொளி ஒளி தருகிறது என்போம். இவ்வொளிகள் எல்லாம் எங்கு இருந்து வந்தன? யார் உண்டாக்கியவை. சூரியவொளி சூரியனுடையது. மற்ற ஒளிகள் செயற்கை. நம் அறிவால் ஆனவை என்போம். சூரியனுக்கு ஒளி தந்ததும் இறைவனே! செயற்கை ஒளிகளை உண்டாக்கும் அறிவு தந்தவனும் இறைவன்தான். அவன் அறிவுமயம் ஆனவன்! அவனே ஒளி மயம் ஆனவன். அவன் அருள் பெறுவோம், ஒளி, பெறுவோம்.

அருள்சோதித் தெய்வம்எனை ஆண்டுகொண்டதெய்வம்
Aruljōthith dheivamenai aanndukonnda dheivam

அம்பலத்தே ஆடுகின்ற ஆனந்தத் தெய்வம்
Ambalaththē aadugindra aanaanthath dheivam

பொருள்சாரும் மறைகள் எல்லாம் போற்றுகின்ற தெய்வம்
Porullsaarum maraigall ellaam pōtrukindra dheivam

போதாந்தத் தெய்வம்உயர் நாதாந்தத் தெய்வம்
pōdhantha dheivamuyar naadhanthath dehivam

இருள்பாடு நீக்கிஒளி ஈந்து அருளும் தெய்வம்
Irullpaadu neeki olli eendhu arullum dheivam

எண்ணியநான் எண்ணியவாறு எனக்கருளும் தெய்வம்
Enniyanaan enniyavaarru enakkarullum dheivam

தெருள்பாடல்உவந்து எனையும் சிவமாக்கும் தெய்வம்
Therullpaadal uvandhu enaiyum Sivamaakkum dheivam

சிற்சபையில் விளங்குகின்ற தெய்வம் அதே தெய்வம்
Sirrsabaaiyil villangukindra dheivam athē dheivam.

அவன் அருள் ஆகிய விளக்கு அளிக்கும் ஒளி
அவன் என்னை ஏற்றுக்கொண்ட கடவுள்.
அவன் (தில்லையில்) அம்பலத்தில் ஆடுகிறவன்;

அவன் ஆனந்தம் தரும் கடவுள் ஆவான்;

அவன் சிறப்புப் பொருந்திய வேதங்கள் துதிக்கின்ற கடவுள்

அவன் அறிவின் எல்லையில் உள்ள கடவுள்;

அவன் ஒளியின் (நாதத்தின்) எல்லையில் இருக்கும் கடவுள்;

அவன் அறியாமையை நீக்கி அறிவு ஆகிய ஒளியைத் தருகிற கடவுள்;

நான் எதை நினைக்கிறேனோ அதை நினைத்தபடி எனக்குக் கொடுக்கிற கடவுள்

என் இனிய பாடலைக் கேட்டு மகிழும் கடவுள்;

அதனால் என்னைச் சிவம் ஆகவே ஆக்குகிற கடவுள்;

அக்கடவுளே சிற்றம்பலத்தில் விளங்குகிற கடவுள் ஆவார்;

The Lord the Lamp of Grace,

The Lord who admitted me into His Fold,

The Lord rapturous dancing at the Hall,

The Lord adored by Scriptures esteemed high,

The Lord, the goal of knowledge and sound exalted,

The Lord, remover of ignorance and bestower of splendour,

The Lord, rejoicing at my lucid poetry makes me Siva

Himself, -It is the very same Lord renowned at the Hall of Wisdom.

## *(63)*

தம்முடைய மனம் ஒருமைப்பாடு அடையவேண்டும் ஆனால் ஒரே வழியுண்டு. அதாவது இறைவனை விடாமல் தியானிப்பது ஆகும். தியானம் செய்யச் சிலரால் முடியாது. அதற்கு இன்னும் ஒரு வழி இருக்கிறது. அதாவது இறைவனுடைய திருநாமத்தை இடையறாது கூறுவது. அதுதான் ஜபம் எனப்படும். கடவுளின் எந்தத் திருப்பெயரையும் ஜபம் செய்யலாம். அந்தப் பெயர்கள் எல்லாவற்றிலும் சிறந்தது திருவைந்தெழுத்து. அதாவது ஸ்ரீ பஞ்சாட்சரம். அதாவது நமசிவாய என்பது. இம்மந்திரத்தை எல்லாரும் ஜபம் செய்வோமாக. ஓம் நமசிவாய சிவாய நம ஓம்; சொல்லுங்கள் ஓம் நமசிவாய சிவாய நம ஓம்.

# பெற்ற தாய்தனை – PETRA THAAITHANAI

## (நல்தவத்தர் நன்னர் நெஞ்சகம்)

| | | | |
|---|---|---|---|
| பெற்ற<br>Petra | தாய்தனை<br>thaaithanai | மகமறந்<br>magamarandh | தாலும்<br>dhaalum |
| பிள்ளையைப்<br>Pillaiyaip | | பெறும்தாய்<br>perrumthaai | மறந்தாலும்<br>marandhdhaaum |
| உற்ற<br>Utra | தேகத்தை<br>dhehaththai | உயிர்<br>uyir | மறந்தாலும்<br>marandhdhaalum |
| உயிரை<br>Uyirai | மேவிய<br>meviya | உடல்<br>udal | மறந்தாலும்<br>marandhdhaalum |
| கற்ற<br>Katra | நெஞ்சகம்<br>nenjagam | கலை<br>Kalai | மறந்தாலும்<br>marandhdhaalum |
| கண்கள்<br>Kanngall | நின்று<br>nindru | இமைப்பது<br>imaippadu | மறந்தாலும்<br>marandhdhaalum |
| நல்தவத்தவர்<br>Nalthavaththavar | | உள்இருந்து<br>ullirundhu | ஓங்கும்<br>onggum |
| நமச்சி<br>Namachchi | வாயத்தை<br>vaayaththai | நான்<br>naan | மறவேனே<br>marravene. |

பெற்று வளர்த்த தாயைக் குழந்தை மறந்தாலும்–
பெற்ற பிள்ளையை தாய் மறந்தாலும்–
புகுந்த இந்த உடம்பை (அதில் உள்ள) உயிர் மறந்தாலும்
உயிரை அது பொருந்தி இருக்கிற உடம்பு மறந்தாலும்–
படித்திருக்கிற (அறிவு பொருந்திய) மனம் தான் கற்ற
கலைகளை மறந்து போனாலும்–
கண்கள் தாம் இமைக்கும் தொழிலை மறந்து போனாலும்–
நல்ல தவம் செய்யும் தவசிகளின் மனத்தில் ஓங்கி இருக்கிற
"**நமசிவாய**" என்னும் (திருநாம) மந்திரத்தை நான்
மறக்கமாட்டேன்.

Even if the child should forget the mother that begot,
Even if the mother should forget her child,
Even if the soul should forget the body abiding,
Even if the body should forget the soul manifest,
Even if the mind erudite should forget its learning,
Even if the eyes should forget to wink (or glitter).

**NAMASIVAYA** which the ascetics virtuous intone I forget not.

| | | | | |
|---|---|---|---|---|
| இன்னும் Innum | பற்பல parrpala | நாள் naall | இருந் irundh | தாலும் dhaalum |
| இக்கணம் Ikkannam | தனிலே thanilē | இறந்தாலும் irrandhdhallum | | |
| சோர்ந்து Sōrndhu | மாநர maanara | கத்துஉழன் kaththuuzhan | | றாலும் draalum |
| என்ன Enna | மேலும் mēlum | இங்கு ingu | எனக்குவந் enakkuvan | தாலும் dhaalum |
| எம்பிரான் Embiraan | எனக்கு enaakku | யாதுசெய் yaadhusei | | தாலும் dhaalum |
| நன்னர் Nannar | நெஞ்சகம் nenjagam | நாடி naadi | நின்று nindru | ஓங்கும் ongum |
| நமச்சி Namachchi | வாயத்தை vaayaththai | நான்மற naanmarra | | வேனே vēnē |

இன்னும் பல நாட்கள் நான் பிழைத்து இருந்தாலும்– இந்த
நொடியிலே செத்துப் போனாலும்–
நான் போகும்படியான மேலான முத்தியை அடைந்த
போதிலும்
சோர்வு அடைந்து பெரிய நரகத்தில் புகுந்து கஷ்டப்
பட்டாலும்–
எப்படிப்பட்ட துன்பங்கள் இங்கு எனக்கு வந்த போதிலும்–
எனது இறைவன் எனக்கு என்ன செய்த போதிலும்
நல்ல என்னுடைய மனம் தேடித்திரிகிற "நமசிவாய"
என்னும் (திருநாம) மந்திரத்தை நான் மறக்கமாட்டேன்.

Even if I should live further for days numerous,

Even if I should meet death instantaneous,
Even if I should obtain eternity,
Even if I should droop and fall into hell,
Even if anything more should befall,
Even if my Lord should do anything whatever,

**NAMASIVAYA** which the mind virtuous pursue and intone-
I forget not.

கல்வி கண் போன்றது; கல்விச் செல்வமே எல்லாச் செல்வங்களுக்கும் மேலான செல்வம். பொருட்செல்வம் அழியக்கூடயது, கல்விச்செல்வம் அழியாதது, கல்விச்செல்வம் அறிவு தருவது; இறைவனைக் காட்டுவது; கற்றதனால் ஆய பயன் இறைவனைத் தொழுவதே ஆகும். கல்வியே நல்லவன் ஆக ஆக்குவது; கல்வியே எல்லா நலன்களையும் கொடுப்பது, கல்வியே மதிப்புக் கொடுப்பது. அக்கல்வி பல்லார்க்குக் களிப்பு அருளுவது நடராஜப் பெருமானே ஆவர்.

## கல்லார்க்கும் – KALLAARKUM

கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பு அருளும் களிப்பே
Kallaarkkum Katravarkkum Kallippu arullum Kallipp$\bar{e}$

காணார்க்கும் கண்டவர்க்கும் கண் அளிக்கும் கண்ணே
Kaannaarkkum Kanndavarkkum Kannallikkum Kannnn$\bar{e}$

வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரம் அளிக்கும் வரமே
Vallaarkkum maattaarkkum varam allikkum varam$\bar{e}$

மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே
Madiyaarkkum madippavarkkum madhikodukkum madhiy$\bar{e}$

நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவே
Nallaarkkum pollaarkkum nadunindra naduv$\bar{e}$

நரர்களுக்கும் சுரர்களுக்கும் நலம் கொடுக்கும் நலமே
Narargallukkum Surargallukkum nalam kodukkum nalam$\bar{e}$

எல்லார்க்கும் பொதுவில்நடம் இடுகின்ற சிவமே
Ellarkkum podhuvilnadam idugindra Sivam$\bar{e}$

என் அரசே யான்புகலும் இசையும் அணிந்து அருளே
En aras$\bar{e}$ yaanpugalum isaiyum annindhu arull$\bar{e}$

படிக்காதவர்களுக்கும் படித்தவர்களுக்கும் மிக்க மகிழ்ச்சியைத் தரும் மகிழ்ச்சியாகியவனே!

பார்க்க முடியாதவர்களுக்கும், பார்த்தவர்களுக்கும் கண்ணையும் அருளையும், அளிக்கும் கண் ஆனவனே!

வலிமை உடையவர்களுக்கும், வலிமை அற்றவர்களுக்கும் வரங்களை அளிக்கும் வரமே!

உன்னை மதியாதவர்களுக்கும், மதிப்பவர்களுக்கும் அறிவைக் கொடுக்கும் அறிவு மயம் ஆனவனே!

மக்களுக்கும், தேவர்களுக்கும் நன்மைகளைக் கொடுக்கும் நன்மையே உருவானவனே!

எல்லாருக்கும் பொதுவில் நடனம் ஆடுகிற சிவமே! என்னுடைய அரசே!

நான் பாடுகிற இசைப்பாடல்களை அணிகலன்களாக அணிந்து கொண்டு அருள் செய்வாயாக!

O Ecstatic Joy that bestows rapture to the learned and the illiterate;

O Grace (Eye) that gives sight to those having sight and to the blind;

O Boon that blesses the clever and the incapable;

O Revered One that imparts Knowledge to those who regard you and regard not;

O Immanent One that stands impartial to the Good and the wicked;

O Virtuous One that bestows good to mortals and celestials;

O SIVAM that Dances in the Public Hall for the sake of all;

O Pre-eminent One (O my king!)

Please do adorn yourself with the songs sung by me!

## (65)

அவன் அன்றி ஓரணுவும் அசையாது என்பது பெரியோர் கூறும் பழமொழி. உலகம் சுற்றுகிறது. மக்கள் இயங்குகிறார்கள். எல்லாமும் அசைகின்றது. இந்த அசைவு- இயக்கம் இதற்கு எல்லாம் காரணம் என்ன? அணுவைப் பிளந்து ஆராய்ச்சி செய்தவர்கள் அணுவுக்கு உள்ளேயே ஏதோ ஒரு அசைவு இருக்கிறது என்று கூறுகிறார்கள். அங்ஙனமே இந்த இயற்கையான பெரிய அண்டத்துக்கு உள்ளே இருந்து இறைவன் அசைகிறான்- அசைக்கிறான். இதுவே நடராசப் பெருமானின் கூத்து. பெருமான்- பரமன் - ஆடுகிறான்; எல்லாம் அசைகின்றன. இயங்குகின்றன. ஆகவே நம்மை இயங்க வைக்கும் நடராசப்பெருமானை வணங்கு வோம். வாழ்த்துவோம்.

# பார்த்தாலும் – PAARTHAALUM

பார்த்தாலும் நினைத்தாலும் படித்தாலும் படிக்கப்
Paarththaalum ninaiththaalum padiththaalum padikkap

பக்கம் நின்று கேட்டாலும் பரிந்துஉள் உணர்ந்தாலும்
Pakkam nindru kēttaalum parindhuull unnarndhdallum

ஈர்த்தாலும் பிடித்தாலும் கட்டி அணைத்தாலும்
Eerththaalum pidiththaalum katti annaiththaalum

இத்தனைக்கும் தித்திக்கும் இனித்தசுவைக் கரும்பே
Iththanaikkum thiththikkum iniththasuvaik karumbē

வேர்த்துஆவி மயங்காது கனிந்தநறும் கனியே
Vērththuaavi mayangaadhu Kanindhanarrum Kaniyē

மெய்ம்மை அறிவு ஆனந்தம் விளக்கும்அருள் அமுதே
Meimmai arrivu aanandham villakkumarull amudhē

தீர்த்தாவென்று அன்பர் எலாம் தொழப் பொதுவில் நடிக்கும்
Theerththaavendru anbar elaam thozhap podhuvil nadikkum

தெய்வநடத்து அரசே என் சிறுமொழி ஏற்று அருளே!
Dheivanadaththu arasē y en sirrumozhi ētru arullē!

பார்த்த பொழுதிலும் – நினைத்த பொழுதிலும் – படித்த பொழுதிலும் – ஒருவர் (இறைவன் புகழைப்) படித்த பொழுது பக்கத்தில் நின்று கேட்ட பொழுதிலும் – விரும்பி மனத்தில் கொண்டு உணர்ந்த பொழுதிலும் – இழுத்த பொழுதிலும் – பிடித்துக் கொண்ட பொழுதிலும் – கட்டி அணைத்துக் கொண்ட பொழுதிலும் – இவற்றுக்கு எல்லாம் தித்திக்கும் இனிமையான கரும்பு போன்றவனே.

என் உடல் வேர்வை கொள்ளவில்லை
என் உயிர் மயங்கவில்லை
நன்றாக பழுத்த சுவைபொருந்திய பழமே!
உண்மை அறிவு ஆனந்தம் ஆகியவற்றை விளக்கும்படியான
கருணை பொருந்திய அமிர்தம் போன்றவனே!

"பரிசுத்தம் ஆனவனே" என்று அடியார்கள் எல்லாம் தொழச் சிற்றம்பலத்தில் தெய்வநடனம் ஆடும் அரசனே! என்னுடைய சின்ன வேண்டுகோள் மொழிகளைக் கேட்டு எனக்கு அருள் செய்வாயாக!

Even if I should see, think or read,

Even if I should discern with earnestness,

Even if I should drag, catch and embrace For all thee,

O Sugar cane which is delightful to the taste!

(The body) perspires not;

The soul bewilders not;

O ripe sweet mellow Fruit!

O Ambrosial Grace which expounds (the three attributes of the Lord viz.,) existence, Knowledge and bliss!

O Holy One! so the devotees worship Thee;

O Pre-eminent One of Divine Dance at the Public Hall!

Please entertain my utternances trivial, and bestow grace.

**(66)**

இறைவன் அன்பு வடிவானவன்; அருள் வடிவு ஆனவன்; இன்ப வடிவானவன்; நினைத்தாலே தித்திக்கும் தன்மை உடையவன்; யார் எப்படி நினைக்கிறார்களோ அந்த உருவில் தோன்றுவான்; அவன் காட்சி கண்கொள்ளாக் காட்சி. அவன் பேரில் அருளாளர்கள் நல்ல தோத்திரப் பாடல்களைப் பாடியுள்ளார்கள். அவற்றைக் கேளுங்கள். அவை சிந்தையில் தித்திக்கும்; வாயால் பாடினால் வாய் தித்திக்கும்; கேட்டால் செவியில் தித்திக்கும், இறைவனைப் பாடும் பாடல்களே பாடல்கள்; அவற்றை அன்போடு பாடலாம். இறைவன் அருளைப் பெறலாம்.

## அருள் விளக்கே – ARULL VILLAKKE

| | | | |
|---|---|---|---|
| அருள்விளக்கே<br>Arullvilakkē | | அருள்சுடரே<br>arullsudarē | அருள்ஜோதிச்சிவமே<br>arulljōdhichsivamē |
| அருள்<br>Arull | அமுதே<br>amuthē | அருள்நிறைவே<br>arullniraivē | அருள்வடிவப்பொருளே<br>arullvadivapporulle |

இருள் கடிந்து என் உளம்முழுதும் இடம்கொண்டபதியே
Irul kadindhu en ullammuzhuthum idamkonndapathiē

என்அறிவே என்உயிரே எனக்கு இனிய உறவே
Enarrivē enuyirē enakku iniya urravē

மருள்கடிந்த மாமணியே மாற்றுஅறியாப் பொன்னே
Marullkadindha maamanniyē maartruarriyaap ponnē

மன்றில் நடம் புரிகின்ற மணவாளா எனக்கே
Mandril nadam purigindra mannavaallaa enakkē

தெருள்அளித்த திருவாளா ஞானஉரு வாளா
Therullalliththa thiruvaallaa gnaanauru vaallaa

தெய்வநடத்து அரசே நான் செய்மொழி ஏற்று அருளே
Deivanadaththu arasē naan seymozhie ētru arullē

அருள் ஆகிய விளக்கே! விளக்கினுள் தோன்றும் சுடரே! அச்சுடரில் தோன்றும் ஒளியே! அருள் ஆகிய அமிர்தமே! நிறைவான அருளே! அருள் வடிவில் இருக்கும் பொருளே! அறியாமையைப் போக்கி என் மனம் முழுவதும் இடம் ஆகக் கொண்ட தலைவனே!

என்னுடைய அறிவே! என்னுடைய உயிரே! எனக்கு இனிமையான உறவே!

மயக்கத்தைப் போக்கிய பெரிய மணியே!

மாற்று அறிய முடியாத பொன்னே!

(தில்லையில்) சிற்றம்பலத்தில் நடனம் ஆடுகிற தலைவனே!

எனக்குத் தெளிவான அறிவு தந்த செல்வமே!

ஞானமே உருவாக இருப்பவனே!

தெய்வத்தன்மை பொருந்திய நடனம் ஆடுகிற தலைவனே!

நான் பாடும் பாடல்களை ஏற்றுக் கொண்டு அருள்புரிவாயாக!

O Light of Grace! lustre (of light) of grace! and ray (of light) of grace!

O SIVAM! O Ambrosial Grace!

O Grace fullness! O Grace Form Objective!

O Lord who pervades my mind entire, dispelling ignorance!

O my knowledge! O my Soul!

O delightful Kind!

O precious Gem that effaces illusion!

Intelligence (Tamil Lexicon)

O Gold of the finest quality!

O Lord dancing in the Hall!

O Lord who blessed me with intelligence!

O Embodiment of spiritual, knowledge!

O Pre-eminent One of Divine Dance at the Public Hall!

Please accept my poetry and bestow grace.

**(67)**

## அருளார் அமுதே – ARULLAAR AMUTHE

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அருளார் | அமுதே | | சரணம் | சரணம் | |
| Arullaar | amudhe | | sarannam | sarannam | |
| அழகா | அமலா | | சரணம் | சரணம் | |
| Azhaga | amalaa | | sarannam | sarannam | |
| பொருளா | எனை | ஆள் | புனிதா | சரணம் | சரணம் |
| Porullaa | enai | aall | punithaa | sarannam | sarannam |
| பொன்னே | மணியே | | சரணம் | சரணம் | |
| Ponne | manniye | | sarannam | sarannam | |
| முடியா | முதலே | | சரணம் | சரணம் | |
| Mudiyaa | muthale | | sarannam | sarannam | |
| முருகா | குமரா | | சரணம் | சரணம் | |
| Murugaa | Kumaraa | | sarannam | sarannam | |
| வடிவேல் | அரசே | | சரணம் | சரணம் | |
| Vadivel | arase | | sarannam | sarannam | |
| மயிலூர் | மணியே | | சரணம் | சரணம் | |
| Mayillur | manniye | | sarannam | sarannam | |

| | | | |
|---|---|---|---|
| அடியார்க்கு<br>Adiyaarkku | எளியாய்<br>elliyaay | சரணம்<br>sarannam | சரணம்<br>sarannam |
| அரியாய்<br>Ariyaay | பெரியாய்<br>periyaay | சரணம்<br>sarannam | சரணம்<br>sarannam |
| கடியாக்<br>Kadiyaak | கதியே<br>kathiye | சரணம்<br>sarannam | சரணம்<br>sarannam |
| கந்தா<br>Kanthaa | சரணம்<br>sarannam | சரணம்<br>sarannam | சரணம்<br>sarannam |

Saranam means refuge; it may be translated into "I take refuge unto Thee"; but for the sake of brevity and clarity, 'Hail' has been given)

O rare Ambrosical Grace! Hail Hail!

Thinking me as befitting you accepted me; O pure One! Hail!

Gold! O Gem! Hail! Hail!

O the Beginning that has no end! Hail Hail!

O Muruga! O Kumara! Hail Hail!

O Lord with sharp lance! Hail Hail!

O Gem riding a Peacock! Hail Hail!

O Rare and Great! Hail Hail!

O Beautitude that cannot be rejected! Hail Hail,

O Skanda! Hail! I take refuge (Unto Thy Feet!)

## *(68)*

அன்பர்களே திருஞான சம்பந்தரைப் போற்றுவீராகுக! உழவாரப்படை கொண்டு தொண்டு செய்த திருநாவுக்கரசரைப் போற்றுவீராக! பித்தா எனத் தொடங்கி இறைவனைப் பாடிய சுந்தரர் திருத்தாளை வணங்குவீராக! என்பையும் உருக்கும் திருவாசகம் அளித்த வாதவூரராகிய மாணிக்கவாசகரை வணங்குவீராகுக! ஒட்டின் இடத்திலும் பற்று இல்லாத பட்டினத்தடிகளின் திருவடிகளைப் போற்றுவீராகுக. திருமந்திரம் எனும் ஞானசாத்திரத்தை அருளிய திருமூலரை வணங்குவீராகுக. சிவஞானம் பெறுவீராகுக! உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்

அலகில் சோதியன் அம்பலத்து ஆடுபவன் – நடராசப் பெருமானுடைய திருவடிகளை வாழ்த்தி வணங்குவீர் ஆக. ஓம் நமச்சிவாய, ஓம் சிவாயநம சிவசிவ சிவசிவ சிவ.

## திருச்சிற்றம்பலம்

| | | | | |
|---|---|---|---|---|
| முத்திநெறி<br>Muththinerri | அறியாத<br>arriyaadha | மூர்க்கரொடு<br>mūrkkarodu | முயல்வேனைப்<br>muyalvenaip | |
| பத்திநெறி<br>Paththinerri | அறிவித்தும்<br>arriviththum | பழவினைகள்<br>pazhavinaigall | பாறும்<br>paarum | வண்ணம்<br>vannnnam |
| சித்தமலம்<br>Siththamalam | அறுவித்துச்<br>arruviththuch | சிவமாக்கி<br>chivamaakki | எனை<br>enai | ஆண்ட<br>aannda |

அத்தன் எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே<br>
Aththan enakku arulliyavaarru aarperruvar achchōvē.

முத்தி வழியை அறியாத மூர்க்ரோடு பயிற்சி செய்கிறேன்; அத்தகைய எனக்குச் சிவபெருமான் பக்தி வழியை அறிவித்தான்; பழவினைகள் கெட்டு ஒழியுமாறு செய்தான்; ஆணவ மலத்தையும் நீக்கினான். சிவத்தன்மை அடையுமாறு செய்தான்; என்னை ஆட்கொண்டான். அத்தலைவன் எனக்கு அருளிய முறையை வேறு யார் பெறுவார்கள்?

I toiled with the ignorant who know not the way of salvation; He taught me the way of pious devotion; He released me of the 'old deeds'; He also put an end to the primal impurity; He transformed me into Siva; He took me into His fold; He is my Lord; Who else can get this way of blessing bestowed on me?

## திருச்சிற்றம்பலம்

| | | | | |
|---|---|---|---|---|
| நெறியல்லா<br>Nerriyallaa | நெறிதன்னை<br>nerrithannai | நெறியாக<br>nerriyaaga | நினைவேனைச்<br>ninaivēnaich | |
| சிறுநெறிகள்<br>Sirunerrigal | சேராமே<br>sēraamē | திருவருளே<br>thiruvarulle | சேரும்<br>sērum | வண்ணம்<br>vannnnam |
| குறியொன்றும்<br>Kurriyondrum | இல்லாத<br>illaadha | கூத்தன்தன்<br>kuththanthan | கூத்தைஎனக்கு<br>kuththaienakku | |

அறியும் வண்ணம் அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே.<br>
Arriyum vannam arulliyavaarru aarperruvaar achhovē.

பொய் எல்லாம் மெய் என்று புணர் முலையார்போகத்தே
Poy ellaam mey endru punnar mulaiyaar pōgaththē

மையல் உறக் கடவேனை மாளாமே காத்து அருளித்
Maiyal urrak kadavēnai maallaamē kaaththu arullith

தையல் இடம் கொண்ட பிரான் தன்கழலே சேரும் வண்ணம்
Thaiyal idam konnda pirraan thankazhalē sērum vannnnam

ஐயன் எனக்கு அருளியவாறு ஆர் பெறுவார் அச்சோவே.
Aiyan enakku arulliyavaarru aar perruvaar achchovē.

மண்ணதனில் பிறந்து எய்த்து மாண்டு விழக் கடவேனை
Mannnnadhanil pirrandhu eyththu maanndu vizhakkadavēnai

எண்ணம் இலா அன்புஅருளி எனைஆண்டிட்டு என்னையும்தன்
Ennnnam ilaa anbuarulli enai aanndittu ennaiyum than

சுண்ண வெண்ணீறு அணிவித்துத் தூய்நெறியே சேரும்
Sunnnnavennnneerru anniviththuth thuynerriyē sērum

வண்ணம்
vannnnam

அண்ணல் எனக்கு அருளியவாறு ஆர் பெறுவார்அச்சோவே.
Annnnal enakku arulliyavaarru aar perruvaarachchove.

பஞ்சாய அடி மடவார் கடைக் கண்ணால் இடர்ப்பட்டு
Pagnjaaya adi madavaar kadaik kannnnaal idarppattu

நெஞ்சாய துயர்கூற நிற்பேன் உன்அருள் பெற்றேன்
Negnjaaya thuyarkura nirrpen unarull pettrren

உய்ஞ்சேன் நான் உடையானே அடியேனை வருக என்று
uygnjen naan udiyaane adiyenai varuga endru

அஞ்சேல் என்று அருளியவாறு ஆர் பெறுவார் அச்சோவே
Agnjel endrru arulliyavaarru aar perruvaar achchove.

வெந்து விழும் உடற்பிறவி மெய்என்று வினைபெருக்கிக்
Vendhu vizhum udarrpirravi meyendrru vinaiperukkik

கொந்து குழல் கோல்வளையார் குவிமுலைமேல் வீழ்வேனைப்
Kondhu kuzhal kolvallaiyaar kuvimulaimel veezhvenaip

பந்தம் அறுத்து எனையாண்டு பரிசுஅற என்துரிசும்
Pandham arruththu enaiyanndu parisuarra en thurisum

அறுத்து
arruththu

அந்தம் எனக்கு அருளியவாறு ஆர் பெறுவார் அச்சோவே.
Andham enakku arulliyavaarru aar perruvaar achchove.

தையலார் மையலிலே தாழ்ந்துவிழக் கடவேனைப்
Thaiyalaar maiyalile thaazhndhuvizhak kadavenaip

பையவே கொடுபோந்து பாசம் எனும் தாழ்உருவி
Paiyave kodupondhu paasam enum thaahuruvi

உய்யுநெறி காட்டு வித்திட்டு ஓங்காரத்து உட்பொருளை
Yyyunerri kaattu viththittu ongkaaraththu utporullai

ஐயன் எனக்கு அருளியவாறு ஆர் பெறுவார் அச்சோவே.
Aiyan enakku arulliyavaaru aar perruvaar achchove.

சாதல் பிறப்பு என்னும் தடஞ்சுழியில் தடுமாறிக்
Saadhal pirrappu ennum thadagnchuzhiyil thadumaarik

காதலின் மிக்கு அணியிழையார் கல்வியிலே விழுவேனை
Kaadhalin mikku anniyizhaiyaar kalviyile vizhuvenai

மாதொரு கூறு உடையபிரான் தன்கழலே சேரும் வண்ணம்
Maathoru kurru udaiyapiraan thankazhale serum vannnnam

ஆதி எனக்கு அருளியவாறு ஆர் பெறுவார் அச்சோவே
Aadhi enakku arulliyavaarru aar perruvaar achchove.

செம்மை நலம் அறியாத சிதடரொடும் திரிவேனை
Semmai nalam arriyaadha sidhadarodum thirivenai

மும்மை மலம் அறுவித்து முதலாய முதல்வன் தான்
Mummai malam arruviththu mudhalaaya mudhalvan thaan

நம்மையும் ஓர் பொருளாக்கி நாய்சிவிகை ஏற்றுவித்த
Nammaiyum or porullaakki naaysivigai etrruviththa

அம்மை எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே.
Ammai enakku arulliyavaarru aarperruvar achchove.

## திருச்சிற்றம்பலம்

திருவருள் நலத்தை அறியாத மூடரோடு நான் திரிந்து கொண்டு இருந்தேன்; ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று மலங்களையும் நீக்கினான், முதல்வனும் தலைமை உடையவனும் ஆகிய இறைவன். அவன் திருவடியை வணங்கும் எம்மையும் ஒரு பொருள் ஆகக் கருதினான்; நாயைச் சிவிகையில் ஏற்றுவிப்பது போல என்னையும்

சிறப்புச் செய்தான் – இங்ஙனம் எனக்கு அருளிய இத்தன்மையை வேறு யார் பெறுவார்கள்.

I wanderd with the ignorant who know not the way of salvation. He severed me of the three fold impurities. He is the Beginning and the primal One. He made me, the worshipper of His Feet, a worthy one - like a dog placed into a palanquin. Thus He blessed. Who else can get this way of Blessing bestowed on me?

## (69)

கண் போன்றது கல்வி. இவ்வுலக வாழ்விற்கு மிகவும் இன்றியமையாதது கல்வி. கல்வியால் பெறும் நற்பலன் நல்லறிவு பெறுதல். ஞான அறிவு பெறுதல். அதனால் இறைஞானம் உண்டாகும். எனவே நாம் வாழ நம்மிடம் உள்ள எல்லாப் பிழையும் நீங்க நல்லறிவு, ஞான அறிவுபெற ஆண்டவனை வழிபடுவோம்.

| | | | | |
|---|---|---|---|---|
| *கல்லாப்*<br>Kallaap | *பிழையும்*<br>pizhaiyum | *கருதாப்*<br>Karuthap | *பிழையும்*<br>pizhaiyum | *கசிந்துஉருகி*<br>Kasindhurugi |
| *நில்லாப்*<br>Nillap | *பிழையும்*<br>pizhaiyum | *நினையாப்*<br>Ninaiyaap | *பிழையும்*<br>pizhaiyum | *நின்ஐந்தெழுத்தை*<br>NinAindhezhuththai |
| *சொல்லாப்*<br>Sollaap | *பிழையும்*<br>pizhaiyum | *துதியாப்*<br>Thudhiyaap | *பிழையும்*<br>pizhaiyum | *தொழாப்பிழையும்*<br>Thozhaappizhaiyum |
| *எல்லாப்*<br>Ellap | *பிழையும்*<br>pizhaiyum | *பொறுத்தருள்வாய்*<br>Porruththarullvaay | *கச்சிஏகம்பனே*<br>Kachchi Eagambane | |

அறிவு நூல்களைக் கற்காத பிழை – இறைவனை நினைத்து மனம் உருகி நில்லாத பிழை – இறைவனது திருநாமம் ஆகிய திருவைந்தெழுத்தைச் சொல்லாத பிழை – இறைவனாகிய உன்னைத் துதிக்காமல் இருந்த பிழை – உன்னைத் தொழாத பிழை – இவ் எல்லாப் பிழைகளையும் பொறுத்து எனக்குக் கருணை செய்வாயாக! கச்சி ஏகம்பப் பெருமானே!

# BRIEF LIFE SKETCHES OF EIGHT GREAT SAINTS

**Compilation : Dr. Avvai Natarajan**

## திருஞானசம்பந்தர்

சைவ சமயத்தைத் தமிழ்நாட்டில் நிலைநாட்டியவர்களுள் முதன்மையானவர் திருஞானசம்பந்தர். சம்பந்தர் தஞ்சை மாவட்டத்திலுள்ள சீர்காழி என்னும் ஊரில் பிறந்தவர். இவர் தந்தை சிவபாத இருதயர். தாயார் பகவதியார். இவர் கி.பி. ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர்.

மூன்று வயதுக் குழந்தையாக இவர் இருந்தபோது ஒருநாள் சீர்காழியிலுள்ள தோணியப்பர் கோயிலின் குளத்தில் குளிக்கச் சென்ற இவர் தந்தை, இவரையும் தோள்மீது எடுத்துச் சென்றார். மகனைக் குளத்தின் கரையில் அமர வைத்து, நீரில் இறங்கித் தந்தையார் மூழ்கிக் குளித்தார். தந்தையாரைக் காணாத குழந்தை தவிப்பால் அழுதார். சம்பந்தரைத் தம்முடைய ஞானக் குழந்தையாக ஏற்கச் சிவபெருமான் திருவுளங் கொண்டார். அம்மையப்பராக அங்கு தோன்றி, உமையம்மையைக் கொண்டு ஞானப்பால் ஊட்டுவித்தார். ஞானப்பால் உண்டதனால் இவர் ஞானசம்பந்தராகத் தெய்வீகக் குழந்தையானார்.

நீரில் மூழ்கியிருந்த தந்தையார் வெளியே வந்ததும், குழந்தையின் வாயிலிருந்து பால் வழியக் கண்டார். "உனக்கு பால் கொடுத்தது யார்?" என்று கேட்ட தந்தைக்கு விடையாகத் "தோடுடைய செவியன்" என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடினார். அப்பாடலின் வாயிலாகத் தமக்குப் பால் கொடுத்தது அம்மையப்பரே என்பதைத் தம் தந்தையார் உணரச் செய்தார்.

மூன்று வயதுக் குழந்தை, இசையோடு இனிய தமிழில் பாடி இறைவனைப் போற்றிய அதிசயம் ஊர் முழுவதும் பரவியது. அந்நாள் முதல் திருஞானசம்பந்தர், தம் தந்தையார் தோள்மீது அமர்ந்தபடி சோழவள நாட்டிலுள்ள எல்லாச் சிவாலயங்களையும் வணங்கித் தேவாரத் திருப்பதிகங்களைப் பாடி வந்தார். 'நாளும் இன்னிசையால் தமிழ் வளர்த்த ஞானசம்பந்தர்' என்ற புகழ் பெற்றார்.

அந்நாளில் மதுரையை ஆண்ட மாறவர்மன் என்னும் பாண்டிய மன்னன் சமண சமயத்தைச் சார்ந்திருந்தான். அவனுக்கு ஏற்பட்ட வெப்பு நோயை, இவர் திருநீறு பூசிக்

குணப்படுத்தினார். பாண்டிய நாட்டில் சைவ சமயத்தைப் பரவச் செய்தார்.

பல தலங்களையும் தரிசனம் செய்து கொண்டு, சம்பந்தர் சீர்காழிக்குத் திரும்பினார். அப்போது அவருக்கு வயது பதினாறு. திருநல்லூர்ப் பெருமணம் என்ற ஊரிலிருந்த நம்பியாண்டார் நம்பிகள் என்பவரின் மகளை இவருக்குத் திருமணம் செய்விக்க, உறவினர்கள் ஏற்பாடு செய்தனர்.

சம்பந்தர் மணமகளுடன் திருக்கோயிலை அடைந்தார். கல்லூர்ப் பெருமணம்' என்ற பதிகம் பாடினார். பாடியதும் ஒரு பெரிய சோதி தோன்றியது. அந்நாள் வைகாசித் திங்கள் மூலநாள். சம்பந்தர், 'காதலாகிக் கசிந்து' என்ற பதிகம் பாடினார். திருமணத்துக்கு வந்திருந்த அனைவருடனும், தாமும் தம் துணைவியாருடன் அங்கு தோன்றிய அருட்சோதியோடு கலந்தார்.

இவர் பாடிய தேவாரத் திருப்பாடல்கள் பன்னிரு திருமுறைகளுள் முதல் மூன்று திருமுறைகளாகத் தொகுக்கப் பெற்றுள்ளன.

## THIRUGNAANA SAMBANDAR

The first to establish Saivism in Tamil Nadu was Thirugnaana Sambandar. He was born in Sirkazhi in Thanjavoor District. His father was Sivapada Hirudayar. His mother was Bagavathiar. He lived during the early part of the seventh century A.D.

Sambandar was only three years old when one day his father carried the child on his shoulder to bathe in the tank at Lord Thoniappar Temple in Sirkazhi. The father left his little son sitting on the banks of the tank and went to bathe. Even after some time the child did not see his father coming out of the water. He started weeping. Lord Siva decided to have Sambandar as his divine child. The Lord appeared before the child as his father and mother. Through Umai he gave the child the divine milk of wisdom. From then on the child came to be known as Thiru Gnaana Sambandar.

The father then came out of the water and saw milk trickling from the lips of the child . The father asked the child, "Who gave

you milk ?". In reply the child began to sing the song "Thodo udaiya sevian ". Through the song the child made his father understand that Lord Ammaiappar had fed him.

The news of the child singing in praise of the Lord spread all over. From that day Gnaana Sambandar sitting on the shoulders of his father, visited all the temples of Tamil nadu and sang the Thevara songs. He became famous.

Thiru Gnaana Sambandar also performed some miracles with the help of the Lord.

In those days Maravarman, the Pandya king, ruled Madurai. He was a Jain. He suffered from high fever. Gnaana Sambandar cured him of his disease by simply smearing the holy ash. He also won over the Jain monks in discussion. Thus he spread Saivism in the Pandya Kingdom.

After visiting the various temples Sambandar returned to Sirkazhi. He was then sixteen years old. His relatives made arrangements for his marriage.

Sambandar entered the temple along with his bride. He sang the Padigam "Kallur Perumanam ". It was Moola nakshatra of the month of Vaikasi. Sambandar then sang the Padigam "Kathalagi Kasinthu ". At the end of the song a bright light appeared. Sambandar along with his birde and others present merged with the light of Siva.

There are twelve Thirumurais. The first three contain the Thevarams of Gnaana Sambandar.

## திருநாவுக்கரசர்

'தொண்டுக்கு அப்பர்' என்று பாராட்டப் பெறும் திருநாவுக்கரசர், தமிழ்நாட்டில் திருவாமூரில் பிறந்தவர். இவர் தந்தை புகழனார், தாயார் மாதினியார், தமக்கையார் திலகவதியார். திருநாவுக்கரசரின் இயற்பெயர் மருள் நீக்கியார்.

இவர் சைவ வேளாண் குடியிற் பிறந்தவர். இளமையிலேயே பெற்றோரை இழந்தார். திருவாமூருக்கு அருகிலுள்ள பாடலிபுத்திரத்தில் (திருப்பாதிரிப் புலியூர்)

வாழ்ந்திருந்த சமண சமயத் துறவிகளை அணுகிச் சமண சமய சாத்திரங்களைக் கற்றார். தாமும் சமணரானார். தருமசேனர் என்ற பட்டம் பெற்றார்.

தம்பி சமணரானதை அறிந்த திலகவதியார் வருந்தினார். தம் ஊருக்கு அருகில் உள்ள திருவதிகையில் கோயில் கொண்ட சிவபெருமானிடம் முறையிட்டார். திலகவதியாரின் வேண்டுகோளை நிறைவேற்ற இறைவன் ஓர் அற்புதத்தை நிகழ்த்தினார்.

பாடலிபுத்திரத்தில் இருந்த தருமசேனரைச் சூலை நோய் பற்றியது. பலவித மருந்துகளை அருந்தியும் அவ்வயிற்றுவலி தீரவில்லை. சமணர்களால் போக்க முடியாத வயிற்று வலியைத் திலகவதியார் திருநீறு கொடுத்து நீங்கச் செய்தார். திருவதிகைப் பெருமானின் திருவருள் திறத்தை உணர்ந்த நாவரசர், சிவபெருமானை வணங்கினார். தம் திருத்தொண்டராக இறைவன் ஏற்றுக் கொண்டு அருள் செய்தார். திருநாவுக்கரசர் "கூற்றாயினவாறு விலக்ககிலீர்" என்னும் தேவாரத் திருப்பதிகத்தை முதன் முதல் பாடித் தொழுதார். அன்று முதல் மருள்நீக்கியார் திருநாவுக்கரசராகி சைவத் தொண்டு புரிந்து வந்தார்.

அந்நாளில் காஞ்சிபுரத்தில் அரசனாக இருந்த சமண சமயத்தைச் சார்ந்த மகேந்திரவர்ம பல்லவன் இவர் மீண்டும் சைவரானதைக் கேள்வியுற்றான். இவரைச் சுண்ணாம்புக் காளவாயில் இட்டும், நஞ்சு கொடுத்தும், யானையின் காலில் இடறச் செய்தும், கற்பாறையில் கட்டிக் கடலில் தள்ளியும் எவ்வகையாலும் கொல்ல ஆணையிட்டான். அம்முயற்சிகள் யாவற்றினின்றும் இறைவன் திருவருளால் திருநாவுக்கரசர் உயிர் பிழைத்தார். இதனை அறிந்த பல்லவ வேந்தன் சமண சமயத்தைக் கைவிட்டான். சைவ சமயத்தைத் தழுவினான், திருப்பணிகள் பல செய்தான்.

திருநாவுக்கரசர் பல்வேறு திருத்தலங்களுக்கும் சென்று தேவாரம் பாடினார். அதிசயங்கள் பல நிகழ்த்தினார். கோயில்களை வலம் வரும் அடியவர்கள் வருந்தாதவாறு வழியில் முளைத்திருந்த புற்பூண்டுகளை உழவாரப்படை கொண்டு செதுக்கித் தொண்டாற்றினார்.

திருஞானசம்பந்தரின் சமகாலத்தில் வாழ்ந்திருந்த இவர், அவரால் 'அப்பரே'என்று அழைக்கப் பெற்றார். எண்பத்தோராண்டுகள் இனிது வாழ்ந்த அப்பர், தமிழ் நாட்டின் வட எல்லையில் இருந்த திருக்காளத்திக்குச் சென்றார். அங்கிருந்து திருக்கயிலையைத் தரிசிக்கப் புறப்பட்டார். ஒரு குளத்தில் மூழ்கி கயிலாயக் காட்சியைக் கண்டார். ஒரு சித்திரை மாதத்துச் சதயநாளில் "எண்ணுகேன் என் சொல்லி எண்ணுகேனோ" என்று தொடங்கி, "புண்ணியா உன் அடிக்கே போதுகின்றேன்" என்று பதிகம்பாடி இறைவன் திருவடி நீழலில் கலந்தார்.

இவர் பாடிய தேவாரப் பாடல்கள், 'நான்கு முதல் ஆறாந்திருமுறை' என்று மூன்று திருமுறைகளாகத் தொகுக்கப் பெற்றுள்ளன.

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பது அப்பரடிகளின் அருள் மொழியாகும்.

## THIRUNAVUKKARASAR

Thirunavukkarasar has been praised as "Appar for Service" . He was born in Thiruvamur in Tamil Nadu. His father was Pugazhanar. His mother was Mathiniar. His sister was Thilakavathiar. His birth name was Marul Neekiyar.

He belonged to the Saiva Vellala community. He lost his parents in his early years. He was brought up by his sister. He got in touch with Jain monks at Patalipuram (Thirupathiripuliyur) near Thiruvamur. He also studied the Jain sastras and finally he himself became a Jain assuming the Jain name Dharmasenar.

Thilakavathiar learnt that her brother had become a Jain. She appealed to Lord Siva at Thiruvathigai temple near her village. A miracle happened.

Dharmasenar was afflicted with a colic pain in the stomach. No medicine could cure him. He returned to Thilakavathiar, who gave holy ash and cured him of his colic disease . Now he realised the power of Lord Siva and bowed to Him. The Lord accepted him as His follower and blessed him. Marul Neekiar sang the first Padigam "Kootrayinavaru Vilakkakaleer". From that

day onwards he gained the name of Thirunavukkarasar meaning the 'King of speech' and spread Saivism.

Kancheepuram was then ruled by a Jain king named Mahendra Varma Pallavan . The king heard the news that Dharmasenar had gone back to Saivism. The king ordered his men to bring Dharmasenar to him by any means. First he put him in a lime kiln to burn him to death ; then he poisoned him; when he survived he was charged by an elephant ; lastly he was pushed into the sea with a heavy stone tied to his body. In all the trials the Lord blessed Thirunavukkarasar and he did not die. The Pallava King who came to know his greatness, gave up Jainism. He became a Saivite and did yeomen service to re-establish saivism in Tamil Nadu.

Thirunavukkarasar visited many Saiva temples and sang Thevaarams and performed many miracles.

He is a contemporary of Gnānasambandar. He was affectionately called "Appar" by Gnānasambandar. He lived for 88 years. He went to Thiru Kālahasthi to go to Kailās . He entered into a tank and had the glorious vision of Kailas. He attained the Lotus feet of the Lord on Sathayam day in the month of Chittirai, singing the Padigam "Punniyā un adikkaey pōduginren".

The songs of Appar are classified under three Thirumurais, namely fourth to the sixth. "Doing service" is the motto of Appar.

## சுந்தரர்

இறைவனைத் தோழமை உணர்வோடு உறவாடி, இனிய தமிழில் இசை பாடித் தொழுதவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

இவர் தமிழ்நாட்டிலுள்ள. திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூார் என்னும் ஊரில் பிறந்தவர். இவர் தம் பெற்றோர், சடையனார், இசை ஞானியார் என்னும் ஆதி சைவர் குலத்தோன்றல்கள். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் நம்பி ஆருரர். இவர் சம்பந்தருக்கும், திருநாவுக்கரசருக்கும் பிற்காலத்தில் வாழ்ந்தவர். இம்மூவரையும் 'தேவார மூவர்' என்று கூறுவது வழக்கம்.

திருமுனைப்பாடியை அந்நாளில் நரசிங்க முனையரையன் என்ற அரசன் ஆட்சி செய்திருந்தான். அவர் தம் வளர்ப்பு மகனாக எல்லாக் கலைகளையும் கற்று அரண்மனையில் நம்பி ஆரூரர் வளர்ந்தார். மணப்பருவம் அடைந்தார்.

திருமண நாளில் , இவரை தடுத்தாட்கொள்ளச் சிவ பெருமான் திருவுளங்கொண்டார். ஒரு முதிய அந்தணர் வடிவில் வந்து சுந்தரரைத் தம் அடிமை என்று வாதிட்டு வென்றார். அதனால், திருமணம் நின்றது. சிவபெருமானை முதலில் அறிந்து கொள்ளாத சுந்தரர், "பித்தா" என்று ஏசினார். இறைவனிடம் வன்மையாகப் பேசியதால் வன்தொண்டர் என்றும் பெயர் பெற்றார். ஏசிய சொல்லையே, முதலில் வைத்துப் "பித்தா பிறை சூடி" என்று தொடங்கி, இனிய தேவாரப் பதிகங்களைப் பாடினார்.

தென்னாட்டிலுள்ள பல சிவத்தலங்களுக்கும் சென்று வணங்கிப் பாட்டால் அருச்சனை புரிந்தார். திருவாரூர்க் கோயிலில், பரவையார் என்ற மங்கையைக் கண்டு காதல் கொண்டு திருமணம் புரிந்து கொண்டார்.

பரவையாருடன் சிலகாலம் வாழ்ந்த பின்னர், மீண்டும் தலயாத்திரை மேற்கொண்ட சுந்தரர், தொண்டை நாட்டில், சென்னைக்கு அருகிலுள்ள திருவொற்றியூரை அடைந்தார். அங்கு திருத்தொண்டு புரிந்திருந்த சங்கிலியார் என்னும் நங்கையைக் கண்டு மனம் பறிகொடுத்தார். சங்கிலியார் ஞாயிறு என்ற ஊரில் வேளாளர் குலத்தில் பிறந்தவர். தம்மைப் பிரியாது இருப்பதாக உறுதிமொழி கொடுத்தால், சுந்தரரை மணம் செய்து கொள்வதாகக் கூறினார். சுந்தரரும் அங்கிருந்த ஒரு மகிழ மரத்து அடியில் உறுதி கூறினார்.

திருமணம் நடந்தது; சில காலம் கழிந்தது; சுந்தரருக்குத் திருவாரூர்ப் பெருமான் நினைவு வந்தது; உடனே, திருவாரூருக்குப் புறப்பட்டார். .

உறுதிமொழி தவறியதால் சுந்தரர் தம் இரு கண்களையும் இழந்தார். திருவெண்பாக்கத்தில் கோயில் கொண்டிருந்த இறைவன் ஊன்றுகோலை உதவினார். காஞ்சிபுரத்து ஈசன் இடக்கண் பார்வையை அருளினார். திருவாரூரை அடைந்ததும் வலக்கண் ஒளியும் வந்தது.

தென்னிந்தியாவின் மேற்குக் கடற்கரைப் பகுதி, சேர நாடு என்னும் பெயர் பெற்றிருந்தது. சுந்தரர் காலத்தில் சேரமான் பெருமாள் என்ற சிவபக்தர் சேர அரசராக இருந்தார். இவர் சோழ நாட்டிற்கு வந்து, சுந்தரரைக் கண்டு நண்பரானார். இருவரும் பக்திப் பனுவல்களைப் பாடிப் பரவசமுற்றுச் சேரநாட்டுக்குச் சென்றனர்.

சேரநாட்டிலுள்ள திருவஞ்சைக்களம் என்ற தலத்து இறைவனை வணங்கிய சுந்தரர், " தம்மை அழைத்துக் கொள்ள வேண்டும்" என்று வேண்டினார்.

சுந்தரர் "தானெனை முன்படைத்தான்" என்ற பதிகம் பாடிக்கொண்டே திருக்கயிலையை அடைந்தார்.

"தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்" என்று தொடங்கிச் சுந்தரர் பாடியுள்ள திருத்தொண்டத் தொகையே, அறுபத்து மூன்று நாயன்மார் வரலாற்றைப் பாடும் பெரிய புராணத்திற்கு அடிப்படையாக அமைந்தது. பன்னிரு திருமுறைகளுள், சுந்தரர் தேவாரம் ஏழாந் திருமுறையாகும்.

## SUNDARAR

Singing devotional songs in chaste Tamil Sundarar worshipped God in the spirit of comradeship. As Saiva saints were referred to as 'Nāyanār' he came to be known as Sundara Moorthi Nāyanār.

He was born in a place known as Thirunaavalūr in Thirumunaipadi in Tamil Nadu. His parents Chadayanār and Isaignaniyār belonged to the early saivite lineage. He was named Nambi Arurar. He lived after Sambandar and Thirunavukkarasar. These three came to be known as "Thevara Moovar".

In those days Thirumunaipādi was ruled by a king called Narasingamunaiyarāyan. Nambi Arurar lived in his palace as his adopted son, learning all arts. He soon attained marriageable age.

On the day of the wedding Lord siva desired to free His devotee and appearing in the form of an aged brahmin, said that Sundarar was his slave ; because of this the marriage was

stopped. Sundarar who did not then know who the old brahmin was, called him a 'lunatic' (pithan); since he attributed this hard term to God, Sundarar came to be known as 'hard disciple' (Van Thondar). The term he used as (lunatic- பித்தா ) was the first word he used to sing the praise of God in his Thēvaarams.

He went to many saiva temples in Tamil Nadu and made his offerings. In the temple of Thiruvarur he met a girl called Paravayār, fell in love with her and married her.

He lived with her for some years and later continued his pilgrimage. He came to Thiruvotiyūr -a place near Madras, where he met a girl called Sangiliyār who was attending to temple duties and fell in love with her. She agreed to get married to Sundarar on the promise that he will not desert her. He agreed to this and gave his promise under the shade of a 'Mahila' Tree.

The wedding took place. Some years passed, Sundarar was reminded of Thiruvarur and he soon left.

Because he broke his promise he became blind. The Lord at Thiruvenpakkam gave him a stick for his use. The Lord at Conjeevaram gave him vision in his left eye. On reaching Thiruvārur the vision of his right eye was also restored.

The Western coast of South India was called Cherā country. During the time of Sundarar this was ruled by Cheraman Perumāl. This king came to the land of chola to meet Sundarar and befriended him. The King and Sundarar enjoyed singing devotional songs and they returned to the Chera country. There they went to a place called Thiruvanchai Kulam and Sundarar appealed to take him.

Singing the song "Thanennai munpadaithan", he became one with God.

The Song that Sundarar began with "Thillaivazh Anthanar tham Adiyārukkum Adiyēn" came as the prelude for the history of the sixty three Nayanmārs Periya Purānam.

The devotional songs of the Nayanmārs are known as the Twelve Tirumurais.

## மாணிக்கவாசகர்

'திருவாசகம்' என்னும் உருக்கமிகு தோத்திரப் பாடல்களை அருளிச் செய்தவர் மாணிக்கவாசகர். மதுரை மாநகருக்கு அருகில் உள்ள திருவாதவூரில் பிறந்தமையால் திருவாதவூரர் என்னும் பெயரைப் பெற்றிருந்தார்.

திருவாதவூரர் கல்வி கேள்விகளில் சிறந்தவர். எனவே, அந்நாளில் பாண்டிய நாட்டை ஆண்டிருந்த அரிமர்த்தன பாண்டியனின் அமைச்சராக விளங்கினார்.

ஒரு முறை தன் குதிரைப் படைக்கு வேண்டிய புதிய குதிரைகளை வாங்கி வருமாறு பாண்டியன் வாதவூரரிடம் நிறையப் பொன் கொடுத்து அனுப்பினான்.

வாதவூரரைத் தம் அடியவராக்கி அருளச் சிவபெருமான் திருவுளங்கொண்டார். திருப்பெருந்துறையில் அமர்ந்தார். குதிரை வாங்குவதற்காக அவ்வூர் வழியே சென்ற வாதவூரர் குருமணியைக் கண்டு வணங்கினார். சிவஞானம் பெற்றார்,"நமச்சிவாய வாழ்க! நாதன்தாள் வாழ்க!" என்று பாடத் தொடங்கினார். இதற்குச் சிவ புராணம் என்று பெயர். இதனைக் கேட்ட இறைவன், "இறைவன் புகழ் பாடும் இவ்வாசகம் மாணிக்கம் போல ஞான ஒளி வீசுவதால் உமக்கு மாணிக்கவாசகர் என்று பெயர் தந்தோம்" என்று பாராட்டினார்.

மாணிக்கவாசகர் தாம் கொண்டு வந்த பொருள்களை எல்லாம் திருப்பெருந்துறையில் ஒரு பெரிய கோயிலைக் கட்டுவதில் செலவிட்டார். இதனை அறிந்து சினங்கொண்ட அரசன் ஆட்களை ஏவி வாதவூரரை மதுரைக்கு அழைத்து வரச் செய்தான். மாணிக்க வாசகரைக் காவலில் வைத்துத் துன்புறுத்தினான்.

சிவபெருமான் திருவிளையாடல் புரியத் திருவுளம் கொண்டார். காட்டில் உள்ள நரிகளை எல்லாம் குதிரைகளாக மாற்றினார். தாம் ஒரு குதிரைச் சேவகனாகி அரண்மனைக்கு வந்தார். அரசனிடம் குதிரைகளை ஒப்படைத்தார். இதனால் மகிழ்ந்த மன்னவன் மாணிக்கவாசகரை விடுதலை செய்தான்.

இரவு வந்தது. பரிகள் (குதிரைகள்) எல்லாம் நரிகளாக மாறின. குதிரை லாயத்தில் இருந்த பிற குதிரைகளையும் கடித்துக் கொன்றன. மறுபடியும் காட்டுக்கு ஓடின.

இதனை அறிந்த அரசன் கடுங்கோபம் கொண்டான். மாணிக்கவாசகரை வைகை ஆற்றில், உச்சி வேளையில் சுடுமணலில் நிறுத்திப் பாறையைத் தலையில் ஏற்றிச் சுமக்கச் செய்யுமாறு கட்டளை இட்டான். அப்பொழுது இறைவன் ஆணைப்படி வைகையாற்றில் வெள்ளம் வந்தது. மாணிக்கவாசகரைத் துன்புறுத்தியோர் அவரை விடுத்து ஓடினர்.

வைகை ஆற்றின் உடைப்பை அடைப்பதற்கு ஊரார் எல்லோருக்கும் பங்கு பிரிக்கப்பட்டது ஊர் மக்கள் தத்தம் பங்கை அடைக்கத் தொடங்கினர். மதுரையில் பிட்டு விற்றுக் கொண்டிருந்த வந்தி என்னும் மூதாட்டியின் பங்கை அடைப்பதற்கு இறைவனே கூலி ஆளாக வந்தார். உடைப்பை அடைக்கும் பணியை மேற்பார்வை பார்த்து வந்த வேந்தன், பிட்டு வாணிச்சியின் கூலியாள் வேலை செய்யாமல் வீண்பொழுது போக்கியிருக்கக் கண்டான். மண் சுமந்த பெருமான் மீது பிரம்பால் ஓங்கி அடித்தான். அந்த அடி எல்லா உயிர்களின் மேலும் பட்டது. அக்கூலியாள் ஒரு கூடை மண்ணைக் கொட்டினார். உடனே மறைந்தார். அடைப்பும் அடைபட்டது. மாணிக்கவாசகரின் பெருமையை மன்னன் உணர்ந்தான். மன்னிப்புக் கேட்டு வணங்கினான்.

அமைச்சர் பதவியைத் துறந்து அடியவரான மாணிக்கவாசகர் தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு சிவத் தலங்களுக்கும் சென்று திருவாசகப் பாடல்களைப் பாடி இறைவனை, மனமுருகி வழிபட்டார். கடைசியில் சிதம்பரம் வந்து சேர்ந்தார்.

ஒரு நாள் நடராசப் பெருமான் அந்தணர் உருவம் கொண்டார். மாணிக்கவாசகரிடம் வந்து திருவாசகம் முழுவதையும் ஏட்டில் எழுதிக் கொள்ள விழைவதாகக் கூறினார். மாணிக்கவாசகரும் அவருக்காகத் திருவாசகப் பாக்கள் அனைத்தையும் பாடினார். பெருமானும் எல்லாவற்றையும் எழுதிக் கொண்டார்.

மறுநாள் காலை தில்லைவாழ் அந்தணர்கள் சிற்சபையில் பஞ்சாக்கரைப் படியில் ஓர் ஏட்டுச் சுவடி இருப்பதைக் கண்டார்கள். அதில் "மாணிக்கவாசகன் சொல்ல அழகிய சிற்றம்பலம் உடையான் கையெழுத்து" என்று எழுதி இருந்தது. இதனைக் கண்ட மாணிக்கவாசகர் தாம் பிறவிப் பயனைப் பெற்றதாகப் பெரு மகிழ்ச்சி கொண்டார்.

தில்லை வாழ் அந்தணர்கள், "இப்பாடல்களுக்கு பொருள் யாது?" என்று கேட்டனர். மாணிக்கவாசகர், "இப்பாடல்களுக்கு பொருள் நடராசப் பெருமானே!" என்று சுட்டிக்காட்டினார். காட்டியவாறே நடராசப் பெருமானுடைய திருவடிகளில் இரண்டறக் கலந்தார்.

மார்கழித் திங்களில் சைவர்கள் போற்றும் 'திருவெம்பாவை' மாணிக்கவாசகர் அருளிச் செய்த பக்திப் பணியாகும். "பாவை பாடிய வாயால் கோவை பாடுக!" என்று இறைவன் கேட்டுக் கொண்டதிற்கிணங்க "திருக்கோவையார்" என்னும் அகத்துறை இலக்கியத்தையும் மாணிக்கவாசகர் இயற்றினார் என்பர். திருவாசகமும், திருக்கோவையாரும், பன்னிரு திருமுறைகளுள் எட்டாந் திருமுறையாக விளங்குகின்றன.

## MANICKKAVAASAGAR

Manickkavaasagar gave us "Thiruvāchagam", a collection of soul stirring devotional songs in praise of the Lord. He was born in Thiruvathavur near Madurai. Therefore he is known as Thiruvāthavurar.

Thiruvathavurar was proficient in arts and other matters of importance and knowledge. So he became the minister of the ruler - "Ari Marthana Pandian".

One day, the King gave a large quantity of gold and asked Vāthavurar to purchase horses for the King's army.

The Lord decided to make Vāthavurar his disciple. He went as a guru under the shade of a "Kuruntha" tree near "Thiruperunthurai". Vāthavurar came by that way and prostrated before the sage. He got the blessings of the Lord, and got Siva Gnānam. He began to sing, "Nama Sivāya Vaazhga Nathanthāl

Vāzhga". This is called Siva Purānam. The songs of Thiruvachagam were considered gems and the Lord himself named him as Mānickavāsagar.

Mānickavāsagar had spent all the gold and constructed a big temple at Thiruperunthurai. The King came to know of this and got angry. He sent his men to bring Manickavasagar to Madurai and put him in prison. The Lord began to perform miracles. He changed all the jackals of the forest into horses and came as a servant to the palace. He entrusted the horses to the King. Then the king released Mānickavāsagar; at nightfall the horses returned to their former form of jackals and ran into the forest.

The King became angry. He ordered his men to place a heavy stone on the head of Mānickavāsagar and make him stand on the sands of the river Vaigai in the hot sun. The dry river ran into floods. The people ran here and there.

The people of Madurai were entrusted with the task of stopping the floods in the river. All the people started to do their work. The Lord Himself came as a servant on behalf of an old lady named "Vanthi" who was selling rice "Pittu". The King was supervising the works. He saw the servant of the old lady not doing his part of work. He was idling. So, the King whipped him. The stroke fell on all the people. The servant unloaded a basket full of sand and disappeared. The King realised the greatness of Mānickavāsagar and begged his pardon.

Mānickavāsagar gave up his ministership and travelled throughout Tamil Nadu. He visited various Siva temples. He sang the songs of Thiruvachagam in praise of the Lord. Finally he came to Chidambaram.

One day Lord Natarājā appeared before Manickavasagar as a brahmin and said that he would write out all the Thiruvachagam songs on a palm leaf. Mānickavāsagar agreed and soon the job was completed. The next day the people found the palm leaves at the feet of Lord Nataraj. At the end of the work it was written "written by a man living in Chitrambalam as narrated by Mānickavāsagar". Vasagar was very happy indeed.

The brahmins at Thillai asked for the meaning of the songs. Vāsagar pointed to Lord Natarājā and said that the songs referred to Him. So saying he became one with the Lord.

In the month of December the songs of the famous "Thiruvembavai" are sung by people all over. These were followed by Thirukkovaiyār composed by him again at the request of the Lord in praise of the King. Both Thiruvachagam and Thirukovaiyār form the eighth Thirumurai in Saivite Literature.

## அருணகிரிநாதர்

முருகப் பெருமானின் பெருமையை சந்தத்தோடு பாடும் திருப்புகழ் பாடல்களை இயற்றியவர் அருணகிரிநாதர். இவர் காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்திருந்த வெண்காடருக்கும் முத்தம்மையாருக்கும் மகனாகப் பிறந்தவர். திருவண்ணாமலையிலிருந்த தமக்கையார் ஆதிலக்குமியின் ஆதரவில் வளர்ந்தார்.

கல்வி கேள்வியில் வல்லவரான அருணகிரியார், இளமையில் தீய ஒழுக்கத்துக்காளானார். அதனால் வறுமை வாய்ப்பட்டதுடன் தொழுநோயால் தொல்லையுற்றார். மனம் வாடிய அருணகிரியார் உயிரை விட முடிவு செய்து ஒரு நாள் திருவண்ணாமலைக் கோபுரத்தின் உச்சியில் நின்று கீழே குதித்தார். முருகப் பெருமான் கீழே விழாது இவரைத் தடுத்தாட் கொண்டருளினார். தம் அருட்கோலத்தை அருணகிரியார்க்கு காட்டிய முருகபெருமான், "முத்து என்று தொடங்கிப் பாடுவாயாக" என்று அடியடுத்துக் கொடுத்து மறைந்தார். "முத்தைத் தரு பத்தித் திருநகை" என்று தொடங்கி நூற்றுக்கணக்கான திருப்புகழ்ப் பாக்களைப் பாடி அருணகிரிநாதர் இறைவனைத் தொழுது வந்தார்.

அப்பகுதியை அந்நாளில் ஆண்டுவந்த பிரபுட தேவன் என்ற மன்னன் அருணகிரியாரின் அன்புத் தொண்டன் ஆனான். அவ்வூரில் வாழந்திருந்த சம்பந்தாண்டன் என்னும் பெயருடைய தேவி பக்தனுடன் அருணகிரிநாதர் கடவுள் உண்மையை உணர்த்தும் வாதப் போர் புரிந்து வென்றார்.

இந்திய நாடு முழுவதும் தீர்த்த யாத்திரை சென்று திருப்புகழ் பாடி வந்தார்.

அட்டமா சித்திகளில் வல்லவரான அருணகிரிநாதர், தம் உடலைத் திருவண்ணாமலைக் கோபுரத்தே கிடத்தி, ஒரு கிளியின் உடலில் புகுந்து விண்ணுலகிற் பறந்து சென்றார். அவரது உயிரற்ற உடலைக் கண்ட மன்னன் அவர் கூடுவிட்டுக் கூடு பாய்ந்ததை அறியாது, அவரது உடலுக்கு எரியூட்டி ஈமக் கிரியைகளைச் செய்வித்தான்.

கிளியின் உருவில் திரும்பி வந்த அருணகிரிநாதர், நடந்ததை அறிந்து ஒருவாறு ஆறுதல் பெற்று, அவ்வுருவில் இருந்து கொண்டே"கந்தர் அநுபூதி" யைப் பாடினார். அவ்வுருவிலேயே திருத்தணிகைக்கு பறந்து சென்று ஓர் ஆனி மாதம் மூல நட்சத்திரத்தில் முருகப்பெருமானின் திருவடியில் அமர்ந்து பெருவாழ்வு பெற்றார்.

கந்தர் அலங்காரம், வேல் விருத்தம், மயில் விருத்தம், சேவல் விருத்தம், திருவகுப்பு முதலிய பக்திப் பனுவல்களையும் அருணகிரிநாதர் இயற்றியுள்ளார். இவர் கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

## ARUNAGIRINATHAR

The glory of Lord Muruga, sung in rhythmic metre is called Thirupugazh. These devotional songs were composed by Arunagirināthar.

He was the son of Venkādar and Muthammai. He grew up at Thiruvannamalai at his sister Adilakkumi's house and under her care.

Proficient in general knowledge and other subjects. Arunagiriyār fell a prey to a life of bad habits. He contracted leprosy and lost his wealth. All this made him quite upset and he decided to put an end to his life. One day he climbed the gopuram of the temple at Thiruvannamalai and jumped down. Lord Muruga went to his rescue by embracing him. He showed himself to Arunagiriyār and asked him to sing songs. In fact he gave the first word for a series of songs to be sung by him. That was the beginning of Arunagiriyār's singing hundreds of Thirupugazh songs in praise of God. The lines "Muthaitharu Paththi thirunakai" lead all the rest.

In those days, that part of India was ruled by King Prabutadevan and he became Arunagiriyar's fond disciple. A Devi Bhaktha named Sambandandan lived in that country. Arunagiriyār argued with him regarding the truth of God and won him over. Arunagiriyar undertook pilgrimages to all sacred shrines in Tamil Nadu.

Arunagiriyar had gained eight types of siddhies or attainments of spiritual skills. He is said to have laid his body in the temple gopuram at Thiruvannamalai and took the form of a parrot and flew away. Seeing his lifeless body, and not knowing that he had taken another form, the King got his body cremated.

On return in the form of a parrot, Arunagiriyār, learnt of what had taken place and comforting himself he continued to remain in that form. He composed "Kanthar Anupoothi". He flew to Thiruthanikai in the parrot form and in the month of Āni (Tamil month) and on Moola star. he sat at the feet of Lord Muruga and attained eternal life. Kandar Alankaram. Vel Viruththam, Mayil Viruththam, Seval Viruththam, Thiruvakuppu are other religious works composed by Arunagiriyar. He lived in the 15th century A.D.

### தாயுமானவர்

"எல்லோரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறு ஒன்று அறியேன் பராபரமே" என்பன போன்ற இனிய அறக்கருத்துக்களை எளிய தமிழில் அனைவரும் மனங்கொள்ளும் வகையில், கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் பாடியவர் தாயுமான அடிகளார் ஆவர்.

தமிழ்நாட்டில் தஞ்சைக் கடற்கரையிலுள்ள வேதாரண்யம் (திருமறைக்காடு) என்னும் ஊரைச் சேர்ந்த கேடிலியப்ப பிள்ளை, கெசவல்லி அம்மையார் என்னும் தம்பதியருக்கு இரண்டாம் மகவாகத் தாயுமானார் பிறந்தார் என்பர்.

கேடிலியப்பர் அக்காலத்தில் திருச்சிராப்பள்ளியில் ஆட்சி புரிந்த விசயரங்க சொக்கநாத நாயக்கரின் அரசியல் அலுவலராகப் பணியாற்றினார். திருச்சிராப்பள்ளியில், மலைக் கோட்டையில் கோயில் கொண்டுள்ள இறைவன்

பெயரான தாயுமானவன் என்ற பெயரையே அவர்தம் இளைய மகனுக்கு வைத்தார்.

தாயுமானார் திருச்சியில் சிற்றம்பல தேசிகரிடம் கல்வி பயின்றார். மலைக் கோட்டைச் சிவபெருமானிடத்தும், திருவானைக்கா அகிலாண்ட நாயகியிடத்தும், இளமைக்கால முதலே பக்தி பூண்டு வழிபட்டு வந்தார். மலைக்கோட்டையில் வாழ்ந்த மோனகுரு இவரது ஞானாசிரியர் ஆவார்.

தாயுமானவர் மட்டுவார்குழலி என்னும் மங்கை நல்லாளை மணந்து, சிறிது காலம் இல்வாழ்க்கையை நடத்தினார். அவர்களுக்குக் கனகசபாபதி, என்னும் ஆண்மகவு பிறந்தது. மகவு பிறந்த சில ஆண்டுகளில், மட்டுவார்குழலி அம்மையார் மறைந்தார். தாயுமானாருடைய தமையனார் சிவசிதம்பரம் கனகசபாபதியை வளர்க்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

இதற்குச் சற்று முன்பே கேடிலியப்பரும் மறைந்தார். அவர் வகித்துவந்த அரசுப் பணியைத் தாயுமானார் ஏற்க நேர்ந்தது. ஏற்ற சிறிது காலத்தில் அரசர் மறைந்தார். அவருக்கு மகப்பேறின்மையால், ஆட்சியை அரசி மீனாட்சி அம்மையார் ஏற்றார். அரசில் ஆளுநராகத் தாயுமானார் பெரும்பொறுப்பில் இருந்த போதும், அவர் மனம் தத்துவ நாட்டத்திலேயே உலக விருப்பில்லாமல் அமைந்தது.

தாயுமானாரின் துறவு மனம் அறிந்த மீனாட்சியார் அவர் தனியாகச் செல்ல இசைந்தார். தாயுமானார் தமிழ் நாட்டிலுள்ள புண்ணியத் திருத்தலங்களுக்கு யாத்திரை சென்றார்.

பிறகு இராமநாதபுரத்துக்குத் திரும்ப வந்து தம்முடைய வாழ்க்கையின் இறுதிப் பகுதியை நிட்டையில் கழித்து, கி.பி. 1783 ஆம் ஆண்டு மண்ணுலக வாழ்வை நீத்தார். அவருடைய திருமேனி, இராமநாதபுரத்துக்கு அருகேயுள்ள இலக்குமிபுரம் என்னும் ஊரில் சமாதி வைத்துத் திருக்கோயில் எழுப்பப் பெற்றிருக்கிறது.

# THAYUMANAVAR

" I know not anything other than

Wishing the happiness of all "

Simple but inspiring words full of meaning such as the above were sung by Thayumānavar Adigal who lived in the 18th century.

Thayumanavar is believed to have been born to Kediliyappa Pillai and Kesavalli Ammal who belonged to Vedaranyam (Thirumaraikadu) in Thanjavur District of Tamil Nadu.

Kediliyappar worked in the court of Vijayaranga Chockanātha Nāyakar in Thiruchirapalli. It is no wonder that Kediliyappa Pillai gave his son the name of the God Thayumānavar at Malaikottai temple, Thiruchirapalli.

Thayumānavar had his early education from Chittampala Desikar at Thiruchirapalli. He worshipped at the temples Malaikottai Siva and Thiruvānaikka Akilāndanayaki from his very young age. Monaguru, who lived at Malaikottai, was his religious teacher.

Thayumanavar got married to a girl called Mattuvarkuzhail and lived happily for some years. They had a son by name Kanagasabapathy. Within a few years of the son's birth, the mother passed away and the duty of bringing up Kanagasabapathy was taken over by Thayumānavar's brother, Sivasithamparam. Kediliyappar also died soon after and Thayumānavar had to perform the duties assigned to him. It so happened that the King also died within a short time. Since the King had no children, the queen Meenakshi took up the reign of the kingdom. Thayumānavar was a governor in the kingdom but his mind was bent on philosophic thoughts. He lost interest in worldly life. The queen, who knew the mind of Thayumānavar, agreed to relieve him of his official duties. Thayumānavar was now free to go on pilgrimage to many shrines in Tamil Nadu.

He returned to Ramanathapuram and spent his last year in penance. He died in 1783. His body lies buried in Lakshmipuram in Ramnad District. A temple had been built there in his memory.

## பட்டினத்தார்

"வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபில், சைவமும் தமிழும் தழைக்கச் செய்த அருளாளருள், பட்டினத்துப் பிள்ளையார் தனியிடம் பெறுகின்றார்.

பட்டினத்தார் காவிரிப்பூம்பட்டினத்தில் வணிகக் குடியில் பிறந்தவர். சிவநேயர்–ஞானகலை அம்மையார், பட்டினத்தாரின் பெற்றோராவர். திருவெண்காடர் என்பது பட்டினத்தாரின் பிள்ளைத் திருநாமம்.

ஐந்து வயதிலேயே தந்தையை இழந்த பட்டினத்தார். கலைநலம் பலவும் வாய்க்கப் பெற்ற வணிகராய்த் திகழ்ந்தவர். தக்க வயதில் சிவகலை அம்மையாரை மணந்தார். இவர்களுக்கு மகப்பேறில்லாக் குறையைப் போக்கத் திருவிடைமருதூர் கோயிற் குருக்களின் வாயிலாக இறைவன் வழங்கிய குழந்தையைத் தன் மகவாக வளர்த்தார். அப்புத்திரனுக்கு் மருதப்பிரான் என்று பெயரிட்டிருந்தார்.

மருதப்பிரான் பதினாறு வயதில், திரை கடலோடித் திரவியம் தேடி வந்தார். தேடிவந்த பொருளைத் தந்தையாரிடம் கொடுத்துவிட்டு, சிறு பெட்டியைத் தாயாரிடம் அளித்து மறைந்தார்.

மகனை எங்கு தேடியும் காணாத பட்டினத்தார், தம் மனைவி கையில் இருந்த சிறுபெட்டியைத் திறந்து பார்த்தார். அதனுள் காதற்ற ஊசியொன்றும், ஓலைச்சுருளில் "காதற்ற ஊசியும் வராதுகாண் கடை வழிக்கே" என்றெழுதப்பட்ட வாசகத்தையும் கண்டார். அதுவே அவர் துறவு பூண்பதற்குரிய உபதேச மந்திரமாயிற்று.

பட்டினத்தார் முற்றுன் துறந்தாரேனும், தம் தாயார் மறைந்த போது, தாயாருக்குரிய ஈமக்கடன்களை பரிவோடும் உருக்கத்தோடும் அழுது புலம்பிச் செய்தார்.

தாய்க் கடமை முடிந்ததும் பன்னாடுகளுக்கும் வலம் வந்து, பக்திப்பனுவல்களைப் பாடியருளினார். அவ்வாறு பாடிய திருவிடைமருதூர் மும்மணிக்கோவை, திருக்கழுமாலை (சீர்காழி) மும்மணிக் கோவை, கோயில் நான்மணிமாலை, கச்சித் திருவந்தாதி, திருவேகம்ப மாலை, கச்சித் திருவகவல்,

திருவொற்றியூர்த் தொகை முதலிய அருட்பாடல்கள் பதினோராந் திருமுறையில் சேர்ந்துள்ளன. பட்டினத்தார் இறுதியாகத் திருவொற்றியூரடைந்து சிலகாலம் இருந்தார். ஒருநாள், அவ்வூர்ப் புறத்தே மாடு மேய்க்குஞ் சிறுவர்களோடு வழக்கப்படி விளையாடுவது போல விளையாடி, அங்கிருந்த ஒரு குழியில் அமர்ந்து தம்மை மணலுஞ் செடி கொடிகளுங் கொண்டு மூடச் செய்து, இறைவனோடு இரண்டறக் கலந்து, அங்கேயே சிவலிங்க உருவாய் விளங்கப் பெற்றார். திருவொற்றியூரில் பட்டினத்தார் சமாதி நிலை கொண்ட கோயில் இன்றும் உள்ளது.

"எல்லாப் பிழையும் பொறுத்து அருள்வாய் கச்சி ஏகம்பனே!" என்று தென்னாப்பிரிக்கத் தமிழ் மக்கள் அன்றாடம் உருகிப் பாடும் திருப்பாடல் பட்டினத்தார் அருள் மொழியாகும்.

## PATTINATHTHAAR

For generations Saivism and Tamil were nurtured and popularised by many writers. Among them Pattinathu Pillaiyar takes the place of pride of place.

Pattinaththaar was born at Kaviripoompattinam. He belonged to a family of traders. Sivaneyar was his father, and his mother's name was Gnanakalai Ammaiyar. Thiruvenkadar was the name given to Pattinaththaar in his early days.

Pattinaththaar lost his father at a very young age of five years. He became a trader by profession but learnt all arts; at the proper age he got married to Siva Kalai. For long they did not have children; later, through the blessings of the chief priest of ThiruvidaiMaruthur temple. God gave them a child to be adopted as their own. This child came to be called Maruthapiran.

Maruthapiran, in his sixteenth year, crossed seas and took up trade. He gave all his earnings to his father and a small trunk to his mother and disappeared. The parents searched in vain for their child. When they opened the trunk they found a needle without its eye, and a palm leaf. A line of verse was written on the palm leaf. On it was written that in the final analysis even a useless needle will not go with you in your last journey. This made Pattinaththaar take to ascetic life.

Even though he gave up worldly life he was there at his mother's death to attend the cremation of her body with great grief and lamentation.

After this, he went on pilgrimage to many places and composed many religious songs. ThiruvidaiMaruthur Mummanikovai, Thirukazhumaalai (Seerkazhi) Mummanikovai, Koyil Nānmanimālai, Kachchithiruvanthathi, Thiruvegamba Maalai, Kachchithiruvākaval, Thiruvottiyurthokai are some of his works. These are included in the 11th Thirumurai.

*யஃா்ள், ஃஷ்ஷேஃஃள் ஸ்ாஃடிார் யூள்ஹின் ஃபோ ஷ்ூார் ;ாள்ா ிளைா் ஃைொோஃள்ஃ பமோ ர்ஷி,ூமே ;ா ஷேஃீள்ஃ ளி ;ா டூ. ,ா ல்ஹோோர் ஃைொ ிாஸ்ாள்ர் ூஷ்ர்ள்ாமே ஃபோ ஃஃூமே ஃ ஸ்ூ ஃஷ்ளைஃா பி. யுாமே ,ா ூமேஃர்ஃார் ;ளைா ஃள்ஹோர்ூமெ 'ளை ஃஸ்ாள்ூஜ ஃஃபோ, ஷ்ாஃா்ஃ ஃபோ ிஏ்ய்ஃ யூஃ,ா ஃஃடிார்ூ ஃளைர் ஃபோ ,ா ஃஸ்ஸ்ாஃள்ார்ூமே;ா ிளைள்மெ ளி ஃ யூமேஃ;ாள்ா. ஜ 'ாமெஸ்ஷ்ா ூமேூஃ மேஃமொ ஃஃமேர்ஃ'ஜூஃ ர்ஷி.*

"Forgive us all our sins we pray Kachi Ekambane" a prayer that South African Tamils sing daily, was sung by Pattinaththar.

### வள்ளலார்

"அருட்பெருஞ் சோதி! அருட்பெருஞ்சோதி! தனிப்பெருங் கருணை! அருட்பெருஞ் சோதி!"

என்ற தாரக மந்திரத்தை அருளியவர், வள்ளலார் என வழங்கும் இராமலிங்க அடிகள். 1823 அக்டோபர் 5ஆம் நாள் அடிகளார் சிதம்பரத்திற்கு வடக்கே 20 கி.மீ. தொலைவிலுள்ள மருதூரில் தோன்றினார். அவ்வூர்க் கணக்குப் பிள்ளையாக விளங்கிய இராமையா பிள்ளைக்கும் சின்னம்மையாருக்கும் ஐந்தாவது மகவாக இராமலிங்கர் பிறந்தார்.

பிறந்த ஆறாம் மாதத்தில் தந்தையை இழந்தார். தமையனார் சபாபதி பிள்ளை ஆதரவில் சென்னையில் வளர்ந்தார்.

இளமையில் இராமலிங்கனார் தமையனார் வீட்டு மாடியில், தனிமையில், கண்ணாடி முன் அமர்ந்து திருத்தணிகை முருகப் பெருமானை வழிபட்டதுடன் கல்வியும் பயின்றார். இறைவன் அருளால் தேவார திருவாசகங்களைப் போல், பாக்களைப் பாடுந் திறன் பெற்றார். அவ்வாறு இவர்

பாடிய பாடல்கள் 'திருவருட்பா' எனும் பெயர் பெற்று, ஆறு திருமுறைகளாகத் தொகுக்கப் பெற்றுள்ளன.

சென்னையிலுள்ள கந்தகோட்டம், திருவொற்றியூர் ஆகிய தலங்களைச் சிறப்பித்துப் பாடிய வள்ளலார், 35 ஆம் வயது வரை சென்னை நக்ரில் இருந்தார். இராமலிங்கர் தம் தமக்கையார் உண்ணாமலை அம்மையாரின் மகள் தனகோடி அம்மையாரை மணந்தார். ஆயினும் இல்லறத்தில் ஈடுபடவில்லை.

1858 ஆம் ஆண்டில் சிதம்பரத்திற்குச் சென்று சிறிது காலம் நடராசப் பெருமானை வணங்கிப் பாக்கள் இயற்றியிருந்தார். தம் பெயரையே சிதம்பரம் இராமலிங்கம் என்று வழங்கச் செய்தார். 1865 ஆம் ஆண்டில் சிதம்பரத்திற்கு அருகிலுள்ள வடலூரில் சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தை நிறுவினார். சத்தியஞான சபை என்னும் பாட்டை ஏற்படுத்தினார்.

ஆன்ம நேய ஒருமைப்பாடு, சீவகாருணிய ஒழுக்கம் பிணியைப் போக்கும் அறச் சாலையாக சத்திய தருமச் சாலையை 1867 ஆம் ஆண்டு. தோற்றுவித்தார். அது இன்றுவரை வடலூரில் நடைபெற்று வருகிறது.

அமைதியை விரும்பிய அடிகளார் வடலூருக்குத் தெற்கே மூன்று கி. மீட்டர் தொலைவிலுள்ள மேட்டுக் குப்பத்தில் 'சித்திவளாகம்' என்ற திருமாளிகையை அமைத்து 1870 ஆம் ஆண்டு முதல் அதில் வசித்திருந்தார்.

30–1–1874 தைப்பூச நாள் இரவில் சித்திவளாகத்தில் கூடியிருந்த அன்பர்களுக்கு அறிவுரையும் கூறித் தமது திருவறைக்குள் நுழைந்து கதவைத் தாழிட்டுக் கொண்டு அருட்பெருஞ் சோதியில் இரண்டறக் கலந்து சித்தி பெற்றார்.

'மரணமில்லாப் பெருவாழ்வு' பெற்ற வள்ளலாரின் சமரச சன்மார்க்க நெறி, கடந்த நூறாண்டுகளாக உலகெங்கும் தமிழர் வாழும் இடங்களில் எல்லாம் சாதி சமய வேறுபாடிகளைக் கடந்து நன்கு பரவியுள்ளது.

## VALLALAR

Saint Rāmalinga Adigalār popularly known as Vallalār, gave us the Mantra of

"Arutperumkarunai! Arutperumjothi!"

Thaniperumkarunai! Arutperumjothi!"

Adigalar was born in Marudur about 20 Km north of Chidambaram on the 5th of October 1823. He was the fifth child of his parents. His father was Ramiah Pillai and his mother was Chinnammai.

When he was only six months old Ramalinganar lost his father. He was brought up by his elder brother Sabapathy Pillai.

In his tender age, Ramalingar retired to his upstair room in his brother's house and sitting before a mirror he worshipped Lord Muruga. He was gifted with divine power to gain knowledge. By God's grace he got proficiency in singing songs like Thevaram and Thiruvachagam. The songs of Vallalar are known as "Thiru Arupta". These devotional songs have been classified under six Thirumurais.

Vallalar who sang in praise of the Lord of Thiruvottiyur and Kantha Kottam lived in Madras upto his 35th year.

Ramalingar had an elder sister named Unnamalai Ammaiyar. She had a daughter by name Dhanakoti Ammaiyar. Ramalingar was married to Dhanakoti. Though married Ramalingar was not involved in marital life.

In the year 1858 Vallalar went to Childambaram. He lived there for some time and composed songs in praise of Lord Nataraja. He came to be known as Chidambaranm Ramalinga,. In 1865 he founded the Samarasa Suddha Sanmarga Sangam in Vadalur near Chidambaram. He built a temple known as Sathya Gnāna Sabhai. From 1872 he started the practice of workshipping 'Jothi' (light) on Poosam Day- in the Tamil month of Thai (January).

Vallalar preached the oneness of soul and kindness to all living beings in the world. In 1867 he founded the Sathya Dharma Salai at Vadalur. It is functioning even today.

Adigalār wanted peace everywhere. He built a place of worship at Mettukuppam three kilo metres south of Vadalur.

On January 30, 1874, Thai Poosam day, he exhorted the people assembled there. Then he entered his room. and bolted the door within. Then he is believed to have united with the "Jothi" (Light).

Vallalār attained "death-less life". His principle and teachings of equality and oneness of all is followed through-out the world where Tamils live. His teachings transcend religious and caste barriers.

# பின்னிணைப்பு

# SUPPLEMENT

## With rendering in English : C. Kuppusamy

Adigalar wanted peace everywhere. He built a place of worship at Mettukuppam three kilo metres south of Vadalur.

On January 30, 1874, Thai Poosam day, he exhorted the people assembled there. Then he entered his room. and bolted the door within. Then he is believed to have united with the "Jothi" (Light).

Vallalar attained "death-less life". His principle and teachings of equality and oneness of all is followed through-out the world where Tamils live. His teachings transcend religious and caste barriers.

ஓம்

சிவமயம்

# சிவ வழிபாடு
# SIVA VAZHIPADU

## 1. விநாயகர் துதி
## Vinayagar Thudhi

இறைவன் எங்குமிருக்கிறான். அவனில்லாத இடமே இல்லை. நம்மைப் படைத்தவனை நாம் வணங்க வேண்டியது நம் கடமை. சித்திவிநாயகனைத் தொழுதுவிட்டு எந்தச் செயலையும் தொடங்குவது நம் மரபு. முன்னவனை முதலில் தொழுவோம்.

God is everywhere. Is there a place where He is not?. Is it not then our duty to worship our Creator? Make it a practice to worship Vinayaka before you undertake anything because He is the primal one.

## 2. உலகெலாம் (பெரியபுராணம்)
## Ulagelām

இறைவன் ஒருவன். அவனை முழுமையாக அறிவதோ உணர்வதோ முடியாது. அம்பலத்தில் ஆடும் அந்த ஆனந்தக் கூத்தன் அகிலத்திலுள்ள அனைத்து உயிர்களையும் ஆட்டுவிக்கிறான். அவனின்றி ஓரணுவும் அசையாது.

God is one. Can we perceive Him easily? Know then that it is the Lord who dances in Ambalam who activates all life. Nothing, even the minutest particle, ever moves without His command.

## 3. விண்ணப்பம் (வள்ளலார்)

## Vinnnappam

*அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்சோதி*
*தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி.*

எல்லாம்வல்ல அருட்பெருஞ்ஜோதி அற்புதக் கடவுளே! இது தொடங்கி எக்காலத்தும் சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய தடைகளாகிய சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள் என்பன வற்றின் ஆசார சங்கற்ப விகற்பங்களும், வருணம் முதலிய உலகாசார சங்கற்ப விகற்பங்களும், எங்கள் மனதில் பற்றா வண்ணம் அருள் செய்தல் வேண்டும். சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லட்சியமாகிய ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை எங்களுக்குள் எக்காலத்தும் எவ்விடத்தும் எள்ளளவும் விலகாமல் நிறைந்து விளங்கச் செய்வித்தருளல் வேண்டும். எல்லாமாகிய தனிப்பெருந்தலைமை அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே! தேவரீர் திருவருட் பெருங்கருணைக்கு வந்தனம்! வந்தனம்.

Hail Thee, O most Gracious Light and of unique compassion!

Thou who art the Gracious Light and the Wonder of Wonders, grant us our prayer. Lead us out of such disturbing obstacles as differing faiths and professions, castes and creeds and social divisions. Bless us and guide us, Oh Lord in our quest for the True Path which we realise is the basis of Universal brotherhood. We prostrate before Thee and beg Thee to grant us Thy Grace, Oh Lord who art the only True Light.

## 4. ஞானசம்பந்தர் தேவாரம் – தோடுடைய செவியன்

## Thodudaya seviyan

நினைக்கும் வடிவில் இறைவன் வருவான். எல்லாம் அவன் வடிவங்கள். இதயமே அவன் கோயில். அன்பை வளர்த்தால் ஆண்டவன் வசப்படுவான். என் உள்ளம் கவர்ந்த கள்வனல்லவா அவன்!

Thou, Oh Lord art the thief who hath stolen my heart, I shall make my heart your shrine. I know Thou wouldst appear in the form I visualise for art Thou not all forms? Lord I shall develop my devotion to capture Thee.

## 5. திருநீற்று மகிமை – மந்திரமாவது நீறு

## Mandhiram āvadhu neeru

*சிவனை வணங்குபவர்கள் போற்றும் புனிதச் சின்னம் பூசும் திருநீறு. எல்லோரும் முடிவில் பிடி சாம்பலாவர் என்பதை நினைவு படுத்துவது திருநீறு. அது செருக்கழித்துச் சிந்தையிலே யாக்கை நிலையற்றது என்ற எண்ணத்தைப் பதித்துமனிதர்களைப் புனிதர்களாக்குகிறது.*

Why do the Saivites treat the ash which they smear on the foreheads as sacred? Does it not remind them that their bodies too will one day be reduced to ashes? Hence, it is the sacred ash that provokes spiritual thinking and prepares us for Thy Realisation ultimately.

## 6. தந்தையார் போயினார்

## Thandayār poyinār

*அழியும் உடலுக்காக அச்சப்படுவதேன்? இன்று நாமிருக்கிறோம். நம்மைச் சேர்ந்தவர்களிருக்கிறார்கள். இதற்கு முன் இருந்தவர்களெங்கே? சிந்தித்தால் சித்தம் தெளியும். நெஞ்சே அஞ்சாதே! திருவாரூரானைத் தொழுவாய்.*

Why show concern for this body which you know is perishable. We are here today and so are those related to us but where are those who were here before us? Dwell on this thought and clarify your mind. What need is there for fear if you but worship Him who resides in Arur.

## 7. ஐந்தெழுத்தின் பெருமை – காதலாகி

## Kadhalāgi

*திருவைந்தெழுத்து என்று சொல்லப்படும் 'சிவாய நம' என்பதே பஞ்சாட்சர மந்திரம். சிவனே உனக்கு வணக்கம்*

என்பது அதன் பொருள். நந்தி உரைத்த அந்த மந்திரத்தை ஜெபித்தால் நலம் சேரும். நாடியது கை கூடும்.

What is the mystic word Panjatchara? It is formed by the five letters that constitute the Siva Mantra. - na, ma, si, va, ya. "Oh Lord Siva! I make my humble prostrations to Thee," is its meaning. Utter this mantra with faith, all success shall be yours and you shall be blessed with His Grace.

## 8. திருநாவுக்கரசர் தேவாரம் – கூற்றாயினவாறு

## Kootrra inavāru

மலரால் உன்னைப் பூசிக்க மறந்ததில்லை. மனமுருக்கும் இறைவுணர்வுத் தமிழ்ப் பாடல்களைப் பாடாமலிருந்ததில்லை. நன்மையிலும் தீமையிலும் உன் நினைவை இழந்ததில்லை. வீரட்டானத்திலுறை அம்மானே என் நோய் தீர்க்க வேண்டும்.

Oh Lord did I forget to worship Thee with flowers? Did I cease to sing Thy sacred songs with heartfull devotion? Whether in pain or sorrow, or in good times or bad times, did I ever forsake Thee? Why then this great pain and suffering? Oh Lord please remove this affliction.

## 9. கருவுற்ற நாள்

## Karuvutra Naall

அன்னை வயிற்றிலே அடியேன் கருவாய் உருவான நேரத்திலிருந்து உன்னைக் காண நெஞ்சம் துடித்தேன். திருவொற்றியூரிலும் திருஆலவாயிலும் திருஆரூரிலும் இருக்கும் கச்சி ஏகம்பனே கருணைபுரிவாய்.

From the moment I was conceived, from the time I began my life as an embryo, I have had this longing to realise Thee. Thou who resideth in Tiruvotriyur, Alavay and Arur as well as in Kanchi, O, Ehambara! please take pity on me and show me Thy compassion.

Who lives on for ever? Why think of attachment or possession when this life is like a bubble on water? Where am I? Do I require answers to these questions? Yes, Then I must repeat the mystic Namasivaya, So must you; it will give us all life everlasting.

## 15. தலையே நீ வணங்காய்

## Thalaiye Nee Vannangāiy

உண்டு உறங்கி இறப்பதற்கா உடலெடுத்தோம்? அவன் தந்த உடலை ஆலயமாக்க வேண்டாமா? அசுத்தப்படுத்தலாமா. ஐம்புலன்களையும் அவன் சேவைக்கே பழக்குவோம். தேடியும் காணமுடியாத சிவனை என் தெளிந்த சித்தத்திலே கண்டுவிட்டேன்.

Is it the object of our being born only to eat, sleep and to perish? Must we not make this body God has given, a temple for Him to reside in? Must we desecrate it? Let us use every part of this body for His service only. Having done this and having attained enlightenment, I have found within, Lord Siva who was once sought and never found.

## 16. ஐயினால் மிடறு

## Aiyinal Midarru

பயிற்சியால் உடலை வலிமைப்படுத்துகிறோம். வலிமை யுள்ள உடலில் உயிர் எத்தனை நாள் தங்குகிறது! நேற்று இருந்தான் இன்று இறந்தான் என்ற நிலை. இந்நிலை வருமுன்னே மனம் கரைந்து உடல் குழைந்து தினமும் அந்தச் சிவபெருமானின் திருவடிகளை வணங்கு.

Through exercise you are making your body strong, but how long does life remain within such a body? Have you not heard people say, "He was here yesterday but today he is no more". This is the present situation. Before you too reach such a state, why not with deep devotion and humility worship the feet of Lord Siva ?

## 17. படைக்கலமாக

## Padaikkalamaaga

*தில்லைச் சிற்றம்பலத்துத் தெய்வமே, இன்றல்ல இதற்கு முன் பிறவிகளிலும் நான் உன்னைத் தொழுதவன். நீ வெறுத்தாலும் விலகாதவன். உன்னைத் தொழுதவன். தூய திருநீறு அணிந்தவன். உன்னையே அடைக்கலமாகக் கொண்டவன்.*

Oh Lord of Thillai Chittrambalam, I have worshipped Thee not only in this birth but in the previous one as well. Even if thy doth despise me, I shall not leave thee. I have been thy worshipper. I wear thine pure ash over my forehead. I have taken refuge in thee. Please accept me, Oh! Lord!

## 18. நற்பதத்தார்

## Nat padhaththar

*அறிவே . . . ஒளியே . . . அழியும் உடலில் அலையும் உள்ளத்தில் நிலையாக நின்றுவிட்ட நிர்மலனே . . . உன்னை விடுவேனோ? மாட்டேன் . . . விடமாட்டேன் . . . விலகவும் மாட்டேன்.*

Thou all knowing sacred sound! Thou hast decided to dwell in this imperishable body and within this wavering mind, do you think I will ever give thee up? No, I shall never give thee up nor will I let Thee move from here.

## 19. ஊனில் ஆவி

## Oonil āvi

*என் பேச்சிலும் மூச்சிலும் நீயே இருக்குமாறு என்னைப் பழக்கிக் கொள்வேன் . . . திருச்சிற்றம்பலத்திலிருக்கும் பெருமானே என்னை வானுலகில் நிலையாக வைத்துவிடு.*

I shall accustom myself to keep only Thee both in my speech and in my breath. Thou who dwelleth in the great hall of Chidambaram, please say thou wilt keep me in heaven permanently.

## 10. மாசில் வீணையும்

## Masil Veenaiyum

விறகிலே தீயாக, பாலிலே நெய்யாக, மணியிலே ஒளியாக, மறைந்திருக்கும் அவனை வாயாரப்பாடி மனமார நினைத்தால் தூயவராகி விடுவோம். தூய்மை பெற்றால் வாய்மை பெறுவோம். வாய்மையுள்ள இடந்தானே அவன் வாழும் ஆலயம்? நம் உள் மனதை ஆலயமாக்கினால் அல்லல் ஏது? அச்சம் ஏது?

Thou art like the fire in the wood, the ghee in the milk and the sound in the bell. Although Thou art in hidden I know if I can sing Thy praise and constantly meditate upon Thee I can attain purity. Godliness is purity. His temple shall be the pure heart. If I make my heart His home would I have fear or any trouble?

## 11. புழுவாய்ப் பிறக்கினும்

## Puzhuvaip pirrakkinum

மானிடராய்ப் பிறத்தலரிது. பெறற்கரிய பிறவியைத் தந்தவன் இறைவன். அவனை வாக்கால் வாழ்த்தித் தேகத்தால் தொண்டு செய்து சீலத்தால் சிவ நினைவோடு இருக்க வேண்டும். புழுவாய்ப் பிறந்தாலும் உன் நினைவை நான் மறக்காமலிருக்க வேண்டும்.

I do realise that to be born in this human form is a rare gift. It is Thy gift Oh Lord! My tongue shall sing Thy praises, this body shall serve Thee and my mind shall constantly remember Thy beloved name. Even if I am born a worm, grant me Oh Lord Thy one blessing which shall be to remember Thee always.

## 12. சொற்றுணை வேதியன்

## Sotrrunnaiy Vedhiyan

கல்தூணிலே கட்டி நம்மைக் கடலிலே தள்ளினாலும் நமச்சிவாய மந்திரம் நம்மைக் காத்துக் கரை சேர்க்கும். அகல்

விளக்கு இருளை நீக்க அகவிளக்கான நமச்சிவாய மந்திரம் அனைத்தையும் காக்க.

. A stone may be tied round my waist and I may be thrown into the sea; but I know by uttering Thy mystic mantra Namasivaya that will undoubtedly save me. Lamps dispel darkness but it is the repetition of the Siva mantra that will rescue all from ignorance and bless us with enlightenment.

## 13. ஓசை ஒலியெலாம்
## Osai Oliyelām

இறைவன் நீ ஓசையாக - ஓசை தரும் இன்பமாக, மலராக மணமாக - வானாக - வான் கடந்த வெளியாக - நீராக - நிலமாக காற்றாக - கனலாக பயன்படும் அத்தனையிலும் இருக்கிறாய், தித்திக்கும் உன் திருப்பெயரை சொல்லிச் சொல்லி மனத்திலுள்ள மாசுகளைக் கிள்ளிக் கிள்ளி உன் அருளை அள்ளி அள்ளி மகிழ்வதற்கு உன் திருவடியை என் தலைமீது வைத்தருளினாயே! திருவையாற்றுத் திலகனே!

Oh Lord you are in everything. Thou art the sound, Thou art the Light, Thou art flower amd Thou art the fragrance within, Thou art the wind, the outerspace, land and water - in Whatever we use Thou doth exist. Oh Lord of Thiruvaiaru Thou placed Thy sacred feet on my head which made me utter Thy sweet and holy name over and over and which made me pluck out all the evil from within and purified my mind. Oh Lord I want to revel in Thy Grace for ever and ever

## 14. தந்தையார் தாயார்
## Thanddhayar Thāyār

நிலையாக இருக்கப் போவது யார்? நீர்க்குமிழி வாழ்க்கையில் பந்தமேது? சொந்தமேது? நான் ஏது? கேள்விக் குறியாய் இருக்கும் வாழ்க்கை வட்டத்திற்கு விடைகாண நமச்சிவாய நாமத்தைச் சொல் நிலையான வீடு பெறலாம்.

## 20 எண்ணுகேன்

## Ennnugen

உன்னைத் தவிர வேறொன்றை நினைப்பதில்லை . . . பார்ப்பதில்லை . . . பற்று வைத்துக் கொள்வதுமில்லை . . . ஒன்பது வழி வாசல் வீட்டில் இருக்கும் நான் எல்லாக் கதவுகளும் மூடிக்கொண்டால் எப்படி மீள்வேன் . . . என் துணை யார் . . . நீயல்லவோ என் நீங்காத்துணை . . .

Oh Lord, other than Thee I think of nothing else, I see nothing else and have no attachment for anything else. I possess this body with nine doors. If I close all these doors how can I be saved? Who is my saviour? Art thou not that inseparable saviour?

## 21. சுந்தரர் தேவாரம் – பித்தா பிறை

## Pitha pirrai

உலகத்தைக் காக்கக் கங்கையைத் திருமுடியில் தாங்கிக் கொண்டாய் இறைவா, குறை தீர்க்கப் பிறையைச் சூடிக் கொண்டாய். இது உன்னுடைய வற்றாத கருணைக்குச் சான்று. உன்னை நாள்தோறும் வணங்கி வழிபடுவேன்.

Was it the act of a madman when Thou didst bear the Ganga on Thy matted hair to protect this earth? Likewise to save its people you accepted to place the crescent moon. No, this was not an act of madness but a sign of Thy everlasting compassionate nature. I shall therefore make it a habit of worshipping Thee daily.

## 22. திருத்தொண்டத்தொகை – தில்லைவாழ் அந்தணர்தம்

## Thiruthondth-thogai Thillai Vazh Andhdhannardham

எப்போதும் இறைவனின் நினைவுடன் இருப்பவர்களே திருத்தொண்டர்கள். இறைவன் அவர்கள் மனதில் உறைவதால் அவர்கள் நடமாடும் ஆலயங்கள் அவர்களை வழிபடுவதால்

வாழ்வு செம்மைப்படும். தொண்டர் புகழ்பாடி தூவெண்ணீறு அணியும் அன்பர்க்கெல்லாம் நான் அடிமை.

Those who always live with Thee in their thoughts are Thy true devotees. Since Thou resideth in their minds they are like mobile temples to Thee. If we follow them our spiritual lives will be enhanced. I shall therefore sing their praises and become their humble servant. If I serve Thy devotee am I not serving Thee?

## 23. பொன்னார் மேனியனே

## Ponnār Mēniyanē

*மழபாடியுள் மாணிக்கமே . . . உன்னை நினைக்காமல் நான் யாரை நினைப்பேன் . . . முப்புரம் எரித்த முக்கண்ணனே . . . உன்னைப் பாடிப்பாடிப் பரவசம் பெறுபவர்கள் பரலோகத்தில் வீடு பெறுவரே.*

Art Thou not the gem of Mazhapadi? Who else can I think of but Thee? Oh Lord with three eyes, Thou didst destroy three cities once. Those who keep singing Thy praises and obtain Divine happiness therefrom, shall be entitled to a place in Thy abode.

## 24. மற்றுப் பற்று

## Mattrup Patrru

வேறெதுவும் எனக்கு வேண்டாம். பற்றற்றேன் உன்னைப் பற்றினேன். இனிப் பிறவியில்லை என்ற தன்மையடைந்தேன். கற்றார் காமுறும் கறையூர் என்ற ஊரில் இருப்பவனே உன்னை நான் மறந்தாலும் என் நாவு நமச்சிவாய என்று கொண்டிருக்கிறதே . . .

I desire nothing else having given up all attachments. I am only attached to Thee. Therefore I have now reached a state of no rebirth. The learned turn to Karaiyur where Thou resideth. Even if I forget Thee, my tongue will continue to repeat Thy holy name Namasivaya.

## 25. வாழ்வாவது மாயம்
## Vazhvāvathu māyam

*மாயமாகி மண்ணாகி மறையும் மனிதவாழ்வு பயணம் முடிவதற்குள் நல்லதைச் செய்ய வேண்டும். ஆடல்வல்லானைப் பாடிய பாடல் வல்லார்கள் நாவுக்கரசரும் ஞானசம்பந்தரும். அவர்கள்பால் ஈர்க்கப்பட்டு எத்தனையோ சிவனடியார்கள் தந்து சென்ற பாடல்களைப் பாடினால் மேலுலக வாழ்வு நிச்சயம்.*

It is like a momentary spectacle when this body inevitably turns into dust and disappears. Before life's Journey ends must we not only do good deeds? Oh, Lord of Dance! Appar and Jnanasambandhar sung Thy praises with devotion and earnestness. Likewise if I were to sing their songs and of other devotees, will Thou not assure me of a place in heaven?

## 26. தானெனை முன்படைத்தான்
## Thanenai munpadaiththan

*ஊழி வெள்ளங்களில் மூழ்கிவிடாமல் நிற்பது திருநொடித் தான் மலையெனும் திருக்கயிலை. ஏழிசையில் இன் தமிழால் பாடிய பத்துப் பாடல்களைப் பரம்பொருளாம் சிவபெருமானுக்கு ஆழ்கடலே அறிவிப்பாய்.*

Supreme Lord, Thou art seated on Mount Kailas which defies all floods, Teach me, Oh, Lord! to recite Thy ten verses sung in Thy praise and in beautiful Tamil and to the music of the Yal.

## 27. திருவாசகம் (மாணிக்கவாசகர்) – நமச்சிவாய
## Namasivāya

*நீ வாழ்க . . . நின் தாள் வாழ்க . . . நொடிப் பொழுதும் என்னை விட்டு நீங்கா நிறைவே வாழ்க . . . போற்றுதலுக்கேற்றவன் நீ . . . புகழுக்கு ஏற்றவன் நீ . . . சாற்றுகின்ற வேதத்தின் சாரம் நீ . . . நெற்றிக் கண்ணனே . .*

நினைத்தால் இனிப்பவனே . . . புல்லாகிப் புழுவாகிப் பூண்டாகி எத்தனையோ பிறவி எடுத்த நான் பொன்னடியைக் கண்டு புனிதம் பெற்றேன். நாயினும் கேடாயிருந்த எனக்குத் தாயினும் மேலாகப் பரிந்து நலம் செய்தவனே நமச்சிவாயனே . . . நீ வாழ்க . . .

Praise be to Thee Oh Lord! Praise be to Thy holy feet. Praise be to Thee who shall not be separated from me even for one moment, Thou art the one to be worshipped. Thou art the One to be praised, Thou art the essence of the Vedas. Oh Thy three eyed one - the very thought of Thee fills me with sweetness.

I must have taken many births - as grass, as worm, as shrub and so on. Today I have discovered Thy golden feet and have attained bliss. For one who has been even more lowly than a dog Thou hast shown greater compassion than a mother and blessed me with Thy mercy and affection. Oh! Namasivaya all praise be to Thee!

## 28 நாடகத்தால்

## Nādagaththāl

அடியார் போல் நடித்தேன். அதன் விளைவு உன்னடிமையானேன். நிலைதடுமாறும் நெஞ்சம் உன்னை நினைக்காமலிருந்தது. அதைப் பழக்கினேன், உன்னைப் பாட; கவலைக்கடலைக் கடந்து கயிலையில் இருக்கும் கருணைக் கடலை நாட.

I acted as Thy devotee. Consequently I become Thy slave. My wavering mind failed to think of Thee - then I trained it. Why? To sing Thy praise and thereby cross the ocean of despair and ultimately reach Thee in Mount Kailas.

## 29. தரிக்கிலேன்

## Tharikkilēn

ஐம்பொறிகளால் இயக்கப்படும் இந்த உடல், ஒவ்வொரு பொறிக்கும் ஒரு உணர்ச்சி, தொட்டால் உணரும் உடல்.

சுவையறியும் வாய் . . . ஒளியறியும் கண்கள். மணம் உணரும் நாசி. ஒலிகேட்கும் செவிகள் . . . ஒரு பொறிக்கு ஆற்றல் குறைந்தாலும் வாழ்க்கை பயனில்லை. வாழ்க்கை நன்கு அமையப் பொறிகளாகிய புலன்களை ஆற்றல் குறையாமலும் மிஞ்சாமலும் வைத்துக் கொள்ளல் வேண்டும். முடியவில்லையே . . . போதும் வாழ்க்கை. என்னைக் கைவிடாதே . . .

This body has five sense organs, each ore has a function. The body feels the touch, the tongue perceives the taste, eyes are sensitive to light, the nose discerns smell, the ears receive the sound. If one of these functions fails,then this body loses its value. We have, therefore, to keep all the organs in a fit state. But this is too much for one because it is well nigh impossible. Therefore enough of this precarious life! Do not forsake me, Oh Lord.

## 30. பாரொடு விண்ணாய்

## Paarodu vinnnnaiy

விண்ணும் மண்ணும் விரிந்து நிற்பவனே . . . என் நிலையை யாரிடம் சொல்வேன் ? என்னை ஆட்கொண்ட அப்பனே! அருள் செய்ய ஏன் மறந்தாய். வாவென்ற என்னை அழைத்துவிடு . . . வதைபட முடியாது.

Thou who doth pervade the whole earth and heaven, to whom can I complain about my situation? Thou who hath rescued me, please bestow thy Grace. But Thou hast forgotten. Please say you will receive me. I can suffer no more.

## 31. சோதியே சுடரே

## Sothiye Sudare

கட்டுக்குள் அடங்கி கணக்குக்குள் ஒடுங்கித் தொட்டுவிடும் தூரத்தில் இல்லாமல் எல்லாமாய் எங்கெங்கும் எதிலுமாய் இருப்பவனே! உன்னை அழைக்கிறேன் . . . ஏனென்று கேள் . . . கயிலைக்கு வழி இது என்று சொல்.

Oh Lord I beseech Thee! I know thou art not limited nor art Thou restricted thou art so close to me because Thou art everything. Though art everywhere and Thou existeth in all things. Please answer my prayer, show me the way to heaven.

## *32. உற்றாரை யான் வேண்டேன்*

## Utrarai Yān Vēnnden

*சொந்தமெதற்கு . . . பந்தமெதற்கு . . . சிந்தையைக் கறைப்படுத்தும் புகழெதற்கு? குற்றாலத்துறையும் கூத்தாடும் பெருமானே . . . பற்று வைத்தேன் உன்னிடம், பாகாய் உருக வேண்டுகிறேன் . . .*

I desire no kith or kin. Is it necessary for praise to mar my mind? Oh Dancer in Kuttralam! I am only attached to Thee. Pray accept my devotion and love.

## *33. அம்மையே அப்பா . . .*

## Ammaiye Appa

*பொய்யைப் பெருக்கி மெய்யைச் சுருக்கும் என் இயல்பை நீ அறியாயா? சுத்தமில்லாத என் சித்தத்தில் வந்திருக்கும் சிவனே! உன்னைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டேன். என்னை விட்டு நீ எங்குப் போய் விடுவாய் . . . சாலப் பரிந்தருளும் தாயைப் போல அன்பாலெனை வளர்த்து அருளாலெனை வாழ்வித்து ஆனந்தத் தேனைச் சொரிந்தாயே உன்னை நான் விடுவேனா ? . . .*

Lord Thou knowest that once I indulged in lies and distortion of truths. This has been my nature. Showing Thy Beneficence thou didst decide to dwell in this impure body. Now I have Thee in my hold - Thou canst not leave me - where will Thee go? Having protected me like a loving mother, having showed me Thy Grace with which I developed and having tasted Divine bliss, do you think I shall ever let Thee go ?

## 34. நானேயோ தவம் செய்தேன்

## Naneyo Thavam Seiythen

என் தவமா எனக்கு உன்னைத் தந்தது. தித்திக்கும் தேனமுதம் போன்ற உன் திருநாமத்தைச் சொன்னேன். என்னிடம் நீயாக வந்து நெஞ்சில் புகுந்தாய் . . . அருள் புரிந்தாய். ஊன் பொருந்திய உடலில் உயிர்வாழும் வாழ்க்கை எதற்கு இனி எனக்கு . . .

Do you think I attained Thy Grace through penance? I uttered Thy sacred name which is like elexir, sweet as honey. Then Thou didst answer my call and took residence in my heart and granted me Thy Grace. Hence, what need is there for me to continue with this life in this body?

## 35. பிணக்கில்லாத

## Pinnakkiladha

முற்பிறவியில் செய்த நற்கருமங்கள் – இப் பிறவியில் நம்மை ஏற்றம் பெற வைக்கும். தீய கருமங்கள் துன்புறுத்தும், வினைப்பயன்களை நுகராமல் தப்ப முடியாது. வினை தீர்ந்தால் பிறவி நீங்கும். எஞ்சியிருந்தால் இன்னொரு பிறவி. ஆகவே எடுத்த மானிடப் பிறவியில் நல்லதையே செய்து அல்லல் படாமலிருக்க வேண்டும் என்று உன்னை நினைந்தேன். உவந்தருள் காட்டினாய் திருக்கழுக்குன்றத்திலே.

I think of Thee Oh Lord because I am aware that the good deeds performed in the previous birth will have only good effects in the present one. Evil deeds will have the adverse effect. One cannot escape Karma. When Karma is completed there shall be no re-birth. If not, we have to be born again and again. Therefore in this birth in this human form only good deeds must be done. The Grace Thou bestowed on me at Thirukkazukkundram, Oh Lord has made me aware of this universal truth.

## 36. செழுக்கமலத் திரளன
## Sezhukkamalath thirallana

நான் பொல்லாதவன், கல்வியறிவில்லாதவன். தூயவழி செல்லாதவன். இந்த நெறி கெட்டவனை இன்னும் தறிகெட்டுப் போகாமல் தடுத்தாட் கொள். அடைக்கலம் நீயே . . . அம்மை யப்பனே . . .

Oh what a villain am I and how illiterate! I. have not even followed the righteous path. Oh Lord such an evil one am I. Please save me Oh Lord from further destruction of this life. Thou art my father and my mother. Where else can I take refuge except in Thee.

## 37. புற்றில் வாளரவும் . . .
## Puttril Vallaravum

பாம்புக்கும் அஞ்சேன். பதறாமல் பொய் பேசும் பாவியர்க்கும் அஞ்சேன் சோம்பிக்கிடந்து சமுதாயத்தைச் சங்கடத்திற்குள்ளாக்கும் தீயருக்கும் அஞ்சேன். ஆனால் அஞ்சுவேன் என் ஐயனை அறியாத அவனின்றி வேறோர் தெய்வம் உண்டென்று சொல்லும் ஒருவனைக் கண்டால்.

I fear not snakes nor those who utter untruths shamelessly. The lazy who are bent on making the life of the community irksome do not trouble me. But if I meet one who says he knows not my Lord but acknowledges some one else, then indeed he angers me and gives me much cause for concern.

## 38. இணையார் திருவடி . . .
## Innaiyar Thiruvadi

மலர் பறிக்க வாரீர். அல்லி மலர் பறிக்க வாரீர். ஐயன் திருவடி மலர் என் சிரமேல் பட்டதும் பொய்யான உணர்வை

விட்டேன். விடுபட்டேன்; பித்தனைப் போன்ற பேரறிஞன். பிள்ளையைப் போலிருக்கும் பேராளன். என் சித்தத்தில் புகுந்த சிவன். அவன் வந்த விதத்தை – எனக்கு வாழ்வு தந்த சுகத்தைப் பாடிக்கொண்டேயிருப்போம்.

Come, let us go to pluck alli flowers. But lo, wait. When the roseate feet of my Lord touched me, I gave up this illusion and become liberated. When my Lord entered my mind, I became like a child. I shall sing continuously praises and acclaim the manner in which He transformed me. I am blessed with blissful joy.

## 39. அருணகிரிநாதர் திருப்புகழ் – கருவின் உருவாகி

## Karuvin uruvagi

கருவில் விழுந்து, உலகில் பிறந்து, கலைகள் பயின்று காதலெனும் கன்னியர் மயக்கத்தில் சுழன்று, இறைவனின் நினைவகன்று, அறுவகைச் சமயங்கள் தரும் வழிமுறை பிரிந்து. வயிற்றுக்குச் சோறிடும் வாசலிலே நின்று, நான் அழியலாமோ . . . . பழநிமலைமேல் வாழும் இறைவனே . . .

Pity me Oh Lord! Born on this earth I followed the ways of the world. I was enamoured by beautiful maidens. I forget Thee and drifted away from the righteous path. Must I stand before this earthly home and be destroyed? Please show mercy on me Oh Lord who dwellth on the Hill of Palani.

## 40. சரணகமலாலயத்தை . . .

## Sarannakamalalayaththai

அறிவின்மை, தெளிவின்மை, ஆற்றலின்மை, அத்துடன் தனிமை . . . இத்தனைக்கும் நான் கலங்கவில்லை. கருணைக்குக் கையேந்துகிறேன். இது தருணம் நிறைந்த பெருமை, நிலையான சுகம், சிறந்த வாழ்வு, சிவஞானத் தேர்வு, முடிவிலே உன் அடி சேர்க்கும் முக்தியான் பரகதி எனக்கு அருள வேண்டும் . . . திருவேரகத் துறையும் முருகப் பெருமானே.

My lack of knowledge, lack of strength and lack of clear perception and not even my lonliness disturb me. But I am yearning now for a good dignified life and above all spiritual peace because I know these will lead me to Thee eventually. Please bless me Oh, Muruga! Grant me my request!

## 41. என்னால் பிறக்கவும் . . .

## Ennal Pirrakkavum . . .

*என் விருப்பம்போல் இருக்கவும் இயங்கவும் என்னால் முடியாது . . . இடையீடு இல்லாமல் வருகிற வினையெனும் நோயை வீழ்த்த நான் யார்? அறியாத நெஞ்சிலே உறையாத இறைவனே, வயலூருக்கரசனே, வடிவேலனே நீயின்றி, நிகழ்ச்சி ஏது ?*

Oh Muruga, I am helpless! I am unable to do as I please. Who am I to resist obstacles ? Who am I to prevent disease? Help me to overcome this ignorance. Oh, Lord of Vayalur, Vadivela can anything happen without Thee? Hence mercy on me!

## 42. அவசியம் முன் வேண்டி . . .

## Avasiyam mun Venndi . . .

*பார்வைக் கெட்டாப் பரம்பொருளே! பலமுறை உன்னை வேண்டினேன், என்னைப் பக்குவமாக்கு என்று. அறிவு தெளிந்தது. அது உன்னைப் பற்றிக்கொள்ளத் தூண்டியது. ஆண்டுக்கொரு நாளேனும் உன்னை நினைந்து உருகும் நினைவைத் தா!*

O! Lord, Thou who art beyond normal vision I pleaded with Thee several times to banish my ignorance. When enlightenment came, Oh Lord, there arose a burning desire to attain Thee. Grant me, Oh Lord even if it is just for one day in the year, the strength to express my sincere devotion to Thee.

## 43. வசனம் மிக ஏற்றி . . .

## Vasanam Miga Etri . . .

இறுதிவரை நான் உன் சரவணபவ மந்திரத்தை உச்சரிக்க வேண்டும். இருக்கும்வரை உன்னை நான் மறக்காமலிருக்க வேண்டும். மறதியிலா மனத்தினிலே மந்திரமாம் உன் பெயரை இருத்தி என்னைத் திருத்தி இம்மை மறுமை இரண்டிலும் இன்பம் பொருத்தி என்னை உய்விக்க வேண்டும் . . . பசுபதி சிவவாக்யப் பொருளுணர்ந்த பழனிமலைப் பெருமானே.

Lord Muruga grant me Thy Grace so that I may utter throughout my life Thy mantra - Saravanabava. Then, as long as I live I shall not forget Thee. With this mantra firmly established in an unforgetful mind I shall become perfect and would then experience sublime joy in this life and hereafter. Thou who doth reside in Palani Hill, please raise me to this spiritual height.

## 44. அருணகிரிநாதர் கந்தர் அலங்காரம் விழிக்குத் துணை . . .

## Vizhikkuth thunnai

என் பார்வைக்குப் பாதுகாப்பு உன் பாதமலர்கள். நான் பண்புடன் பேசத் துணை உன் திருப்பெயர்கள். என்னை என் முன்வினை தாக்காமல் காக்கும் கவசம் உன் ஈராறு புயங்கள். என் தனிவழிப் பயணத்துக்கு உறுதுணையாக வருவது வேலும் மயிலும் என்ற உன் அணிகள் . . .

My perception, Oh Lord, is protected by Thine lotus feet and Thy Divine name helps me to speak affectionately. When Thy twelve arms encircle me, then I am protected from the effects of my previous karma. Lord Muruga, bless me so that thy lance, thy Vel and thy Peacock may guide me on my last and lonely journey.

## 45. தெய்வத் திருமாலை

## Deiyvath thirumaalai

அன்னையிடத்திலன்பு . . . அதன் பிறகு அண்ணன் தம்பி அக்காள் தங்கை மனைவி. சுற்றம் நட்பு. இப்படித் தொடர்ந்து கொண்டே போகும் அன்பு ஒவ்வோர் இடத்திலும் மாறுபட்டிருக்கும். மாறுபடாமல் மாசுபடாமல் தேயாமல் வளரும் அன்பு தெய்வத்திடம் வைக்கும் அன்புதான். அது அழியாத இன்பத்துக்கு வித்து. அதுவே நான் வேண்டும் சொத்து. அதைத் தருவது முருகன் என்ற அருள்முத்து.

How wonderful is this feeling of affection? First affection for the mother, then for brothers and sisters after which comes the affection for wife and then for the children. All these affections are subject to change. The one affection which changes not but grows and develops is the love for Thee. It is indestructable. That is the treasure I require. Grant me thy Grace Oh Lord Muruga.

## 46. சேந்தனைக் கந்தனை

## Senddhanaik Kandhanai

நெஞ்சமொன்றை நினைக்கும் . . . வாய் ஒன்றைச் சொல்லும் கண் ஒன்றை நோக்கும். கை ஒன்றைச் செய்யும். இப்படி மாறுபட்டுச் செயல்படுவதே மனம்போன போக்கு. மனம் அலையாமல் ஒரு நிலைப்படுத்த வழி முருகனை நினைப்பது ஒன்றே. அந்த நினைப்பு சித்தத்தைத் தெளிவாக்கி, செம்மைப்படுத்தி, உய்விக்கும்.

How much out of control can constantly drifting mind become? The mind thinks of one thing, the mouth utters something else, whilst the hand may perform some thing else. But I do not want to do as the mind pleases. I want an unwavering mind which is fixed on Thee, Oh Lord Muruga because only such a mind can cleanse and purify my spirit.

## 47. தோலால் சுவர் வைத்து

## Tholal suvar vaiththu

உயிர் சுமக்கும் கோட்டை, கால்கள் என்ற அஸ்திவாரத்தின் தோற்சுவர்களால் எலும்புகளைச் செங்கற்களாக்கி உருவாக்கப்பட்டது. நிலையாக நிற்காதது. உள்ளே இருக்கும் இயக்கும் சக்தி வெளியேறினால் சாம்பலாகவோ, மண்ணாகவோ போய்விடும். கோட்டை காக்க வேலன் எனும் பாலன்தான் இருக்கிறான். அவனே அடைக்கலம்.

This body is the house for the spirit. The two legs are its foundation and the bones are like bricks that make up the structure, But can this bodily structure last? Once the spirit leaves, the body is turned into ash or dust. Lord Muruga Thou art the only one on whom I could depend to escape all this. Do protect me, Oh Lord!

## 48. காவிக்கமலக் கழலுடன்

## Kavik kamalak Kazhaludan

வண்ண வேறுபாடுகள். எண்ண வேறுபாடுகள். மொழியால் வழியால் இனத்தால் வேறுபாடுகள். இத்தனையும் நிறைந்து இருக்கும் உலகத்திலே ஒருமைப்பாடு காண்பதே அறிவுடைமை. அந்த அறிவு நீ தந்து நான் பெற வேண்டும். கொழுகொம்பில்லாத கொடிபோல் தவிக்கிறேன். தள்ளாடும் என்னை மேலும் நீ பந்தாடாமல் பரிந்து அருள் சொரிந்து என்னைப் புரிந்து கொள் முருகா!

Differences, differences everywhere! This earth is filled with differences in colour, differences in language, behaviour and race. How can I strive for the ideal of universal brotherhood? Lord Muruga, Thou art the only one who could grant me the knowledge to achieve this. Now I am struggling like a creeper for the support of a pole. Oh Lord save me from wandering and let me take refuge in Thee, Lord Muruga.

## 49. தாயுமான சுவாமி பாடல்: ஆசைக்கோர் அளவில்லை

## Aasaikor Allavillai

கடல் கடந்து சென்றும் பொருளீட்டுகிறோம். ஈட்டின பொருளைச் சிலர் சேமிக்கிறார்கள். சிலர் செலவழிக்கிறார்கள். சிலர் கடன்படுகிறார்கள். பட்ட கடனுக்குப் பயந்து பதுங்கிப் பொய் பேசுகிறார்கள். வட்டி கொடுக்க முடியாமல் வாடுகிறார் கள். வரவுக்கு மீறிய செலவு சரிவுக்குக் காரணமாகிறது. சிக்கனமாக இருந்தால் வாழ்க்கைச் சிக்கலிலே சிக்க மாட்டோம். பணச் சுமையால் மனச்சுமையில்லாதவன் தான் பரம்பொருளைக் கவலையின்றித் துதிக்க முடியும். பார்க்குமிட மெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும் பூரணப் பொருளே போதுமென்ற மனம் தந்து தீது களைந்து ஆதரிக்க வேண்டும்.

What a life we lead! We cross seas to acquire wealth, some save, some waste and others run into debts, some to escape tell lies. Some are unable to meet their debt on account of over expenditure. Had they been thrifty there would have been no entanglement. You think of wealth then your mind fills with problems. How can I think of Thee if my mind is not content. Oh Lord, Thou who art Omni present, grant me peace of mind, save me and protect me.

## 50. ஐவகையெனும். . .

## Aivagaiyenum

கல்வி கேள்விகளால் நம் இயற்கை அறிவு பக்குவப்படுகிறது. ஆக்கப்பணிகளுக்கு அறிவைப் பயன்படுத்த வேண்டும். ஐம்பூதங்களையும் மனிதன் அறிவால் வசப்படுத்தி வளர்ச்சிப் பணியிலே ஈடுபடுத்த வேண்டும். அதுவே உண்மையறிவின் தன்மையாகும். இந்த தன்மையே என் இடத்தில் இல்லையே! நீ தரவில்லையே. . . குரு அருள் இல்லாமல் திருஅருள் ஏது?

What a gift is knowledge. Learning and enquiry develops this knowledge which is for the purpose of performing good deeds and to keep this mind under

control. I realise, this is the proper use of the intellect. But I am not blessed. How can I have Thy blessing Oh Lord, without the blessing of a Guru?

## 51. எண்ணரிய பிறவிதனில்

## Ennnariya Pirravidhanil

மானிடப் பிறவி அரிது. அதுவும் ஊனமில்லாமல் பிறப்பது உயர்வு. உலகியல் கல்வியோடு ஆன்ம ஒளி தரும் ஞானக்கல்வி பெறுவது சாலச் சிறந்தது. அப்படிப் பெற்ற ஞானத்தைச் சினம் சிதைத்துவிடாமல் பணம் பாழாக்காமல் பாதுகாத்துக் கொள்வது பண்பு. அடுத்த கணத்தைப் பற்றி உறுதி சொல்ல முடியாத மனித வாழ்வில், அடியேன் இருக்கும்போதே அடக்கம் தந்து அதன் பயனால் ஒடுக்கம் கொண்டு உயரத் தொடக்கம் செய்து முடித்துவிடு.

How many realise that to be born a human is a rare gift? Rarer skill is it if this human form is free of an physical defects. In this life let us acquire knowledge and through it spiritual development. I am unable to say what is in store for me the very next moment. Therefore, while I am fit let one seek Thy Grace through Thy blessing.

## 52. அரும்பொனே மணியே. . .

## Arumpone Manniye

என் நண்பர்களைப் பார்த்து, என்னை எடைபோடும் உலகம். நல்லாரோடு இணங்குவது. . . நல்லார் சொல்படி வாழ்வை அமைத்துக் கொள்வது. . . திசைமாறிப் போகாமல் என்னைக் காத்துக் கொள்ளும் வழியாகும். அதனால் உன்னை அறிய உருகினேன். உரக்கக் கூவிக் கதறினேன். கண்ணீரால் என் நெஞ்சக்கனலை அணைக்க முயன்றேன். நீ ஒளி நான் நிழல். நிழலும் ஒளியுடன் பிறந்ததுதானே! நான் கேட்பது நிழலாகிய என்னை ஒளியாக்கு என்று. மறுத்துவிடாதே. மறந்து விடாதே!

Are we not judged by the association we keep? The only way I could be saved from wandering is to seek the company of the learned and the wise. My eyes fill with tears

as I am pining to realise Thee. I cannot extinguish this burning desire. Thou art the light and I the shadow but have they not the same origin? I beseech Thee to absorb the shadow and make me the light. Oh Lord do not deny me this one request. Say Thou will not forget!

## 53. தந்தை தாய்

## Thandhai thaiy

நம்மைத் தாங்கும் பூமியை வளமாக்கப் பண்படுத்துகிறேன். வானோங்கும் மாடமாளிகை கட்ட, அஸ்திவாரம் எனும் பெயரில் ஆழத் தோண்டிப் புண்படுத்துகிறேன். அனைத்தையும் பூமி பொறுத்துக்கொள்கிறது. பூமியில்லாமல் வாழ முடியுமா?. . . வீசுங்காற்றில்லாமல் பருகத் தண்ணீர் இல்லாமல் உயிர்கள் நிலைக்குமா?. . . இதனை எண்ணிப் பார்த்தால் நீரை நிலத்தைக் காற்றை அசுத்தப்படுத்த மாட்டேன். ஆனால் பாசபந்த நினைப்பில் அவர்களை வாழவைக்க என்னை நாசப்படுத்திக்கொள்கிறேனே! கஞ்சத் தனத்தைக் கடை நடத்தி வஞ்சக வலை விரித்து என் சுகத்தைப் பெரிதென நினைத்து உழல்கிறேனே!

We use this land which bears mankind for various purposes caring not for the damage. Foundations are deeply dug, buildings erected but the earth complains not. Can we exist without land, water or air? I have not only concern over pollution but my involvement in the welfare of my kith and kin is destroying me because I am caught in the web. No, I cannot continue like this. Must I not think of my own spiritual upliftment? I am now truly concerned!

## 54. பண்ணினேன் உனக்கான பூசை

## Pannnninen unakkaana Poosai

பொய்யை மெய்போல் பேசும் புரட்டர்கள் சமூக விரோதிகள். அறியாமையால் பொய் பேசினால் அதுவும் தவறு. வாய்மையே வெல்லும். நான் வாழக் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்களுள் பொய் பேசாமையே சாலச் சிறந்தது. அதனால் உன்னிடம் உண்மை சொல்கிறேன். வடிவமைத்து உன்னை வழிபட மாட்டேன். வண்ண மலரில்

உன்னைக் காண்பதால் அதனைக் கிள்ளமாட்டேன். உன்னை இரு கை கூப்பிக் கும்பிடமாட்டேன். நீ என் எதிரிலா இருக்கிறாய்! என் இதயத்துக்குள்ளேதானே இருக்கிறாய்.

There are those who pretend to speak the truth. They are our enemies. Even ignorance is no excuse to speak an untruth. I must always remember that truth trumphs. Before Thee Oh Lord I shall be truthful and promise to cultivate only good virtues.

I shall not worship any form. I shall not destroy the flower because I behold Thee within. I shall not lift my two hands in worship. Need I explain? If you were in front of me it would have been necessary for me to do all this but I hesitate not because Thou art enshrined in my heart!

## 55. பட்டினத்தார் பாடல்: கட்டியணைத்திடும்

## Kattiannaiththidum

பாசங்கள் பந்தங்கள் நான் பெற்ற உடைமைகள். இதில் போகும்போது எது கூட வரும்! நான் செத்தால் என்னைச் சேர்ந்தவர் சிறிது நேரம் அழுவார்கள். காடு வரை வருவார்கள். கடைசிவரை யார் வருவார்!

Attachments, relationships are all my earthly acquisitions. Will any of these follow me when I leave this earth? Relatives show their grief and will follow my mortal body to the cremation ground, will any one accompany me beyond that point?

## 56. அன்னை எத்தனை எத்தனை அன்னையோ. . .

## Annai Eththanai

எத்தனை முறைகள் பிறப்பது? இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டாமா. முன் பிறவிகளில் என் சொந்தங்களைக் கணக்கிடமுடியுமா? தெரிந்தால்தானே! மாயை மறைக்கிறதே! நான் என்ன செய்வேன்.

How many times must I be born? Is there no end to this? I know not how many births I had already taken. Illusion prevents my knowing it. What must I do?

## 57. முடிசார்ந்த மன்னரும்

## Mudisarndha Mannarum

" இரை தேடுவதிலேயே நேரம் கடத்தும் மனிதன் இறைவனைத் தேடுவது எப்போது?"

நிலையாக வாழப் போவதாக நினைத்துச் செயல் படுகிறானே! மற்றவர் மரணத்தைக் கண்டபிறகும் மணிமுடி மன்னரும் மலர் சுமக்கும் மனிதனும் பிடி சாம்பலாவது பொய்யா? பின் ஏன் பொய்யான வாழ்வை மட்டும் மெய்யாக மதித்து மயங்குவது! நாதன் தேடும் நாட்டமில்லையே.

Man is always seeking the means for a livelihood. When will he find the time to seek God? He still believes that this life is permanent even when he knows that king and slave on death turn to the same ashes. O Man rely not on this impermanent life! Why hestitate? Take heart and seek the Lord!

## 58. அத்தமும் வாழ்வும் அகத்துமட்டே

## Aththamum Vaazhvum

உள்ளத்தைத் தூய்மையாக்கினால் நம்மை நான்கு பேர் அள்ளிக்கொண்டு போய்ச் சுடுகாட்டில் சுட்டெரிக்கும் முன் பணம் – பதவி – பந்தம் – பாசம் – இங்குள்ளவரைதான். அங்கு போகும்போது நம்மைத் தொடர்பவை நம் நல்வினை தீவினைப் பயன்களே!

Our hearts must be cleansed and made pure long be fore the mortal body is taken to the cremation ground for disposal. Do you not realise that wealth, honour, kith and kin and friends are only earthly acquisitions? Do they follow on your journey? Know then that what follow you are your good and bad deeds.

## 59. ஐயிரண்டு திங்களாய்...

## Aiyiranndu thinkallaaiy

அறம் செய விரும்பு... ஏற்பது இகழ்ச்சி... முற்றிலும் முரண்பட்ட இருபெரும் அறிவுரைகள். அதில் உள்ளாழ்ந்த அர்த்தங்களைப் புரிந்துகொண்டால் உய்ய வழி தெரியும். தனக்கென வாழாமல் – பிள்ளைகளுக்காக வாழ்வது தாய் ஒருத்திதான். அந்தத் தாய்த்தெய்வத்தை இகழ்ந்தால் இனி எந்தப் பிறவியில் காண்பேன்!

All proverbs like those relating to giving and receiving are deep in meaning. If you realise their significance then your path to God realisation will be made easy. Look at the self-less love of a mother! She lives for her children and no sacrifice is too large. How wonderful is this love! If we lose such a goddess in which future generation can we find such another? Will your affection for God also reach such purity?

## 60. முன்னையிட்ட தீ முப்புரத்திலே...

## Munnaiyitta Thee

செத்த பிறகு நம்மை சுட்டாலென்ன... புதைத்தாலென்ன... உயர்வென்ன... தாழ்வென்ன... ஏழையென்ன... செல்வமென்ன. மனிதப் பயணத்தின் இறுதி நமக்கு எடுத்துக்காட்டும் பேருண்மை நிலையற்ற வாழ்வு...

Does it really matter when upon death the body is cremated or buried? What distinctions are there between rich and poor on death? Both have to face life's last journey on this earth. Does this not teach us the great truth that life on earth is impermanent?

## 61. வீற்றிருந்தாள் அன்னை

## Veetrirundhdhaall Annai

இளமை – இனிமை – வளமை – அனைத்தும் நிலையாமை என்பதை மறந்தேன். தாங்கிச் சுமந்து தன்

உயிரால் பாலூட்டி ஏங்க வைத்துப் போனாளே அன்னை என்று ஏன் வருத்தம். . . சென்றதற்கு வருந்ாதீர். . . "சிவன் அருள்" என்று சிந்தை தெளிவீர்

I forgot for a moment that youth, strength and joy are all impermanent attributes. Should I be disappointed that she who had born me, nurtured me has now left me to the mercy of this world? I shall not grieve for what has happened. I realise they are all the workings of God.

## 62. வள்ளலார் திருஅருட்பா:

### அருட்ஜோதி தெய்வம் என்னை . . .

### Arutjothi Dheivam

உறவு தந்தவன் - உலக மேடையில் ஆட வைப்பவன் - உள்ளத்தில் ஆடுபவன் - அவன் அறிவுக்கு எல்லையாக - சிறப்புக்கு சிகரமாக - மறைகளின் நிறையாக - மணமறிந்து வழங்கும் வள்ளலாக சிற்றம்பல அண்ணலாக விளங்குபவன்.

He who makes us dance on the world platform. He who dances in our hearts, has accepted my atachment to Him. Is He not the gateway to virtue, the Giver of all knowledge. the creator of all religions? I adore Him who dances in Cittrambalam.

## 63. பெற்ற தாய்தனை

### Petrra thaaithanai

எனக்கு மறதி அதிகம். தாயை மறப்பேன். தாரத்தை மறப்பேன். தவழ்ந்துவரும் என் சேயை மறப்பேன். ஏன்? ஏன்? தேகத்தை மறப்பேன். . . ஆனால். . . எதை மறந்தாலும் என்னை மறதி மனிதனாக்கிய உன்னை மட்டும் மறக்க மாட்டேன்.

I have weak memory. I may forget my mother, my wife and my children. I may even forget my body. But do you think I shall ever forget Thee who hath made me forget everything else except Thee?

## 64. கல்லார்க்கும் கற்றவர்க்கும்

## Kallaarkkum Katrravarkkum

அறிவிலிக்கும் அறிஞனுக்கும் இனியவனே! அந்தக னுக்கும் அருள் ஞானியர்க்கும் இசைந்தவனே! நல்லார்க்கும் தீயார்க்கும் எல்லார்க்கும் உகந்தவனே! நானிசைக்கும் நற்பாடல் தேனிசையாய் ஏற்று நலம் தருவாய் என் அரசே!

Thou refuseth not to show compassion either to the ignorant or to the good or to the wicked. My Lord wilt Thou not accept my songs and grant me bliss?

## 65. பார்த்தாலும் நினைத்தாலும்

## Paarththaalum Ninaiththaalum

உலகத்தை இயக்குவது எந்த சக்தி? அணுவுக்குள்ளும் இருந்து அசைப்பது எது? அண்டமாகி விரிந்து செயல்படுவது எது? பரமன் ஆடப் பாரெல்லாம் ஆடுகிறது. அந்த ஆட்டுவிக்கும் ஆடல் வல்லானைக் கரும்பாகி இனிக்கும் கள்வன்– கண்டாலும் அவன் கதை விண்டாலும் – செவி இனிக்கும் இசை உண்டாலும் திகட்டாத தீங்கரும்பு என் தலைவன்.

Thou art the creator of this earth and all energy even that which moves the minutest particle. As Thou danceth the entire world dances. How wonderful it would be to realise this Lord of the Dance? My Lord to see Thee and to hear of Thy doings produces everlasting bliss.

## 66. அருள் விளக்கே. . .

## Arull Villakke

நினைத்தால் தித்திக்கும் உன் திருநாமம். உன் திருநாமத்தைத் கோத்து உருகாத மனத்தையும் உருக்கும் வண்ணம் பல்சுவையும் பாடலாக்கித் தந்திருக்கிறார்கள். . . சிவனடியார்கள். உன்னைப் பாடும் பாடல்களே பாடல்கள். . . அதைப் பாடும் நேரங்களே நல்ல நேரங்கள். என் பாட்டை

ஏற்றுக்கொள்! மன்றிலாடும் மணியே! மணவாளா! அருளாளா!

To even think of Thy holy name, it produces such Joy. Thy devotees have sung Thy praise with such sincere devotion that they could move even the emotionless. The songs we sing of Thee are the real songs and when they are sung they make the occasion auspicious. So wilt Thou accept my songs too. Oh Lord?

## 67. அருளார் அமுதே. . .
## Arullaar Amudhe

காக்கும் திருவடிகள். . கருணையினால் நம்துயர் தீர்க்கும் திருவடிகள். . . கந்தன் உமைபாலன் திருவடிகள். . . பந்தவினை நீக்கும் திருவடிகள். . . அந்தப் பொன்னடிகள். . . பூ அடிகள். . . மன்னருள் சேவடிகள் சரணம் சரணம்.

The sacred feet that protect me and show me compassion are the Holy feet of Kanthan, the son of Uma. I am certain Thy holy feet will save me from the effects of my Karma. Oh Bestower of all Grace, I take refuge in Thy golden feet - in Thy flowery feet and offer Thee my humble prostrations!

## 68. முத்திநெறி அறியாத
## Muththinerri Arriyaadha

கூடத்தகாத கூட்டத்தில் இருந்து என்னைக் கோணலகற்றி, ஆணவத்தை, அடக்கி, வானவர்க்கும் எட்டாத வண்ணச்சுடரே! நீ என் எண்ணச் சுடர் கொளுத்தி இருள் நீக்கி அருள் காட்டி அருளினாய். . . இந்த நிலை யார் தருவர், யார் பெறுவர்?

Once I was associated with the wicked who knew not the path to God. Thou didst save me from all those evils. Through Thy Grace darkness has been removed and I am now enlightened. Who else Oh Lord would have granted such divine favours to such a grateful recipient?

## 69. கல்லாப் பிழையும்
## Kallaap Pizhaiyum

*நான் ஏடுதரும் கல்வி அறியாதவன்...*
*இறைவனின் பெயரை உரையாதவன்...*
*நாடி உனை நினைக்கத் தெரியாதவன்...*
*நான் என்ற எண்ணத்தில் குறையாதவன்...*

உடல் சுமந்து – உதட்டிலே பொய் சுமந்து – கடன் சுமந்து – கண்களில் கண்ணீர் சுமந்து நின்றேன்.

*எனைச் சுமந்து அருள் தருவாய்*
*உனை மறந்தே குற்றமே உருவாகினேன்...*
*உற்றவன் உனை நாடினேன்... பாடினேன்..*
*கண் பாருமே..*

Oh Lord! Many mistakes have I done. I erred by not learning about Thee. I failed to give serious thought to Thee. I was possessed of pride. I failed to think of Thee. I erred by not uttering the five holy letters that constitute Thy holy name. I failed to worship Thee or say Thy prayers. Oh Lord forgive me my faults and show me Thy compassion.


சம்பந்தர்

# சிவ வழிபாடு


அருணகிரிநாதர்


அப்பர்


தாயுமா
அடிகள்




சுந்தரர்


பட்டினத்தார்

## சிவலிங்கத் திருமேனி

இலிங்கம தாவது யாரும் அறியார்
இலிங்கம தாவது எண்டிசை எல்லாம்
இலிங்கம தாவது எண்ணெண் கலையும்
இலிங்கம தாக எடுத்த துலகே.

—திருமந்திரம்


மாணிக்கவாசகர்


இராமலிங்க
அடிகள்